# அலகு 1: தாய்மொழிக் கல்வி

**பாட அமைப்பு**

1.1. முன்னுரை
1.2. குறிக்கோள்கள்
1.3. தாய்மொழி
1.4. தாய்மொழி கற்பித்தலின் நோக்கங்கள்
1.4.1. மொழி அறிவைப் பெறுதல்
1.4.2. கேட்டுப் பொருளுணரும் ஆற்றல் பெறுதல்
1.4.3. படித்துப் பொருள் உணரும் ஆற்றல் பெறுதல்
1.4.4. இலக்கியப் பாடலின் சுவையுணர்ந்து போற்றுதல்
1.4.5. மனத்திலே உள்ளவற்றை வெளியிடுதல்
1.4.6. கற்பனையாற்றலையும் அழகுணர் ஆற்றலையும் வளர்த்தல்
1.4.7. சிறந்த மனப்பயிற்சியாக அமைதல்
1.4.8. மொழிப்பற்று, நாட்டுப்பற்றை ஊட்டுதல்
1.4.9. படைப்பாற்றலை வளர்த்தல்
1.4.10. பிழையின்றி எழுதுதல்
1.4.11. பண்பு நலன்களைப் போற்றி வளர்த்தல்
1.4.12. வாழ்க்கை நுகர்வுகளை எடுத்தியம்புதல்
1.4.13. சொல்லாட்சித் திறன் பெறுதல்
1.5. தாய்மொழி கற்பித்தலின் பயன்கள்
1.6. தாய்மொழியின் தனிச்சிறப்புகள்
1.7. எண்ணத்தை வெளியிடும் கருவி
1.8. திருத்தமாகப் பேச, கேட்க, படிக்க, எழுதப் பயிற்சி அளித்தல்
1.9. தொகுத்துக் காண்போம்
1.10. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்
1.11. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்
1.12. மேலும் பயிலுவதற்கான நூல்கள்

## 1.1 முன்னுரை

ஒரு குழந்தை பிறந்தது முதல் தன் பெற்றோரிடமும், மற்றோரிடமும் கேட்டும், பேசியும், பழகியும் வரும் மொழியே தாய்மொழி எனப்பெறும். தாய்மொழியே கனவாகவும், நனவாகவும், சிந்தனையாகவும் காணப்படும். தாய்மொழியே குழந்தைகட்கு இயல்பாய் வரும். ஒருவர் தாயின் மடியிலிருந்து இறப்பின் பிடியில் சிக்கும் வரையில் பேச, உறவாட, பழகப் பயன்படும் மொழியே தாய்மொழி ஆகும்.

**குறிப்பு**

தமிழகத்தில் தமிழ் மொழி பெரும்பான்மையான மக்களின் தாய்மொழியாக விளங்குவதால் அதுவே முதன் மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் விளங்குகிறது. பழமைக்கும் பழமையாய், புதுமைக்கும் புதுமையாய், கன்னித்தமிழாய்க் காலங்காலமாக விளங்குவதோடு இலக்கண வரம்புகட்கு உட்பட்டுத்திகழ்வது நம் தாய் மொழியே ஆகும். வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்த பெருமை நம் தாய்மொழிக்கே உண்டு. உலகத்தில் உள்ள அனைத்து மொழிகளிலும் இல்லாத தனிச்சிறப்பு நம் தாய்மொழிக்கே உண்டு. உயர்தனிச் செம்மொழி எனும் உயரிடம் பெற்றுச் செம்மாந்து நிற்கும் தமிழ்மொழியை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்ல சிறந்த வழி ஆசிரியப் பயிற்சி பெறப்போகும் மாணவர்களாகிய உங்களுக்கு இந்த பாடத்திட்டத்தைத் தருவது தான். எனவே, சிறப்புறப் பயின்று, சிந்தையில் தமிழ் வளர்த்து, மாணவர்களைச் செம்மாந்து வழிநடத்திட பயில்வீர்! பட்டம் பெறுவீர்! பயிற்றுவிப்பீர்!.

## 1.2. குறிக்கோள்கள்

நீங்கள் இப்பாடத்தைப் பயின்ற பின்னர்,

- தாய்மொழி கற்பதின் நோக்கங்களைப் பட்டியலிடுவீர்கள்.
- தாய்மொழியின் பயன்களை எடுத்துரைப்பீர்கள்.
- தாய்மொழியின் தனிச்சிறப்புகளை எடுத்துரைப்பீர்கள்.
- தாய்மொழியில் திருத்தமாகப் கேட்க, பேச, படிக்க, எழுதப் பயிற்சி அளித்தலை விளக்குவீர்கள்.

## 1.3. தாய்மொழி

குழந்தைகளின் மனவளர்ச்சியானது தாய்மொழியால் விளைகிறது. முதன்முதலாகக் கற்கவேண்டுவது தாய்மொழியே ஆகும் என்பர். இக்கருத்தை உறுதிப்படுத்தும் விதமாக நம் வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் தாய்மொழி இடம் பெறுகிறது. மேலும் பிற்காலத்தில் தாய்மொழியறிவு பல செயல்களுக்குப் பயன்படுவதால் தாய்மொழி ஒருவரை வளர்க்கும் தாயாகும்.

இலக்கியம், இசைக்கலை, மருத்துவம், விளம்பரம், சட்டம், தொழில் நுட்பம், அரசியல், ஆய்வு இதழ்கள், ஒளிபரப்பு, செய்தித் தொடர்பு, வணிகம், கணினித்துறை, போன்ற எல்லாவற்றிலும் தாய்மொழி பயன்படுகிறது. எனவே இதன் சிறப்புக் கருதி முதன்முதலில் கற்கவேண்டுவது தாய்மொழியே எனலாம்.

தாய்மொழியானது மக்கள் தொடர்பை அதிகரிக்கச் செய்கிறது. மணிமேகலை என்னும் காப்பியத்தை இதற்குச் சான்றாக கூறலாம்.

“கலம் கவிழ்ந்து கரையொதிங்கிய வணிகனான சாதுவன் அந்நாட்டு மக்களது மொழியில் பேசி அவர்களுடைய உதவிகளைப் பெற்றான்” என அந்நூல் கூறுகிறது. வாழ்வின் எந்த இடத்திலும், நிலையிலும், தாய்மொழித் தொடர்பே முழுமையும், நிறைவும் தருவதுமாக இருக்க முடியும். இது தாய்மொழியின் சிறப்புக்கு மேலும் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

இன்றைய சமூகத்தில் பல துறைகளில் பெரிதும் செல்வாக்குப் பெற்றுள்ள மொழி தாய்மொழியே. மொழிவாரியாக மாநிலங்கள் அமைந்தமையால் தாய்மொழியில் ஆட்சி ஏற்படுத்தப்பட்டதால் தாய்மொழியின் சிறப்பு அதிகமாயிற்று.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.**
**ஆ.உமதுபதிலைப்பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக**

1.தாய்மொழி பயன்படும் துறைகள் ஏதேனும் இரண்டினைக் கூறுக.?

……………………………………………………………………………
……………………………………………………………………………

2. வணிகன் சாதுவனைப் பற்றிக் கூறும் நூல் எது?

……………………………………………………………………………
…………………………………………………………………………

பொது வாழ்வுப் பகுதியில் பேச்சுத் தமிழும், அலுவலகங்களில் எழுத்துத் தமிழும் சிறப்பிடம் பெறுகின்றன. வானொலியிலும், தொலைக்காட்சியிலும் பேச்சும், எழுத்தும் முக்கிய இடம் பெறுகின்றன. நாடெங்கும் விளங்கும் பேச்சாற்றலும், எழுத்தாற்றலும் தாய் மொழியால் ஏற்பட்டது என்றால் அது மிகையாகாது

## 1.4. தாய்மொழி கற்பித்தலின் நோக்கங்கள்

மொழித்திறன் வல்லமை உடையவரே பாடங்களின் உண்மை அறிந்து புதியனவற்றைப் படைக்கும் வல்லமையும் பெறுவர். மொழியின் சிறப்பும் பண்டையோரின் பண்பும் அறிய, இலக்கியங்களே துணை நிற்றன.

தாய்மொழி கற்றலின் நோக்கங்களாவன:

- மொழி அறிவைப் பெறுதல்
- கேட்டுப் பொருளுணரும் ஆற்றல் பெறுதல்
- படித்துப் பொருள் உணரும் ஆற்றல் பெறுதல்
- இலக்கியப் பாடலின் சுவையுணர்ந்து போற்றுதல்
- மனத்திலே உள்ளவற்றை வெளியிடுதல்
- கற்பனை ஆற்றலையும் அழகுணர் ஆற்றலையும் வளர்த்தல்
- சிறந்த மனப்பயிற்சியாக அமைதல்

**குறிப்பு**

- ❖ மொழிப்பற்று, நாட்டுப்பற்றை ஊட்டுதல்
- ❖ படைப்பாற்றலை வளர்த்தல்
- ❖ பிழையின்றி எழுதுதல்
- ❖ பண்பு நலன்களைப் போற்றி வளர்த்தல்
- ❖ வாழ்க்கை நுகர்வுகளை எடுத்தியம்புதல்
- ❖ சொல்லாட்சித் திறன் பெறுதல்

### 1.4.1. மொழி அறிவைப் பெறுதல்

மொழியைத் துல்லியமாகவும், நுட்பமாகவும் கேட்டுப் புரிந்து கொள்ளுதல் மொழி அறிவைப் பெறுதல் ஆகும். தாய்மொழி மூலமாகக் கல்வி கற்கும் போது பல்துறை நூல்களையும் கற்றுத் தெளிய வாய்ப்பு ஏற்படுகிறது. மனிதனின் எண்ணங்களைப் பேச்சாலும், எழுத்தாலும் வெளியிடவும் அவனின் சிந்தனைத் தாக்கங்களைப் படைக்கவும் மொழி பயன்படுகிறது.

தெளிவாகப் பேசவும், சிறப்பாக எழுதவும், நன்றாகப் படிக்கவும் மொழி அறிவு இன்றியமையாததாகும். மொழி அறிவினால் பிறர் கூறுவதை எளிதில் புரிந்து கொள்ளவும், சூழ்நிலையைத் திறமையாகச் சமாளிக்கவும் முடியும். கல்வியின் நோக்கங்களை மாணவர்களுக்கு அளிப்பதற்கும், மாணவர்கள் எளிதில் அதன் பயன்பெற்று இன்புறவும், மொழி அறிவு அவசியமாகிறது. எழுத்துக்களின் ஒலி மற்றும் வரி வடிவங்களைச் சரியாகவும், அழகாகவும், தெளிவாகவும், எளிமையாகவும், பிழையில்லாமலும் எழுதத் தாய்மொழியில் பயிற்சி அளிக்கப்படுகிறது. மொழி அறிவு பெற்றால் தான் சமூகத்துடன் இணக்கமான நடத்தையை மேற்கொள்ள முடியும்.

இதனையே திருவள்ளுவர்,

> ***"நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்***
> ***யாராத்து உள்ளதூஉம் அன்று".   (குறள் - 641)***

என்று பாடியுள்ளார். சரியான உச்சரிப்புடனும், திருத்தமாகவும், அழுத்தமாகவும், உணர்ச்சியுடனும், பண்புடனும், பிழையின்றிப் பேசுவதற்கும், எழுதுவதற்கும் மொழி அறிவு பெற்றிருத்தல் வேண்டும்.

### 1.4.2. கேட்டுப் பொருளுணரும் ஆற்றல் பெறுதல்

தாய்மொழியால் மட்டுமே எந்த ஒரு சூழ்நிலையையும், தான் தொடர்பு கொள்ளும் மனிதர்களையும் புரிந்து கொள்ள முடியும். ஒருவன் தான் கற்றவற்றைச் சிறப்பாக எடுத்துரைக்க உதவுவது தாய்மொழியே ஆகும். கேட்டுப் பொருளுணரும் ஆற்றலைப் பெறுவதற்காக, பள்ளி மாணவர்களுக்கு உரைநடை மற்றும் செய்யுளைப் படித்து பொருளறியும் திறன் பெறுதலோடு பேசுதலைக் கேட்டல், படித்தலைக் கேட்டல், வானொலி கேட்டல் போன்ற பயிற்சிகளையும் மாணவர்களுக்குக்

கொடுக்க வேண்டும். தலைவியைத் திருமணம் செய்ய காலம் தாழ்த்தும் தலைவனைக் கண்ட தோழி, தலைவனை நோக்கி,

***"வேரல்வேலி வேர்க்கோட் பலவின்***
***சாரல் நாட செவ்வியை ஆகுமதி***
***சிறு கோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்கிவன்***
***உயிர் தவச் சிறிதே காமமோ பெரிதே."***

**-குறுந்தொகை**

என்று கூறுகிறாள். இதன் பொருள், ''மலைநாட்டுக்குச் சொந்தமானவனே! மூங்கில் வேலிகளால் சூழப்பட்ட உன் நாட்டில் பலாப்பழங்கள் வேர்களில் பழுத்துக் கிடக்கின்றன. வேரில் கிடப்பதால் அக்கனிகள் வீணாகாது. ஆனால் வேர்ப்பலா அல்லாத பலா மரத்தின் கிளையில் பெரிய பலாப்பழம் தொங்கிக் கொண்டிருப்பதைப் போன்று தலைவியின் உயிர் மிகச்சிறிய கிளை போலவும், உன் மீது கொண்ட அன்பு மிகப்பெரிய பலாப்பழம் போலவும் உள்ளது. பலாப்பழம் பழுத்துச் சிதறிப் போவதைப் போன்று தலைவியின் உயிரும் எப்போது போகும் என்று கூற முடியாது. எனவே விரைந்து வந்து மணம் புரிந்து கொள்'' என்கிறாள் தோழி. இதனால் கேட்டுப் பொருள் உணரும் ஆற்றலை தாய் மொழியில்தான் பெற இயலும் என்பதை குறுந்தொகை பாடல் மூலம் அறிய முடிகிறது.

### 1.4.3. படித்துப் பொருளுணரும் ஆற்றல் பெறுதல்

மொழியின் அடிப்படைத் திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவற்றை வளர்ப்பதே மொழியின் அடிப்படை நோக்கமாகும். தாய்மொழி வாயிலாகப் படித்தலே புரிந்து கொள்வதற்கும், பொருள் உணர்வதற்கும் சிறந்த முறையாகும். அதனைத் திருவள்ளுவர்,

***"கற்க கசடற கற்பவை கற்றபின்***
***நிற்க அதற்குத் தக."*** **(குறள் - 391)**

என்று கூறுகிறார். இதற்கு நூல்களைக் குற்றமில்லாமல் கற்க வேண்டும். நாம் கற்றவண்ணம் நடந்து கொள்ளுதல் வேண்டும் என்று பொருள். இவ்வாறு கூறுவதன் மூலம் கல்வியின் பெருமையை அறியலாம். வள்ளுவரின் இந்தக் குறளானது படித்த உடனேயே பொருளுணரும் திறனை அளிக்கக் கூடியதாக உள்ளது.

### 1.4.4. இலக்கியப் பாடலின் சுவையுணர்ந்து போற்றுதல்

சங்க இலக்கியம் தொட்டு இக்கால இலக்கியங்கள் வரை காணப்படும் இலக்கியச் சுவைகளை உணர்ந்து இன்புற தாய்மொழியே சிறந்ததாகும். எண்ணற்ற உயர் இலக்கியங்களில் உள்ள சொற்சுவை, பொருட்சுவை, எழிலுணர்வு, ஒலி இனிமை, கருத்து மதிப்பு,

**குறிப்பு**

நல்லியல்புகள் ஆகியவற்றினைத் தாய்மொழியின் மூலமே சுவைத்துணர முடியும்.

பசுக்கன்றினைத் தேர்க்காலில் இட்டு அதே போன்று தன் மகனையும் தேர்க்காலில் இட்டுத் தாய்ப்பசுவின் துன்பத்தினைத் தானும் அடைந்த மனுநீதிச் சோழனின் பண்பினையும், தன் தசையைக் கொடுத்து அடைக்கலமாக வந்த புறாவினைக் காப்பாற்றிய சிபிச்சக்கரவர்த்தியின் பண்பினையும் இலக்கியங்களின் வழி அறிகிறோம். கடையெழு வள்ளல்களின் கொடைப்பண்பினையும் இலக்கியங்களின் வழி உணர்ந்து அதை பிறரும் பின்பற்றத் தூண்டுகிறது இலக்கியப் படைப்புகள்.

***"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து***
***நோக்கக் குழையும் விருந்து"* (குறள் - 90)**

"அனிச்சமலர் முகர்ந்த உடனே வாடிவிடும். ஆனால் விருந்தினர்கள் முகந்திரிந்து நோக்கினாலே மனம் வாடிவிடுவர்", என்று கூறுவதன் மூலம் விருந்தோம்பலின் முக்கியத்துவத்தை திருவள்ளுவர் எடுத்துரைக்கிறார்.

பண்பாடு என்பது சமூகத்தோடு ஒட்டி வாழும் உயரிய நோக்கமாகக் கருதப்படல் வேண்டும். இதனையறிந்து செயல்படுத்துவதற்கு, வாயிலாக அமைவது தாய்மொழி இலக்கியமே. தனிமனிதனுக்குத் தேவையான சமுதாய மரபுகளையும், மனப்பான்மையையும் தமிழ் இலக்கியமே அளிக்கிறது.

### 1.4.5. மனத்திலே உள்ளவற்றை வெளிப்படுத்துதல்

மனிதன் எண்ணங்களைப் பேச்சாலும், எழுத்தாலும் வெளியிடவும் அவனின் சிந்தனைத் தாக்கங்களைப் படைக்கவும் மொழி பயன்படுகிறது. முதலில் ஒருவனின் சிந்தனை தெளிவாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அதனைச் சரியாக வெளிப்படுத்த முடியும். இங்ஙனம் தெளிவான எண்ணங்களும், சிந்தனைகளும் மாணவர்களிடம் வளர்வதற்கு ஆசிரியர் கீழ்கண்ட பயிற்சிகளைக் கொடுக்க வேண்டும்.

- ஒரு பொருளைத் தெளிவான முறையில் படிக்கவும், படித்துப் பொருளுணரவும்,
- ஒரு பொருளைப் பற்றித் தெளிவான முறையில் பேசவும்,
- ஒரு பொருளைப் பற்றித் தெளிவான முறையில் கேட்கவும், கேட்டுப் பொருளுணரவும்,
- ஒரு பொருளைப் பற்றி எளிய முறையில் எழுதுவதற்கும் தேவையான ஆற்றல்களை வளர்க்க வேண்டும்.

தாய்மொழியில் பேசவும், படிக்கவும் எழுதவுமான பயிற்சிகளைப் பள்ளியில் அளித்து இவ்வாற்றல்களை வளர்த்தால், அவர்களின் வாழ்க்கையில் அவை பெரிதும் துணைபுரிவனவாக இருக்கும். மக்களாட்சி உள்ள நம் நாட்டில் ஒரு சிறந்த குடிமகனாக வாழ்வதற்கு இவ்வாற்றல்கள் மிகவும் இன்றியமையாதனவாகும்.

### 1.4.6. கற்பனையாற்றலையும் அழகுணர் ஆற்றலையும் வளர்த்தல்

மனித வாழ்க்கைக்கு உகந்ததாக அமைவது மதிப்புகளைப் பெறுவதாகும். மனிதப் பேறுகளில் அழகுணர்வையும், எழிற்சுவையையும் தாய்மொழியின் வழியாகப் பெறுதல் என்பது இயல்பு. உணர்ச்சிகளின் நிலைக் களனாக எழுதப்பெறும் எல்லாவகையான இலக்கியங்களுக்கும் கற்பனையாற்றல் மிக மிக இன்றியமையாதது.

***"கற்பனைத் தத்துவம் அறிவுக்கு எட்டாதது; சொற்களால் உணர்த்த முடியாதது. அது அதன் புலன்களை மட்டிலும் கொண்டே அறியப் பெறுவதென்பதாகும்"*** என்று ரஸ்கின் கூறுகிறார்.

தமிழ்மொழியில் சங்க இலக்கியங்களும், திருமுறை, பிரபந்தம் போன்ற பக்தி இலக்கியங்களும், பாரதி, பாரதிதாசன் போன்றோர் படைத்த இலக்கியங்களும் நிறைந்து கடல் போல் காட்சி அளிக்கின்றன.

கம்பராமாயணம், கலிங்கத்துப்பரணி போன்ற இலக்கியங்களைப் படிக்கும் போது எண்ணற்ற கற்பனைக் காட்சிகளைக் காணமுடிகிறது. அக்காட்சியில் பின்னிப் பிணைந்து கிடக்கும் முருகுணர்ச்சியில் (முருகு – அழகு) நாமும் ஈடுபடுகிறோம்.

### 1.4.7. சிறந்த மனப்பயிற்சியாக அமைதல்

எண்ணத்தின் வளர்ச்சிக்கு மொழி இன்றியமையாதது. எண்ணமும் மொழியும் ஒன்றைவிட்டு ஒன்று பிரிக்கவோ, விவரிக்கவோ இயலாதது ஆகும்.

"குழந்தை நினைக்கக் கூடிய மற்றும் கற்பனை செய்யக்கூடிய மொழியான தாய்மொழியில் பயிற்சியளிப்பது பண்பாட்டின் முக்கியமான சிறந்த கருவியாக விளங்குகிறது." **-பி.பி.பாலர்டு**

பேசப்படும் சொல்லுக்கும், அது குறிக்கும் பொருளுக்கும், பேசுபவருக்கும், கேட்பவருக்கும் நேரான தொடர்பை ஏற்படுத்துவது மொழியே.

குழந்தை பறவையைப் பார்க்கிறது. இது அதற்கு ஒரு பட்டறிவு. ஒவ்வொரு தடவை பார்க்கும் போதும் அதைப் பற்றிப் புதிய புதிய கருத்துக்களைத் தெரிந்து கொள்கிறது. இத்தகைய மனவளர்ச்சியானது தாய்மொழி வாயிலாகத்தான் ஏற்படுகிறது.

**குறிப்பு**

சாதாரண எளிய முறையில் பொருளுணர்ந்து கொண்ட கருத்துப் பொருளை வெளிப்படுத்துவதற்குச் சிறந்த பயிற்சி வேண்டற்பாலது. இதனைத் தாய்மொழி வாயிலாக அடையலாம்.

மேலும், தாய்மொழி படிப்பு ஒரு மாணாக்கனுக்கு

- நிலைத்த ஆழ்ந்த ஈடுபாட்டைக் கல்வியில் செலுத்துதல்,
- முறைப்படி ஒழுங்காக வேலை செய்தல்,
- கலைத்துறைகளில் இறங்கி உழைத்தல்

முதலிய நற்பழக்கங்களில் பயிற்சி அளிக்கும் என அறிஞர்கள் உறுதியாய் தெரிவிக்கின்றனர்.

### 1.4.8. மொழிப்பற்று, நாட்டுப்பற்றை ஊட்டுதல்

தாய்மொழி வாயிலாகவே மொழிப்பற்று, நாட்டுப்பற்றை வளர்க்க முடியும்.

***இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்***
***விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்."***
***முப்பதுகோடியும் வாழ்வோம் -வீழில்***
***முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்- மகாகவி***

தாய்மொழி இலக்கியத்தைப் படிக்கும் போது தான் அதன் வரலாற்றைப் பற்றித் தெளிவாக அறிய முடிகிறது. தாய்மொழியை

***"இல் வாழ்க்கையின் கண்ணாடி"*** என்றும்
***"வாழ்க்கையே மொழியின் இலக்கியமாக அமைகிறது"***
என்றும் மேனாட்டுத் திறனாய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

(உதாரணம்)

புறநானூறு போன்ற சங்க இலக்கியங்களில்தான் பண்டைத் தமிழகத்தின் வாழ்க்கை முறை, வரலாறு, சமயநிலை, கலைகள் முதலியவற்றையும் வரலாற்றுப் படிப்பு, கல்வெட்டுக்கள், செப்புப் பட்டயங்கள், கட்டடங்கள், கோவில்கள், நாணயங்கள், அயல் நாட்டினர் வைத்த குறிப்புகள் முதலியவற்றால் அறிய முடியாத உண்மைகளையும் அறிய உதவுகிறது.

தாய்மொழிப் படிப்பானது நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும் உண்டாவதற்கு மிகவும் இன்றியமையாதனவாகும்.

***"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்***
***நற்றவ வானினும் நனி சிறந்தனவே"*** என்றும்,
***"யாமறிந்த மொழிகளிலே……".*** என்று பாரதியாரும்
***"கன்னல் பொருள் தரும் தமிழே நீ ஓர் பூக்காடு நானொரு தும்பி"***
என பாரதிதாசனும் கூறியுள்ளனர். தாய்மொழி இலக்கியம் நாட்டுப்பற்றையும் உண்டாக்கும்.

### 1.4.9. படைப்பாற்றலை வளர்த்தல்

கட்டுரைகள், நாடகங்கள், சிறுகதைகள், புதினங்கள், கவிதைகள் முதலியவற்றில் படைப்பாற்றலைத் தூண்டி மாணாக்கர்களை சிறந்த படைப்பாளராக மாற்றலாம். இந்த நோக்கங்களை நன்கு நிறைவேற்ற மொழிப்பாடமே மிகச் சிறந்ததொன்றாகும்.

### 1.4.10. பிழையின்றி எழுதுதல்

பெற்றோரிடமிருந்தும், மற்றோரிடமிருந்தும் தவறான முறையில் குழந்தைகள் கற்கும் மொழிக்கூறுகளே எழுத்துப் பிழைகளுக்கு முதன்மைக் காரணங்களாகும்.

தாய்மொழியில் பிழையின்றி பேசுதல், படித்தல் எழுதுததல் என்பது மிகமிக இன்றியமையாதது. பெரும்பாலும் ஒலிப்பில் பிழைகள் ஏற்படுவதுண்டு.

(எ.கா) **‘பழம்’** என்பதை **‘பலம்’** என்று பேசுதல் எழுதுதல், படித்தல் இலக்கப் பிழைகளும் ஏற்படுவதுண்டு (எ.கா) **நாளை வந்தேன்.**
இதனைத் தவிர்ப்பதற்கு மொழிப் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.

- செய்யுள் ஒலித்தற்குரிய ஒலிகளில் வாய்மொழியாகப் பயிற்சி தருதல்,
- எழுத்துக் கூட்டி படிக்கும் பயிற்சியை மேற்கொள்ளல்,
- சொல்வதை எழுதுதல் மூலம் பிழையை நீக்குதல்,
- செய்யுள் பாடல்களை வாய்விட்டுப் படிப்பதன் மூலம் ள, ழ, ல, ர, ற, ந, ண, ன போன்ற ஒலி வேறுபாடுகளை உணர்ந்து கொள்ளல் போன்ற தவறுகளை நீக்கிப் பிழையின்றி எழுதலாம்.

### 1.4.11. பண்பு நலன்களைப் போற்றி வளர்த்தல்

அன்றாட வாழ்க்கையில் மொழி பயன்படாத துறைகளே இல்லை. கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல், போன்ற நான்கு செயல்களும் பயன்படாத வாழ்க்கைத் துறைகளே இல்லை எனலாம். கல்வி நிலையங்களை விட்டு வெளியேறிய மாணாக்கர்கள் வாழ்வில் நுழையும் போது நன்றாகப் பேசவும், படிக்கவும், எழுதவும் ஆற்றல் பெற்றிருத்தல் வேண்டும்.

- அன்றாட வாழ்க்கையிலும் இந்நான்கு திறன்கள் பெரிதும் பயன்படும்.
- இளமையில் தாய்மொழிப் பயிற்சியின்றேல் சிறந்த மனப்பயிற்சி அமையாது. நாட்டு வரலாற்றைச் சரியாக அறிந்து கொள்ள இயலாது. மொழிப் பற்றும், நாட்டுப்பற்றும் ஒருவரிடம் அமையாது.
- நல்லொழுக்கமும், இறையன்பும் ஏற்படுவதற்குத் தாய்மொழிப் பயிற்சி மிகவும் இன்றியமையாததாகும்.

**குறிப்பு**

**1.4.12. வாழ்க்கை நுகர்வுகளை எடுத்தியம்புதல்**

பிற உயிரினங்களை விட வாழ்க்கை நுகர்வுகளையும், பட்டறிவினையும் பங்கிட்டு வாழ்வதில் மனித இனம் மேம்பட்டது. அறிஞர்கள் விட்டுச் சென்ற வரலாற்று நூல்கள் தாய் மொழியில் எழுதப்பட்டவையே.

பட்டறிவைச் சிறப்பாக வெளியிட மொழியறிவு தேவை. பலதிறப்பட்ட எண்ணங்களை, உணர்வுகளை, வாழ்க்கை நுகர்வுகளை உள்ளபடியே வெளியிட மொழித்திறன் தேவை. வாழ்க்கையில் பெறக்கூடிய அனுபவங்களை சிறப்பாக எடுத்துரைக்க சிறந்த மொழி, தாய் மொழியே ஆகும்.

ஒவ்வொருவரும் வேறுபட்ட வாழ்க்கை நுகர்வுகளை, அனுபவங்களை வெளிப்படுத்த மொழியே உதவுகிறது. உள்ளத்தில் எண்ணும் எண்ணங்களை எடுத்தியம்பும் ஆற்றலை அளிப்பது தாய்மொழியே ஆகும். ஔவையார், விநாயகப் பெருமானை வேண்டிப் பாடும் பாடலைச் சான்றாக கூறலாம்.

***"பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை***
***நாலுங் கலந்துனக்கு நான் தருவேன்***
***துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்கு***
***சங்கத்தமிழ் மூன்றும் தா"***

வாழ்க்கையில் அனைவரும் பின்பற்ற வேண்டிய பண்புகளைத் தாய்மொழியிலேயே சிறப்பாக வெளிப்படுத்த முடியும்.

"***பண்பு எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல்***
***அன்பு எனப்படுவது தன் கிளை செறாமை***" **(கலித்தொகை – நெய்தற்கலி)**

தலைவன், தலைவி பெயர் சுட்டப்படல் கூடாது. அவ்வாறு சுட்டினால் காதல் உணர்வு அவர்களுக்கு மட்டுமே உரித்தாகிவிடும் என்பதால் அகத்திணையில் தலைவன், தலைவி பெயர் சுட்டப்படவில்லை.

***"மக்கள் நுதலிய அகனைந் திணையும்***
***சுட்டி இருவர்ப் பெயர் கொளப் பெறாஅர்".*** **அகத்திணை 57**

எனவே வாழ்க்கை நுகர்வுகளை எடுத்தியம்பும் பணியைத் தாய்மொழி செய்வதுடன் பிறரை மகிழ்வூட்டவும், பக்குவப்படுத்தவும், பண்பு நலன்களை வளர்க்கவும் தாய்மொழி உதவுகிறது.

**1.4.13. சொல்லாட்சித் திறன் பெறுதல்**

தாய்மொழியின் மூலமாகத்தான் நாம் பேசக்கூடிய ஒவ்வொரு சொல்லும் புரியும் படியாகவும், பிறர் ஏற்றுக் கொள்ளுமாறும் வெளிப்படுத்த முடியும். நாம் பேசும் வார்த்தைகளை உணர்ச்சிப்

பூர்வமாகவும், ஆற்றல் வாய்ந்ததாகவும் விளங்கச் செய்வது தாய்மொழியே ஆகும்.

***"வான் கலந்த மாணிக்கவாசக நின்வாசகத்தை***
***நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே***
***தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்தென்***
***ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே"***

என்ற பாடலின் மூலம் மாணிக்கவாசகப் பெருமானின் சிறப்புகளை எழுச்சிமிக்க சொற்களால் எடுத்துரைக்கிறார். இதன் மூலம் தன்னுடைய சொற்களை சிறப்பாக எடுத்துரைப்பதற்குத் தாய்மொழியே சிறந்த கருவியாகும் என்று அறியலாம்.

மேற்கண்டவற்றின் மூலம் தாய்மொழி கற்பித்தலின் நோக்கங்களை அறியலாம்.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.**
**ஆ.உமது பதிலைப்பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளபதிலோடு ஒப்பிட்டு அறிக.**

3.இலக்கியப் பாடலின் மூலம் எவற்றைச் சுவைத்துணர முடியும்?

…………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

4. குழந்தை கற்பனை செய்யும் மொழியான தாய்மொழியில் பயிற்சியளிப்பது பண்பாட்டின் முக்கியமான சிறந்த கருவியாக விளங்குகிறது என்று கூறியவர் யார்?

…………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

## 1.5. தாய்மொழி கற்பித்தலின் பயன்கள்

மொழியை பிழையின்றிப் பேசவும், உணர்வுடன் பேசவும் கூடிய திறனை வளர்த்தல், நுட்பமாகவும் துல்லியமாகவும் கேட்குந் திறனை வளர்த்தல், புரிந்து கொள்ளுதல், ஒலிப்புமுறை, மொழியைப் படிக்கும் வேகம், பொருளுணர்தல், பிழையின்மை, படித்த திறன்களை முறையாக எழுதுதல், பிழையின்றி எழுதுதல் ஆகிய எழுத்துத் திறன்களை வளர்த்தல் என மொழியியல் அடிப்படைத் திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவற்றை வளர்ப்பதே மொழியின் முதன்மையான நோக்கமாகும்.

மனிதன் எண்ணங்களைப் பேச்சாலும் எழுத்தாலும் வெளியிடவும், அவனின் சிந்தனைத் தாக்கங்களைப் படைக்கவும் மொழி பயன்படுகிறது. தனியொருவர் முயற்சியால் கிடைக்கும் படைப்புகள் யாவும் அழியா இடம் பெறுபவை. அவை தாய் மொழியால் மட்டுமே நிலைத்து நிற்கும் ஆற்றலைப் பெறுகின்றன.

சங்க இலக்கியம் தொட்டு இக்கால இலக்கியங்கள் வரை காணப்படும் இலக்கியச் சுவைகளை உணர்ந்து கொள்ளத் தாய்மொழி இன்றியமையாத ஒன்றாகும். எண்ணற்ற உயர் இலக்கியங்களில் உள்ள

**குறிப்பு**

சொற்சுவை, பொருட்சுவை, எழிலுணர்வு, ஒலி அமையும் விதம், கருத்து மதிப்பு, நல்லியல்புகள் ஆகியவற்றினை தாய்மொழியின் மூலமே சுவைத்துணர முடியும்.

தாய்மொழியின் மூலமாகக் கல்வி கற்கும் போது பல்துறை நூல்களையும் கற்றுத் தெளிய வாய்ப்பு ஏற்படுகிறது. மனிதன் சமுதாயத்துடன் இணைந்து வாழ்வதற்குரிய பண்புகளான ஒத்துழைத்தல், விட்டுக்கொடுத்தல், பிறர் மீது மதிப்பு வைத்தல், குழுக்களாகப் பணிபுரிதல், கூடி வாழ்தல், இனியவை பேசுதல் போன்றவை தாய்மொழியின் மூலமே வளர்ச்சி பெறும். எனவே மொழியின் அடிப்படைத் திறன்களைப் பெறுதல், ஆக்கப் படைப்புகளை உருவாக்குதல், இலக்கியச் சுவையுணர்தல், பண்பாடுள்ள சமுதாய வாழ்க்கைக்கு உதவுதல் போன்ற உயர் பண்புகளை ஒவ்வொரு தனி மனிதனும் பெற்றுச் சமுதாய உயர்வுக்கு வித்திடப் பயன்படுவதே தாய்மொழி கற்பித்தலின் பயன்களாகும்.

உயர்திணைச் சிறப்புகளில் ஒன்று மொழியாகும். மனித இனம் மொழியைப் படைத்துப் பயன்படுத்துவதால் பிற உயிரினங்களை விடப் பேரளவு முன்னேறி விட்டது. மேலும் முன்னேறிக் கொண்டும் இருக்கிறது.

தொடக்க நிலையில் மொழியினால் தனி மனித வளர்ச்சியும், சமூகத் தொடர்பும், சமூக இணைப்பும் ஏற்பட்டன. இந்நிலையில் மொழியின் வேலைகள் உட்கொள்ளல், வெளியிடல் என்ற இரு பிரிவுகளாகக் கொள்ளப்பட்டன. உட்கொள்ளல் மூலம் தனி மனித வளர்ச்சியும், வெளியிடல் மூலம் சமூகத் தொடர்பும் ஏற்பட்டன.

முதன் முதலாகக் கற்க வேண்டியது தாய்மொழியே. நம் வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் தாய்மொழி ஒருவரை வளர்க்கும் தாயாக விளங்குகின்றது.

இலக்கியம், இசைக்கலை, மருத்துவம், விளம்பரம், சட்டம், தொழில்நுட்பம், அரசியல், ஆய்வு இதழ்கள், ஒளிபரப்பு, செய்தித் தொடர்பு, வணிகம், கணினித்துறை போன்ற துறைகளில் இன்று தாய்மொழியின் பயன்பாடு அதிகம். இவையெல்லாவற்றிலும் தாய்மொழி பயன்படுகிறது. எனவே இச்சிறப்பு கருதி முதன்முதலில் கற்க வேண்டுவது தாய்மொழியே எனலாம்.

வரலாறு, அறிவியல், கணிதம் போன்ற பாடங்களை விட தாய்மொழியின் அறிவு மிகவும் முக்கியமாகும். மேற்கண்ட பாடங்கள் வாழ்க்கையில் பயன்படும் அளவு குறைவு. ஆனால் தாய்மொழியின் பயன்பாடு மிக அதிகம்.

தாய்மொழி வாயிலாகச் சொல்லும் போது அதன் ஆழமும், அழுத்தமும் நன்கு புலனாகின்றன.

- ❖ பொருள் விளக்கமும் தெளிவாகக் கிடைக்கிறது.
- ❖ தனிமனிதனுக்கு வேண்டிய சமுதாய மரபுகளை, மனப்பான்மை, உணர்வுத் திறன்களைத் தாய்மொழி தருகின்றது.
- ❖ பேச்சால், எழுத்தால், இலக்கியத்தால் ஒரு தனிமனிதன் சமுதாயக் கூறுகளைப் பெற்றுச் சமூக உறுப்பினராக, சமூக இயல்பினராக ஆக முடிகிறது.

ஒரு மனிதனின் வாழ்நாளெல்லாம் தாய்மொழியைப் போல் மூளையில் பதிவுகளை ஏற்படுத்துவது வேறு எதுவும் இல்லை. எனவே அனைத்துத் துறைகளின் வளர்ச்சிக்கும் தாய்மொழியின் பங்கு முக்கியமானதாகும். ஏனென்றால் அத்துறை பற்றிய அறிவினை மனிதன் பெறக் கருவியாக அமைவது தாய்மொழியே.

ஒவ்வொருவரும் தத்தம் எண்ணங்களையும், கருத்துக்களையும் பிறர் சரிவரப் புரிந்து கொள்ளும் வண்ணமும், நுண்பொருள் காணும் வண்ணமும் ஆற்றல் பெற்றவராக வேண்டும். இதனையே வள்ளுவன்

***"எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்***
***நுண்பொருள் காண்பது அறிவு"*** **(குறள் - 424)**

ஒரு செய்தியை மதிப்பிடுவது, திறனாய்வது, ஒப்பிடுவது, பாராட்டுவது, உவமையிட்டு, உருவமிட்டு கேட்டார் பிணிக்கும் வண்ணமும், கேளாரும் விரும்பிக் கேட்கும்படியும் ஈர்க்கும் திறனே செம்மையான வெளிப்பாட்டுத் திறனாகும். இதனையே வள்ளுவர்,

***கேட்டார் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்***
***வேட்ப மொழிவதாம் சொல்*** **(குறள் - 643)** எனக் கூறுகிறார்.

இந்த அடிப்படைத்திறன் வளர தாய்மொழித் திறனே சிறப்புடையதாகும்.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ.உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.**
**ஆ.உமது பதிலைப்பாடத்தின்இறுதியில்கொடுக்கப்பட்டுள்ளபதிலோடுஒப்பிட்டு அறிக.**

5. மனிதன் சமுதாயத்துடன் இணைந்து வாழ்வதற்குரிய பண்புகளாகக் கருதப்படுவன யாவை?

………………………………………………………………………………………
………………………………………………………………………………………

6. மொழியின் அடிப்படைத் திறன்கள் யாவை?

………………………………………………………………………………………
………………………………………………………………………………………

## 1.6. தமிழ் மொழி கற்பித்தலின் தனிச் சிறப்புகள்

தமிழ் என்ற சொல், தமிழின் முதல் நூலாகிய தொல்காப்பியத்தில் உள்ளது.

**குறிப்பு**

***"தமிழ் எண் கிளவியும் அதனோர் அற்றே"***

தமிழ் என்ற சொல்லில்

த் - வல்லினம்
ம் - மெல்லினம்
ழ் - இடையினம்

என மூன்று இனங்களும் உள்ளன. அதோடு 'ழ்' என்பது தமிழுக்கே உரிய சிறப்பு ஒலி, வரிவடிவ எழுத்து.

நம் தாய்மொழியாகிய பால்வாய்ப் பசுந்தமிழின் சிறப்பு இத்தன்மையது என்று வரையறுக்க முடியாது. நம் தாய்மொழியை அருந்தவ முனிவன் அகத்தியன் ஆக்கியது என்பர்.

***"கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி"*** **– புறப்பொருள் வெண்பாமாலை.**
கல்லும் மண்ணும் தோன்றுவதற்கு முன்பே தமிழ்க்குடி தோன்றியது என்றால் தமிழ்மொழி தோன்றிய காலத்தை வரையறுக்க இயலுமோ?

***"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்***
***இனிதாவது எங்கும் காணோம்"***

என்று பிறமொழிப் புலமைகளையெல்லாம் பெற்ற பாரதியார், தமிழ்மொழியின் சிறப்பு மிகுதியை ஒப்பிட்டுக் கூறியுள்ளார்.

உலகில் வரிவடிவம் பெறாத மொழிகள் பல உள்ளன. ஒரு மொழி வரிவடிவம் பெறுவதற்கு பல நூற்றாண்டுகள் ஆகின்றன. தமிழ் கி.பி 5ஆம் நூற்றாண்டிற்கு முன்பே வரிவடிவம் பெற்ற மொழி என்பதைத் தொல்காப்பியம் உரைக்கின்றன.

***"உட்கரு புள்ளி உருவாகும்மே"***

இந்திய மொழிகளிலே மெல்லொலி வடிவங்கள் தமிழுக்கு மட்டும் தான் உண்டு. அவை ங, ஞ, ண, ந, ம, ன என்பதாகும்.

பழமைக்கும் பழமையாய், புதுமைக்கும் புதுமையாய், கன்னித்தமிழாய்க் காலங்காலமாய் விளங்குவதோடு, இலக்கண இலக்கிய வரம்புக்கு உட்பட்டுத் திகழ்வது நம் தாய் மொழியாகும். வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்த பெருமை நம் தமிழ் மொழிக்கே உண்டு. உலகத்தில் உள்ள அனைத்து மொழிகளிலும் இல்லாத தனிச் சிறப்பு தமிழ் மொழியில் உண்டு.

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கண அழகுகளுடன் தெய்வீகத் தன்மையுடன் நிறைந்து விளங்குகிறது.

எண்ணற்ற தெய்வீகப் பாடல்களும், எண்ணிலடங்கா இலக்கிய நூல்களும், அற நூல்களும், நீதி இலக்கியங்களும் தமிழ் மொழியில் காணப்படுவது போல் வேறு எந்த மொழியிலும் இல்லை.

இத்தகைய சிறப்பு வாய்ந்த தமிழ்மொழியைக் கற்பதனால் ஒவ்வொரு மனிதனிடமும் கீழே குறிப்பிட்ட திறன்கள் உருவாகின்றன.

1. சிந்தனை ஆற்றல் உருவாகிறது.
2. படைப்பாற்றல் வளர்கிறது.
3. அகவளர்ச்சி ஏற்படுகிறது.
4. அடிப்படைத் திறன்கள் வளர்கிறது.
5. சமூகக் கூறுகளை அறிந்து கொள்ள முடிகிறது.
6. தமிழ் பயன்பாட்டு மொழியாக விளங்குகிறது.
7. பொருட்சிறப்பை எளிதில் புரிந்து கொள்ள முடிகிறது.
8. மக்கள் தொடர்பு சாதனமாக மொழி விளங்குகிறது.
9. செயல் முழுமையும் சிறப்படைய உதவுகிறது.
10. பயிற்றுமொழியாக விளங்குவதால் கற்றல் இனிமையும், எளிமையுமாகிறது.
11. பண்பாட்டுக் கூறுகளை கடத்தும் கருவியாக விளங்குகிறது.

1. **சிந்தனையை வளர்ப்பதில் தாய்மொழி**

மனத்தேயெழும் பல்வகைச் சிந்தனைக்கும் மொழியே அடிப்படையாகும். பழைய நினைவுகளை மீட்டறியவும், திறனாய்வு செய்யவும், கொள்கைகளை ஊகித்து அறிந்து கொள்ளவும், உணர்ச்சிகளை வெளிப்படுத்தவும் மொழி பயன்படுகிறது. எனவே சிந்தனையின்றேல் மொழியில்லை, மொழியின்றேல் சிந்தனை இல்லை.

**2. தமிழும் படைப்பாற்றலும்**

கட்டுரைகள், நாடகங்கள், சிந்தனைகள், புதினங்கள், கவிதையாற்றல் முதலியவற்றில் படைப்பாற்றலைத் தூண்டி மாணாக்கர்களைச் சிறந்த படைப்பாளராக மாற்றலாம்.

**3. தாய்மொழியும் அகவளர்ச்சியும்**

அகவளர்ச்சியானது நல்லெண்ணம், நற்பண்பு, நற்பழக்கம் போன்றவற்றால் வளர்க்கப்படுகிறது. எனவே மனிதனின் அகவளர்ச்சியை மேம்படுத்த தாய்மொழியில் எண்ணற்ற அறிவுக்களஞ்சியங்கள் உள்ளன. அறிவுக் களஞ்சியங்களில் கூறப்பட்ட செய்திகளைத் தாய்மொழியின் மூலம் பெறுவதே இயல்பான ஒன்றாகும்.

**4. தாய்மொழியும் அடிப்படைத்திறன்களும்**

- ❖ ஒரு பொருளைப் பற்றி ஒருவர் பேசுவதைக் கேட்டுப் பொருளை உணர்ந்து கொள்ளும் போது கேட்கும் திறன் வளர்கிறது.
- ❖ மாணவர்கள் தன் எண்ணங்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்தும் போது பேசுதல் திறன் வளர்கின்றது.
- ❖ மாணவர்கள் வாசிப்பு பயிற்சியை மேற்கொள்ளும் போது படித்தல் திறன் வளர்ச்சி அடைகிறது.

குறிப்பு

❖ மாணவர்கள் தன் கருத்துக்களை நிலையாக பதிவு செய்யும் போது எழுதுதல் திறன் வளர்ச்சி அடைகிறது.

**5. தமிழ்மொழியும் சமூகக்கூறுகளும்**

தனிமனிதனுக்கு வேண்டிய சமுதாய மரபுகளை, மனப்பான்மை உணர்வை, திறன்களை தாய்மொழி தருகிறது. பேச்சால், எழுத்தால், இலக்கியத்தால் சமுதாயக் கூறுகளைத் தனிமனிதன் பெற்று சமூக உறுப்பினராகவும், சமூக இயல்பினராகவும் மாற முடிகிறது. பதிற்றுப்பத்து, திருக்குறள் போன்றவை சமூகக்கூறுகளை எடுத்துரைக்கும் நூல்கள் ஆகும். சான்றாக, திருக்குறளில் காணப்படும் அதிகாரங்களான விருந்தோம்பல், ஒப்புரவறிதல், நட்பு போன்றவை சமூகச் சார்புடையவனாகும்.

**6. தாய்மொழியின் பயன்பாடு**

ஒருவனால் முதன்முதலில் கற்கப்படுவது தாய்மொழியே. ஒரு மனிதனின் வாழ்நாளெல்லாம் தாய்மொழி பயன்படுவது போல், மூளையில் பதிவுகளை ஏற்படுத்துவது பிரிதெதுவும் இல்லை. அனைத்துத் துறைகளின் வளர்ச்சிக்கும் தாய்மொழியின் பங்கு முக்கியமானதாகும். ஏனென்றால் அத்துறை பற்றிய அறிவினை மனிதன் பெறக் கருவியாக அமைவது தாய்மொழியே.

***“ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு***
***எழுமையும் ஏமாப் புடைத்து”*** ***(குறள் . 318)***

என்ற திருக்குறள் எவ்வாறு கல்வியின் பயன்பாட்டை எடுத்துரைக்கிறதோ, அதே போன்று தாய்மொழியானது கருவறை முதல் கல்லறை வரை மனித வாழ்வோடு பின்னிப் பிணைந்து காணப்படுகிறது.

**7. தமிழ்மொழியின் பொருட்சிறப்பு**

தனிமனித வாழ்வும், சமூக வாழ்வும் பொருள் புரிதலிலும், பொருட் சிறப்புக் காணுதலிலும் அமைகின்றன.

(எ-கா) - பாரதியாரின் ஆங்கிலப்பாடலும் தமிழ்ப் பாடலும் காண்க.

***“The heart cannot endure the thought of the fallen state of these poor people”***

***“நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைத்து விட்டால்”***

தமிழ்மொழியில் படிக்கும் போது பொருட்சிறப்பும், கவிஞரின் உணர்வும் எளிதில் புரிந்து கொள்ளும் நிலையில் உள்ளன. ஆனால் ஆங்கில வரிகளின் பொருளைப் புரிந்து கொள்வது கடினமாக உள்ளது.

**8. மக்கள் தொடர்பும், தாய்மொழியும்**

தாய்மொழியானது மக்கள் தொடர்பை இறுக்கமாகச் சேர்க்கிறது.

தமிழ் மட்டும் தெரிந்த ஒருவரும், சீனமொழி மட்டும் தெரிந்த ஒருவரும் சீன நாட்டுப் பகுதியில் விடப்படுகிறார்கள். இவர்கள் இருவரின் செய்தித்தொடர்பு சைகை மொழியாகத் திகழும். இரண்டாவது சூழலில் தமிழும், ஆங்கிலமும் தெரிந்த தமிழரும், ஜப்பானிய மொழியோடு ஆங்கிலமும் தெரிந்த ஜப்பானியரும் இவர்களின் செய்தி தொடர்பானது மிகக் குறைந்த அளவே நடைபெறும். மூன்றாவது சூழலில், தமிழ்நாட்டுத் தமிழர் ஆங்கிலமும் தெரிந்தவர், சிங்கப்பூர் தமிழர் ஆங்கில அறிவினை உடையவர் இருவரின் செய்தித் தொடர்பு தாய்மொழியாம் தமிழில் முழுமையாக நடைபெறும்.

ஆகவே தாய்மொழியின் மூலமே செய்தித் தொடர்பு முழுமையும் நெருக்கமும் பெற்றிருக்கும். வாழ்வின் எந்த இடச் சார்பிலும், நிலைச் சார்பிலும் தாய்மொழித் தொடர்பே நிறைவு தருவதாக இருக்க முடியும்.

**9. செயல் முழுமையும் தாய்மொழி**

தாய்மொழியானது, ஒருவனை முழுமையான ஆற்றலுள்ள செயல்படுமனிதனாக ஆக்குகிறது. இதனை நோக்கியே, தாய்மொழியை ஒருவனுக்குக் கற்றுக் கொடுப்பதன் மூலம் அவன் சூழலை அறிவான். சிந்தனை செய்வான். தொடர்புகளைத் தெரிவான். அவற்றைச் சரிபார்ப்பான். மேலும் துல்லியமாகக் குறிப்பிடுவான். முறையாகச் செயல்படுவான். அனைத்திற்கும் மேலாகச் சரியான முடிவுக்கு வருவான். திட்டமிட்ட செயலில் முழுமை பெறவும், விரைவில் செயலை முடிக்கப் பெறவும் மொழியறிவு பயன்படுகிறது. நாம் தொடங்கிய ஒரு செயல் சரியாகவும், சிறப்பாகவும் முடிவு பெறத் தாய்மொழியே சிறந்தது.

**10. பயிற்று மொழியும் தமிழும்**

பயிற்று மொழியாகத் தாய்மொழி விளங்குவதால் வகுப்பறைகளை “மொழிக் கடைகள்” என்று கல்வியாளர்கள் கூறுகிறார்கள். அவர்கள் கருத்துப்படி கணிதம் ஒரு குறியீட்டு மொழி, அறிவியல் ஒரு விளக்க மொழி. இதுபோல் ஒவ்வொரு பாடமும் தன்னளவில் ஒரு சிறப்பு மொழியாக அமைந்து விடுகிறது. தாய்மொழி ஒன்றின் துணை இல்லாமல் கணிதம், அறிவியல், சமூக அறிவியல் போன்ற பாடங்கள் விளக்கம் பெறா.

**11. பண்பாட்டுக் கூறுகளும் தாய்மொழியும்**

தாய்மொழியானது பண்பாட்டுக் கூறுகளைத் தேக்கி பாதுகாத்துப் பகிர்ந்தளிக்கிறது. சமூக மதிப்புப் பெறுபவை பண்பாட்டுக் கூறுகளாகும். இவை மரபு வழியாகக் கடந்தகாலம் தொட்டு நிகழ்காலப் பாதிப்புகளோடு எதிர்காலம் செல்லும் தன்மையுடையன. இவற்றைக் கணிதம், அறிவியல், வானவியல், வணிகவியல் போன்ற

குறிப்பு

பாடங்களிலிருந்து பெரிதளவு அறிய முடியாது. தாய்மொழி மூலமே எளிதில் அறிந்து கொள்ள முடியும். சங்ககாலத் தமிழ் மக்களின் பண்பாடு பற்றி எடுத்துரைக்க தாய்மொழியாகிய தமிழ் மொழியில் இலக்கண இலக்கிய வளங்களான தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் போன்ற நூல்கள் ஆதாரமாக உள்ளது.

(எ-கா) - திருக்குறளை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யும் போது கீழ்க்கண்டவரிகளுக்கு மொழியாக்கம் செய்யமுடியவில்லை.

***"யானோக்குங் காலை நிலன் நோக்கும்"***
***"மோப்பக் குழையும் அனிச்சம்"***
***"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி"***

எனவே பண்பாட்டுக் கூறுகளை ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்குக் கொண்டு செல்லும் கருவியாய் அமைவது தாய்மொழியாகும்.

**முன்னேற்றத்தை சோதித்து அறிக.**
**குறிப்பு: அ.உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.**
**ஆ.உமது பதிலைப் பாடத்தின்இறுதியில்கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.**

7. சமூக சார்புடையனவாக விளங்கும் நூல் எது?
……………………………………………………………………………………
……………………………………………………………………………………
8.சமூக சார்புடையவனாக கருதப்படும் திருக்குறள் அதிகாரங்கள் யாவை?
……………………………………………………………………………………
……………………………………………………………………………………

## 1.7. எண்ணத்தை வெளியிடும் கருவி

தாய்மொழியின் மூலமாகத்தான் நம் எண்ணங்களையும், கருத்துக்களையும், உணர்ச்சிகளையும் வெளியிட முடியும். உளப்பதிவுகளையும், எண்ணங்களையும் பரிமாறிக் கொள்ள மொழி ஒரு கருவியாகும். கல்லாதவர்களும் தாம் எண்ணும் எண்ணற்ற எண்ணங்களைச் சரியாக, சிறப்பாக, துல்லியமாகப் பரிமாற மொழித்திறன் வேண்டும். இதைத் தருவது தாய்மொழியே ஆகும்.

அகவளர்ச்சியானது,

- நல்லெண்ணம்
- நற்பண்பு
- நற்பழக்கம்

போன்றவற்றால் வளர்க்கப்படுகிறது. எனவே மனிதனின் அகவளர்ச்சியை மேம்படுத்தத் தாய்மொழியில் எண்ணற்ற அறிவுக்களஞ்சியங்கள் உள்ளன. அறிவுக் களஞ்சியங்களில் கூறப்பட்ட செய்திகளைத்

தாய்மொழியின் மூலம் பெறுவதே இயல்பான ஒன்றாகும். பேச்சாலும், எழுத்தாலும் பிறர் கருத்துக்களை அறியமுடிகிறது.

- ❖ எண்ணத்தை வெளியிடுவதற்கு மொழி உதவுகிறது.
- ❖ அதிகமான சொல்தொகுதியை உள்ளடக்கியது.
- ❖ தெளிவான முறையில் ஒருவர் ஒரு பொருளைப் பற்றி கேட்கவும், பொருளுணரவும் முடிகிறது.
- ❖ தாய்மொழியில் பேசவும், படிக்கவும், எழுதவுமான பயிற்சிகளைப் பள்ளியில் அளித்து இவ்வாற்றல்களை வளர்த்தால் அவர்கள் வாழும் போது அவை பெரிதும் துணையாக இருக்கும். மக்களாக பிறந்தவர்களுள் தலைசிறந்து வாழ கட்டாயம் வேண்டுவது மொழியே என்று தெய்வப்புலவர் கூறுகிறார்.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.**
**ஆ.உமது பதிலைப்பாடத்தின்இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளபதிலோடு ஒப்பிட்டு அறிக**

9. மனப்பதிவுகளையும் எண்ணங்களையும் பரிமாறிக் கொள்ள உதவும் கருவி............
10. அகவளர்ச்சியை மேம்படுத்த தாய்மொழியில் ............ உள்ளன.

## 1.8. திருத்தமாகப் பேச, கேட்க, படிக்க, எழுத பயிற்சி அளித்தல்

தமிழ் மொழியில் பிழையின்றிப் பேசவும், கேட்கவும், தெளிவாகப் படிப்பதற்கும் பிழையின்றி எழுதுவதற்கும் பயிற்சி கொடுக்கும் முறையே தாய்மொழிப் பயிற்றலின் முக்கியமான நோக்கமாகும். இதன் மூலமாகத்தான் மாணவர்களுக்குத் தேவையான மொழிப் பயிற்சி ஏற்படுகிறது.

“ஒரு பொருள் பற்றி எளிய முறையில் தெளிவாகப் பேசவும், பேசுவதைக் கேட்கவும், கேட்டுப் பொருளுணரவும், தெளிவான முறையில் படிக்கவும், படித்துப் பொருளுணர்ந்து கொள்ளவும், எளிய முறையில் எழுதவுமான ஆற்றலையும் பெற வேண்டும்” என்று அறிஞர் ஜார்ஜ் சாம்ஸன் கூறுகின்றார்.

ஒரு பொருளைப் பற்றி எளிய முறையில் தெளிவாகப் பேசுவதற்கான திறனை வளர்ப்பதற்கான வாய்மொழிப்பயிற்சி கீழ்காணுமாறு,

- ❖ திருத்தமாக பேசுதல்
- ❖ அழுத்தமாக பேசுதல்

**குறிப்பு**

- ❖ தெளிவுடன் பேசுதல்
- ❖ அச்சம் கூச்சமின்றிப் பேசுதல்
- ❖ அளந்தறிந்து பேசுதல்
- ❖ உணர்வுடன் பேசுதல்
- ❖ பிழையின்றிப் பேசுதல்

ஒரு பொருளைப் பற்றி ஒருவர் பேசுவதை கேட்கவும், கேட்டுப் பொருளுணர்ந்து கொள்வதன் மூலமும் கேட்டல் திறன் வளர்கிறது. கேட்டலுக்கான பயிற்சி கீழ்காணுமாறு,

- ❖ ஒலிகளைக் கேட்டல்
- ❖ விட்டுவிட்டுக் கேட்டல்
- ❖ அரைகுறையாகக் கேட்டல்
- ❖ ஒருசார்மனப்பான்மையுடன் கேட்டல்

ஒரு பொருள் பற்றி தெளிவான முறையில் படிக்கவும், படித்துப் பொருளுணர்ந்து கொள்வதன் மூலமும் படித்தல் திறன் வளர்கிறது. படித்தலுக்கான பயிற்சி கீழ்க்காணுமாறு,

- ❖ வாய்விட்டுப் படித்தல்
- ❖ உச்சரிப்புடன் படித்தல்
- ❖ திருத்தமாகப் படித்தல்
- ❖ உள்ளதை உள்ளவாறு படித்தல்
- ❖ உணர்வுகளை உணர்ந்து படித்தல்

ஒரு பொருள் பற்றிய தெளிவான எளிய முறையில் எழுதுவதற்கான ஆற்றலைப் பெறுவதற்கு எழுதுதல் பயிற்சி தருவதன் மூலம் எழுத்துத் திறன் வளர்கிறது. எழுத்துப் பயிற்சி முறைகள் கீழ்க்காணுமாறு,

- ❖ தசைப்பயிற்சி
- ❖ ஆள்காட்டி விரல், குச்சிப் பயிற்சி
- ❖ கரும்பலகை
- ❖ எளியப் படங்களை வரைதல்
- ❖ வெட்டி ஒட்டுதல்

மொழிப்பிழைகளான சந்திப்பிழை, மரபுப்பிழை, மயங்கொலிப்பிழை, ஒற்றுப்பிழை, ஒருமை, பன்மை போன்றவற்றை சரியான முறையில் எழுதுமாறு கற்றுக் கொள்ளுதல். தெளிவாகப் பேசுதல், தகுந்த ஒலிக் குறிப்புகளுடன் பேசுதல், மற்றவர்களின் ஒலிக்குறிப்புகளை சரியாகக் கேட்டுக்கொண்டு அதற்கு ஏற்றவாறு பதில் கூறுதல் வேண்டும்.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.**
**ஆ .உமது பதிலைப் பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக**

11.வாய்மொழிக்கான பயிற்சி ஏதேனும் இரண்டினைக் கூறுக?
……………………………………………………………………………………………
……..……………………………………………………………………

12.ஒரு பொருள் பற்றிய தெளிவான எளிய முறையில் எழுதுவதற்கான ஆற்றலைப்பெறுவதற்கு பயன்படும் கருவியின் பெயர் யாது?
………………………………………………………………………........................................
……………………………………………………………………………………………..

## 1.9. தொகுத்துக் காண்போம்

தமிழர் பண்பு பல இடங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆளுமை வளர்ச்சியில் தாய்மொழி முக்கியப் பங்கு வகிப்பதும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. சமூகக்கூறுகளை அறிந்து கொள்வதிலும், படைப்பாற்றல் திறனை வளர்ப்பதிலும் தாய்மொழி சிறப்பான இடத்தினை வகிக்கிறது.மொழியின் துணையின்றி சிந்திக்கவோ, எண்ணங்களை வெளியிடவோ இயலாது. நுட்பமான சிந்தனைகளையும், உணர்வு வெளிப்பாடுகளையும் பழந்தமிழ்ப் பாடல்கள் அழகாக படம்பிடித்துக் காட்டுகின்றன. கற்பனையின் முக்கியத்துவம் எடுத்துரைக்கப்பட்டது.

## 1.10. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

1. மருத்துவம், விளம்பரம்
2. மணிமேகலை
3. சொற்சுவை, பொருட்சுவை, எழிலுணர்வு,ஒலியினிமை, கருத்து மதிப்பு,நல்லியல்புகள்
4. பி.பி.பாலர்டு
5. ஒத்துழைத்தல், விட்டுக்கொடுத்தல், பிறர்மீது மதிப்பு வைத்தல், குழுக்களாகப் பணிபுரிதல், கூடி வாழ்தல், இனியவை பேசுதல்
6. கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல்
7. திருக்குறள்
8. விருந்தோம்பல், ஒப்புரவு அறிதல், நட்பு.
9. மொழி
10. அறிவுக்களஞ்சியம்.
11. திருத்தமாக பேசுதல், அழுத்தமாக பேசுதல்
12. எழுதுதல் பயிற்சி

குறிப்பு

## 1.11. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

1. தாய்மொழியின் தனிச்சிறப்பினை விவரித்து எழுதுக.
2. தமிழ்மொழியின் பொருள் சிறப்பினை விவரித்து எழுதுக.
3. உனக்கு தெரிந்த வாய்மொழி பயிற்சிகளை விவரித்து எழுதுக.
4. தாய்மொழி கற்பித்தலின் நோக்கங்களை விவரி.

## 1.12. மேலும் பயிலுவதற்கான நூல்கள்


1. முனைவர் ஞா.பழனிவேலு, (2011), செந்தமிழ் கற்பித்தல்-பொதுத்தமிழ்,நதி பப்ளிகேஷன்ஸ், தஞ்சாவூர்.
2. வெ.கலைச்செல்வி (2013), பொதுத்தமிழ் கற்றல் - கற்பித்தல், சஞ்ஜீவ் வெளியீடு,ஈரோடு.
3. கணபதி.வி (1989), தமிழ் ஐவகைப் பாடங்களும் கற்பித்தலும், சாந்தா பப்ளிஷர்ஸ், சென்னை.
4. கோவிந்தராஜன்.மு. (1990), நற்றமிழ் பயிற்றலின் நோக்கமும் முறையும், சரஸ்வதி பதிப்பகம், சென்னை.
5. முனைவர் அ.மீனாட்சிசுந்தரம், (2014), பாடப்பொருள் மற்றும் தமிழ் கற்பித்தல் (பொதுத்தமிழ்), காவ்யமாலாபப்ளிஷர்ஸ், திண்டுக்கல்.


*****

குறிப்பு

# அலகு 2: தமிழைப் பயிற்றும் பண்டைய முறைகள்

**பாட அமைப்பு**

2.1. முன்னுரை
2.2. குறிக்கோள்கள்
2.3. தமிழ்மொழியினைப் பயிற்றும் முறை
2.4. பண்டையோர் கண்ட பயிற்று முறை
2.4.1. சொற்பொழிவு முறை
2.4.2. உரையாடல் முறை
2.4.3. தடை-விடை முறை
2.4.4. வினா-விடை முறை
2.4.5. பயிற்சி / பன்முறைப் பயிற்சி முறை
2.4.6. விதிவிளக்க முறை
2.4.7. போலக் கற்றல் முறை
2.4.8. நெட்டுரு முறை
2.4.9. காரண காரிய முறை
2.4.10. உய்த்துணர்தல் முறை
2.4.அ. பண்டைய கால பயிற்று முறையின் நிறைகள்
2.4.ஆ. பண்டைய கால பயிற்று முறையின் குறைகள்
2.5. தொகுத்துக் காண்போம்
2.6. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்
2.7. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்
2.8. மேலும் பயில்வதற்கான நூல்கள்

## 2.1 முன்னுரை

தாய்மொழியைக் கற்றுக் கொள்வது என்பது அறிவை வளர்க்கும் செயல் ஆகும். மொழி வளர்ச்சியும், அறிவு வளர்ச்சியும் நெருங்கிய தொடர்புடையன. ஒரு குழந்தை பள்ளிக்கு வருவதன் நோக்கம் மொழியையும், அறிவையும் வளர்ப்பதற்கே. தாய்மொழியாகிய தமிழ் கற்பதற்கு இனிமையானது, எளிமையானது என்றாலும் அதனைக் கற்கும் முறையறிந்து கற்றால் தான் எளிமையாகக் கற்க முடியும். அதனைக் கற்பிப்பதற்கு சிறந்த ஆசிரியர்கள் இருந்தாலும், அதனைக் கற்றுக் கொடுக்கும் முறையின் மூலம் தான் மாணாக்கரின் கற்றலை மேம்படுத்த முடியும். அறிஞர்கள் பலர் தாய்மொழியை எவ்வாறு விரைந்து மாணவர்களுக்கு கற்பிப்பது என்பது குறித்து பல்வேறு

குறிப்பு

கோட்பாடுகளையும், உண்மைகளையும் மொழிந்துள்ளனர். இப்பாடத்தில் பண்டைய காலத்தில் பயிற்று முறை எவ்வாறு இருந்தது என்பது பற்றி தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அதனைக் குறித்து இப்பாடத் தொகுதியில் காண்போம்.

## 2.2 குறிக்கோள்கள்

நீங்கள் இப்பாடத்தைப் பயின்ற பின்னர்,

- ❖ தமிழ் மொழியினைப் பயிற்றும் முறைகளை விவரிப்பீர்கள்.
- ❖ பண்டைய கால பயிற்று முறைகள் பற்றி தெரிந்து கொள்வீர்கள்.
- ❖ ஆசிரியர் கற்பிக்கும் பொழுது என்னென்ன குற்றங்களைத் தவிர்க்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்வீர்கள்.

## 2.3. தமிழ்மொழியினைப் பயிற்றும் முறைகள்

மக்கள் அறிய வேண்டுவனவற்றை அறிதற்குரிய மனப்பயிற்சியே கல்வி. கல்வி வளர்ச்சிக்கு மொழியின் துணை மிகவும் இன்றியமையாதது. மக்கள் தாம் எண்ணிய கருத்துக்களை மற்றவர்களுக்கு விளங்கச் சொல்வதற்கும், பிறர் எண்ணங்களைக் கேட்டு அறிவதற்கும் பேசும் மொழி இடைநின்று துணை செய்கின்றது. மக்களின் புலமைச் செல்வத்தின் குன்றாத நிலைக்களமாய் விளங்குவது அவர் பேசும் மொழியே ஆகும்.

மாணாக்கர்களின் மனநிலைக்கு ஏற்ப கற்பிக்கும் முறைகள் இன்று வளர்ந்துள்ளன. உளநூற் கருத்துக்கள் புதிய கற்பித்தல் முறைகளை உள்ளடக்கியுள்ளன. செய்து கற்றலை அடிப்படையாகக் கொண்டு இம்முறைகள் விளங்குகின்றன. மாணாக்கர்களின் உடலும், உள்ளமும் வளர்ச்சியுறுவதோடு பிற்கால வாழ்க்கைக்கும் அவர்கள் கற்ற கல்வி பயன்படுமாறு இம்முறைகள் உருவாக்கப் பெற்றுள்ளன.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.**
**ஆ.உமது பதிலைப் பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.**

1.மக்கள் அறிய வேண்டுவனவற்றை அறிதற்குரிய மனப்பயிற்சி யாது?

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

2. உளநூற் கருத்துக்கள் எம் முறையை உள்ளடக்கியுள்ளன?

……………………………………………………………………………………

……………………………………………………………………...........

குறிப்பு

## 2.4. பண்டையோர் கண்ட பயிற்றுமுறை

பண்டைய காலத்தில் பயிற்று முறைகள் எவ்வாறு இருந்தன என்பதைப் பற்றித் திட்டமாக அறிந்து கொள்ளும் சாதனங்கள் ஒன்றும் இல்லை. ஒருசில கருத்துக்களை ஊகத்தால்தான் கொள்ள வேண்டும்.

***"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு***
***மாடல்ல மற்றை யவை" (குறள்-400)*** எனத் **திருக்குறளும்**,

***"பிறப்புழர் அன்ன உடன் வயிற்றுள்ளும்***
***சிறப்பின் பாலால் தாயும் மனந் திரியும்"*** என **புறநானூறும்.**

***"கற்கை நன்றே கற்கை நன்றே***
***பிச்சை புகினும் கற்கை நன்றே"*** - என **கொன்றை வேந்தன்**

மக்கள் கல்விக்கு சிறப்பிடம் அளிக்கின்றன என்பதனை நன்கு அறிய முடிகிறது.

இன்றுள்ள அச்சு வசதி, உரைநடை நூல்கள் முதலியவை அன்றில்லாததால் கற்பித்தலில் நெட்டுரு செய்தல் முக்கியத்துவம் பெற்றிருக்க வேண்டும். இக்காலத்தில் உள்ளவை போல் பல ஆயிரக்கணக்கான கல்வி நிலையங்கள் அக்காலத்திலிருந்தன என்று திட்டமாகச் சொல்லக்கூடிய சான்றுகள் ஒன்றும் கிடைக்கவில்லை. பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த நன்னூல் ஆசிரியர் கற்பிக்கும் முறை குறித்தும் பாடங்கேட்டலின் வரலாறு குறித்தும் பகன்றிருக்கின்றார்.

"காலம், இடம் ஆகியனவற்றை உணர்ந்து, நன்கு அமர்ந்து, தான் வழிபடும் தெய்வத்தை வாழ்த்தி, உரைக்கப்படவேண்டிய பாடத்தை மனத்தில் பதிய வைத்துக் கொண்டு விரைந்து உரைக்காமல், சினவாமல், ஈடுபாடு கொண்டு இன்முகத்தோடு கற்பவன் அறிவுத்திறன் அறிந்து அவன் மனங்கொள்ளும் வகையில் பாடம் சொல்ல வேண்டும்" என்று பவனந்தியார் இலக்கணம் கூறுகிறார்

மாணவன் பொழுதோடு சென்று ஆசிரியனை வணங்கி, பணிந்து, ஆசிரியரின் மனக்குறிப்பினை அறிந்து, அவர் இருவென்று கூறும்பொழுது இருந்து, சொல் என்று ஆணையிடுகிறபோது சொல்ல வேண்டியதைச் சொல்லி, நீர்வேட்கை உள்ளவன் நீரை பருகுவது போன்ற ஆர்வம் கொண்டு, சித்திரப்பாவை போன்று அடங்கி இருந்து, செவியை வாயாகவும், நெஞ்சைக்களனாகவும் கொண்டு, கேட்டவற்றை அப்படியே நெஞ்சில் நிறுத்தி, ஆசிரியர் செல் என்று சொல்லும் போது செல்லுதல்

**குறிப்பு**

மாணவர் பாடம் கேட்கும் முறையாகும் என்கிறார் ஆசிரியர் பவனந்தியார். (நன்னூல்:40).

கல்வி கற்பவர்கள் பெரும்பாலும் ஆசிரியர்கள் வீட்டிலேயே தங்கியிருத்தல் வேண்டும் என்பதை,

***"கோடன் மரபே கூறுங்காலைப்***
***பொழுதொடு சென்று வழிபடல் முனியான்***
***முன்னும் பின்னும் இரவினும் பகலினும்***
***அகலா னாகி அன்பொடு கெழீஇக்***
***குணத்தொடு பழகியவன் குறிப்பிற் சார்ந்***
***திருவென விருந்து சொல்லெனச் சொல்லிப்***
***பருகுவன்ன வார்வத்தனாகிச்***
***சித்திரப் பாவையினத்தக வடங்கிச்***
***செவிவாயாக நெஞ்சு களனாக***
***கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்***
***போவெனப் போத லென்மனார் புலவர்"***

என்ற நச்சினார்க்கினியரின் தொல்காப்பியச் சிறப்பு பாயிர உரை மூலம் அறியலாம். இதனால் மாணாக்கர்கள் ஆசிரியர்களோடு உடனுறைந்து நெருங்கிப் பழகுவர் என்றும், ஆசிரியர் ஒவ்வொரு மாணாக்கனையும் நன்கறிந்து அவனுடைய இயல்புகள், குணநலங்கள், செயல்கள் முதலியவற்றைக் கண்டுணர்ந்து, கடிய வேண்டுவனவற்றை கடிந்தும், வளர்க்க வேண்டியவனவற்றை வளர்த்தும், சிறந்த குடிமகனாகச் செய்யும் பொறுப்பினை மேற்கொண்டிருக்க வேண்டும் என்பதை உணரலாம்.

இலக்கண நூல்களான தொல்காப்பியம் மற்றும் பொதுப்பாயிர நூற்பாக்களில் இருந்து கீழ்காணும் பயிற்று முறைகள் பண்டைய காலத்தில் இருந்ததை அறியலாம்.

- சொற்பொழிவு முறை
- உரையாடல் முறை
- தடை—விடைமுறை
- வினா—விடைமுறை
- பயிற்சி / பன்முறைப் பயிற்சி முறை
- விதிவிளக்கமுறை
- போலக்கற்றல் முறை
- நெட்டுருமுறை (மனப்பாடமுறை)
- காரணகாரியமுறை
- உய்த்துணர்தல் முறை

### 2.4.1.சொற்பொழிவு முறை

பழங்காலத்தில் சொற்பொழிவு முறை அல்லது வாய்மொழி முறை இருந்ததை இலக்கண நூல்கள் வழி அறியலாம்.

***“ஈதல் இயல்பே இயம்புங் காலைக்
காலமும் இடனும் வாலிதின் நோக்கிச்
சிறந்துழி இருந்துதன் தெய்வம் வாழ்த்தி
உரைக்கப் படும்பொருள் உள்ளத் தமைத்து
விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து
கொள்வோன் கொள்வகை அறிந்தவன் உளங்கொளக்
கோட்டமில் மனத்தின்நூல் கொடுத்தல் என்ப”***   -

**நன்னூல் 36**

ஆசிரியனுக்குரிய இயல்பு தன்னிடமுள்ள கல்விச் செல்வத்தை தன்னை நாடி வருவோர்க்கு அளித்தலாகும். அவ்வாறு கற்றுத்தரும் பொழுது விரைவில் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் கற்பிக்க வேண்டும். தவறான வினாக்களை மாணவர்கள் கேட்டாலும் கோபப்படாமல் விடை பகரவேண்டும். மாணவர்களைப் பற்றிய எல்லாச் சூழ்நிலைகளையும் ஆசிரியர் முன்பே அறிந்து வைத்திருக்க வேண்டும். அதற்கேற்ப, கொள்வோன் கொள்வகை அறிந்து கற்றுக் கொடுத்தல் நல்லாசிரியரின் பண்பாகும்.

செவிவாயாக, நெஞ்சு களனாக, கேட்பவை, கேட்டவை விடாது உள்ளத்தமைத்து, ஒருமுறை கேட்டல், இருமுறை கேட்டல் ஆகிய குறிப்புகள் வழி சொற்பொழிவு முறையில் கற்பித்தல் பழங்காலத்தில் நடைபெற்றதை உய்த்துணரலாம்.

நூலின் பத்துவகைக் குற்றங்கள் ஆசிரியனுக்கும் பொருந்தும். எனவே ஆசிரியர் கற்பிக்கும் பொழுது கீழ்வரும் குற்றங்களைத் தவிர்க்க வேண்டும் என்று நன்னூலார் கூறுகிறார்.

1. **கூறியது கூறல்** - கூறியதையே மீண்டும் கூறல்
2. **மாறுகொளக்கூறல்** - மாறுபாடு தோன்றக் கூறல்
3. **குன்றக் கூறல்** - பொருளை முழுவதும் கூறாது விட்டுவிடல்
4. **மிகைபடக் கூறல்** - மிகைப்படுத்திக் கூறுதல்
5. **பொருளில் மொழிதல்** - பொருளற்றவற்றைக் கூறுதல்
6. **மயங்கக்கூறல்** - பொருள் குழப்பம் வருமாறு கூறுதல்
7. **கேட்போர்க்கு இன்னா யாப்பிற்றாதல்** - கேட்போருக்கு இன்பம் தரும் வகையில் கூறாது இருத்தல்.
8. **பழித்த மொழியான் இழுக்கங்கூறல்** - குற்றமான சொற்களைக் கூறல்
9. **தன்னான் ஒரு பொருள்கருதிக் கூறல் -** தானே ஒன்றைக் கூறுதல்

**குறிப்பு**

10. **என்ன வகையினும் மனங்கோளின்மை** – கற்போர் மனம் ஏற்றுக்கொள்ளாத வகையில் கூறுதல்

திருவள்ளுவரின் திருக்குறள் மூலமும் சொற்பொழிவு முறை பண்டைக்காலத்தில் இருந்திருக்கும் என்பதை அறுதியிட்டுக் கூறலம்.

**"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு"** **(குறள் 423)**

**"செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்**
**செல்வத்துள் எல்லாம் தலை"** **(குறள் 411)**

ஆகிய குறள்கள் சொறிபொழிவு முறை அல்லது வாய்மொழி கற்பித்தல் முறைக்குச் சான்றுகளாக அமைகின்றன.

**2.4.2. உரையாடல் முறை**

ஆசிரியரும் மாணவரும் உரையாடி கற்றல் கற்பித்தலை நிகழ்த்தியுள்ளனர் என்பதற்கும் நன்னூலே சான்றாக அமைகின்றது.

***ஆசானு ரைத்த தமைவரக் கொளினும்***
***காற்கூறல்லது பற்றல னாகும்*** **- நன்னூல் - 44**

***அவ்வினை யாளரோடு பயில்வகை யொருகாற்***
***செவ்விதி னுரைப்ப வவ்விரு காலும்***
***மையறு புலமை மாண்புடைத் தாகும்*** **- நன்னூல் - 45**

உடன்கற்போர் இணக்கத்தாலும், ஒருசாலை மாணவர் உரையாடலாலும் காற்பங்கு அறிவு வளரும் என்று நன்னூலில் கூறப்பட்டுள்ளது. தம்மொடு பயிறல், அவ்வினையாளரோடு பயில்வகை ஒருகால் ஆகிய குறிப்புகள் உரையாடல் முறை இருந்ததைச் சுட்டுகின்றன.

**2.4.3. தடை– விடை முறை**

மாணவர்களுக்குக் கற்றலின் பொழுது தடை ஏற்பட்டால் அதற்கு விடையும், விளக்கமும் அளிப்பது ஆசிரியரின் கடமை. இலக்கணம் கற்றலில் தடை ஏற்படும் என்பதை உணர்ந்து, அதற்கு வாய்மொழியாக விடை பகர்வது போன்ற அமைப்பை இலக்கண, இலக்கிய உரைவிளக்கங்கள் கொண்டுள்ளன.

**பெருமையும் உரனும் ஆடுஉ மேன - *தொல்காப்பியம் களவு*– 7**

ஆண்மகனுக்குரிய பண்பு பெருமையும், வீரமும் என்று மாணவர்கள் படிக்கும் பொழுதே, பெண்ணுக்குரிய பண்புகள் யாவை என்ற எண்ண ஓட்டம் தடையை ஏற்படுத்தும். அதனை நீக்கும் வகையில் அடுத்த நூற்பாவிலேயே அதற்கு விடை தந்துள்ளார் தொல்காப்பியர்.

குறிப்பு

*அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த*
*நிச்சமும் பெண்பாற் குரிய என்ப.* **- தொல்காப்பியம் களவு– 8**

### 2.4.4. வினா–விடை முறை

வினாதல், வினாயவை விடுத்தல் (41) என்ற நன்னூல் நூற்பா வழி வினாக்கேட்டு விடைபெறும் முறை இருந்ததை அறியலாம். தமிழர் தம் கோட்பாட்டின்படி மெய்ப்பாடுகள் எத்தனை என்று மாணவர்கள் வினா எழுப்புவது போல் கற்பனை செய்த தொல்காப்பியர் மெய்ப்பாடுகள் எட்டு என்று விடை தருவது போல் நூற்பா அமைத்துள்ளார்.

*"நகையே அழுகை இளிவரல் மருட்கை*
*அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று*
*அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப"* **- தொல்காப்பியம் - 1197**

### 2.4.5. பயிற்சி / பன்முறைப் பயிற்சி முறை

எந்த ஒரு செயலையும் செய்யும் பொழுது திருத்தமும், நேர்த்தியும் அமைய வேண்டும். ஒருமுறைக் கேட்டலை விட இருமுறைக் கேட்டல் சிறந்தது என்ற கருத்தின் மூலம் பயிற்சி, பன்முறைப் பயிற்சி இருத்ததை அறியலாம்.

*ஒருகுறி கேட்போ னிருகாற் கேட்பிற்*
*பெருக நூலிற் பிழைபா டிலனே.* **நன்னூல் - 42**

*முக்காற் கேட்பின் முறையறிந் துரைக்கும்.* **நன்னூல் - 43**

*சித்திரமும் கைப்பழக்கம்*
*செந்தமிழும் நாப்பழக்கம்*
*வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்*

என்ற பாடல் வரிகளின் மூலம் பயிற்சி, பன்முறைப் பயிற்சிக்கு அக்காலத்தில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கும் என்பதை உணர முடிகிறது. எத்தனை சிறப்பாகப் பாடம் கேட்டாலும், தம்மொடு ஒத்த ஒரே வகுப்பு மாணவர்களுக்குத் தெளிந்த பொருளைக் கூறுவதால் மாணவன் அறிவு மேம்படும் என்று நன்னூல் கூறியுள்ளது.

### 2.4.6. விதி விளக்க முறை

தமிழ் இலக்கியங்கள், இலக்கணங்கள் அனைத்திலும் விதி விளக்கமுறை இருந்ததை உரை விளக்கங்கள் தெளிவுபடுத்துகின்றன. தொல்காப்பியர் கைக்கிளை, பெருந்திணை இரண்டுக்கும் முதலில் விளக்கம் கூறியுள்ளார். பின்னர் அவை இரண்டும் எவ்வாறு வேறுபடுகின்றன என்பதை விளக்கியுள்ளார்.

*சொல் எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்*
*புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே.* *அகம் - 53*

***ஏறியமடல் திறன் இளமை தீர்திறம்
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்த மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே.*** **அகம் - 54**

இளம்பூரணா் தம் உரையில் கைக்கிளை இன்பம் தருவது என்றும், பெருந்திணை துன்பம் தருவது என்றும் விதியை விளக்கியுள்ளாா்.

***"கைக்கிளை செந்நிறம் பெருந்திணை நொந்திறம்"***

**2.4.7. போலக்கற்றல் முறை**

அனைத்துக் கற்றலும் போலச் செய்வதாலேயே நிகழுகின்றன. எனவே அக்காலத்தில் வாய்வழிக் கற்றல் நிகழ்ந்திருப்பதால் ஆசிரியா் கூறுவதைக் கேட்டு அதைப் போலவே தாங்களும் செய்து கற்றுள்ளனா். மாணவா்கள் எழுதுதல், பேசுதல் ஆகியன போலக்கற்றலில் அடங்கும்.

***"கற்றிலன் ஆயினும் கேட்க"***

கற்க வேண்டுவனவற்றைக் கற்றோரிடம் சென்று கேட்டு, தெளிவு பெறவேண்டும் என்பது போலக்கற்றல் முறையாகும். ஆசிரியா்கள் எழுதுவதையும், பேசுவதையும், உச்சரிப்பதையும், ஒலிப்பதையும் கண்டு, கேட்டு, கற்று வந்துள்ளனா் என்பதற்கு **''கண்பாா்க்க கையா லெழுதானை"** என்ற வெண்பா கருத்தினைச் சான்றாக சுட்டலாம்.

**2.4.8. நெட்டுரு அல்லது மனப்பாட முறை**

நூல்கள் இல்லாத காலமாதலால் ஆசிரியா்கள் கூறுவதைக் கேட்டு, மனப்பாடம் செய்தே மாணவா்கள் கற்றிருக்க வேண்டும். அதனாலேயே ஆசிரியா் பாடஞ்சொல்லும் முறையைப் பற்றி கூறும் நன்னூலாா் ஆசிரியா்கள் விரைவில்லாது, வெகுளாது, விருப்பத்துடன் கொள்வோன் கொள்வகை அறிந்து கற்றுத்தர வேண்டும். நூல் பயில் இயல்பு பற்றிக் கூறும் பொழுது,

***"கேட்டவை நினைத்தல்
ஆசானைச் சாா்ந்து அவை அமைவரக் கேட்டல்
மும்முறை பாடங்கேட்டல்"***

என்று நன்னூலாா் சுட்டுவது நெட்டுருமுறை அக்காலத்தில் இருந்ததிற்குச் சான்றாக அமைகிறது.

**2.4.9. காரணகாரியமுறை**

எந்த ஒன்றையும் காரணகாரிய முறையிலேயே செய்யும் பண்புடையவா்கள் நம் முன்னோா்கள். எனவே எந்த ஒன்றையும் பிறருக்குச் சொல்லும் பொழுது காரணம், காாியம் இரண்டையும் குறிப்பிடும் முறை இருந்ததை இலக்கிய, இலக்கண வைப்பு முறைகளில் காணலாம். திருவள்ளுவா் அறம், பொருள், இன்பம், என்ற

வைப்பு முறையில் திருக்குறளை இயற்றியுள்ளார். அறத்தின் வழி பொருளீட்டி இன்பம் துய்க்க வேண்டும் என்பதே காரியமுறை. இலக்கணத்தில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற வைப்பு முறையும் காரணகாரியமுறை இருந்ததற்கு சிறந்த சான்றாகும்.

***"மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்***
***சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப் பெறார்."*** *அகம் - 57*

அகத்திணைகளில் தலைவன் தலைவி பெயர் சுட்டுவதில்லை என்று காரியத்தைக் கூறி, அதற்கு காரணமும் சுட்டப்பட்டுள்ளது.

***"புறத்திணை மருங்கின் பொருந்தி னல்லது***
***அகத்திணை மருங்கில் அளவுதல் இலவே"*** **அகம் -58**

அக உணர்வுகள் அனைவருக்கும் பொதுவானவை. ஒருவரது பெயரைச் சுட்டி, இன்னாருக்கு உரியவை இவ்வுணர்வுகள் என்று சொல்லிவிட்டால், பிறருக்கு அவை இல்லை என்றாகிவிடும். எனவே அகத்திணையில் பெயர் சுட்டுவது இல்லை.

### 2.4.10. உய்த்துணர்தல் முறை

புலவன் நேரடியாக ஒரு பொருளைத் தருவான். ஆனால் அதற்காகப் பின்புலத்தில் வேறோரு பொருளை நினைத்துச் சொல்லியிருப்பான். அதனை மாணவர்கள் உய்த்துணர்ந்து கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக,

***எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்***
***மெய்ப்பொருள் காண்ப தறிவு.*** **- குறள் 423**
***குலவிச்சை கல்லாமல் பாகஂ படும்.*** **- பழமொழி**

என்ற சான்றுகளின் மூலம் ஆசியரின் கற்றலோடு மாணவர்கள் தாங்களாகவே உய்த்துணர்ந்து கற்றுக்கொள்ளும் முறை இருந்ததை அறியலாம். உய்த்துணர்தல் முறையின் வெளிப்பாடாகத் தற்குறிப்பேற்ற அணியைச் சுட்டலாம்.

***பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்***
***சால மிகுத்துப் பெயின்*** **- (குறள் - 475)**

மயில்தோகையாக இருந்தாலும் அதிகமாக ஏற்றினால் வண்டியின் அச்சு முறிந்துவிடும் என்பது மேலோட்டமான பொருள். பகைவர்கள் எளியவர்கள் என்று எண்ணி பகைவர்களின் எண்ணிக்கையை ஒருவன் பெருக்கிக் கொண்டே போனால் அவர்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து எளிதில் வென்று விடுவர் என்ற மறைபொருளை மாணவன் உய்த்தறிந்து கற்றுக் கொள்ளுகின்றனர். எனவே உய்த்தறிதல் மூலமே

**குறிப்பு**

இயல், இசை, நாடகம் ஆகிய கலைகள் மேம்பட்டு வளர்ந்து வந்துள்ளன.

**2.4.அ. பண்டைய கால பயிற்று முறையின் நிறைகள்**

1. மனனம் செய்ததால் பண்டையோர் மொழித்திறமை பெற்று விளங்கினர்.
2. மனப்பாடம் செய்த பகுதிகளின் சொல்லும் பொருளும் எப்போதும் உள்ளத்திலும், காதிலும் ஒலித்துக் கொண்டிருப்பதால் வேண்டும் பொழுது நினைவுக்கு கொண்டு வரலாம்.
3. அக்காலத்தில் மாணாக்கர் பெற்ற ஆழ்ந்த இலக்கண அறிவு தாமாகவே பல இலக்கியங்களை நயமுயணர்ந்து கற்கத் துணையாக இருந்தது.
4. ஆசிரியரும் மாணவரும் உடனுறைந்து பயின்று ஐயங்களை எளிதில் தீர்ப்பதற்கு உதவியாக இருந்தது என்று அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**2.4.ஆ. பண்டையகால பயிற்று முறையின் குறைகள்**

1. முதலில் பேச்சு, பின்னர் படிப்பு, பின்னர் எழுத்து என்று கற்பித்தலே இயற்கை முறையாகும். பழைய முறை இதற்கு எதிராக இருந்தது.
2. முதலில் எழுத்தைத் தொடங்குவது முறையன்று. எழுத்து முறையினைப் படிப்பில் கையாளுதல் உளவியல் முறைக்குப் பொருந்துவது கிடையாது.
3. எழுத்திலிருந்து படிப்பு தொடங்குவது முழுவதிலிருந்து பாதிக்கு போதல், தெரிந்ததிலிருந்து தெரியாதற்குப் போதல் என்ற இயற்கை விதிகளுக்கு முற்றிலும் மாறாக உள்ளது.
4. வாய்மொழி பயிற்சி இன்மை “செந்தமிழும் நாப்பழக்கம்” என்ற பழமொழியை பொருளற்றதாகச் செய்கிறது.
5. ஐம்புலன்களையும் கவரவல்ல காட்சிப் பொருள்கள் துணைக் கருவிகளாக அமையாதது பெருங்குறையாகும்.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.**
**ஆ.உமது பதிலைப்பாடத்தின் இறுதியில்கொடுக்கப்பட்டுள்ளபதிலோடு ஒப்பிட்டு அறிக.**

3. மக்கள் கல்விக்கு சிறப்பிடம் அளித்ததை எந்த நூல்கள் வழியாக அறியலாம்?
…………………………………………………………………………………………
……………………………………………………………………
4. தொல்காப்பிய சிறப்பு பாயிர உரை எழுதியவர் யார்?
………………………………………………………………………………......
………………………………………………………………………………..…

குறிப்பு

## 2.6. தொகுத்துக் காண்போம்

பண்டையோர் கண்ட பயிற்று முறையிலேயே சொற்பொழிவுமுறை, வினா-விடை முறை, தடைவிடை முறை, காரணகாரிய முறை போன்ற முறைகள் இருந்ததைப் பற்றி இப்பாடத்தின் மூலம் அறிந்து கொண்டோம். மேலும், ஆசிரியர் கற்பிக்கும் பொழுது என்னென்ன குற்றங்களைத் தவிர்க்க வேண்டும் என்பதையும் நன்னூல் வழி அறிந்துகொண்டோம்.

## 2.7. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

1) கல்வி
2) புதிய கற்பித்தல்
3) புறநானூறு, மூதுரை
4) நச்சினார்க்கினியார்

## 2.8. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

1. பண்டையோர் கண்ட பயிற்று முறையை விளக்கி எழுதுக.
2. காரணகாரியமுறையை விளக்குக.

## 2.9. மேலும் பயிலுவதற்கான நூல்கள்


1. முனைவர் ஞா.பழனிவேலு (2011), செந்தமிழ் கற்பித்தல், பொதுத்தமிழ், நதி பப்ளிகேஷன்ஸ், தஞ்சாவூர்.
2. வெ.கலைச்செல்வி (2013), பொதுத்தமிழ் கற்றல் - கற்பித்தல் சஞ்ஜீவ் வெளியீடு,ஈரோடு
3. கணபதி .வி (1989), தமிழ் ஐவகைப் பாடங்களும் கற்பித்தலும், சாந்தா பப்ளிஷர்ஸ், சென்னை.
4. கோவிந்தராஜன்.மு. (1990), நற்றமிழ் பயிற்றலின் நோக்கமும், முறையும், சரஸ்வதி பதிப்பகம், சென்னை.
5. டாக்டர்.ந.சுப்புரெட்டியார் (1964), தமிழ்பயிற்று முறை, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.


*****

**குறிப்பு**

# அலகு 3: தமிழைப் பயிற்றும் நவீன முறைகள்

**பாட அமைப்பு**


3.1. முன்னுரை
3.2. குறிக்கோள்கள்
3.3. விளையாட்டு முறை
3.3.1. விளையாட்டு முறை கற்பித்தலின் கோட்பாடுகள்
3.3.2. விளையாட்டு முறையில் தமிழ் கற்பித்தல்
3.3.3. விளையாட்டு முறையின் நிறைகள்
3.3.4. விளையாட்டு முறையின் குறைகள்
3.4. நடிப்பு முறை
3.4.1. நடிப்பின் வகைகள்
3.4.2. நடிப்பு முறையின் நிறைகள்
3.4.3. நடிப்பு முறையின் குறைகள்
3.5. செயல்திட்ட முறை
3.5.1. செயல்திட்ட முறையின் வகைகள்
3.5.2. செயல்திட்ட முறையின் படிநிலைகள்
3.5.3. தமிழ் கற்பித்தலில் செயல்திட்ட முறை
3.5.4. செயல்திட்ட முறையின் நிறைகள்
3.5.5. செயல்திட்ட முறையின் குறைகள்
3.6. திட்டமிட்டுக் கற்றல்
3.6.1 திட்டமிட்டுக் கற்றலின் வகைகள்
3.6.1.1. நேர்வழித்திட்டம்
3.6.1.2. கிளைவழித்திட்டம்
3.6.1.3. திறன் கற்கும் திட்டம்
3.7. தொகுத்துக் காண்போம்
3.8. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்
3.9. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்
3.10. மேலும் பயில்வதற்கான நூல்கள்


## 3.1. முன்னுரை

நவீன கற்பித்தல் முறைகளானது மாணவர்களின் அறிவு வளர்ச்சியையும், செயல்திறனையும், பண்பு நலன்களையும், கல்வியாளர்கள் பலரும் தங்களின் அரிய முயற்சியில் கற்பித்தல் துறையில் குறிப்பாக மொழிக்கற்பித்தலில் புதிய அணுகுமுறைகளைக் கொண்டு வந்தனர். மேலும் விளையாட்டு மற்றும் நடிப்பு முறையின் மூலம் மாணாக்கர்களின் அறிவினையும், சிந்தனையையும், கற்பனையாற்றலையும், படைப்பாற்றலையும் எவ்வாறு வளர்க்கலாம் என்பது பற்றியும் தெளிவாக விளக்கப் பட்டுள்ளது. மேலும் பாடப்பொருள், பாடநூல், கல்விச் செயல்பாடுகளில் ஆசிரியர் கற்பிக்கும் முறைகள் யாவும் குழந்தைகளை மையமாகக் கொண்டு விளங்க

வேண்டும். குழந்தை மையக் கல்வியானது செயலை அடிப்படையாகக் கொண்டு விளங்கவேண்டும். பல செயல்களை மாணாக்கர்கள் தாங்களே அனுபவித்து அவற்றில் பழகுவது சிறப்புடையது என்பதற்கேற்ப செயல்திட்டமுறைகளையும், மாணவர்கள் தங்களது திறமைக்கேற்ப அதிகநேரமோ அல்லது குறைவான நேரமோ செலவிட்டுக் கற்கத் துணைசெய்யும் திட்டமிட்டுக் கற்றல் முறையையும் மொழிக்கற்பித்தலில் கொண்டு வந்தனர். புதிய அணுகு முறைகள் குறித்து இப்பாடத் தொகுதியில் காண்போம்.

## 3.2 குறிக்கோள்கள்

நீங்கள் இப்பாடத்தை பயின்ற பின்னர்,

- ❖ விளையாட்டு முறை மற்றும் நடிப்பு முறையில் தமிழை எவ்வாறு கற்க இயலும் என்பதை விவரிப்பீர்கள்.
- ❖ செயல்திட்ட முறையில் தமிழை எவ்வாறு வளர்க்க முடியும் என்பதைத் தெரிந்து கொள்வீர்கள்.
- ❖ திட்டமிட்டுக் கற்றல் மூலம் எவ்வாறு பிழையின்றித் தமிழைக் கற்க முடியும் என்பதை விளக்குவீர்கள்.

## 3.3. விளையாட்டுமுறை

ஒரு குழந்தை சமூகத்தில் வளரும் போது சமூகத் திறன்கள் வளர்வது அவசியம். ஒரு குழந்தை சமூக முதிர்ச்சி என்ற சமூகத் திறனைப் பெறுவதில் விளையாட்டு முக்கியப் பங்கு வகிக்கிறது. குழந்தையிடம் காணப்படும் இயல்பூக்கங்களுக்கும், மனவெழுச்சியின் அறிவு நிலைக்கும் உள்ள தொடர்பு விளையாட்டாகும். இவ்வாறு மாணாக்கர்களிடம் இயல்பாகக் காணப்படும் விளையாட்டுணர்வைக் கற்பித்தலில் பயன்படுத்துவது விளையாட்டு முறையாகும்.

வெளித்தூண்டல்களோ பிறரது வற்புறுத்தலோ இன்றி தாமாகவே சில மகிழ்ச்சியூட்டும் செயல்களில் ஈடுபடுவதே விளையாட்டு ஆகும்.

விளையாட்டு என்பது குழந்தைகளிடம் இயல்பாகக் காணக் கூடியதும் கவனத்தை ஈர்ப்பதுமாகும். ஆர்வத்தை தூண்டக் கூடிய குழந்தையின் பொழுதுபோக்கு செயல்களில் விளையாட்டும் ஒன்று. இம்முறை ஆங்கில நாட்டு கல்வி அறிஞரான ‘‘கால்டுவெல்’’ என்பவரால் முதல் முதலாகக் கையாளப்பட்டது.

கால்டுவெல்குக் என்ற ஆங்கில நாட்டு அறிஞர் செய்கையாலும், பட்டறிவாலும் மட்டுமே கற்றல் நடைபெறும் என்று விளம்பினார். குழந்தையின் முழு ஆற்றலையும் வெளிக்கொணரும் வகையில்

**குறிப்பு**

அமையும் விளையாட்டு முறையே கல்வி கற்பதற்குச் சிறந்த முறையாகும்.

குழந்தைப் பருவத்தின் இயல்புகளும், உணர்வுகளும் வெளிப்பட உதவும் செயல் என்று விளையாட்டு முறை பற்றி அறிஞர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். வாழ்க்கையுடன் தொடர்புடைய விளையாட்டு மூலம் குழந்தைகளின் படைப்பாற்றல் வெளிப்படுகிறது.

**மகாகவி பாரதியார்** குழந்தைகளைப் பார்த்து,

***"ஓடி விளையாடு பாப்பா - நீ***
***ஓய்ந்திருக்கலாகாது பாப்பா"***

என்ற பாப்பா பாடலைப் பாடுகிறார்.

'படைப்புச் செயல்களின் நிறைந்த வெளிப்பாடே விளையாட்டு' என **நன்** என்னும் கல்வி வல்லுநர் கூறுகிறார்.

### 3.3.1 விளையாட்டு முறை கற்பித்தலின் கோட்பாடுகள்

- குழந்தை சமூகத் திறன்களைப் பெற்று சமூக இயல்பினனாக வளர்ச்சி பெறுதலில் விளையாட்டு பெரும் பங்கு கொள்கிறது.
- இயல்பூக்கங்கள், ஆக்கவூக்கம், போரூக்கம் போன்றவை வெளிப்படுத்தப்படுகின்றன.
- குழந்தைகளிடம் தற்காப்பும், வளர்ச்சியும் விளையாட்டின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றன.
- விளையாட்டில் விழைவில்லாக் குழந்தைகள் பொருத்தப்பாடற்றவர்கள்.
- படைப்புச் செயல்களின் சிறந்த வெளிப்பாடே விளையாட்டாகும்.
- விளையாட்டு என்பது வாழ்க்கையின் தொடக்கம்.
- விளையாட்டு என்பது பல காலம் பெற்ற அனுபவத்தின் வெளிப்பாடு என்று "ஸ்டான்லி ஹால்" என்னும் அமெரிக்க உளவியல் அறிஞர் குறிப்பிடுகிறார்.

### 3.3.2. விளையாட்டு முறையில் தமிழ் கற்பித்தல்

தொடக்க நிலை, இடைநிலை, உயர்நிலை வகுப்புகளுக்கு மட்டும் இவ்விளையாட்டு முறையில் தமிழ் கற்பிக்க இயலும். விளையாட்டு முறை அதன் பயன் அடிப்படையில் பின்வரும் வகைகளில் அமையும்.


குறிப்பு

**தொடக்கநிலைப் பள்ளிகளுக்கேற்ற விளையாட்டுகள்**

**1.வரிவடிவத்தை சொல்லித் தருதல்**

கரும்பலகையில் தா, நா, பா போன்ற எழுத்துக்களான தாத்தா, நாள், தோட்டம், பாய் என்ற வார்த்தைகளை எழுதி அவற்றின் முதல் எழுத்துக்களை வட்டமிடச் சொல்லித் தருதல்.

**2. பொது எழுத்தோடு சேர்த்து வாசித்தல்.**




**3. வரிசைப்படுத்துதல்**

இரண்டு வகைப்படும்.

- எழுத்துக்களை வரிசைப்படுத்துதல்
- சொற்களை வரிசைப்படுத்துதல்

1. **எழுத்துக்களை வரிசைப்படுத்துதல்**

த, ம், ப, சி, ர, ம் - சிதம்பரம்

2. **சொற்களை வரிசைப்படுத்துதல்**

- அழகு தெரியும் அகத்தின் முகத்தில் - அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
- என்று ஓர் இருக்கிறது ஊர் காஞ்சிபுரம் - காஞ்சிபுரம் என்று ஓர் ஊர் இருக்கிறது.

**4.இரட்டைக் கொம்பு சேர்த்து சொல்லாக்குதல்**

சாறு - சோறு

தாள் - தோள்

**5. அன்னியனைக் கண்டுபிடி**

ஒரே இனத்தை சேர்ந்த பல சொற்களை தயார் செய்து, அதில் ஒன்றை மட்டும் வேறுபடுத்தி எழுதி அதனை மாணவர்களை கண்டுபிடிக்குமாறு செய்ய வேண்டும்.

(எ.கா) காது, மூக்கு, கண், வாய், யானை

தங்கம், வெள்ளி, பவளம், முத்து, கார்

**6. மின்னட்டைகள்**

அட்டையின் ஒரு புறத்தில் பறவை, விலங்கு, மரம், செடி, கொடிகள் ஆகியவற்றின் படங்களும், மறுபுறத்தில் அவற்றின்

**குறிப்பு**

பெயர்களும் இருக்கும். இதனைப் பொருத்திக் காட்டிக் கற்பித்தல் நடைபெறும்.

**7. இணைப்பட்டைகள்**

எழுத்துக்களையும், சொற்களையும் தனித்தனியாக எழுதிக் கத்தரித்து அவற்றைச் சிறுவர்களிடம் கொடுத்துப் பொருத்திக் காட்ட வேண்டும். அவர்களுக்கு பயிற்சி கொடுக்க வேண்டும். ஐம்பால், மூவிடங்கள், சொற்களஞ்சியப்பெருக்கம் ஆகியனவற்றை கற்பதற்குக் கொடுக்க இயலும்.

**எ.கா:-** மூவிடம் - தன்மை, முன்னிலை, படர்க்கை.
முக்கனி – மா, பலா, வாழை.

**8. சுழலட்டைகள்**

மாணவர்களின் அறிவாற்றலை வளர்க்க இது பயன்படும். இரண்டு அல்லது மூன்று வட்ட வடிவ அட்டைகளை ஒன்றனுள் ஒன்று பொருத்தி அதில் நாம் எதைக் கற்பிக்க நினைக்கிறோமோ அந்த பொருட்களைப் பொருத்திக் காட்ட மாணவர்களை அழைக்க வேண்டும்.

**9. விடுகதைகள்**

ஆசிரியர்கள் விடுகதையை மாணவர்களுக்கு விடுப்பதன் மூலம் புதிய சொற்களை அறிமுகப்படுத்த முடியும். சிந்தனையாற்றலைப் பெருக்க இயலும்.

- வாயிலே மலரும் பூ, நோயை விரட்டும் பூ... இது என்ன பூ?
  சிரிப்பு
- வீடு தேடி வருவார், வந்ததும் சேதி சொல்வார் யார் அவர்?
  தபால்காரர்

**10. எழுத்தேணி**

இதில் பல புதியச் சொற்களை அறிமுகப்படுத்த இயலும். இரண்டு அட்டைகளை எடுத்துக்கொண்டு ஓர் அட்டையில் ஒன்றன் கீழ் ஒன்றாக ஆறு எழுத்துக்களை எழுதிக் கொள்ள வேண்டும். வேறொரு அட்டையில் மொழி இறுதி எழுத்துக்களை எழுதிக் கொள்ள வேண்டும். இரண்டு அட்டைகளையும் எடுத்துக்கொண்டு புதிய சொற்களை அமைக்குமாறு மாணவர்களிடம் கூற வேண்டும்.

**11. சொல்லேணி**

மாணவர்களைக் குழுவாக பிரித்துக் கொள்ள வேண்டும். ஒருவர் ஒரு சொல்லைக் கூற, அச்சொல் முடியும் எழுத்தில் அடுத்த மாணவர் புதிய சொற்களைக் கூற வேண்டும். இவ்வாறு விளையாடுவதில் புதிய சொற்களை மாணவர்கள் கற்றுக்கொள்ளுவர். அதனால் நினைவாற்றலும் பெருகும்.

குறிப்பு

**உதாரணம்:** துப்பு – புட்டு
சுக்கு – குப்பை
துடுப்பு - புதினா
பங்கு – கும்பல்

**12.இணைப்பு விளையாட்டு**

படங்களையும், அதற்குரிய சொற்களை இணைக்கச் செய்தலும், இலக்கணப் பொருட்களுக்கு உரிய சொற்களை இணைத்தலும் இதில் மாணவர்களால் மேற்கொள்ளப்படும்.

**(அ) படங்களையும் அவற்றின் சரியான பெயரையும் பொருத்துதல்.**


- பட்டம்


- மரம்


- புத்தகம்


- வீடு


- புலி

**(ஆ) பெயர் வினைப் பொருத்தம்**

| | |
|---|---|
| குயில் | அகவும் |
| மயில் | கூவும் |

**(இ) வினா விடைப் பொருத்தம்**

| | |
|---|---|
| திருவள்ளுவர் யார்? | பாண்டியன் பரிசு |
| பாரதிதாசன் எதை எழுதினார்? | அவர் ஒரு தமிழ்ப் புலவர் |

**(ஈ). இளமைப் பெயர் பொருத்தம்**

| | |
|---|---|
| கோழி | குட்டி |
| பூனை | குஞ்சு |

**(உ) எதிர்ச்சொல் பொருத்தம்**

| | |
|---|---|
| நன்று | பகைவன் |
| நண்பன் | தீது |

**(ஊ) காலியிடத்தை நிரப்புதல்**

**உதாரணம்:**

* ப – ம் (படம்)

குறிப்பு

* நேர – (நேரம்)
* ப – ம் (பயம்)
* து – பி (தும்பி)
* – ர ம் (மரம்)

**(எ) பொருத்தமான சொற்களை அமைத்தல்**

மரவேலை செய்பவர்--------------- (கொல்லர்/தச்சர்)

சிங்கம்--------------(கத்தும்/கர்சிக்கும்)

**(ஏ).வரிசைப்படுத்துதல் - எழுத்துக்களையும், சொற்களையும் மாறியிருக்கும் வரிசையில் வரிசைப்படுத்துதல்**

**உதாரணம்:** பம்ர்க, மாணயராஇம்
கம்பர், இராமாயணம்.

**ஐ) வட்டமாகக் குழந்தைகள் அமர்ந்து ஆளுக்கொரு எழுத்தைக் கூறிச் சொற்களை உருவாக்கலாம்:**

**எ.கா:** கு-டி-சை
கு-டி-ம-க்-க-ள்

**ஒ) வேர்ச்சொல்லிலிருந்து பிறக்கும் பிறசொல்கள் ஒன்றிரண்டு கூறச் செய்தல்:**

**எ.கா:** குதிரை – குதி, திரை
கண்காட்சி – கண், காட்சி, கட்சி, காசி

**ஓ) ஒரு பொருள் பல சொல் அமைத்து விளையாடல்:**

**எ.கா:** யானை – தந்தம், கரி, வேழம், தும்பி, களிறு, பிடி, கயம்.

**ஔ) எழுத்துச் சுருக்கம்:**

**எ.கா:** தந்திரம் - தந்தி, ரதி, ரதம், தரம்

**13. தபால் விளையாட்டு**

மாணாக்கர் முகவரி எழுதிய அட்டைகளை அந்தந்த மாணாக்கரிடம் கொடுக்கச் செய்யலாம். (அ) பொருள்களின் பெயர்களை எழுதிய அட்டைகளை அவ்வப்பொருள்களின் மேல் வைக்கச் செய்யலாம்.

**14. கதை அமைத்தல்**

ஒரு கதையில் முதல் வாக்கியத்தைச் சொல்லுக. குழந்தைகள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு வாக்கியமாகச் சொல்லிக் கதையை முடிப்பாகள். சில சமயங்களில் கதையின் முதற்பாதியைக் கூறிப்பின் பாதிக்குக் குழந்தைகளை முடிக்கும்படிச் செய்யலாம்.

**15. கரும்பலகை ஓட்டம்**

ஐந்து கரும்பலகைகளைத் தயார் செய்து கொள்க. ஒரு வகுப்புக் குழந்தைகளை ஐந்து பிரிவுகளாகப் பிரித்திடுக. ஒவ்வொரு

கரும்பலகையின் பின்புறமும் சில சொற்தொடர்களை எழுதுக. ஒவ்வொரு சொற்றொடரிலும் ஒரு சில சொற்கள் விடுபட்டிருக்க வேண்டும். விளையாட்டுக்குத் தயார் என்று தெரிந்து குறிப்புக் காட்டியவுடன் ஒவ்வொரு பகுதியிலுமுள்ள முதற்குழந்தைகள் ஒவ்வொருவருமாக ஓடி, கரும்பலகையின் பின்புறம் உள்ள சொற்றொடர்களைப் படித்தவிட்டு முன்புறமாக வந்து விடுபட்டுள்ள சொல்லைக் கரும்பலகையில் எழுதிவிட்டு அவரவர் இடத்தை அடைய வேண்டும். அடுத்தபடியாக ஒவ்வொரு பகுதியிலுமுள்ள இரண்டாவது குழந்தைகள் இம்மாதிரி செய்வர். இங்ஙனம் தொடர்ந்து நடைபெறும். விடுபட்ட எல்லாச் சொற்களையும் முதலில் சரியாக எழுதிய பகுதியைச் சார்ந்த குழந்தைகள் வெற்றியடைந்தவர்கள். எதிர்ச்சொற்கள், ஒருமை – பன்மைச் சொற்கள், ஆண்பால் - பெண்பால் சொற்கள் முதலியவற்றைக் கொண்டு இதே விளையாட்டை நடத்தலாம்.

**இடைநிலை, மேல்நிலை வகுப்புகளுக்கேற்ற விளையாட்டுகள்**

உயர்நிலை மாணவர்களுக்கு மகிழ்ச்சியுடன் செய்யும் வேலைகள் யாவும் விளையாட்டாகத் தோன்றும். கல்வி பயணம், அதில் கண்ட காட்சிகளை கட்டுரையாக எழுதச் செய்தல், அவற்றை ஓவியமாகத் தீட்டச் செய்தல், கதைகள், நிகழ்ச்சிகள் முதலியவற்றை நடித்துக் காட்டல், விளம்பரங்கள், சிறுகதைகள், கட்டுரைகள், ஆடல்பாடல், கதைப் பாடல்கள், சிறு செய்யுள்கள் ஒரங்க நாடகங்கள் முதலியவற்றை எழுத துாண்டுதல், சிறு சொற்பொழிவுகள், சொற்போர்கள், செய்யுள்களை ஒப்புவித்தல், பள்ளி இதழ்களை நடத்துதல் இவை போன்ற செயல்கள் யாவும் விளையாட்டின் அடிப்படையில் அமைந்தவையே.

**3.3..3. விளையாட்டு முறையின் நிறைகள்**

1. ஐம்புலன்களின் வழியாக அறிவு வளர வாய்ப்பு ஏற்படுகிறது.
2. தலைமைப்பண்பும், தன்னம்பிக்கையும் மாணவர்களிடம் வளர்கின்றன.
3. படைப்பாற்றல் பெருக விளையாட்டு முறை வழிவகுக்கிறது.
4. விளையாட்டில் கட்டாயப்படுத்துதல் இல்லை என்பதனால் குழந்தைகள் மிகுந்த ஆர்வமோடு கற்றலில் ஈடுபடுகின்றனர்.
5. கட்டுப்படல், ஒற்றுமையுணர்வு, காலந்தவறாமை, முறைப்படி செயலாற்றுதல் போன்ற நற்பண்புகள் வளர்கின்றன.

**3.3.4. விளையாட்டு முறையின் குறைகள்**

1. எல்லா வகைப் பாடத்தையும் இந்த முறையில் கற்றுத்தரமுடியாது.

குறிப்பு

2. கால விரயம் ஏற்படும்.
3. மேல் வகுப்புகளில் மாணாக்கர்கள் ஆர்வத்துடன் ஈடுபடுவதில்லை.
4. முழுமையான கல்வி பயன் கிடைக்காமல் போதல்.
5. வகுப்பறை மேலாண்மை குறையும்.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு:அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.**
**ஆ.உமது பதிலைப்பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளபதிலோடுஒப்பிட்டு அறிக.**
1.இயல்பூக்கங்களுக்கும்,மனவெழுச்சியின் அறிவு நிலைக்கும் உள்ள தொடர்பு யாது?
……………………………………………………………………………
……………………………………………………………………………
2. செய்கையாலும்,பட்டறிவாலும், மட்டுமே கற்றல் நடைபெறும் என்று கூறியவர் யார்?
……………………………………………………………………………
……………………………………………………………………………

## 3.4. நடிப்புமுறை

கற்பித்தலைச் சிறப்புடையதாக்க ஆசிரியர் பல்வேறு முறைகளைக் கையாளுகின்றார். அவற்றுள் நடிப்பு முறையும் ஒன்று. நடிப்பு முறை என்பது விளையாட்டு முறையை அடிப்படையாகக் கொண்டது. ஆங்கிலத்தில் ‘play’ என்னும் சொல்லே விளையாட்டையும் நாடகத்தையும் குறிக்கின்றது.

நடிப்பு மனதின் ஆற்றல்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கது. கற்பனையின் விளைவாக நடைபெறுகிறது. குழந்தைகள் சிறுவயது முதலே கற்பனை மூலம் பொருள்களைப் படைத்து விளையாடத் தொடங்குவர்.

வீட்டிலுள்ள பொருட்கள் எல்லாம் அவர்கள் கற்பனை உலகில் வேறுவேறு பொருள்களாக உருவெடுக்கும்.

***“மரக்கட்டை இரயில் வண்டியாகும்***
***நாற்காலி கப்பலாகும் விமானமாகும்***
***சிறுவரே பால்காரராவர், வண்டிக்காரராவர்”***

இப்படி பல்வேறு பொருட்களைப் பயன்படுத்திப் பல்வேறு உறுப்பினராக நடிப்பதில் பேரார்வம் கொள்வர்.

### 3.4.1. நடிப்பின் வகைகள்

பள்ளி மாணவர்களிடம் இயல்பாக பொதிந்து கிடக்கும் நடிப்பாற்றலை ஆசிரியர்கள் வகுப்பறையில் இருவழிகளில் வெளிக்கொணர இயலும்.

1. ஆயத்தம் செய்த நடிப்பு முறை
2. ஆயத்தமில்லா நடிப்பு முறை

### 3.4.1.1. ஆயத்தம் செய்த நடிப்பு முறை

ஆயத்தம் செய்த நடிப்பு முறையில் ஆசிரியர் சொன்ன நிகழ்ச்சிக்கோ, சிறுகதைக்கோ மாணவர்கள் குழுக்கள் வசனங்கள் எழுதி ஒரு வாரம் அல்லது பத்து நாட்கள் வசனங்களை உணர்ச்சிப்பூர்வமாக நடித்தும் பேசியும் பழகுவர்.

இதில் ஆசிரியர் மாணவர்களுக்குத் தேவைப்படும் உதவியை வழங்குவார். **(எ.கா)** பள்ளி ஆண்டு விழா, இலக்கிய மன்ற விழா

### 3.4.1.2. ஆயத்தமில்லா நடிப்பு முறை

ஆயத்தமில்லாத நடிப்பு முறையில் ஆசிரியர் ஒரு சிறு நிகழ்ச்சியையோ, சிறு கதையையோ வகுப்பில் சொல்வார். அதைக்கேட்ட மாணவர்கள் சிறு குழுக்களாகப் பிரிந்து தமக்குரிய நாடகப் பாத்திரங்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அதற்குரிய வசனங்களை தயாரித்து நடித்துக் காட்டுவர்.

**ஆசிரியர் செய்ய வேண்டியவை**

- ✓ நடிப்புக்குரிய கதைகள் எளிமையாக இருக்க வேண்டும்.
- ✓ ஒப்பார் குழு முன் நடிக்கச் செய்யாமல் ஆசிரியர் முன் நடிப்பு ஒத்திகை செய்ய வேண்டும்.
- ✓ மாணாக்கர்களின் வாழ்க்கைக்கும், பட்டறிவிற்கும் பொருத்தமான கதைகள் அமைக்க வேண்டும்.
- ✓ வசனங்களை மனப்பாடம் செய்து ஒப்புவிக்காமல் இயல்பாக இருக்குமாறு அமைக்க வேண்டும்.
- ✓ குழந்தைகளின் உடல் அசைவு, மொழி பயன்பாடு, குரல் ஏற்றத்தாழ்வு ஆகியவற்றை ஆசிரியர் மாதிரியாக செய்து காட்ட வேண்டும்.

### 3.4.2. நடிப்பு முறையின் நிறைகள்

1. வாய்மொழிப் பயிற்சி உண்டாகிறது.
2. மெய்ப்பொருள் மேம்படுகின்றது. பேச்சாற்றல் மேம்படும்.
3. கற்பனையாற்றல் வளருகின்றது.
4. மனத்திறன்களான நினைவாற்றல், ஒருங்கிணைக்கும் ஆற்றல் வளரும்.
5. குழந்தைகளிடமுள்ள அச்சம், கூச்சம், நீங்கும்.
6. பாடத்தில் கூடுதல் ஆர்வம் ஏற்படும்.
7. அழகுணர்வு, ஒப்பனை ஆற்றல் பெருகும்.

### 3.4...3. நடிப்பு முறையின் குறைகள்

1.அனைத்து குழந்தைகளையும் நடிப்பில் ஈடுபடுத்த முடியாது.

2.படிப்பைப் புறக்கணித்து நடிப்பையே விரும்பும் நிலை ஏற்படும்.

குறிப்பு

4. அனைத்துப் பாடப்பகுதிகளையும் கற்பிக்க இயலாது.
5. அனைத்து வகுப்பு மாணவா்களுக்கும் பொருந்தாது.
6. நேரம் விரயமாகும்.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.**
**ஆ. உமது பதிலைப் பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.**

3. நடிப்பின் வகைகள் யாவை?

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

4..நடிப்பு முறையின் இரு நன்மைகளை குறிப்பிடுக?

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

## 3.5. செயல்திட்ட முறை

புத்தகங்களிலிருந்து கற்றுக் கொள்வதைவிட நேரடி அனுபவங்களிலிருந்து தமிழைக் கற்பது சிறந்தது என்ற கருத்தைச் செயல் திட்டமுறை வலியுறுத்துகிறது.

‘எதைக் கேட்டேனோ அதை மறந்துவிட்டேன். எதைப் பார்த்தேனோ அதை ஞாபகத்தில் வைத்துள்ளேன். எதைச் செய்தேனோ அதைக் கற்றுக் கொண்டேன்’ னஎ்பது சீனப் பழமொழி. இதை மையமாகக் கொண்டு கற்பிக்கும் முறையே செயல்திட்ட முறையாகும். “நான் கற்கிறேன் எனக் கூறுவதைக் காட்டிலும் பயனுள்ள அனுபவங்களைப் பெறுகின்றேன்” எனக் குழந்தைகள் கூறும்போதுதான் அது பயனுள்ள வாழ்க்கைக் கல்வியாகிறது. ஜான்டுயி அவர்களின் கல்விக் கருத்துக்கள் செயல் திட்ட முறைக்கு அடிப்படையாக அமைகிறது.

செயல்திட்ட முறை என்பது மாணவர்கள் ஒன்று கூடி, ஒத்துழைத்து, செய்து கற்றல் மற்றும் அனுபவக் கற்றலை மேற்கொள்ளுவதாகும். 1908ஆம் ஆண்டு ஸ்டீவன்சன் என்பவர் இத்திட்டத்தை அறிமுகம்செய்தார். இவர் “செயல்திட்டம் என்பது ஒரு பிரச்சனையை அடிப்படையாகக் கொண்டு இயற்கைச் சூழலில் செய்து முடித்தலாகும்” என்று விளக்கம் தருகிறார். சமூகச் சூழ்நிலையில் முழுமனதுடன் ஈடுபட்டு, குறிப்பிட்ட நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட செயலே செயல்முறைத்திட்டம் என்று கில்பாட்ரிக் கூறுகிறார்.

மாணவர்கள் கற்க வேண்டிய பாடப்பகுதிகளைத் தனித்தனியே தொடர்பற்ற முறையில் கற்பதற்குப் பதிலாக ஒரு செயல் திட்டத்தை மையமாகக் கொண்டு பல பாடங்களையும் இணைத்துக் கற்பித்தலே

செயல்திட்ட முறையாகும். இது நேரனுபவ முறைகளுள் மிகவும் பயன் உடையதாகக் கருதப்படுகிறது.

"பல பிரச்சனைகளை உள்ளடக்கிய ஒரு செயலை அதனது இயற்கை நிலையிலே முழுமையும் நிறைவுறும்படி செய்து முடித்தலே செயல்திட்டம் ஆகும்." **-ஸ்டீவென்சன்**

இம்முறையில் வகுப்பிலுள்ள மாணவர்கள் நான்கு அல்லது ஆறு குழுக்களாக பிரிக்கப்படுவர். அதிலுள்ள மாணவர்களின் விருப்பம், திறன், நுண்ணறிவு அடிப்படையில் செயல்திட்டம் வழங்கப்படும். மாணவர்கள் தாங்களே திட்டமிட்டுச் செயலை நிறை வேற்றுவதற்க்குரிய வழிகளை அறிகின்றனர். தடைகளை சரி செய்கின்றனர். அனுபவ வழி கற்றலாக இம்முறை அமைகின்றது.

### 3.5.1 செயல்திட்டமுறையின் வகைகள்

செயல்திட்டம் இருவகைப்படும்.

1. தனியாள் செயல்திட்ட முறை
2. குழு செயல்திட்ட முறை

#### 1. தனியாள் செயல் திட்ட முறை

மாணாக்கர் தனியாகச் செய்யும் செயல்திட்டங்கள் இவ்வகையில் அடங்கும். ஆசிரியரின் வழிகாட்டுதலோடு அறிவியல் பாடங்களிலுள்ள மாதிரி உருவங்கள் செய்தல், தந்தைக்கு கடிதம் எழுதுதல் போன்ற செயல்பாடுகள், தாவரத்தின் பாகங்களைப் பிரித்தெடுத்தல் போன்றவை யாவும் தனியாள் செயல்திட்டத்தில் அடங்கும்.

#### 2. குழு செயல் திட்ட முறை

மாணாக்கர்கள் ஒருங்கிணைந்து குழுவாக ஆற்றுகின்ற செயல்திட்டங்கள் இவற்றில் அடங்கும். நாடகங்கள் தயாரித்துப் பங்கு பெறல், பள்ளித் தோட்டம் அமைத்தல் போன்றவை குழுச் செயல் திட்டத்தில் அடங்கும்.

### 3.5.2. செயல்திட்ட முறையின் படி நிலைகள்

செயல்திட்ட முறையின் 5 படி நிலைகள் உள்ளன.

1. செயலைத் தேர்ந்தெடுத்தல்
2. திட்டமிடுதல்
3. நிறைவேற்றுதல்
4. மதிப்பிடுதல்
5. பதிவு செய்தல்

#### 1. தேர்ந்தெடுத்தல்

❖ மாணவர்களே தங்களுக்குரிய செயல்திட்டத்தை தேர்ந்தெடுக்கிறார்கள்.

குறிப்பு

- ❖ மாணவர்களின் மனநிலை, முதிர்ச்சி, பின்னணி, அறிவு இவற்றை மனதிற் கொண்டு தேர்ந்தெடுக்கிறார்கள்.
- ❖ ஆசிரியர் செயலில் வழிகாட்டுகிறார்கள்.
- ❖ மாணவர்கள் முழுமையாகப் புரிந்து கொள்ளுகிறார்கள்.
- ❖ ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வழிகாட்டி, அவர்களைத் தாங்களாகவே செயலைத் தேர்ந்தெடுக்க வழி காட்டுகிறார்கள்.

**2. திட்டமிடுதல்**

- ❖ ஆசிரியர் கொடுக்கின்ற பயிற்சி அடிப்படையில் மாணவரையே திட்டமிடச் செய்யவேண்டும்.
- ❖ சரியான தகவல்களைப் பெறுவதற்கு நூலகத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.
- ❖ மாணவர்கள் செய்கின்ற தவறு பெரிய அளவில் இருக்குமானால் அதற்கு ஆசிரியர் வழிகாட்டலாம்.
- ❖ திட்டமிட்டதை ஒரு தொகுப்பாக எழுதிக் கொள்ள வேண்டும்.

**3. நிறைவேற்றுதல்**

- ❖ செயல்திட்டம் நிறைவேற குழுத்தலைவரைத் தேர்ந்தெடுத்தல்.
- ❖ செயல்திட்டத்தின் நோக்கம் நிறைவேறியுள்ளதா என்பதைக் கண்டறிந்து ஆசிரியர் மாணவர்களைப் பாராட்டுதல்.
- ❖ மாணவர்களுக்கு ஏற்படும் சிக்கல்களை நீக்க உதவுதல்.
- ❖ மாணவர்கள் எவரும் தங்கள் செயல்திட்டத்தைக் கைவிடாதவாறு பார்த்துக் கொள்ளும் பணி ஆசிரியருடையது.

**4. மதிப்பிடுதல்**

- ❖ செயல்திட்டத்தின் நோக்கம் நிறைவேறியதா என்று மதிப்பிடுதல்.
- ❖ நிறை, குறைகளைப் பட்டியலிடுதல்.
- ❖ செயல்திட்டத்தை மீள் பார்வை செய்தல்.
- ❖ செயல்திட்டத்தில் நிறைவேறாமல் போனவைகளையும், தவிர்க்க வேண்டியவைகளையும் கவனித்தல்.
- ❖ செயல் திட்டத்தின் வெற்றியை மதிப்பிடுதல்.

குறிப்பு

**5. பதிவுசெய்தல்**

- ❖ செயல்திட்டத்தின் திட்டநிலைகளை எழுதுதல்.
- ❖ செயல்திட்டத்தில் எதிர்கொண்ட சிக்கல்களைப் பதிவு செய்தல்.
- ❖ நோக்கம் நிறைவேறியதா என்று தொகுத்தல்.

### 3.5.3. தமிழ் கற்பித்தலில் செயல்திட்ட முறை

தமிழ் கற்பித்தலில் செயல்திட்ட முறையின் பயன்பாடு குறிப்பிடத்தக்கது. ஒரு செயலைச் செய்யத் தேர்ந்தெடுத்து அதனைத் திட்டமிடும் போது பல பொருட்களின் பெயர்களை அறியவும், அதனை எடுத்தெழுதவும், திட்டமிட்ட செயல்களைச் சொற்றொடர்களில் எழுதவும், அதனைப் பார்க்கவும் ஏதுவாகின்றது. தங்கள் முயற்சியினைப் பற்றித் தலைமை ஆசிரியருக்குத் தெரிவிக்கவும், அச்செயலைச் செய்வதற்கு அனுமதி பெறவும், கடிதங்கள் எழுதும் போது சொற்றொடர்கள் அமைக்கவும், அதனை எழுதவும், படிக்கவும் கற்றுக் கொள்கின்றனர்.

எடுத்துக்காட்டாக ‘எனது ஊர்த் திருவிழா’ என்பதனையறிய செயல் திட்டத்திலுள்ள படிநிலைகளை ஆசிரியர் எடுத்துரைத்து மாணவர்களைப் பல குழுக்களாகப் பிரித்து எந்தெந்த குழுவுக்கு எந்தெந்தப் பகுதியை கொடுப்பதென்று மாணவர்களைக் கலந்து முடிவு செய்யலாம். அதில், ***கோவில் அமைவிடமும் அமைப்பு முறையும், கோவில் சிறப்புகள், வழிபாட்டு முறைகள், வழிபடும் மக்கள், போக்குவரத்து*** போன்றவற்றைப் பிரித்து ஒவ்வொரு மாணவர்களின் குழுவிற்கும் ஒரு தலைப்பினைக் கொடுத்து என்னென்ன செய்ய வேண்டும் என்பதை அவர்களே திட்டமிடுமாறு செய்தல் வேண்டும். இதில் கோவில் வரைபடங்கள், பண்டிகைகள் போன்றவற்றை ஒவ்வொரு குழுவும் தங்களுக்குள் சேகரித்தவற்றை மற்றவர்களுக்குத் தெரிவிப்பார்கள்.

எல்லாக் குழுக்களும் தனித்தனியே தாங்கள் தயாரித்த குறிப்புகளைக் கொண்டு புதிதாக ஒரு தொகுப்பறிக்கை தயார் செய்வர். இதற்கு ஆசிரியர் வழிகாட்டுதலும், அறிவுரையும் வழங்குவார்.

இவ்வாறு செய்யும் போது தமிழ்மொழிப் பாடத்தின் முக்கிய அம்சங்களாக விளங்கும் வாய்மொழிப் பயிற்சி, எழுத்து முறை, உச்சரிப்பு, பண்பாட்டை வளர்த்தல் போன்ற முக்கிய அம்சங்கள் வளரும்.

### 3.5.4. செயல்திட்ட முறையின் நிறைகள்

- ❖ மாணவர்களுக்குத் தன்னம்பிக்கை பெருகுகிறது.

**குறிப்பு**

- ❖ நோக்கத்துடனும், ஊக்கத்துடனும் செயல்படும் பண்பு வளர்கிறது.
- ❖ பொறுப்புணர்வு, திட்டமிடுதல், நிறைவேற்றுதல், மதிப்பிடுதல் மாணவர்களுக்கு இயல்பாய் மாறுகிறது.
- ❖ பள்ளிக்கும், சமூகத்திற்கும் தொடர்பு வலுவடைகிறது.
- ❖ உழைப்பை மதிக்கும் மனப்பாங்கு உண்டாகிறது.
- ❖ செய்து கற்றலால் நீண்ட நாள் நினைவில் நிற்கின்றது.
- ❖ மாணவனின் படைப்பாற்றல் வளர்கின்றது.
- ❖ விட்டுக் கொடுத்தல், கூடி வாழ்தல் பிறரின் கருத்துக்களை மதித்தல் போன்ற சமூகமயமாதல் உண்டாகிறது.

### 3.5.5. செயல்திட்ட முறையின் குறைகள்

- ❖ காலம் அதிகம் தேவைப்படும்.
- ❖ செலவு அதிகம்.
- ❖ மாணவர்களின் ஒழுக்கம் கெடும்.
- ❖ பாடப்பகுதிகளின் அனைத்துப் பகுதிகளையும் செயல்திட்டத்தில் மேற்கொள்ள முடியாது.
- ❖ பயிற்சி பெற்ற ஆசிரியர்களாலேயே இம்முறையைக் கையாள முடியும்.
- ❖ தனிப்பட்ட கால அட்டவணை தயாரித்தல் கடினம்.
- ❖ தொடக்கநிலை வகுப்புகளுக்கு ஒத்து வராது.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.**
**ஆ.உமது பதிலைப்பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.**

5. செயல்திட்ட முறையின் இருவகைகளை எழுதுக?

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

6. செயல்திட்ட முறையின் படிநிலைகள் யாவை?

……………………………………………………………………………………………

## 3.6. திட்டமிட்டுக் கற்றல்

கற்பிக்கப்படவேண்டிய பாடப்பகுதியைப் பல எளிய செய்தியாகப் பிரித்துக் கொண்டு அவற்றை சிறு சிறு அளவில் மாணவர்களுக்கு எளிமையிலிருந்து கடினமான பகுதிகளுக்குத் தர்க்க ரீதியான முறையில் அமைத்துக் கொடுப்பதே திட்டமிட்டுக் கற்றல்.

கற்பித்தல் முறைகளில் தோன்றிய நுண்முறையே திட்டமிட்டுக் கற்றல். இம்முறை பி.எப்.ஸ்கின்னரின் தானே எழும் செயல் தொடர்புள்ள ஆக்கநிலைப்படல் என்னும் உளவியல் அடிப்படையில் உருவாக்கப்பட்டது.

- வலுவூட்டுதல்
- செயல்விளைவு கூறல்

என்னும் ஸ்கின்னரின் செயல்கள் ஆக்கநிலையிருத்தல் கோட்பாட்டின்படி அமைக்கப்பட்டதே திட்டமிட்டுக் கற்றல் முறை.

### 3.6.1. திட்டமிட்டுக் கற்றலின் வகைகள்

திட்டமிட்டுக் கற்றலின் சில முக்கிய வகைகள் உள்ளன. அவற்றில்

- நேர்வழித் திட்டம்.
- கிளைவழித் திட்டம்.
- திறன் கற்கும் திட்டம்

#### 3.6.1.1. நேர்வழித்திட்டம்

இத்திட்டத்தை அமைத்தவர் **ஸ்கின்னரும்** அவரைச் சார்ந்தவர்களும் ஆவர். இத்திட்டத்தில் பாடப்பொருள் சிறு சிறு பகுதிகளாக பிரிக்கப்பட்டு அவை ஒவ்வொன்றும் சட்டத்தில் அமைக்கப்படுகிறது. சட்டங்கள் அமைக்கும் போது பாடப்பொருள் தர்க்கரீயாக ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக அமைக்கப்படுகிறது. ஒவ்வொரு சட்டத்திலும் பாடச்செய்தி ஒன்று (அ) இரண்டு கருத்துக்களை மட்டும் கொண்டு அமைந்திருக்கும். மாணவர்கள் அதனை கற்றறிந்து பின்னர் கற்றறிந்ததை சோதித்து அறிய ஒரு வினாவும் கொடுக்கப்பட்டிருக்கும். கேட்கப்பட்ட வினாவிற்கு உரியவிடையை எழுத இடமும் கொடுக்கப்பட்டிருக்கும். விடையை எழுதி முடித்தவுடன் அடுத்த சட்டத்தினைத் திருப்புதல் வேண்டும். அடுத்த சட்டத்தில் முதல் சட்டத்தில் கேட்கப்பட்ட வினாவிற்குரிய சரியான விடை கொடுக்கப்பட்டிருக்கும். மாணவன் தான் எழுதிய விடையை இத்துடன் ஒப்பிட்டுப் பார்த்து சரியாக இருப்பதை அறிந்து மேலும் படித்து முன்னேற விருப்பம் கொள்கிறான்.

**அமைப்பு**

**முதல் சட்டகம்**

**அ.தூண்டல்**

1. சிறு அளவிலான பாடச்செய்தி.
2. அப்பாடத்தை ஒட்டிய வினா.

குறிப்பு

**ஆ.துலங்கல்**

1. விடைஎழுதுவதற்கான இடைவெளி.
2. ஊக்கிகள்.

**இரண்டாம் சட்டகம்**

1. முதல் சட்டத்திற்கான வினாவுக்கு உரிய விடை.
2. தொடர் செய்தி.
3. வினா
4. வினா எழுதுதல்.
5. ஊக்கக் குறிப்பு.

**நேர்வழித்திட்டதின் நிறைகள்**

- ❖ இக்கற்றலில் மாணவர் பங்கு அதிகம்.
- ❖ தனிக்கற்றலுக்கு துணைபுரிகிறது.
- ❖ கற்பவரின் கற்கும் திறமைக்கேற்ப கற்க இயலும்.
- ❖ மாணவர்கள் தங்கள் திறனுக்கு ஏற்ப கற்க இயலும்.
- ❖ எந்த நேரத்திலும் மாணவர்கள் செயல்படமுடியும்.
- ❖ முழு கவனத்தைக் கற்பித்தலில் ஈடுபடுத்த இயலும்.

**நேர்வழித்திட்டத்தின் குறைகள்**

- ❖ ஒரு கருத்தைக் கூறப் பல சட்டங்கள் தேவைப்படுகின்றன.
- ❖ மாணவர்கள் அளிக்க வேண்டிய விடைகள் முன்பே தீர்மானிக்கப்படுவதால் அவர்கள் சிந்தனை விரிவடைய வழியில்லை.
- ❖ இக்கற்றல் மூலம் இயந்திரப்போக்கு உருவாகிறது.
- ❖ சில மாணவர்கள் இக்கற்றலால் ஆர்வமில்லாமலும் போக வாய்ப்புண்டு.
- ❖ காலம் அதிகம் தேவைப்படும்.
- ❖ ஆசிரியருக்கு வேலைப் பளு அதிகம்.

**3.6.1.2. கிளைவழித் திட்டம்**

இம்முறையை அறிமுகம் செய்தவர் ***'நார்மன் கிரௌடர்'*** ஆவார். இம்முறையில் ஒவ்வொரு சட்டத்திலும் ஒன்றுக்கும் மேற்பட்ட கருத்துக்கள் கொண்டதாகவும் ஒரு பத்தி அளவிலும் அமையும். ஒவ்வொரு சட்டத்தின் இறுதியிலும் பல்விடை பொறுக்குதல் அமைப்பில் வினா அமையும். மாணவன் தேர்ந்தெடுத்த விடைக்குத் தக்க, அதனை அடுத்துச் செல்ல வேண்டும். தவறான விடையை தேர்ந்தெடுத்தால் குறிப்பிட்ட பக்கத்திற்குச் செல்ல வேண்டும். அங்கு அவன் விடையைச்


சொல்லி ஏன் தவறு என்பதனை விளக்கி, தவற்றினைத் திருத்திக்கொள்ளப் போதிய விளக்கம் அளித்து, அதேபோன்று வேறு ஒரு வினாவைக் கேட்டுப் பதில் பெறலாம். அவரவா் தோ்ந்தெடுத்த தவறான விடைக்கேற்பத் திருத்தும் பணி செய்யப்படுகிறது.

கிளைவழித்திட்டத்தினை இரு வழிகளில் அமைக்கலாம். தவறான விடையைத் தோ்ந்தெடுத்த மாணவனுக்குத் திருத்தும் சட்டத்தில் வேண்டிய கருத்துக்களைக் கொடுத்தபின் மூலச் சட்டத்திற்கு அனுப்பி மீண்டும் வினாவுக்குரிய விடையைக் காணச் செய்யலாம். இதற்கு ***'பின் தங்கும் கிளைவழித் திட்டம்'*** என்று பெயா்.

அவ்வாறில்லாமல் தவறினை விளக்கும் அந்தச் சட்டத்திலேயே மேலும் ஒரு பயிற்சியை அளித்து அதன் அடிப்படையில் அடுத்த மூலச் சட்டத்திற்குச் செல்லும் படிச் செய்யலாம். இதற்கு ***'முன்னேறும் கிளைவழித்திட்டம்'*** என்று பெயா்.


அத்திட்டத்தின் சிறப்பு என்னவென்றால் மாணவா் தோ்ந்தெடுத்த விடை சாி அல்லது தவறு எனில் அதன் காரணம் சொல்லி விளக்குதலே ஆகும். செய்திகளும் தொடா்ச்சியாக அமையாததால் மாணவா்கள் விடையை பாா்த்து எழுதுவது இயலாது. இதனால் கருத்துத் தெளிவு ஏற்படுகிறது.

**அ)பின்தங்கும் கிளைவழித்திட்டம்**



குறிப்பு

**ஆ) முன்னேறும் கிளைவழித்திட்டம்**




**கிளைவழித் திட்டத்தின் நிறைகள்**

- ❖ ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்கள் இருப்பதால் இக்கற்றலில் மாணவர்களின் பங்கு அதிகம்.
- ❖ தனிக்கற்றலுக்கு துணைபுரிகிறது. மாணவர்கள் தங்கள் திறனுக்கு ஏற்ப கற்க முடியும்.
- ❖ உடனடியாகச் சரியான விடையை அறியும் வாய்ப்பு ஏற்படுவதால் தொடர்ந்து கற்பதற்குத் தூண்டுதல் கிடைக்கும்.
- ❖ பாடப்பொருளானது நன்கு தெளியப்பட்டு அமைக்கப்படுதலில் மாணவர்கள் திட்டமாகக் கற்பித்தல் இலக்குகளை அடைய இயலும்.
- ❖ முழுக் கவனத்தைக் கற்றலில் ஈடுபடுத்துகிறது.
- ❖ எந்த நேரத்திலும் மாணவர்களால் செயல்பட முடியும்.

**கிளைவழித் திட்டத்தின் குறைகள்**

- ❖ இக்கற்றல் மூலம் மாணவர்களுக்கு ஆர்வமில்லாமல் போக வாய்ப்பு ஏற்படுகிறது.
- ❖ இக்கற்றல் மூலம் கற்பனை, படைப்பாற்றல், உயர்ந்த சிந்தனை போன்றவற்றை வளர்க்க இயலாது.
- ❖ இம்முறையின் புதுமை வேகம் தணிந்தபின் மாணவர்கள் இம்முறையில் அதிக ஊக்கம் காட்டுவதில்லை.
- ❖ மாணவர்கள் செய்யக்கூடிய தவறுகளை முன் கூட்டியே யூகித்துக் குறைதீர்க்கும் சட்டங்களை அமைப்பது கடினம்.
- ❖ இம்முறையில் கால விரயமும், பணச்செலவும் அதிகம்.

**3.6.1.3. திறன் கற்கும் திட்டம்**

இதனை ஊக்க இலக்கு வழித்திட்டம் என்று கூறுவர். இதற்குக் கற்பது என்று பொருள். இதனை அமைத்தவர் ***'கில்பார்ட்'***. இத்திட்டத்தில் ஒரு சூழ்நிலையில் பெற்ற

குறிப்பு

பயிற்சியினை வேறு சூழ்நிலைக்கு மாற்றுவதை வலியுறுத்துகிறது.

இதில் பாடப்பகுதி கற்பிக்கப்படுவது இல்லை. நடத்தையை மாற்றி அமைப்பதே இத்திட்டத்தின் நோக்கம். இம்முறையில் முடிவான செயலையே முதல் சட்டமாக அமைத்து அதிலிருந்து பின்னோக்கி ஒவ்வொரு செயலாகப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**திட்டமிடும்போது கவனிக்க வேண்டியவை**

பாட அலகிற்கான சட்டங்களின் எண்ணிக்கையிலும் பருவ அலகை இம்முறையில் கற்பதற்காக மாணவர்களுக்குத் தேவைப்படும் கால அளவிலும் கல்வி மற்றும் உளவியல் முறைகளின் கருத்தை நினைவிற்கொண்டு செயல்பட வேண்டும்.

**தமிழ் மொழியில் திட்டமிட்டுக் கற்றல்**

திட்டமிட்டுக் கற்றல் முறையில் மொழிப்பாடத்தில் இலக்கிய அறிவு, சுவையுணர்வு, கற்பனையாற்றல், படைப்பாற்றல் போன்றவற்றைத் தருதல் எனபது இயலாது. ஆனால் பிரித்துக்கூறுதல், ஒப்பிடுதல், எடுத்துக்காட்டுகள் கூறுதல், வேறுபடுத்தி உணர்தல், பொருள் உணர்தல் ஆகியவற்றை இம்முறையில் தரலாம்.

இலக்கண அறிவைத் தருவதில் இம்முறை பெரிதும் துணைபுரியக்கூடும். மொழிப் பயிற்சிகளை இம்முறையில் தருவதன் முலம் நடைமுறை இலக்கண அறிவை மாணவர்கள் பெற முடியும்.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.**
**ஆ.உமதுபதிலைப்பாடத்தின்இறுதியில்கொடுக்கப்பட்டுள்ளபதிலோடு ஒப்பிட்டு அறிக.**

7. திட்டமிட்டுக் கற்றலில் வகைகள் யாவை?

…………………………………………………………………………………
………………………………………………………………………

8. திட்டமிட்டுக் கற்றலில் பாடப்பகுதிகள் எவ்வாறு பிரிக்கப்பட்டு இருக்கும்?

…………………………………………………………………………………
………………………………………………………………………

## 3.7. தொகுத்துக் காண்போம்

ஆசிரியர் நவீன முறைகளைக் கற்பித்தபின் மாணவர்களின் செயல்திறன், அறிவு வளர்ச்சி, தனித்தன்மை மற்றும் மொழித்திறன் வளர்ச்சி போன்றவை மேம்படுகிறது. இப்பாடத்தில் விளையாட்டு முறை, நடிப்பு முறை மற்றும் செயல்திட்டமுறை போன்றவற்றின் மூலம் மாணவர்களின் அறிவுத்திறனை மேம்படுத்தலாம்.

குறிப்பு

திட்டமிட்டு கற்பித்தல் மூலம் மாணவர்கள் எவ்வாறு திட்டமிட்டுக் கற்க வேண்டும் என்பதையும் மாணவர்களுக்குத் தெளிவுபடுத்த முடிகிறது. மாணவர்கள் கொள்திறனையும், தனித்தன்மையும் தெரிந்து கொண்டு அவனுக்கு எம்முறையில் கற்பித்தால் மாணவர்களின் மொழித்திறன் வளர்ச்சியை மேம்படுத்த முடியும் என்பதை அறிய முடிகிறது. அதன் மூலம் ஆசிரியர் கற்பித்தலும் மேன்மையடைகிறது.

## 3.8..முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

1. விளையாட்டு
2. கால்டுவெல் குக்
3. ஆயத்தமுள்ள நடிப்பு, ஆயத்தமில்லா நடிப்பு
4. வாய்மொழிப் பயிற்சி உண்டாகிறது, மெய்ப்பொருள் மேம்படுகின்றது.
5. தனியாள் செயல்திட்டமுறை, குழு செயல்திட்ட முறை
6. செயலைத் தேர்ந்தெடுத்தல், திட்டமிடுதல், நிறைவேற்றுதல், மதிப்பிடுதல், பதிவு செய்தல்.
7. நேர்வழித்திட்டம், கிளைவழித்திட்டம், திறன் கற்கும் திட்டம்
8. சிறு சிறுசட்டகங்களாக

## 3.9. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

1. உனது தமிழ்ப் பாடப் புத்தகத்திலிருந்து ஒரு பாடத்தைத் தேர்ந்தெடுத்து அதை விளையாட்டு முறையில் கற்பிப்பது எப்படி என விளக்கி எழுதுக.
2. ஒரு செயலைத் தேர்ந்தெடுத்து செயல்திட்டமுறையை விளக்குக.
3. திட்டமிட்டுக் கற்றல் முறையின் மூலம் தமிழ்மொழியை எவ்வாறு ‘‘கற்க முடியும்’’ என்பதை விளக்குக.

## 3.10. மேலும் பயிலுவதற்கான நூல்கள்


1. முனைவர் ஞா.பழனிவேலு (2011), செந்தமிழ் கற்பித்தல், பொதுத்தமிழ், நதி பப்ளிகேஷன்ஸ், தஞ்சாவூர்.
2. வெ.கலைச்செல்வி (2013), பொதுத்தமிழ் கற்றல் - கற்பித்தல் சஞ்ஜீவ் வெளியீடு,ஈரோடு
3. கணபதி .வி (1989), தமிழ் ஐவகைப் பாடங்களும் கற்பித்தலும், சாந்தா பப்ளிஷர்ஸ், சென்னை.
4. கோவிந்தராஜன்.மு. (1990), நற்றமிழ் பயிற்றலின் நோக்கமும், முறையும், சரஸ்வதி பதிப்பகம், சென்னை.

5. டாக்டர்.ந.சுப்புரெட்டியார் (1964), தமிழ்பயிற்று முறை, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
6. முனைவர் அ.மீனாட்சிசுந்தரம்,(2014), பாடப்பொருள் மற்றும் தமிழ் கற்பித்தல் (பொதுத்தமிழ்), காவ்யமாலாபப்ளிஷர்ஸ், திண்டுக்கல்.
7. பேராசிரியர் பூ. தீனதயாள்,மா. சிவக்குமார். (2010) பொதுத்தமிழ் (கற்பித்தல் தாள் - I), ஸ்ரீ கிருஷ்ணாபப்ளிகேஷன்.
8. முனைவர் சு.தண்டபாணி (2009), தமிழ் கற்பித்தல், மீனா பதிப்பகம், மதுரை.

*****

**குறிப்பு**

குறிப்பு

# அலகு – 4 பயிற்சி ஆயத்தம்

**பாடஅமைப்பு**

4.1 முன்னுரை
4.2 குறிக்கோள்கள்
4.3 உற்று நோக்கல் பதிவு
4.3.1 நோக்க அடிப்படையில் கற்பித்தல்
4.3.1.1. மாணவரை அடிப்படையாகக் கொண்டு கற்பித்தல்
4.3.1.2. பாடப்பொருளைஅடிப்படையாகக்கொண்டு கற்பித்தல்
4.3.3.3. சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்டு கற்பித்தல்
4.3.2 மொழிக்கற்பித்தல் நோக்கங்களும், நோக்கக் கூறுகளும்
4.4. புளுமின் கற்பித்தல் கோட்பாடுகள்
4.5. அலகுத்திட்டம் தயாரித்தல்
4.5.1. அலகுத்திட்டத்தின் பயன்கள்
4.5.2. அலகுத்திட்டம் தயாரித்தலிலுள்ள படிநிலைகள்
4.5.3. அலகுத் திட்டம் எழுதுதல்
4.5.4. அலகுத்திட்டத்தின் வடிவமைப்பு
4.6 பாடத்திட்டம்
4.6.1. பாடத்திட்டத்தின் வகைகள்
4.6.2. பாடம் கற்பித்தலின் படிநிலைகள்
4.6.3. பாடம் கற்பித்தலுக்கான நோக்கங்களைத் தயாரித்தல்
4.6.4. பாடத் திட்டம் வடிவமைத்தல்
4.6.5. பாடத்திட்டமிடுதலில் அடங்கியுள்ள கூறுகள்
4.6.6. பாடத்திட்டம் தயாரித்தலின் இன்றியமையாமை
4.6.7. பாடத்திட்டம் தயாரித்தலின் நன்மைகள்
4.6.8. பாடத்திட்டம் தயாரித்தலின் தீமைகள்
4.6.9. ஆசிரியர் மனதிற் கொள்ளத்தக்கன
4.6.10. பாடத்திட்டம் எழுதும் முறை
4.6.11. மாதிரிப் பாடத்திட்டம்
4.7. தொகுத்துக் காண்போம்
4.8. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்
4.9. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்
4.10. மேலும் பயில்வதற்கான நூல்கள்

குறிப்பு

## 4.1 முன்னுரை

மாணவர்கள் பயிற்சியை ஆரம்பித்தலுக்கு முன் அவர்கள், ஆசிரியர் எவ்வாறு பாடம் நடத்துகிறார் என்பதை உற்றுநோக்க வேண்டும். உற்று நோக்கலின் போது தான் மாணவர்கள் தாங்கள் எவ்வாறு பாடம் நடத்த வேண்டும், எந்த பாடத்திற்கு எந்தத் திறனைக் கையாள்வது என்பதும் மாணவர்களுக்கு எவ்விதமான கற்பித்தல் முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்பதையும் ஆசிரிய மாணவர்கள் அறிந்து கொள்கிறார்கள். அதுமட்டுமின்றி அலகுத்திட்டம் என்றால் என்ன என்பதையும், அலகுத்திட்டம் தயாரித்தலிலுள்ள படிநிலைகள், ஒரு அலகை எத்தனை பாடமாகப் பிரிக்கலாம் என்பது பற்றியும், பாடத்திட்டம் என்றால் என்ன என்பதையும், பாடத்திட்டம் தயாரித்தலின் இன்றியமையாமை பற்றியும் தெரிந்திருந்தால் தான் ஆசிரிய மாணவர்கள் பாடத்திட்டம் தயாரிப்பதற்கும் அதன் மூலம் இடத்திற்கு ஏற்றவாறு கற்பித்தல் கருவிகளைப் பயன்படுத்தவும் முடியும். புளுமின் கற்பித்தல் கோட்பாடுகளை பற்றி பயிற்சி பெறப்போகும் மாணவ ஆசிரியர்கள் தெளிவாகத் தெரிந்து வைத்திருக்கவும் அதன்படி தங்களது பயிற்சியை மேற்கொள்வதற்கும் இப்பாடம் உதவியாக இருக்கும்.

## 4.2 குறிக்கோள்கள்

நீங்கள் இப்பாடத்தைப் பயின்ற பின்னர்,

- ❖ உற்று நோக்கல் பற்றி தெளிவாகத் தெரிந்திருப்பீர்கள்.
- ❖ உற்று நோக்கல் பதிவு பற்றி எடுத்துரைப்பீர்கள்.
- ❖ மொழிக் கற்பித்தலின் நோக்கங்களையும், நோக்க கூறுகளையும் பட்டியலிடுவீர்கள்.
- ❖ அலகுத்திட்டம் தயாரித்தலிலுள்ள படிநிலைகள் பற்றி தெளிவாகத் தெரிந்திருப்பீர்கள்.
- ❖ புளுமின் கற்பித்தல் கோட்பாடுகளைப் பற்றி தெளிவாக அறிந்திருப்பீர்கள்

## 4.3 உற்று நோக்கல் பதிவு

**பிளாண்டர்** என்பவர் வகுப்பறைக் கற்பித்தலை உற்று நோக்கியதன் விளைவாக மாணவர் கலந்தளாவுதல் பகுப்பாய்வுகளால், கல்வி நோக்கங்களின் வகை தொகை விளக்கம் கிடைத்திருக்கிறது. கல்வி வல்லுநர்களை உற்று நோக்கி அறிந்ததால் நுண்ணிலைக் கற்பித்தல் என்ற நுட்பம் இன்று வளர்ந்து பயன் தருகிறது.

**குறிப்பு**

ஒரு மொழியாசிரியர் கற்பித்தலை, ஆசிரிய மாணவர் தங்களின் பயிற்சியின் ஒரு பகுதியாக எண்ணி, பல கோணங்களில் உற்று நோக்கியும், கற்பித்தல் நுட்பங்களை அறிந்தும் அதன் நிறை, குறைகளைத் தெரிந்து கொள்ளும் செயலை உற்று நோக்கல் எனலாம்.

ஆசிரியர் பயிற்சி பெறும் காலத்தில் தரப்படும் கற்பிப்புச் செயல் முறைகளுள் ஒன்று உற்றுநோக்கல். கல்வி நிறுவனங்களுக்குச் சென்று பட்டறிவுடைய ஆசிரியரின் கற்பித்தல் போக்கினை வகுப்பில் நேரடியாகக் கவனிப்பது உற்றுநோக்கல் எனப்படும். உற்றுநோக்கலைத் திறம்பட மேற்கொள்ள மாணவ ஆசிரியர் இடைவினைப் பகுப்பாய்வு என்னும் சொல் முறையினைப் பிளாண்டர் என்பார் பரிந்துரைத்தார். உற்றுநோக்கல் விளைவாகவே நுண்ணிலைக் கற்பிப்பு என்னும் புதிய பழகு முறையும் பிறந்தது.

**உற்றுநோக்கலின் கூறுகள்**

கற்பித்தல் தொடக்கம், ஆர்வமூட்டல், பாடவளர்ச்சி, துணைக்கருவிகளை பயன்படுத்துதல், பாடமுடிப்பு, வினாவிடை பரவல், வகுப்பறை சூழல், கற்பித்தல் சூழல், கற்றல் விளைவு, ஆசிரியரின் பங்கு, பிற சிறப்புத் தன்மைகள் என்பவை உற்றுநோக்கலின் கூறுகளாகும். உற்றுநோக்கும் போது கற்பித்தல் நுட்பங்களை அறியலாம். சில ஆண்டுகள் ஆசிரிய மாணவர் அனுபவம் வாயிலாகப் பெறும் அறிவை ஆசிரியரின் வகுப்பறைக் கற்பித்தலை உற்றுநோக்குவதன் மூலம் பெறலாம்.

**உற்றுநோக்கலின் பயன்கள்**

- ஆர்வமூட்டலில் வெவ்வேறு உத்திகளைக் கையாளுதல்.
- மாணவர்களின் குறிக்கீடு நேர்ந்த போது கூடப் பாடத் தொடர்ச்சியானது சிதைவுறாமல் கற்பிக்கப்படுவதற்கு உற்றுநோக்கல் பயன்படுகிறது.
- ஒவ்வொரு மாணவரையும் தொடும் அளவில் குரலில் எடுத்தல், படுத்தல், வியத்தல் ஆகிய ஏற்றத் தாழ்வான ஒலிப்பு.
- துணைக் கருவிகளை ஏற்ற இடங்களில் துல்லியமாக பயன்படுத்துதல்.
- மெய்ப்பாடுகள் தோன்றும் வண்ணம் பயன்படுத்துதல்
- வினாக்களைத் தெளிவோடு பரவலாகக் கேட்டல்.
- பிற பாடங்களோடு தொடர்பு படுத்தி விளக்குதல்.

- ❖ வாழ்க்கை அனுபவங்களோடு ஒப்பிட்டு விளக்குதல்
- ❖ கரும்பலகை சுருக்கம் தருதல்.
- ❖ வகுப்பறையின் ஒழுங்கைக் காப்பாற்றுதல்

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதுக.**
**ஆ.உமதுபதிலைப்பாடஇறுதியில்தரப்பட்டுள்ளபதிலோடு ஒப்பிட்டு ஆராய்க.**
1. உற்று நோக்கல் என்றால் என்ன?
……………………………………………………………………………..……
……………………………………………………………………………..……
2. உற்று நோக்கலின் இரு பயன்களை எழுதுக?
………………………………………………………………………………
………………………………………………………………………………

### 4.3.1 நோக்க அடிப்படையில் கற்பித்தல்

நோக்க அடிப்படையில் கற்பித்தல் மிகவும் முக்கியமானதாகும். எந்தப் பாடத்தைக் கற்றுக் கொடுப்பினும் அதனை நோக்க அடிப்படையில் கற்றுக் கொடுக்க வேண்டும். கற்பித்தல் தொடர்பாக மூவகைத் தகவல்கள் தரப்பட்டுள்ளன. இவற்றில் முதலாவது திட்டமிடுதல் ஆகும். கற்பித்தலுக்கான நோக்கங்கள் எவையெவை இருக்கின்றன என்பதைப் பட்டியலிட்டுப் பின்னர் அதனை வரிசைப்படுத்தி ஒன்றன்பின் ஒன்றாக அதனைத் திட்டமிட்டு நோக்க அடிப்படையில் கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும்.

கல்வி நோக்கங்களை வரையறுக்கும் அடிப்படையில் மாணவர், பாடப்பொருள், சமுதாயம் என்ற எளிதான மூன்று அடிப்படைகள் உள்ளன.

#### 4.3.1.1. மாணவரை அடிப்படையாகக் கொண்டு கற்பித்தல்

கற்பித்தலுக்கு நடுவணாக அமைபவர் மாணவர்கள். எனவே அவர்களை அடிப்படையாகக் கொண்டு கற்றல் நோக்கங்களை வரையறுப்பது சிறப்பாக அமையும். நாம் குழந்தைகளுக்கு எழுதக் கற்பிப்பதாகக் கொள்வோம் நமது கற்பிப்பால் ஏற்படும் விளைவு யாது?

குழந்தைகள் நன்றாக எழுதக் கற்றுக் கொள்கிறார்கள்(அ) குழந்தைகள் நன்றாக எழுதுவார்கள். இந்த இரண்டு பதில்களுக்கும் ஏதாவது ஒரு வேறுபாட்டைக் காணமுடிகிறதா? இரண்டிலும் கூறப்படும் தகவலில் மாற்றம் இல்லை. ஆனால் இரண்டாவது பதிலில் மாணவர்களிடம் இருந்து வெளிப்படுகின்ற திறமைகள் பிற நடத்தைகளாகவும் மாணவர் பெறுகின்ற பயனாகவும் சொல்லப்பட்டுள்ளது.

**குறிப்பு**

குழந்தைகள் நன்றாக எழுதுவார்கள் என்பதே மாணவர் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட முறையின் நோக்கமாகும்.

### 4.3.1.2. பாடப்பொருளை அடிப்படையாகக் கொண்டு கற்பித்தல்

எதைக் கற்பிப்பது என்ற வினாவிற்கு விடை பாடப்பொருள். ஆகவே பாடப்பொருள் அடிப்படையில் நோக்கங்களை வகுக்க முடியும். ஒவ்வொரு பாடப்பொருளும் ஏதேனும் ஒரு தகவலைக் கொண்டிருக்கும். அத்தகவல்களைக் கற்பவர்கள் வெளிப்படுத்தும் முறையில் நோக்கங்களை வரையறுக்கலாம்.

1. பொதுவுடைமை
2. தனியுடைமை

இவற்றைக் கற்கும் மாணவர்கள் இவற்றின் தன்மைகளை வேறுபடுத்திக் கூறும் திறமைகளைப் பெற்றதால் அவர்கள் பெற்ற தகவல்களிலிருந்து கற்றல் நோக்கங்களை அடைந்திருக்கின்றனர் என அறியலாம்.

### 4.3.1.3. சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்டு கற்பித்தல்

கீழ்வரும் வாக்கியங்களை நோக்குக.

செந்தில், பெரியவர்களிடம் பேசும் போது பணிவான சொற்களைப் பயன்படுத்துகிறான். தாமரைச் செல்வி வினாப்பட்டியலை படித்துப் பொருளுணர்ந்து விடையைக் கூறுகிறாள்.

மேற்காட்டிய வாக்கியங்களில் கற்பவரின் செயல்கள் கூறப்படுகின்றன. அச்செயல்கள் கற்பவர்க்குரியனவா? அல்லது கற்பவரோடு வேறொன்றையும் தொடர்பு படுத்துகின்றனவா?. அச்செயல்கள் முழுவதும் சமுதாயத்தில் கலந்து வாழும் போது வெளிப்படுவனவாகும். எனவே மேலே காட்டியுள்ள வாக்கியங்கள் சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்டு வரையறுக்கப்பட்டுள்ள நோக்கங்கள் ஆகும்.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு:அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதுக.**
**ஆ. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு ஆராய்க.**
3.கல்வி நோக்கங்கள் எவற்றை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தப்படுகின்றன?
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
4. கற்பித்தலுக்கு நடுவணாக அமைபவர் யார்?
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………

### 4.3.2. மொழி கற்பித்தல் நோக்கங்களும், நோக்கக் கூறுகளும்

- குழந்தைகள் மொழியைக் கற்கும் நிலையை அறியச் செய்தல்

குறிப்பு

- ‘கவனம்’ என்றால் என்ன என்பதனையும், கவனத்தின் வகைகளையும் அறியச் செய்தல்.
- புலன் காட்சி, கவர்ச்சி என்பதனைப் பற்றியும் அறியச் செய்தல்.
- கவர்ச்சி என்பது மொழிப் பாடத்திற்கு எங்ஙனம் உதவும் என்பதனைப் பற்றியும் அறியச் செய்தல்.
- ‘கற்பனை’என்றால் என்ன என்பதனையும், மொழிப் பாடத்திற்கு எவ்வாறு பயன்படும் என்பதனையும் அறியச் செய்தல்.
- மொழி தொடர்பான கற்றல் கொள்கையைப் பற்றியும் அறியச் செய்தல்.
- குழந்தை வளர்ச்சியையும், மொழிக் கற்றலையும் அறியச் செய்தல்.
- மொழிக் கற்றலில் அடங்கியுள்ள பல்வேறு கூறுகளை அறியச் செய்தல்.

**மொழி கற்பித்தல் நோக்கக் கூறுகள்**

மொழியை நன்கு அறிந்து கொள்ள

- கவனம்,
- புலன்காட்சி,
- கவர்ச்சி,
- கற்பனை ஆகியவை தேவையாகும்.

**கவனம்**

“நம்மை பாதிக்கும் பல்வேறு தூண்டல்களில் நமக்கு தேவைப்படுகின்றனவற்றை மட்டும் தேர்ந்தெடுத்துத் தெளிவாக அறிவதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சியே கவனமாகும்” என்று மக்டூகல் என்பவர் விளக்குகிறார். கவனம் இருவகைப்படும். அவை: **1. முயற்சியற்ற கவனம், 2. முயற்சிசார் கவனம்.**

**புலன்காட்சி**

புலன்காட்சிக்கு அடிப்படை புலன் உணர்ச்சிகள். நமது புலன்களான கண்கள், செவிகள் போன்றன தூண்டப்படுவதினால் தோன்றும் தனிப்பட்ட பண்புகளே புலன் உணர்ச்சிகளாகும். புலன்காட்சித் திறனுக்கு அடிப்படை, புலப்பயிற்சி ஆகும். இப்பயிற்சியை ஹாரன் (H.H. Horne) என்ற கல்வியாளர் ‘நனவு நினையில் சாளரங்களை நன்கு திறத்தல்’ எனக்குறிப்பிடுகிறார்.

**கவர்ச்சி**

கவர்ச்சி அல்லது அக்கறை என்பது, நம்மை பாதிக்கும் அல்லது நமக்கு பயனுள்ள பொருள்களைப் பற்றிய மன உணர்ச்சியாகும்.

குறிப்பு

மொழிப்பாடத்தில் கவர்ச்சியை மேற்கொள்ள பின்வரும் வழிகளை ஆசிரியர் மேற்கொள்ளலாம்.

- ❖ ஆசிரியர் திரும்பத் திரும்பக் கூறுதலை தவிர்த்தல் வேண்டும்.
- ❖ குரலில் ஏற்றத்தாழ்வு இருத்தல் வேண்டும்
- ❖ மாணவர்களுக்குச் சலிப்பூட்டும் வகையில் பேசுதல் கூடாது.
- ❖ மாணவர்களுக்கு மிகுதியான வாய்ப்புகள் அளிக்கப்படுதல் வேண்டும்.

**கற்பனை**

பிம்பங்கள் அல்லது சாயல்களின் துணைகொண்டு நிகழும் சிந்தனையை உளவியலாளர் ‘கற்பனை’ என்று பொதுவாகக் குறிப்பிடுவர். கற்பனையை இருவகையாகப் பிரிக்கலாம். அவை: மீள் ஆக்கக் கற்பனை, ஆக்கக் கற்பனை என்பனவாகும்.

முன்னர் அனுபவித்த ஒரு நிகழ்ச்சியை மீண்டும் நம் மனக்கண் முன் கொணர்ந்து இருத்தி, அதை உணர்தல் மீள் ஆக்கக் கற்பனை ஆகும். பழைய புலன் காட்சிகள், அனுபவங்கள் ஆகியவற்றின் சாயல்களையும் அவற்றினின்றும் பெறப்பட்ட எண்ணங்களையும் புதிய முறையில் அமைத்தலே ஆக்கக் கற்பனை ஆகும்.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.**
**ஆ உமது பதிலைப்பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளபதிலோடுஒப்பிட்டு அறிக.**

5. கவனத்தின் வகைகள் யாவை?

………………………………………………………………………………………..……
……………………………………………………………………………………………

6.பிம்பங்கள் அல்லது சாயல்களின் துணைகொண்டு நிகழும் சிந்தனையை உளவியலாளர் எவ்வாறு குறிப்பிடுகிறார்?

……………………………………………………………………………………………
…………………………………………………………………………………………….

## 4.4. புளூமின் கற்பித்தல் கோட்பாடுகள்

கல்வி கற்பிக்கும் நோக்கங்கள் கல்வியாளர்களால் பல வகைகளில் வகைப்படுத்தப்பட்டுள்ள போதிலும், பெஞ்சமின் புளூம் அமைத்த வகைபாடு அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. புளூமும் அவருடைய உதவியாளர்களும் மாணவர்களின் கற்றல் வளர்ச்சி நிலைகளை ஆராய்ந்தனர். ஒரு அலகுப் பாடத்தினை எடுத்துக் கொணடால் அதனை முதலில் அறிந்து கொள்ள வேண்டும். நன்கு புரிந்து கொள்ள வேண்டும். பயன்படுத்த கற்றுக் கொண்டு, அதனை பகுக்கத் தெரிந்து, தொகுத்துக் கூறி இவைகளையெல்லாம் சரியாக நடந்திருக்கின்றனவா என்று மதிப்பீடு செய்து பார்க்க வேண்டும். இப்படி

ஆறு படிகளும் முற்று பெற்றால்தான் அறிதல் பகுதி வளர்ச்சி அடைந்தது என்று பொருள்.

**பெஞ்சமின் புளூமின் கல்விப் பகுப்பாய்வு**

| அறிதல் பகுதி (அறிவு) | எழுச்சிப் பகுதி (பண்பு) | உள இயக்கப் பகுதி (செயல்) |
|---|---|---|
| அறிதல் | ஏற்றல் | புலக்காட்சி |
| புரிந்து கொள்ளுதல் | போற்றல் | போலச்செய்தல் |
| பயன்படுத்துதல் | மதித்தல் | தானே செய்தல் |
| பகுத்தல் | முறைப்படுத்துதல் | துல்லியமாகச்செய்தல் |
| தொகுத்தல் | பண்பாக்கிக் கோடல் | கலையாக்கல் |
| மதிப்பிடல் | | இயற்கையாக்குதல் |

அடுத்து, எழுச்சிப்பகுதியின் வளர்ச்சிக்கு ஐந்து படிகள் முற்றுப்பெறுதல் வேண்டும். அந்த அலகு பாடத்தின் கருத்துக்களை ஏற்றுக் கொண்டு ஐயமின்றி, தெளிவு பெற்று அக்கருத்தினை மதித்து ஒழுங்குபடுத்தி, பண்பாக மாற்றிக் கொள்ள வேண்டும். எனவே அறிதல் எழுச்சியாக, பண்பாக மாறியிருக்கிறது. இவை இரண்டும் கொள்கைகள். இவை கொள்கை அளவில் இருந்து செயல்பாடு இல்லையேல் அது முழுமையான கல்வி ஆகாது. கற்பது தொடர் செயல். எனவே செயல்பகுதியும் சீரான வளர்ச்சி அடைதல் வேண்டும்.

அறிவு பண்பாகி, அப்பண்புடைச் செயலைப் போலச் செய்து, தானே செய்து, துல்லியமாகச் செய்து, முறையாகச் செய்து பின் இயல்பான செயலாக மாற்ற வேண்டும். செயல் இயல்பாக மாறும்போது கல்வி முழுமையடைகிறது. இப்படி அனைத்துப் படிகளும் பூர்த்தியானால் மட்டுமே மூளைசீரான வளர்ச்சியுற்று ஆளுமைப் பண்புகள் ஒருங்கிணைந்துள்ளன என்று சொல்லலாம். இவைகளில் ஏதாவது ஒன்று வளர்ந்து பிற இரண்டும் வளராமலும், இரண்டு வளர்ந்து மற்ற ஒன்று வளராமலும் இருந்தால் நன்மை இல்லை என்பதோடு மட்டுமில்லாமல் பெருந்தீங்கு பயக்கும் அபாயமும் இருக்கிறது.

பெஞ்சமின் புளூமின் வகைப்பாடு மாணவரது வளர்ச்சியினை இப்படி மூன்று பெரும் பிரிவுகளாக பிரித்துள்ளது. வகைப்பாடு என்பது குறிப்பிட்ட நோக்கங்களைப் பற்றி முறையாகச் சிந்திப்பதற்கும், மதிப்பிடுவதற்கும் ஆசிரியர்களுக்கு உதவும் ஒழுங்கமைப்பாகும்.

1. அறிவு சார்களம் - Cognitive Domain
2. உணர் சார்களம் - Affective Domain
3. உள இயக்க சார்களம் - Psycho-Motor Domain

குறிப்பு

இந்த பிரிவுகள் சாதாரண அடிப்படை நிலையிலிருந்து படிப்படியாக உயர்ந்த நிலைக்குச் செல்லும் அமைப்பை உடையன. ஒன்றோடு ஒன்று இணைந்தவை, பிரிக்க இயலாதவை. இதை சற்று விரிவாக காண்போம்.

**அறிவுசார்களம்** - Cognitive Domain

இப்பகுதி மாணவரின் அறிவினை வளர்ச்சியுற செய்வதைக் குறிக்கிறது.

| | | |
|---|---|---|
| அறிந்து கொள்ளுதல் | - | Knowledge |
| புரிந்து கொள்ளுதல் | - | Understanding |
| பயன்படுத்துதல் | - | Application |
| பகுத்தல் | - | Analysis |
| தொகுத்தல் | - | Synthesis |
| மதிப்பிடுதல் | - | Evaluation |

**உணர்சார்களம்** - Affective Domain

இது மாணவர்களின் கல்வி மற்றும் சமூக உணர்வுகளை வளர்ப்பதாகும். இப்பகுதியில் உள்ள படிநிலைகள்.

| | | |
|---|---|---|
| ஏற்றுக் கொள்ளுதல் | - | Receiving |
| பதில் அளித்தல் | - | Responding |
| மதிப்பளித்தல் | - | Valuing |
| ஒழுங்குபடுத்துதல் | - | Organising |
| பண்பாக்கிக் கொள்ளுதல் | - | Characterising |

**உள- இயக்கசார்களம்** - Psycho-Motor Domain

இப்பகுதி மாணவரின் செயல்படும் நரம்பு மண்டல இயக்கங்களை அடிப்படையாக கொண்டது. இப்பகுதியில் உள்ள படிநிலைகள்.

| | | |
|---|---|---|
| புலக்காட்சி | - | Perception |
| போலச் செய்தல் | - | Imitation |
| தானே செய்தல | - | Manipulation |
| துல்லியமாகச் செய்தல் | - | Precision |
| கலையாக்கல் | - | Articulation |
| இயற்கையாக்குதல் | - | Naturalization |

**அறிவு சார்களத்தில் அடங்கியுள்ள நோக்கங்கள்**

1. **அறிந்து கொள்ளுதல் (Knowledge)**

இது சாதாரண அடிப்படை அறிவைக் குறிப்பிடுகிறது. செய்திகள் மற்றும் உண்மைகளை நினைவு கூர்தலையும், மீட்டறிதலையும் உள்ளடக்கியது. இப்பகுதி நினைவாற்றல் வலுப்படுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

2. **புரிந்து கொள்ளுதல் (Understanding)**

இது உண்மைகளுக்கும், தத்துவங்களுக்கும் விளக்கம் கூறுதல், கருத்துகளுக்குச்சான்று கொடுத்தல், கருத்துக்களை தொடர்புபடுத்துதல், மொழி பெயர்த்தல் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியது.

3. **பயன்படுத்துதல் (Application)**

இது கொள்கைகள், விதிகள், வரையறைகள், தோற்றங்களை உருவகச் சூழ்நிலையுடன் இணைத்துப் பயன்படுத்தும் நடத்தைகளை நோக்கமாகக் கொண்டது. பயன்படுத்துதல் என்பது ஒரு பொதுக் கருத்தைப் பயன்படுத்தி குறிப்பிட்ட பிரச்சனையைத் தீர்ப்பதாகும்.

4. **பகுத்தல் (Analysis)**

இது பொதுக்கருத்துக்களிலிருந்து அதன் பகுதிகளைப் பிரித்து அறிந்து அவற்றிற்கிடையே உள்ள தொடர்புகளை அறியச் செய்வதாகும்.

5. **தொகுத்தல் (Synthesis)**

ஒரு தலைப்பின் கீழ் அமைந்த தனித்தனிச் செய்திகளை ஒருங்கிணைத்து பொதுக் கருத்துக்களையும், விதிகளையும், தத்துவங்களையும் உருவாக்கும் அறிவாற்றலே தொகுத்தலாகும்.

6. **மதிப்பிடுதல் (Evaluation)**

இது சமூக மற்றும் அறிவியல் அடிப்படையில் அறிவின் மதிப்பை அளவிடுதலை அடிப்படையாகக் கொண்டது. அளவிடுதல் என்பது குறிப்பிட்ட சூழலில் பொருள்களின் உண்மைநிலை பற்றி அறிந்து கொள்வதாகும்.

**உணர்வுசார் களத்தில் அடங்கியுள்ள நோக்கங்கள்**

1. **ஏற்றுக்கொள்ளுதல் (Receiving)**

இப்பகுதி உணர்வு பகுதியின் எளிய நிலையாகும். சில சூழ்நிலைகளையும் தூண்டல்களையும் ஆர்வத்துடன் ஏற்றுக் கொள்வதற்கான உணர்நயம் ஆகும்.

குறிப்பு

**2. துலங்கல் (Responding)**

ஏற்றுக் கொள்ளப்பட்ட செயல் புலன்களால் நன்கு உணரப்பட்டபின் தொடர்ந்து துலங்கல் நடைபெறும். இந்நிலை தொடர்ந்து கவனத்துடன் துலங்கலுக்காக எழுச்சி அடைவதாகும்.

**3. மதிப்பளித்தல் (Valuing)**

மதிப்பளித்தல் என்பது ஒரு செயலைப்பற்றி மதிப்பிடுதல் என்பதைக் குறிக்கும். மதிப்பளித்தலில் மதிப்பை ஏற்றுக் கொள்ளுதல், மதிப்பிற்கு முன்னுரிமை கொடுத்தல், பொறுப்புணர்தல் என்ற மூன்று கூறுகள் உள்ளன.

**4. ஒழுங்குபடுத்தல் (organising)**

மதிப்பிடுதலில் கிடைத்த செய்திகளை இணைத்து முடிவுகளை உருவாக்குவது ஒழுங்குபடுத்துதலாகும்.

**5. பண்பாக்குதல் (Characterising)**

இது பண்பினை வளர்த்தல் என்பதைக் குறிக்கும். சரியான மதிப்பிடுதலில் இருந்து ஒழுங்குபடுத்தப்பட்ட செய்திகளைத் தொடர்ந்து பயன்படுத்தும் தன்மை வாழ்க்கையில் பண்பாக உருவாகிறது.

**உள - இயக்குசார் களத்தில் அடங்கியுள்ள நோக்கங்கள்**

**1. புலக்காட்சி (Perception)**

உற்றுநோக்குதல் திறன், பிரச்சனையை உணருதல் திறன் மற்றும் சுய ஆர்வத்தை வளர்த்தல் திறன் ஆகியவைகளை புலன் காட்சி செயல்படுத்துகின்றது.

**2. போலச் செய்தல் (Imitation)**

திரும்பத் திரும்ப ஒரே மாதிரியான செயல்களை நிகழ்த்துவதற்கும் சிந்தனை அடிப்படையில் ஒத்திசைவுச் செயல்களை உருவாக்குவதற்கும் இப்பகுதி காரணமாகிறது.

**3. தானே செய்தல் (Manipulation)**

சூழ்நிலைக்கு உகந்தவாறு நுண்ணறிவைப் பயன்படுத்தி அதே மாதிரியான ஆனால் மாறுபட்ட வழிமுறைகளை உள்ளடக்கிய செயல்கள் யாவும் இப்பகுதியைச் சேர்ந்தது.

**4. துல்லியமாகச் செய்தல் (Precision)**

இதில் சோதனைகள் அமைத்தலில் பொருத்தமுடைமை, செயற்படுத்துதலில் துல்லியம், கருவிகளைத் தவறின்றிக் கையாளும் திறன் போன்றவை அடங்கும்.

குறிப்பு

**5. கலையாக்கல் (Articulation)**

கலையாக்கலில் தர்க்கரீதியான சிந்தனை, கணக்கிடுதல் திறன், மனத்திறன் போன்ற உட்கூறுகள் அடங்கும்.

**6. இயல்பாக்குதல் (Naturalisation)**

ஒரு செயலைத் திரும்பத் திரும்பச் செய்யும் போது அது இயல்பான பழக்கமாகிவிடுகின்றது. வெற்றி அடைதல் திறன், பல்வகைச் செயல்களை நிர்வகித்தல் திறன், ஒருங்கிணைத்தல் திறன் போன்ற உட்கூறுகள் இதில் காணப்படுகின்றன.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதுக.**
**ஆ.உமதுபதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு ஆராய்க.**
7. மாணவரது வளர்ச்சியினை பிரிக்கும் மூன்று வகை வகைப்பாடுகள் யாவை?
…………………………………………………………………………………
…………………………………………………………………………………
8. உள இயக்கசார் களம் எதனை அடிப்படையாகக் கொண்டது?
…………………………………………………………………………………
…………………………………………………………………………………

## 4.5. அலகுத்திட்டம் தயாரித்தல்

அலகுத்திட்டம் என்பது பாடப்பகுதியின் ஓர் அலகைக் கற்பிக்கத் திட்டமிடுவதாகும். ஓர் அலகு என்பது ஒரு குறிப்பிட்ட பாடக்கருத்தை மையமாகக் கொண்ட பாடத்திட்டங்களின் தொகுப்பாகும்.

நாற்பத்தைந்து நிமிடங்களுக்கு ஒரு பாடப்பகுதியை மட்டும் தேர்ந்தெடுத்து அதற்குக் கற்பிக்கத் திட்டமிடுவதே பாடத்திட்டமிடுதல் ஆகும். பாடத்திட்டங்கள் ஆசிரியருக்குக் கற்பித்தல் நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் துணை புரிகின்றன.

**அலகுப் பாடத்திட்டம் : வரையறை**

பாடப்பொருள் கற்பித்தலுக்கு ஏற்பப் பிரிக்கப்படாமல் இருக்கும் போது ஆசிரியர் அதனைச் சரியான அலகுகளாகத் திருத்தி அமைக்க வேண்டும். பிரஸ்ட்டன் என்பவர் கருத்துப்படி, “ஓர் அலகு என்பது தொடர்புடைய பாடக் கருத்துக்கள் அமைந்த பெரிய பாடப்பகுதியாகும். ஒரு குறிப்பிட்ட கருத்தினை மையமாகக் கொண்ட பாடத்திட்டங்களின் தொகுப்பாக இது அமையும்.”

ஓர் அலகுத்திட்டம் என்பது ஒரு குறிப்பிட்ட தலைப்பிலுள்ள, ஒன்றுக்கொன்று தொடர்புடைய பாடத்திட்டங்களைக் கொண்டது. அலகுத்திட்டம் அப்பாடப்பகுதியைக் கற்றுக் கொடுப்பதற்குக் கிடைக்கும் பாடவேளைகளைப் பொறுத்து அமையலாம். பாடப் புத்தகத்திலுள்ள பாடப் பகுதிகளைத் தனித்தனியாகப் பிரித்துக் கற்பிக்கும் பொழுது

**குறிப்பு**

கருத்துக்களின் இடையே தொடர்பில்லாமல் போகலாம். எனவே, ஒரு குறிப்பிட்ட அலகிலுள்ள பகுதிகளின் முழுக் கருத்தினையும் புரிந்து கொள்ளும்படி அலகுத்திட்டம் தயாரிக்க வேண்டும்.

### 4.5.1. அலகுத்திட்டத்தின் பயன்கள்

- ✓ கற்பித்தல் பொது நோக்கங்களையும், சிறப்பு நோக்கங்களையும் தெளிவுபடுத்துதல்
- ✓ மாணவர்களின் தேவை, ஆர்வம், மனப்பாங்கு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஆசிரியர் திட்டமிட உதவுதல்
- ✓ ஆசிரியரும், மாணவர்களும் இணைந்து சுதந்திரச் சூழ்நிலையில் செயல்படத் துணை நிற்றல்.
- ✓ காலவிரயம் தடுக்கப்படுதல். செயல்திறன் மேம்படுதல்.
- ✓ மாணவர்களின் உள்ளுணர்வுகளைத் தூண்டுதல்.
- ✓ அறிவை வாழ்க்கைச் சூழ்நிலையுடன் இணைத்துப் பயன்படுத்த உதவுதல்.
- ✓ மாணவர்களின் தன்னம்பிக்கையை வளர்த்தல்.
- ✓ கற்றலில் ஆர்வத்தை ஏற்படுத்துதல்.
- ✓ செயல்திட்ட வேலைகளுக்குத் திட்டமிட உதவுதல்.
- ✓ கற்பிப்பிதற்குத் தேவையான கருவிகளைத் தயாரிக்க ஆசிரியருக்கு உதவுதல்
- ✓ பாடத்திட்டத்தினைச் சிறப்பாக அமைக்க உதவுதல்.

### 4.5.2. அலகுத்திட்டம் தயாரித்தலிலுள்ள படிநிலைகள்

ஆசிரியர் அலகுத்திட்டம் தயாரிக்கும் முன் பாடப்பொருளைப் பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும். அலகுத்திட்டம் தயாரித்தலில் உள்ள படிநிலைகள் பின்வருமாறு :

1. **தயாரித்தல்**

இது மாணவர்களை ஆர்வத்துடன் கற்றலில் தயார் செய்ய உதவுகிறது. புதிய தலைப்புகளுக்கு அலகுத்திட்டமிடும் பொழுது வாழ்க்கைச் சூழ்நிலையுடன் இணைத்துக் கற்பித்தலை மேற்கொள்வது நன்று.

2. **முன்னறிவைச் சோதித்தல்**

ஒரு புதிய அலகை மாணவர்களுக்குக் கற்பிக்கும் முன், எந்த அடிப்படையில் கற்பித்தலைத் தொடங்குவது என்பதைத் திட்டமிட மாணவர்களின் முன்னறிவைச் சோதிக்க வேண்டும்.

குறிப்பு

**3. பாடவளர்ச்சி**

பாடப்பொருளைக் கற்பிப்பதற்குத் தேவையான கற்பித்தல் கருவிகள், செயல்கள், பயிற்சி முறைகள், கற்பித்தல் முறைகள் ஆகியன திட்டமிடப்படுகின்றன.

**4. தொகுத்துக் கூறுதல்**

ஒரு குறிப்பிட்ட பாட அலகின் கீழ் அமைந்த அனைத்து உட்தலைப்புகளையும், ஓர் ஒழுங்கு முறையில் தொகுத்துக்கூற அலகுத்திட்டம் துணைசெய்கிறது.

**5. மீள்பார்வை**

முழு அலகையும் கற்பித்த பிறகு, கற்பித்த பகுதிகளில் மாணவர்களின் புரிந்து கொள்ளும் தன்மையை மீண்டும் மீட்டறிவதற்கு மீள்பார்வை உதவுகிறது. பாடப்பொருளை ஒட்டிய சிறு வினாக்களின் மூலம் மீள்பார்வை செய்யலாம்.

**6. மதிப்பிடுதல்**

பாட இறுதியில் கற்பித்தல் நோக்கங்களின் அடிப்படையில் மதிப்பிடுதல் அமைகிறது. மதிப்பிடுதலின் முடிவுகளை ஆராய்ந்து அதற்கு மீண்டும் பாடத்தை திட்டமிடுதல் வேண்டும்.

### 4.5.3. அலகுத் திட்டம் எழுதுதல்

ஓர் அலகுத் திட்டத்தை எழுதுவதற்குப் பல்வேறு வடிவமைப்புகள் உள்ளன. எனினும் ஒரு நல்ல அலகுத்திட்டம் கீழ்க்கண்ட கூறுகளைப் பெற்றிருக்க வேண்டும்.

- ✓ அலகின் தலைப்பு
- ✓ அலகின் நோக்கங்கள்
- ✓ பாடத்தலைப்பில் அடங்கியுள்ள கருத்துக்கள்
- ✓ மையக்கருத்து
- ✓ கற்பித்தல் முறைகள்
- ✓ துணைக்கருவிகள்
- ✓ கால அளவு
- ✓ ஒப்படைப்பு
- ✓ மதிப்பிடுதல்

### 4.5.4. அலகுத்திட்டத்தின் வடிவமைப்பு

**மாதிரிப் படிவம் -1**

அலகின் பெயர் :
அலகின் நோக்கங்கள் :
பாடம் :
வகுப்பு :

குறிப்பு

| வ. எண். | பாடத் தலைப்புகள் | பாடங்களின் எண்ணிக்கை | பாடப்பொருளின் மையக்கூறுகள் | கற்பித்தல் முறைகள் | கற்பித்தல் கருவிகள் | கால அளவு |
|---|---|---|---|---|---|---|
| 1.<br>2.<br>3.<br>4.<br>5. | | | | | | |

மாதிரிப்படிவம் 1 ஐ நிரப்பிய பின் படிவம் 2ன் அடிப்படையில் அலகுத்திட்டம் அமைக்கப்படல் வேண்டும்.

**படிவம் - 2**

அலகின் பெயர் :

அலகின் நோக்கங்கள் :

பாடம் :

வகுப்பு :

| வ. எண் | பாட உட்கருத்துகள் | பாட எண்ணிக்கை | கற்றல் கற்பித்தல் முறைகள் | ஒப்படைப்புகள் | மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|
| 1.<br>2.<br>3.<br>4.<br>5. | | | | | |

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதுக.**
**ஆ. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு ஆராய்க.**

9. அலகுத்திட்டம் என்றால் என்ன?

…………………………………………………………………………………...............

…………………………………………………………………………………...............

10. அலகுத்திட்டம் தயாரித்தலில் உள்ள படிநிலைகள் யாவை?

…………………………………………………………………………………...............

…………………………………………………………………………………...............

## 4.6. பாடத்திட்டம்

*“இணரூழ்த்தும் நாறா மலரணையர் கற்றது*
*உணரவிரித் துரையா தார்”* - **திருக்குறள்**

ஆசிரியர், மாணவர் ஆகிய இருவரின் செயல்களின் மாதிரிபடிவம் தான் பாடத்திட்டம் ஆகும். பாடத்திட்டமென்பது கற்பித்தல்

நோக்கங்களை அடைவதற்காக குறிப்பிட்ட பள்ளி நேரத்தில் கற்பிக்க வேண்டிய ஓர் அலகு பாடத்துடன் தொடர்புடையதாகும்.

பாடத்திட்டத்தில் பொது நோக்கங்களைத் தேர்ந்தெடுத்தல், கற்பித்தல் செயல்களின் வடிவத்தில் கற்றல் அனுபவங்கள், எதிர்பார்க்கப்படும் கற்றல் வெளிப்பாட்டையொட்டி ஆசிரியரின் செயல்கள், திருப்புதல், மதிப்பிடுதல், ஒப்படைப்பு ஆகியன அடங்கி இருக்க வேண்டும்.

பாடத்திட்டம் ஒவ்வொரு குறிப்பிட்ட வகுப்பிற்குரிய பாடங்கள் பற்றி விரிவாகத் தரும் அமைப்புடையது. கல்வித்திட்டத்தில் காணப்படுவனவற்றைச் சாதிப்பதற்கான வழிமுறைகளைத் தெளிவாகவும், விரிவாகவும், விளக்கமாகவும் தருவது பாடத்திட்டமாகும். மேலும் கற்றுத் தரப்பட வேண்டியவற்றை எந்தெந்த வரிசை முறையில் மாணவருக்குக் கொடுப்பது மிகவும் பயன்தரும், எவற்றையெல்லாம் ஒருசேரக் கற்றுக் கொடுக்கலாம், எவையெல்லாம் முன் கூட்டியே மாணவர்களுக்குத் தெரியும், எவ்வளவு காலகட்டத்திற்குள் மாணவர்கள் கற்றாக வேண்டும் என்பவற்றையெல்லாம் தெளிவாகப் பாடத்திட்டம் குறிப்பிடும்.

ஒரு பிரிவு வேளையில் ஒரு பாடத்தையோ, பாடத்தின் பகுதியையோ, கற்பிப்பதாக இருந்தாலும் அதனை எவ்வாறு கற்பிப்பது என்பதற்கு வழிகாட்டுவதே பாடத் திட்டமாகும். கடலளவு விரிந்த செய்திகளை குறிப்பிட்ட கால அளவிற்குள் எந்த அளவில் பெறச் செய்ய வேண்டுமென்றும், என்னென்ன கருவிகளைத் துணையாகக் கொள்ளலாம் என்றும் வகைப்படுத்தி, தொகைப்படுத்தி, நெறிப்படுத்தி, முறைப்படுத்தி கொள்வது பாடத்தின் பயனாகும்.

பாடத்திட்டம் அமைப்பதென்பது பயிற்சியால் மட்டுமே வரக் கூடியது மேலும் பாடத்திட்டப்படியே நடத்துவதென்பதும் எளிதாக இயலுவதில்லை. இவையெல்லாம் பயிற்சியால் பெறக்கூடியவை.

பாடத்திட்டத்தைக் கட்டடத்தின் நில வரைபடங்களுக்கு ஒப்பிடலாம். பாடத்திட்ட அமைப்பானது, பாடநூல்களைத் தயாரிக்கவும், கல்வி இலக்குகளை அடையவும் உதவுகிறது. வாழ்வில் அச்சாணியாக விளங்கும் தாய்மொழிக்குக் கல்வித் திட்டத்தில் முதலிடம் அளிக்கப்பட்டுள்ளது. மொழித் திறன்கள் நான்கினையும் பள்ளி மாணவன் பெறவேண்டும் என்னும் நோக்கில் தமிழ் பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. நிரந்தரப் படிப்பறிவை நோக்கமாகக்கொண்டு தமிழ் மொழி பாடத்திட்டம் அமைந்துள்ளது. தொடக்கநிலையிலிருந்து உயர்நிலைவரை பள்ளி பாடத்திட்டமானது எவ்வாறு அமையவேண்டும் என்பதைப் பின்வருமாறு காணலாம்.

**குறிப்பு**

**அ. தொடக்கப் பள்ளிப்பாடத்திட்டம்**

பள்ளியில் முதலாம் வகுப்பில் சேரும் மாணவரின் பேச்சுமொழி தெளிவற்று இருக்கும். எடுத்தக்காட்டாக, அவர்கள் ஈற்றொலியை இசைக்காமல் விடுவர். மேலும் தெளிவின்றி இசைப்பர். இத்தகைய ஒலிப்புக் குறைபாடுகளை ஆசிரியர் இனங்கண்டு, அவர்களுடைய பிழைகளை அகற்றும் வகையில் பாடத்திட்டம் அமைந்துள்ளது. மாணவரின் பிழைகளைக் களைய தமிழ்ப்பாட நூல்களில் மழலையர் பாடல்கள், படம் பார்த்துக் கதைசொல்லுதல், சிறுசிறுவாக்கியங்கள் அமைக்கும் வகையில் படங்கள் ஆகியவை இடம் பெறவேண்டும். தொடக்கப் பள்ளி முடித்து வெளிவரும் மாணவர் 2700 சொற்களைத் தெளிவாக அறிந்திருக்கவேண்டும் என்பதே இந்நிலைப் பாடத்திட்டத்தின் நோக்கமாகும்.

மேலும் அவர்கள் கடிதம் எழுதும் திறமையையும், செய்தித்தாள்கள் படித்தறியும் திறமையையும், நிரந்தரப் படிப்பறிவையும் செவ்வனே பெறவேண்டும் என்பது இப்பாடத்திட்டத்தின் தலையாய நோக்கமாகும்.

**ஆ. நடுநிலைப் பள்ளிப்பாடத்திட்டம்**

இப்பாடத்தின் நோக்கம் மாணவரின் மொழிப்பற்றை வளர்த்தல், கருத்துணர்தல், திறனை வளர்த்தல், திறன் குறையாமல் படித்தலில் விரைவை அதிகப்படுத்துதல் ஆகியவையாகும். இந்நிலைக்குரிய பாடத்திட்டம், இந்நிலை மாணவர்களுக்கு ஏற்ப, பல நூல்களிலிருந்து செய்யுட்களைத் தொகுத்தும், அவற்றினின்று மொழிப் பயிற்சிகளுடனும் அமைக்கப்பட்டுள்ளது. ஒருசொல், சொற்றொடரைப் பலபொருள்களில் வழங்கும் பயிற்சிகளும், அகராதியை அடிக்கடிப் பயன்படுத்தும் பயிற்சிகளும் தேவைக்கு ஏற்ப இடம் பெறுதல் வேண்டும். பாடப் புத்தகங்களில், உரைநடைப் பாடங்கள் ஒரே ஆசிரியரால் எழுதப்படுதல் கூடாது. இந்நிலை மாணவர், நூலகத்தைப் பயன்படுத்தி அகன்ற படிப்பில் தம்மை வளர்த்துக் கொள்ளவும், வாய்க்குள் படிக்கும் பழக்கத்தை வளர்க்கவும் பயிற்சிகள் அமைய வேண்டும்.

**இ. உயர்நிலைப் பள்ளிப்பாடத்திட்டம்**

தம் பட்டறிவிற்கு உகந்தபொருள்களைப் பற்றி இலக்கணப் பிழையின்றிப் பேசவும், எழுதவுமான ஆற்றலைப் பெறவேண்டும் என்பதே இந்நிலைப் பாடத்திட்டத்தின் நோக்கமாகும். உயர்நிலையில் பெறும் மொழியறிவு, பண்பாடு ஆகியவைகளுடன் வாழ மாணவரைப் பயிற்றுவித்தலே இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

**ஆசிரியர் தம் வேலைத்திட்டத்தை பாடத்திட்டத்தின்படி அமைத்தல்**

தமிழாசிரியர் ஒவ்வொரு நிலைக்கும் ஏற்ற பாடத்திட்டத்தை அந்நிலைக்கேற்றவாறு உடன் பணியாற்றும் தமிழ் ஆசிரியர்களுடன் கலந்துபேசி, கற்பிக்கவேண்டிய பொதுமுறைகளைப் பற்றி முடிவு செய்யவேண்டும். ஓராண்டிற்குரிய பாடத்திட்டத்தைப் பருவத்திற்குரிய பகுதிகளாகப் பகுத்துச் செயற்படவேண்டும். செயல் திட்டமுறைக்கு ஒத்துவரக் கூடியவைகளாகப் பாடத்திட்டத்தைப் பகுத்து மாணவர்களுக்குப் பாடத்தில் விருப்பம் உண்டாகுமாறு நடத்தவேண்டும். பாட நூல்கள் ஆசிரியரின் வழி காட்டியே தவிர பதிவேடு இல்லை என்பதை ஆசிரியர் உணரவேண்டும்.

**4.6.1. பாடத்திட்டத்தின் வகைகள்**

**வரிசையமைப்புப் பாடத்திட்டம்**

இப்பாடத்திட்டத்தில் பாடங்கள் ஒன்றினுக்கு ஒன்று தொடர்பு இல்லாததாகும். மேலும் தன்னளவில் முடித்துவிடும் தன்மையுடையதாக இருக்கும். ஆனால் இவ்வமைப்புத் திட்டம் மொழிப் பாடத்திற்கு ஏற்றதன்று. ஏனெனில் மொழித்திறன்கள் நான்கும் ஒன்றினின்று ஒன்று பிரிக்க இயலாத ஒன்றாகும். பள்ளி மொழிப்பாடத் திட்டத்தில் இந்நான்கு மொழித் திறன்களையும் ஒருங்குசேர்த்துக் கற்றுத்தரவேண்டும்.

**அடுக்குப் பாடத்திட்டம்**

இவ்வகைப் பாடத்திட்டத்தில் ஒருபாடத்தில் புதியதாகக் கற்றுக் கொண்டவை அதை அடுத்து அமையும் பாடத்திட்டத்தில் கற்றுத்தரப் போவதற்கு அடிப்படையாய் விளங்கும். இப்பாடத்தில் முதலில் கற்றுக் கொண்டவை பற்றிய குறிப்பு, பின்னால் கற்றுத் தரப் போவதோடு சேர்ந்தமையும். முந்தைய பாடத்திட்டத்தில் கற்றுக் தந்தவைகளை மாணவர்கள் முழுமையும் தெளிந்து தேர்ந்தார்கள் என்ற ஊகத்தின் அடிப்படையில் செயற்படும் நிலை இவ்வகைப் பாடத்தில் உள்ளது.

**சுழல் பாடத்திட்டம்**

இப்பாடத்திட்டத்தின்படி பாடங்களை கற்கும் மாணவன் முந்தைய பாடம் ஒன்றில் தான் தெளிவாகக் கற்கவில்லை என்றால் மீண்டும் அக்குறிப்பிட்ட பாடத்திற்கே செல்லலாம். இம்முறையில் பாடங்களைத் திரும்பக் கற்கும் பயிற்சி கிடைக்கிறது. பாடங்களை இணைத்துக் கற்பிக்கும் வாய்ப்பு இவ்வகைப் பாடத்திட்டத்தில் உண்டு. இப்பாடத்திட்டத்தில் மாணவர்களின் தேவைக்கு முதலிடம் தருகிறது.

குறிப்பு

**தேசியப் பாடத்திட்டம்**

இப்பாடத்திட்டத்தின் அடிப்படை, மொழியமைப்புகள் செய்தி பரிமாற்றத்திற்குப் பயன்படும் விதமே என்பதாகும். எங்ஙனம் பல்வேறு மொழியமைப்புகளின் வழி ஒரு மொழியில் செய்திகள் தெரிவிக்கப்படுகின்றன என்பதைக் கற்றுத் தருவதே தேசியப் பாடத்திட்டத்தின் நோக்கமாகும்.

**இலட்சியப் பாடத்திட்டம்**

இலட்சியப் பாடத்திட்டம் என்பது ஒவ்வொரு மாணவனுக்கும் தனித்தனியாகப் பாடத்திட்டம் தருவதாகும்.

**முன்னேற்றத்தைச் சோதித்துஅறிக.**
**குறிப்பு:அ. உமதுபதிலைக் கீழேகொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.**
**ஆ.உமதுபதிலைப் பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.**

11.தொடக்கப்பள்ளி முடித்துவெளிவரும் மாணவனுக்கு எத்தனை சொற்கள் தெரிந்திருக்க வேண்டும்?

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………..………

12.எவ்வகைப் பாடத்திட்டம் மொழிப்பாடத்திற்கு ஏற்றதல்ல?

……………………………………………………………………………………………
…………………………………………………………………………………………….

**4.6.2. பாடம் கற்பித்தலின் படிநிலைகள்**

பாடம் கற்பித்தலின் பொழுதும், பாடத் திட்டம் எழுதும் பொழுதும் பின்பற்ற வேண்டிய படிநிலைகளை ஹெர்பார்ட்டின் என்பவர் வடிவமைத்தார். அப்படிநிலைகளுக்கு ஹெர்பார்ட்டின் படிநிலைகள் என்று பெயர். அவை:

1. ஊக்குவித்தல்
2. பாடவளர்ச்சி
3. தொடர்புபடுத்துதல்
4. பொதுக்கருத்தை உருவாக்குதல்
5. பயன்படுத்துதல்
6. மீள்பார்வை செய்தல்

1. **ஊக்குவித்தல்**

ஆசிரியர் ஒரு புதிய பாடப்பொருளை மாணவர்களுக்குக் கற்பிப்பதற்கு முன் அது பற்றிய அறிவினைப் பெறுவதற்கு மாணவர்களைத் தயார் செய்தல் வேண்டும். மாணவர்கள் ஆர்வத்துடன் புதிய செய்திகளை அறிந்து கொள்வதற்கு அவர்களைத் தயார் செய்வதே ஊக்குவித்தல் ஆகும்.

**ஊக்குவிக்கும் வழிமுறைகள்**

- கற்பித்தல் பாடப்பொருளுடன் தொடர்புடைய முன்னறிவினை மாணவர்கள் பெற்றிருக்கிறார்களா என்று சோதித்தல்.
- கற்பித்தல் பாடப் பொருளுடன் தொடர்புடைய செயல்களையும், நிகழ்ச்சிகளையும் கூறுதல்.
- துணைக்கருவிகள் மூலம் புதிய செய்திகளைத் தொடர்பு படுத்துதல்.
- மாணவர்களின் அன்றாட வாழ்க்கையோடு புதிய செய்திகளை இணைத்தல்.

**2. பாட வளர்ச்சி**

மாணவர்களை ஊக்குவித்த பிறகு பாடத் தலைப்பின் நோக்கங்களைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். பாடத் தலைப்பைக் கரும்பலகையில் எழுதி பாடத்தைத் தொடங்க வேண்டும். பாடப்பொருளின் வளர்ச்சி நிலைகளில் மாணவர்களைப் பங்கேற்கச் செய்ய வேண்டும். பாடவளர்ச்சியின் இடையில் கேட்கப்படும் வினாக்கள் மாணவர்களின் பாடப்பொருள் அறிவினைச் சோதிப்பதாக அமைய வேண்டும். வினாக்களை வகுப்பறையில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் பயன்படும்படி திட்டமிட்டு வினவ வேண்டும்.

**3. தொடர்பு படுத்துதல்**

பாட வளர்ச்சியில் அளிக்கப்பட்ட செய்திகளுக்குத் தொடர்பான சான்றுகளைத் தொடர்புபடுத்த வேண்டும். செய்திகளைத் தொடர்ந்து அளித்துக் கொண்டே செல்லாமல் ஒவ்வொரு பாடப்பொருளுக்கும் பொருத்தமான விளக்கத்தை அளிக்க வேண்டும். காட்சிக் கேள்விக் கருவிகளைப் பாடத்துடன் இணைத்து ஒப்புமைப்படுத்த வேண்டும். இதனால் முக்கியமான பாடக்கருத்துக்களை மாணவர்களால் எளிதில் புரிந்து கொள்ள இயலும்.

**4. பொதுக்கருத்தை உருவாக்குதல்**

ஆசிரியர் தொடர்புபடுத்தலில் விளக்கப்பட்ட கருத்துகளையும், கொள்கைகளையும் தகுந்த முறையில் பொதுமைப் படுத்த வேண்டும். விதிகளைப் பொதுமைப்படுத்துதல் மூலம் புதிய கருத்தினைப் பெற இயலும்.

**5. பயன்படுத்துதல்**

மாணவர்கள், பொதுமைப்படுத்தப்பட்ட கருத்துகளை அன்றாட வாழ்வில் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளைச் சுட்ட வேண்டும். பொதுக்கருத்துக்களை சூழ்நிலையுடன் இணைக்கும் போது அன்றாட

குறிப்பு

வாழ்க்கையோடு ஒரு தொடர்பு ஏற்படுத்துகிறது. கற்றல் பயிற்சி மாற்றம் செய்யப்படுவதால் கற்றல் நிலை பெறுகிறது.

**6. மீள்பார்வை**

இது இறுதிப்படிநிலை. மிக முக்கியமான இப்படிநிலையில் மாணவர்கள் என்ன கற்றுக் கொண்டார்கள் என்பதை ஆசிரியரால் அளந்தறிய முடிகிறது. குறிப்பிட்ட வகுப்பறைக் கற்பித்தல் நோக்கங்கள் நிறைவேறி இருக்கின்றனவா என்று மதிப்பீடு செய்ய உதவுகிறது. ஹெர்பார்ட்டின் படிகள் அனைத்தையும் எல்லாப் பாடங்களுக்கும் எல்லா நேரங்களிலும் பயன்படுத்த இயலாது. எனவே, சில பாடங்களுக்கு ஹெர்பார்ட்டியின் படிநிலைகளில் உள்ள சில முக்கியப் படிநிலைகள் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டுமென்று வலியுறுத்தப்படலாம். ஆனால் கற்பிக்கும் பாடப்பொருளின் தன்மை, மாணவர்களின் தரம் ஆகியவற்றிற்கேற்ப சில பாடங்களில் சில படி நிலைகளை முற்றிலுமாக ஒதுக்கிடவும் செய்யலாம்.

**4.6.3. பாடம் கற்பித்தலுக்கான நோக்கங்களைத் தயாரித்தல்**

பாடம் கற்பித்தலுக்கான முதல் அடிப்படை பாடம் கற்பிப்புத் திட்டம் தயாரித்தல். பாடம் கற்பிப்புத்திட்டம் என்பது சில தலைப்புகளின் கீழ் அமைக்கப்பட்ட பாடப்பொருளைக் கற்பித்து நிறைவு செய்யவேண்டும் என்ற கருத்து இல்லை. பள்ளிக்கு வருகின்ற ஒவ்வொரு பிள்ளையையும் ஒரு நீர் கொள்ளும் பாத்திரம் என்று கருதி, நம்மிடம் உள்ள பாடத்திட்டம் என்ற நீரை அதன் தலையில் திணிக்க இயலாது. அல்லது ஒவ்வொரு பிள்ளையையும் களிமண் உருண்டையெனக் கருதி, ஆசிரியர் எண்ணியபடி, தமது கருத்துகளையெல்லாம் அவர்கள் மனத்தில் புகுத்தி, அவர்களைப் பொம்மைகளாக்கும் சிற்பி போல ஆசிரியர் எண்ணிவிடவும் முடியாது. பிள்ளைகள் ஒவ்வொன்றும் உயிருள்ள ஜீவன். அவர்களைக் கட்டுப்படுத்தி வைக்க இயலாது. ஆகவே அவர்களுக்குப் பாடங்களைக் கற்பிக்கத் திட்டமிடும்போது, அவர்களையும் கற்றல் செயலில் ஈடுபடுத்தல் வேண்டும். இதுவே தற்கால முறையாகும்.

வகுப்பில் படிப்பது, படக்காட்சியைக் காண்பது அல்லது குறிப்புகள் தயாரிப்பது போன்ற செயல்கள் மாணவர்களின் மனத்தைக் கட்டுப்படுத்துவன. வெளிப்பயணங்கள் அமைப்பதும், சோதனைகள் செய்வதும், செயல்திட்டங்களில் ஈடுபடுவதும் மாணவர்களை முழுதும் ஈடுபடுத்தும் செயல்களாகும். செய்து காட்டும் சோதனைகளில் சில மாணவரது கவனத்தை முழுதும் நிலைநிறுத்துவன. குறிப்புகள் எழுதிக்கொள்ளும்படி செய்தல் போன்ற செயல்களில் மாணவர்களை

குறிப்பு

ஈடுபடுத்தினாலும் அச்செயல் மிகச்சிறிய அளவே கவனத்தை நிலைநிறுத்தும்.

வகுப்பில் பயன்படுத்துகின்ற ஒவ்வொரு செயலும் மாணவர் மனத்தில் ஒவ்வொருவித விளைவினை ஏற்படுத்தும். ஒரு பாடப் பகுதியினைக் கற்பிக்கப் பயன்படுத்தும் செயல் ஒரு சில மாணவருக்கு எதிர்பார்க்கும் பலனை அளிக்கலாம். அதே செயல் மற்றொரு சாராருக்கு எவ்விதப் பயனும் அளிக்காமல் போகலாம். ஆகவே பாடம் கற்பித்தலுக்கு திட்டமிடும் போது பலவிதச் செயல்களைத் திட்டமிட்டால் கற்றல் எல்லா மாணவரிடத்தும் இயல்பாக நிகழும்.

### 4.6.4. பாடத் திட்டம் வடிவமைத்தல்

பாடப் பொருளுக்கு ஏற்பவும், மாணவர்களின் தரம், வயது, வகுப்பு, மனவளர்ச்சி, உணர்வு அடிப்படையிலும் வகுப்பறைச் செயல்களை அமைக்கும் திட்டமே பாடத்திட்டமாகும்.

**கார்டர் வி.குட்**: "கற்பிப்பதற்கு முக்கியமான கருத்துக்களை ஓர் ஒழுங்கு முறைப்படி அமைக்கும் திட்டமாகும். இதில் கற்பித்தல் நோக்கங்கள், படிக்க வேண்டிய மேற்கோள் நூல்கள் மற்றும் ஒப்படைப்புகள், வினாக்கள் போன்றவைகள் அடங்கும்."

### 4.6.5. பாடத்திட்டமிடுதலில் அடங்கியுள்ள கூறுகள்

ஒரு பாடம் கற்பிப்புத்திட்டம் என்பது கீழ்க்காணும் கூறுகளைக் கொண்டு அமைக்கப்பட வேண்டும்.

- ✓ ஆசிரியரின் செயல்கள்
- ✓ ஆசிரியரின் பாடப்புலமை
- ✓ மாணவர்களைப் பற்றி ஆசிரியர் அறிந்தவை
- ✓ ஆசிரியர் அறிந்துள்ள கல்வி நோக்கங்கள்
- ✓ கற்பிக்க வேண்டிய பாடப்பொருள்
- ✓ கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்துதல்.

### 4.6.6. பாடத்திட்டம் தயாரித்தலின் இன்றியமையாமை

மாணவர் செயலில், விரும்பத்தக்க மாற்றத்தைக் கொண்டு வரப் பாடத்திட்டம் உதவுகிறது. கற்றல் அனுபவங்களை வரையறுக்கப் பாடத்திட்டம் உதவுகிறது. இது சிறப்பு கற்பித்தலின் நோக்கங்களால் நடைபெறுகிறது.

கல்விக் குறிக்கோள்களும் நோக்கங்களும் தெளிவாகவும், விரிவாகவும் திட்டமிடப்படுகின்றன. காரணகாரிய முறைப்படி கற்றல் - கற்பித்தல் நடைபெற பாடத்திட்டம் இன்றியமையாததாகிறது.

1. கற்பித்தலின் குறிக்கோள்கள், பாடப்பொருள் முறைகள் மாணவர்களின் அறிவு நிலைக்கேற்ப கருத்துகள்

குறிப்பு

ஆகியவற்றை முறைப்படித் திட்டமிட பாடக்குறிப்பு இன்றியமையாதது.

2. பாடக்குறிப்பு வகுப்பறையில் ஆசிரியர் செயல்பட வேண்டிய வழிமுறைகளைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. கற்பித்தல் நிலைகளில் முன்னேற்றம் ஏற்பட வழி செய்வதும் பாடக்குறிப்பாகும்.
3. பாடப்பொருள்களையும், செயல்களையும் நெறிப்படுத்த பாடக்குறிப்பு வகை செய்வதோடு ஆசிரியர் முறையாகவும் ஒழுங்காகவும் கற்பிக்க உதவுகிறது.
4. கற்பிக்கும் பணியில் நன்கு சிந்தித்துச் செயலாற்ற காரணமாக இருப்பது பாடக்குறிப்பாகும்.
5. அறிவுப்பாதையில் தொடர்ந்து பணி செய்ய ஆசிரியருக்கு வழிகாட்டுகிறது.
6. கற்றல் எவ்வாறு நடைபெற வேண்டுமென்பதைப் பாடக்குறிப்பு முன்கூட்டியேகண்டறிவதால் ஆசிரியர் தன்னம்பிக்கையுடனும், உறுதியுடனும் செயல்பட வாய்ப்புக் கிடைக்கின்றது.
7. கூறியது கூறல் என்னும் குற்றம் தவிர்க்க வழி செய்கிறது.
8. பாடக்குறிப்பு நாடக ஒத்திசைப் போன்றதாகும்

### 4.6.7. பாடத்திட்டம் தயாரித்தலின் நன்மைகள்

1. வகுப்பறை கற்பிக்கும் முறைகள், கற்பித்தல் உத்திகள், காட்சி கேள்வி துணைக் கருவிகள் பற்றித் தெளிவாக அறிந்து கொள்ள முடிகின்றது.
2. கற்றல் விரைவாகவும், அதே நேரம் மகிழ்ச்சியாகவும் நடைபெறுவதால் நேரம் வீணாவதில்லை.
3. கற்பிக்கும் முறைகளுக்குத் தேவையான துணைக் கருவிகளை தேர்ந்தெடுக்க முடியும்.
4. கற்பித்தல் முறை விலகாமல் குறிப்பிட்ட எல்லையை சென்றடைய உதவுகிறது.
5. மாணவர்களின் தேவை சூழலுக்கு ஏற்ப கற்பித்தல் முறைகளை அமைத்துக் கொள்ளலாம்.
6. வகுப்பறையில் தேவையற்ற செயல்கள் மூலம் ஏற்படும் குழப்பங்கள் நீக்கப்பட்டு தெளிவான முறையில் இலக்கை அடைய பாடத்திட்டம் பயன்படுகிறது.

குறிப்பு

### 4.6.8. பாடத்திட்டம் தயாரித்தலின் தீமைகள்

1. பாடத்திட்டம் தயார்செய்த முறையிலேயே கற்பிக்க வேண்டும் என்ற எண்ணம் ஆசிரியரின் கற்பித்தல் ஓட்டத்தைத் தடை செய்யலாம்
2. வகுப்புச் செயல்கள் அனைத்தும் பாடத்திட்டத்தில் சுட்டினால் அது சில நேரங்களில் குழப்பத்தை ஏற்படுத்தலாம்.
3. பாடத்திட்டத்தை மேம்போக்காக எழுதப்படும் வாய்ப்புண்டு.
4. வகுப்புச் சூழ்நிலையில் கற்பிக்கும் பொழுது சில மாற்றங்கள் தேவைப்படலாம்.
5. முன்னதாக திட்டமிட்டுத் தயாரித்து விட்டோம் என்பதற்காக சிலர் அதனையே பின்பற்றுவர்.

### 4.6.9. ஆசிரியர் மனதிற் கொள்ளத்தக்கன

ஒவ்வொருவரும் பாடத்தினைக் தயாரிக்கும் பொழுது மனதில் கொள்ள வேண்டியவை பின்வருமாறு,

- பாடத்திட்டத்தை எழுதுவதற்கு முன் கற்பிக்க வேண்டிய பாடப்பகுதியைப் பலமுறை படித்து, ஐயந்திரிபற பாடப்பொருளைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். வகுப்பிலுள்ள மீத்திறமிக்க மாணவர்கள், சராசரி மாணவர்கள், சராசரிக்குக் கீழுள்ள மாணவர்கள் ஆகியோரை அறிந்து அவர்களுக்கேற்ற கற்பித்தல் முறைகளைத் திட்டமிட வேண்டும்.,
- மாணவர்களின் குடும்பச் சூழல், அறிவுநிலை, ஆர்வங்கள், நாட்டங்கள் ஆகியவற்றையும் ஆசிரியர் நன்கறிந்து வைத்துக் கொண்டு அதற்கேற்றவாறு பாடத்திட்டத்தைத் திட்டமிட வேண்டும்.
- கற்பிக்கும் பாடப்பொருளுக்கேற்ற புதிய கற்பித்தல் முறைகளை ஆசிரியர் மேற்கொள்ள வேண்டும்.
- கற்பித்தலுக்குரிய பொது நோக்கங்கள், சிறப்பு நோக்கங்கள் ஆகியவற்றை முடிவு செய்து கொள்ள வேண்டும்.
- பயன்படுத்த வேண்டிய துணைக்கருவிகளும் அவற்றை பயன்படுத்த வேண்டிய சூழ்நிலைகளும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.
- பாடக்கருத்துக்கள், கற்றல் செயல் முறைகள், மதிப்பிடல் கருவிகளும், அதன் முறைகளும் தெளிவாகக் குறிக்கப்பட்டிருக்க வேண்டும்.
- மீள்பார்வையும் ஒப்படைப்பும் பாடத்திட்டத்தின் இறுதியில் எழுதப்பட வேண்டும்.

**குறிப்பு**

- கரும்பலகைப் பயன்பாட்டை சிறப்பானதாக்க எத்தகைய பாடக்கூறுகளைக் கரும்பலகையில் எழுதவேண்டும் என்பதையும் ஆசிரியர் முன் கூட்டியே திட்டமிட வேண்டும்.
- ஆசிரியர் மாணவர் இடைவினை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும் தீர்மானிக்க வேண்டும்.
- எங்கெங்கு மாணவர்களைப் பேச அனுமதிக்கலாம் அவர்களுடைய தூண்டல்களுக்கு எவ்வாறு துலங்ககளை வெளிப்படுத்த வேண்டும் என்பதையும் முடிவு செய்ய வேண்டும்.
- ஆர்வமூட்டல், பாடவளர்ச்சி ஆகிய ஒவ்வொரு நிலைகளிலும் ஆசிரியர் சிறப்பாகச் செயல்பட வேண்டிய செயல்களைத் திட்டமிட வேண்டும்.
- தொகுத்துக் கூறுதலைச் செய்வதற்கு உரிய உகந்த எளிமையான வினாக்களைச் சிந்தித்து எழுத வேண்டும்.
- பாடப்பொருளுக்குக் கால அடிப்படையில் முக்கியத்துவம் தர வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து அதற்கேற்பக் கவனம் செலுத்த வேண்டும். தன்னம்பிக்கையை வளர்த்து ஆசிரியர் திறமையாகக் கற்பிக்க உதவும். பாடக்குறிப்புகளைப் பாடத்திட்டம் தயாரித்த பிறகே எழுதுதல் வேண்டும். பாடக்குறிப்பிற்கு முதல்படி பாடத்திட்டம்.
- ஆண்டின் எவ்வெவ் பகுதிகளில் என்னென்ன கற்பித்தல் வேண்டும்? எவ்வாறு கற்பித்தல் வேண்டும்? என்று முன் கூட்டியே திட்டமிடுவதால் பள்ளிவேலை எவ்வித இடையூறுமின்றி நடைபெறும்.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதுக.**
**ஆ.உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு ஆராய்க.**
13. பாடத்திட்டம் எதற்கு இன்றியமையாததாகிறது.?
……………………………………………………………………………………
……………………………………………………………………………………
14.பாடத்திட்டம் தயாரித்தலின் நன்மைகள் யாவை?
……………………………………………………………………………………
……………………………………………………………………………………

### 4.6.10. பாடத்திட்டம் எழுதும் முறை

**பொதுக் கற்பித்தல் நோக்கங்கள் (General Instructional Objectives)**

இவை கல்வியின் நோக்கங்களாகும். பொது நோக்கங்கள் என்பது குறிப்பிட்ட நடத்தையைச் சாராதவையாகவும், பொதுவானவையாகவும், பரந்துபட்ட தொகுப்பாகவும் உள்ளன. பொதுநோக்கங்கள் ஆசிரியரின்

செயல்பாடுகளுக்குத் துணை செய்வதில்லை. இவற்றின்மூலம் மாணவர்களின் கற்றல் அடைவினை அளந்தறிய முடியாது.

**பொது நோக்கங்களின் பண்புகள்**

1. பொது நோக்கங்கள் ஆசிரியரின் கருத்துக்களாய் அமையாது, மாணவர்களின் உளச் செயல்பாட்டின் வெளிப்பாடாய் அமைய வேண்டும்.
2. பொது நோக்கங்கள் வகுப்பிலுள்ள ஒவ்வொரு மாணவனின் கற்றல் நடத்தையின் வெளிப்பாடாகும். எனவே பொது நோக்கங்கள் தனி மாணவனுக்குரிய செயல்சாரா வினைச் சொல்லைக் கொண்டு அமைய வேண்டும்.
3. பொது நோக்கங்கள் பாடப் பொருள் பகுதியையும் சுட்ட வேண்டும்.
4. பொதுக் கற்பித்தல் நோக்கங்கள் ஒரே நோக்கத்தின் வெளிப்பாடாய் அமைய வேண்டும்.
5. மாணவர்களின் தரநிலையைக் கவனத்தில் கொண்டு பொது நோக்கங்கள் அவற்றோடு தொடர்புடையதாய் எழுதப்பட வேண்டும்.
6. பொது நோக்கங்களைக் கண்ணால் கண்டறியவும், அளக்கவும் முடியாது.

**பொதுக் கற்பித்தல் நோக்கங்களை எழுதும் முறை**

மாணவர்களின் அறிவுசார்களம், உளசார்களம், உள - இயக்கசார் களத்தின் அடிப்படையில் பொது நோக்கங்களாகப் பின்வருவனவற்றைச் சுட்டலாம்.

1. அறிந்து கொள்ளுதல்
2. புரிந்து கொள்ளுதல்
3. பயன்படுத்துதல்
4. திறனடைதல்
5. ஆர்வமடைதல்
6. பாராட்டுதல்
7. மனப்பாங்கு பெறுதல்
8. ஆளுமைப் பண்புகளை வளர்த்தல்

மேலே கூறிய பொதுக் கற்பித்தல் நோக்கங்களை எழுதும் பொழுது ஒரு செயலைச் சாராத வினைச் சொல்லினால், பாடப் பொருளை எழுத வேண்டும்.

**எழுத வேண்டிய சரியான முறை**

❖ சங்க இலக்கியங்களைப் பற்றி அறிந்து கொள்ளுதல்.

❖ சங்க இலக்கியங்களின் சிறப்புகளைப் புரிந்து கொள்ளுதல்.

❖ சங்க இலக்கியங்கள் சுட்டும் ஒழுக்க நெறிகளை வாழ்க்கையில் பயன்படுத்துதல்.

மாணவனின் கற்றல் அடைவு நோக்கிலேயே பொது நோக்கங்கள் எழுதப்பட வேண்டும்.

**சிறப்புக் கற்பித்தல் நோக்கங்கள்**

சிறப்பு நோக்கங்கள் என்பவை ஒரு பாட வேளையில் ஆசிரியர் கற்பிக்கும் பொழுது, மாணவனின் கற்றல் நடத்தையில் மாற்றத்தை உண்டாக்கக் கூடிய விரும்பத் தகுந்த, எதிர்பார்க்கப்படும் நடத்தை மாற்றங்களாகும். இவற்றைக் கண்ணால் காணலாம். அளந்தறியலாம். கற்பவரின் கற்றலினை அவருடைய செயல்பாடுகள் மூலம் அறியலாம். ஒரு சிறப்பு நோக்கம் மாணவன் மேற்கொள்ள வேண்டிய செயலையும், செயலை மேற்கொள்ளுவதற்குரிய நிபந்தனையையும், அச்செயலை அளந்தறிவதையும் கொண்டு அமைய வேண்டும். ஒவ்வொரு பொது நோக்கமும் அவற்றிற்குரிய நிபந்தனையையும், அச்செயலை அளந்தறிவதையும் கொண்டு அமைய வேண்டும். ஒவ்வொரு பொது நோக்கமும் அவற்றிற்குரிய பல சிறப்பு நோக்கங்களைக் கொண்டுள்ளன. எனவே அவற்றையே எழுத வேண்டும்.

**சிறப்பு நோக்கங்களின் பண்புகள்**

சிறப்பு நோக்கங்கள் பின்வரும் பண்புகளைக் கொண்டமைகின்றன.

❖ மாணவர்களின் கற்றல் நடத்தை மாற்றத்தைக் கண்டறிய உதவுதல் வேண்டும்.
❖ மாணவர்களின் கற்றல் அளவினை அளவிடல்.
❖ கற்பித்தல் முறைகளைத் தேர்ந்தெடுக்க ஆசிரியருக்கு உதவுதல் வேண்டும்.
❖ பாடப் பொருளை வரிசைக்கிரமாக அமைத்து, அதற்கேற்ப கற்பித்தலை மேற்கொள்ளத் தூண்ட வேண்டும்.
❖ கற்றல் திறன்களை மாணவர்களிடத்து ஏற்படுத்துதல்.

**கற்பித்தல் சிறப்பு நோக்கங்களை எழுதும் முறை**

1. கற்பித்தல் சிறப்பு நோக்கங்களை எழுதும் பொழுது ஒரு நோக்கம் ஒரு நடத்தையை மட்டும் சுட்ட வேண்டும்.

கற்பித்தல் சிறப்பு நோக்கங்கள்: மாணவன்

❖ சுதந்திரப் பொங்கல் பாடலைச் சீர்பிரித்துப் படித்தல்.
❖ சுதந்திரப் பொங்கல் பாடல் கருத்தினை விளக்குதல்.

2. மாணவனின் கற்றல் நடத்தையையும், அதனை உண்டாக்கும் பாடப் பொருளினையும் கொண்டு சிறப்பு நோக்கங்கள் அமைய வேண்டும்.

**குறிப்பு**

- ❖ மழைநீர் சேமிப்புப் பாடத்தின் மையக் கருத்தினை விவரித்தல்.
- ❖ அடுக்குத் தொடரையும், இரட்டைக் கிளவியையும் வேறுபடுத்துதல்.

3. சிறப்பு நோக்கங்கள் ஆசிரியரின் கற்பித்தலைச் சுட்டுவதாக அமையக் கூடாது. இது **தவறான முறை**.

- ❖ பண்புப் பெயரை ஆசிரியர் விளக்கினார்.

**எழுத வேண்டிய முறை**

கற்பித்தல் சிறப்பு நோக்கங்கள்: மாணவன்

- ❖ புணர்ச்சியைப் பற்றி மீட்டறிதல்.
- ❖ இயல்புப் புணர்ச்சிக்கு எடுத்துக்காட்டு தருதல்
- ❖ மாணவன் வழிபாட்டுப்பாடலை இசையுடன் பாடுதல்.
- ❖ மாணவன் வழிபாட்டின் சிறப்பை புரிந்துகொள்ளுதல்.

## 4.6.11. மாதிரிப் பாடத்திட்டம்

### பாடத்திட்டம் - உரைநடை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. பயிற்சி ஆசிரியர் | : | | 6. நாள் | : | |
| 2. வழிகாட்டி ஆசிரியர் | : | | 7 நேரம் | : | |
| 3. பள்ளியின் பெயர் | : | | 8. வகுப்பு | : | |
| 4. பாடம் | : | | 9. உள்ளோர் | : | |
| 5. தலைப்பு | : | | 10. உரியோர் | : | |

### I. கற்பித்தல் பொது நோக்கங்கள்

1. **அறிந்து கொள்ளுதல்** : தமிழின் சிறப்புகளை அறிந்து கொள்ளுதல்.
2. **புரிந்து கொள்ளுதல்** : தமிழறிஞர்களின் தமிழ்த்தொண்டினை புரிந்து கொள்ளுதல்.
3. **வெளிப்படுத்துதல்** : தமிழறிஞர்களின் தமிழ்ப்பற்றினை வெளிப்படுத்துதல்.
4. **பாராட்டுதல்** : 'குணங்குடி மஸ்தான் சாகிபு, ஆறுமுக நாவலரைப் பாராட்டல்'

## II. சிறப்பு நோக்கங்கள்

| | |
|---|---|
| 1. **ஆர்வமூட்டல்** | : தமிழின் சிறப்பினைக் கூறி ஆர்வமூட்டல் |
| 2. **மீட்டறிதல்** | : வீரமாமுனிவர் பற்றி மீட்டறிதல் |
| 3. **ஆசிரியர் குறிப்பை வழங்குதல்** | : குணங்குடி மஸ்தான் சாகிபு பற்றி அறிதல் |
| 4. **படைப்புகளை வரிசைப் படுத்துதல்** | : குணங்குடி மஸ்தான் சாகிபு படைப்புகளை வரிசைப்படுத்துதல் |
| 5. **உணர்வுடன் வெளியிடல்** | : நான்மணிமாலை வரிகளை உணர்வுடன் வெளியிடல் |
| 6. **விரித்துரைத்தல்** | : ஆறுமுக நாவலரைப் பற்றி விரித்துரைத்தல் |
| 7. **உற்றுக்கேட்டல்** | : ஆறுமுக நாவலர் பதிப்பித்த நூல்களை உற்றுக்கேட்டல் |
| 8. **பாராட்டல்** | : சி.வை. தாமோதரனார் ஆறுமுக நாவலரை புகழ்ந்துரைப்பதைக் கூறி பாராட்டல் |
| 9. **மையக்கருத்தைக் கூறி விளக்குதல்** | : பாடத்தின் மையக்கருத்தைக் கூறி விளக்குதல் |
| 10. **ஏற்ற விரைவுடன் படித்தல்** | : பாடப்பகுதியை ஏற்ற விரைவுடன் படித்தல் |

## III. துணைக் கருவிகள்

வரைபட அட்டை, சொல்லட்டை, மின்னட்டை

## V. பாடவளர்ச்சி

| பாடப்பொருள்/ படிநிலைகள் | நோக்கக் கூறுகள் | கற்றல் அனுபவம் | மதிப்பீடு |
|---|---|---|---|
| ஆர்வமூட்டல் | நினைவு கூர்தல் | “இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்” என்கிறது தமிழ்விடு தூது<br>“எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெருந்தமிழணங்கே”என்று தமிழ்த்தாயை வணங்குகிறார் மனேகண்மணியம் பெ.சுந்தரனார். இவர்கள் போல் எண்ணற்ற தமிழறிஞர்கள் தமிழுக்கு தொண்டாற்றி வருவதால் தான் நம் தாய்மொழி அன்றலர்ந்த மலராய் எப்போதும் தமிழ்மணம் பரப்பிவருகிறது. | |
| வீரமாமுனிவர் பற்றிய குறிப்பு | வீரமாமுனிவர் பற்றி மீட்டறிதல் | இத்தாலி நாட்டில் பிறந்து முப்பதாம் அகவையில் தமிழகத்திற்கு வந்து தமிழைக் கற்றுத் தேம்பாவணி, திருக்காவலூர்க் கலம்பகம், கித்தேரியம்மாள் அம்மானை, தொன்னூல் விளக்கம் போன்ற எண்ணற்ற படைப்புகளால் தமிழ்த்தாயைப் பெருமைப்படுத்திய வீரமாமுனிவரைப் பற்றி அறிதல். | வீரமாமுனிவர் பற்றிக்கூறுக. |
| . ஆசிரியர் குறிப்பை வழங்குதல் | குணங்குடி மஸ்தான் சாகிபு பற்றி அறிதல் | “மாதவஞ்சேர் மேலோர் வழுத்தும் குணங்குடியான்” என்று புலவர் பெருமக்களால் புகழப்பட்டவர் குணங்குடி மஸ்தான் சாகிபு. இவரின் இயற்பெயர் சுல்தான் அப்துல் காதிறு. இவர் தம் இளவயதிலேயே முற்றும் துறந்தவராய் வாழ்ந்தார். சதுரகிரி, புறாமலை, நாகமலை | குணங்குடி மஸ்தான் சாகிபின் |

| | | | |
|---|---|---|---|
| | | முதலிய மலைப்பகுதிகளுக்குச் சென்று தனித்திருந்து ஞானம் பெற்றார். | இயற்பெயர் என்ன? |
| படைப்புகளை வரிசைப்படுத் துதல் | படைப்புகளை வரிசைப்படுத்த ஆர்வமுடன் கேட்டறிதல். | தாயுமானவரின் பராபரக் கண்ணியைப் போலவே ஓசை நயமிக்க இசுலாமியப் பாடல்களை இயற்றி அருளினார். பராபரக் கண்ணி, எக்காலக் கண்ணி, மனோன்மணிக் கண்ணி, நந்தீசுவரக் கண்ணி முதலியன இவர் பாடிய வேறுசில கண்ணிகள் ஆகும். இவர் குருநிலை, காட்சிநிலை, தியானநிலை, சமாதிநிலை எனப் பொருள் தரும்வகையில் இயற்றிய பாடல்களை ஆசிரியர் வரிசைப்படுத்துகிறார். | குணங்குடி மஸ்தான் சாகிபின் படைப்புகள் யாவை? |
| உணர்வுடன் வெளியிடல் | நான்மணிமாலை வரிகளை உணர்வுடன் வெளியிட, ஆர்வமுடன் கவனித்தல். | திருத்தணிச் சரவணப்பெருமான் இவர் மீது கொண்ட பற்றினால் நான்மணிமாலை பாடியுள்ளார். ‘மடல் சூழ்புவியில் உளத்திருளை கருணை ஒளியினாற் களைந்து விடல் சூழ்பவரின் குணங்குடியின் மிக்கோன் எனக்கு ஓர் தடையுளதோ? எனக் கேட்கின்றனர். | திருத்தணிச் சரவணப்பெரும ான் பாடிய நூல் எது? |
| விரித்துரைத்த ல் | ஆறுமுகநாவலரை ப் பற்றி விரிவாக அறிந்து கொளளுதல். | யாழ்ப்பாணம் நல்லூரில் பிறந்தவர் ஆறுமுகநாவலர். இவர் இளமையிலேயே சைவ சிந்தாந்த நூல்களையும் திருமுறைகளையும் கற்றவர். தமிழ்ப்புலமையும், ஆங்கிலப் புலமையும் ஒருசேரக் கைவரப்பெற்றவர். திருவாடுதுறை ஆதினத்தார் இவருக்கு ‘நாவலர்’பட்டம் சூட்டி சிறப்பித்தார். இவரை ‘வசனநடை கைவந்த வல்லாளர்’ எனப் பரிதிமாற்கலைஞர் பாராட்டினார். | ஆறுமுகநாவல ரை ‘வசனநடை கைவந்த வல்லாளர்’எனப் பாராட்டியவர் யார்? |
| ஆறுமுகநாவ | ஆறுமுகநாவலர் | ஆறுமுகநாவலர் சென்னையில் அச்சுக்கூடம் அமைத்து | ஆறுமுகநாவலர் |

| | | | |
|---|---|---|---|
| லா் பதிப்பித்த நூல்களை வழங்குதல். | பதிப்பித்த நூல்களை உற்றுக்கேட்டல். | பாரதம், பெரியபுராணம், கந்தபுராணம், திருக்குறள், பரிமேலழகா் உரை, இலக்கண வினா விடை, இலக்கணச்சூறாவளி உள்ளிட்ட எண்ணற்ற நாவல்களைப் பதிப்பித்து வெளியிட்டாா். | பதிப்பித்த நூல்கள் யாவை? |
| பாராட்டுதல் | சி.வை.தாமோதரனா் ஆறுமுகநாவலரை புகழ்ந்துரைப்பதை நன்கு கவனித்தல். | *'நல்லைநகா் ஆறுமுக நாவலா் பிறந்திலரேற் சொல்லுதமி ழெங்கே சுருதியெங்கே எல்லவரும் எத்துபுரா ணாகமங்கள் எங்கேபிர சங்கமெங்கே அந்தனறி வெங்கே அறை'* என்று தமிழறிஞா் சி.வை.தாமோதரனாா் ஆறுமுகநாவலரைப் புகழ்ந்து உரைக்கிறாா். | சி.வை.தாமோதரனா் ஆறுமுகநாவலரை எவ்வாறு புகழ்ந்து உரைக்கிறாா்?. |
| மையக்கருத்தைக் கூறி விளக்குதல் | மையக்கருத்தை கேட்டு எழுச்சியுறுதல். | தமிழின் தொன்மையும், தூய்மையும், வன்மையும், வனப்பும் தமிழா்களை மட்டுமின்றி உலகளாவிய அளவில் வெளிநாட்டினரையும் ஈா்த்துள்ளது. உலகம் யாவையும் தாமுளவாக்கி தம் கலைகளை, சிந்தனைகளை வோ்விட்டு பயிா் வளா்த்த செந்தமிழ் மரபினா் தமிழுக்குத் தொண்டாற்றுகின்றனா். | தமிழ் வளா்ச்சிக்குத் தொண்டாற்றியவா்கள் யாவா்? |
| ஏற்றவிரைவுடன் படிக்கக் கூறுதல். | பாடப்பகுதியை ஏற்றவிரைவுடன் படித்தல். | பாடப்பகுதியை ஏற்ற விரைவுடன் படிக்கின்றனா். | |

**தொகுத்துக் கூறல்:**

'மாதவஞ்சேர் மேலோர் வழுத்தும் குணங்குடியான்' என்று புகழப்பட்டவர் குணங்குடி மஸ்தான் சாகிபு, தாயுமானவரின் பராபரக் கண்ணியைப் போலவே ஓசை நயமிக்க இசுலாமியப் பாடல்களைப் பாடியுள்ளார். யாழ்ப்பாணம் நல்லூரில் பிறந்த ஆறுமுக நாவலரை 'வசனநடை கைவந்த வல்லாளர்' என பரிதிமாற்கலைஞர் பாராட்டுகிறார். பாரதம், பெரியபுராணம், கந்தபுராணம், இலக்கணக்கொத்து, இலக்கணச்சூறாவளி உள்ளிட்ட எண்ணற்ற நூல்களை ஆறுமுக நாவலர் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

**மீள்பார்வை:**

1. குணங்குடி மஸ்தான் சாகிபுவின் இயற்பெயர் யாது?
2. பரிதிமாற் கலைஞர் ஆறுமுக நாவலரை எவ்வாறு பாராட்டினார்?
3. ஆறுமுக நாவலர் பதிப்பித்த நூல்கள் யாவை?

**தொடர்பணி:**

குணங்குடி மஸ்தான் சாகிபு மற்றும் ஆறுமுக நாவலரைப் பற்றி படித்து வரக் கூறல்.

**பயிற்சி ஆசிரியர் கையொப்பம்** **வழிகாட்டி ஆசிரியர் கையொப்பம்**

**பேராசிரியர் கையொப்பம்**

## பாடத்திட்டம் - செய்யுள்

1. பயிற்சி ஆசிரியர் :
2. வழிகாட்டி ஆசிரியர் :
3. பள்ளியின் பெயர் :
4. பாடம் :
5. தலைப்பு :
6. நாள் :
7. நேரம் :
8. வகுப்பு :
9. உள்ளோர் :
10. உரியோர் :

## II. கற்பித்தல் பொது நோக்கங்கள்

**1.அறிந்து கொள்ளுதல்** : புறநானூறு பற்றி அறிந்து கொள்ளுதல்

**2.புரிந்து கொள்ளுதல்** : புறநானூற்றின் சிறப்புகளைப் புரிந்து கொள்ளுதல்.

**3.பயன்படுத்துதல்** : புறநானூற்றில் செய்யுள் கருத்துக்களை வாழ்வில் பயன்படுத்துதல்

**4.பாராட்டுதல்** : புறநானூற்றின் மூலம் பிறர்க்கு உதவும் பாங்கினை பாரட்டல்

## II. கற்பித்தலின் சிறப்பு நோக்கங்கள்

**1.நினைவு கூர்தல்** : புறநானூறு பெயர் பற்றி நினைவு கூர்தல்.

**2.மீட்டறிதல்** : எட்டுத்தொகை நூல்கள் பற்றி மாணவர்களிடையே மீட்டறியச் செய்தல்.

**3.காரணங்காணல்** : 'புறநானூறு'என பெயர் பெற்றமைக்கான காரணங்காணல்.

**4. வேறுபடுத்திக்காட்டல்** : அகம்,புறம் ஆகிய இரண்டையும் வேறுபடுத்திக்காட்டல்.

**5.உற்றுநோக்கல்** : செய்யுள் வரிகளை வரைபடம் மூலம் உற்றுநோக்கல்.

6.**ஏற்றவிரைவுடன் படித்தல்** :'புறநானூற்று'ப்பாடலை புதிய மெட்டுடன் ஏற்றவிரைவுடன் படித்தல்.

**7. சொற்பொருள் கூறுதல்** : கடினச் சொற்களுக்கு எளிமையாகப் பொருள் கூறுதல்.

**8.மையக்கருத்தைக் கண்டறிதல்** : புறநானூற்று செய்யுளின் மையக்கருத்தைக் கண்டறிதல்.

**9.விரித்துரைத்தல்** :செய்யுளின் கருத்துக்களை விரிவாக எடுத்துரைத்தல்.

**10. தொடர்புகாணல்** : அகநானூறு, புறநானூறு செய்யுளை தொடர்புபடுத்துதல்.

**11.உற்றுகேட்டல்** : புறநானூறு செய்யுளை வாசிக்க மாணவருக்குக் கற்றுக்கொடுத்தல்.

**12. ஒலிநயம் உணர்தல்** : எதுகை, மோனை நயம் பற்றி அறிதல்.

**13.உயரிய மனப்பான்மை பெறதல்** : மாணவரிடையே உலகியல் உண்மையை பற்றி உயரிய மனப்பான்மை பெறல்.

## III. துணைக் கருவிகள்

வரைபடம், சுழல் அட்டை, பொருத்து அட்டை, மின்னட்டை

## V. பாடவளர்ச்சி

| பாடப்பொருள்/ படிநிலைகள் | நோக்கக் கூறுகள் | கற்றல் அனுபவம் | மதிப்பீடு |
|---|---|---|---|
| ஆர்வமூட்டல் | **நினைவு கூர்தல்** புறநானூறு பெயர் பற்றி மாணவரை நினைவு கூறச் செய்தல். | புறநானூறு = புறம் + நான்கு + நூறு எனப் பெயர் பெற்றது. புறம் என்பது ஒருவரின் வீரம், கொடை கல்வி சிறப்புக்களை குறிக்கும் என்பதனை நினைவு கூர்தல். | |
| எட்டுத்தொகை நூல்களைப் பற்றி வழங்குதல் | எட்டுத்தொகை நூல்களை **மீட்டறிதல்.** | எட்டுத்தொகை நூல்களான நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகம், புறம் என எட்டு நூற்களை கூறல். | எட்டுத்தொகை நூல்கள் யாவை? |
| புறம்சார்ந்த செய்திகளை வழங்கி காரணங்காணச் செய்தல் | புறம் சார்ந்த செய்திகளை காரணங்கண்டு அறிதல். | புறம் என்பது பண்டையத் தமிழ் மன்னர்களின் வீரம், கொடைச்சிறப்பு, ஆட்சிச்சிறப்பு, கல்வி முதலியவை என்பதை அறியச் செய்தல். | புறம் என்பது யாது? |
| வேறுபடுத்திக்காட்டல் | அகம், புறம் இரண்டிற்குமுள்ள வேறுபாட்டினை அறிதல். | அகம் என்பது உள்ளத்தில் எழும் கருத்து பற்றி அறிதல். புறம் என்பது புறத்தே நிகழும் போர், வீரம், கல்வி, கொடை ஆகியவற்றை அறிதல் | அகம் சார்ந்த கருத்தினை விளக்குக. |

| | | | |
|---|---|---|---|
| | | என்பதை வேறுபடுத்திக் காட்டல். | |
| செய்யுளின் பொருளை வழங்குதல் | புறநானூற்று செய்யுள் தொடர்பாக பயன்படுத்தும் துணைக்கருவிகளை உற்றுநோக்கல். | செய்யுள் வரிகளின் பொருளை மாணவர்கள் எளிதில் அறிதல். துணைக்கருவிகளை உற்றுநோக்கல். | ஈதல் பொருள் கூறுக. |
| தொடர்புபடுத்திக் காட்டல். | அகநானூறு மற்றும் புறநானூறு நூல்களைத் தொடர்புகாணல் | புறநானூற்று செய்யுளை மற்றொரு செய்யுளுடன் தொடர்புபடுத்திக் காட்டல். | எட்டுத்தொகை யில் அகம் சார்ந்த நூல்கள் யாவை? |
| செய்யுள் வரிகளை பொருள் உணரும் வகையில் வாசித்தல் | புறநானூறு மூலம் அறியலாகும் செய்தியை உற்றுக்கேட்டல் மூலம் அறிதல். | செய்யுளைக் கேட்பதன் மூலம் வாசிப்பும், உச்சரிப்பும் மேம்படுகிறது. | புறநானூறு பற்றி நீவீர் அறிவது யாது? |
| ஏற்றவிரைவுடன் படித்தல் | பாடல்களைப் புதிய மெட்டுடன் ஏற்ற விரைவுடன் படித்தல். | “தென்கடல் வளாகம் பொதுமை இன்றி” என்ற செய்யுளினை ஏற்றத் தாழ்வுடன் படித்துக் காட்டல். | |
| சொற்பொருள் கூறுதல் | செய்யுளில் உள்ள கடின சொற்களுக்கு மிக எளிமையாக பொருள் அறிந்து கொள்ளுதல். | நிழற்றிய – (நிழல்) செய்த போன்ற கடின சொற்களுக்கு பொருள் கூறி அறியச் செய்தல். | நிழற்றிய - இதன் பொருள் கூறுக |
| | | ஆட்சி செய்யும் மன்னனுக்கும் | இச்செய்யுளின் |

| | | | |
|---|---|---|---|
| மையக்கருத்தைக் கண்டுபிடித்தல் | உலகியல் உண்மை பற்றி மாணவரை அறிய செய்தல். | கல்வியறிவற்ற ஒருவனுக்கும் உண்ணத் தேவைப்படும் பொருள் **நாழியளவே**. மற்றவருக்கு கொடுத்தல் பற்றி விளக்குகிறது. | மையக்கருத்தைத் தக் கூறுக. |
| விரித்துரைத்தல் | ஒருவன் தனது செல்வத்தால் பெறும்பயன் அதனை மற்றவர்க்குக் கொடுத்தலாகும். அவ்வாறன்றித் தானே நுகர்வோம் என எண்ணினால் பலவற்றை இழக்கநேரிடும் என்பதை அறிதல். | உலகில் வாழும் மக்களில் அறிவுடையவன் கல்வியறிவற்ற ஒருவனுக்கு உண்ணத் தேவைப்படும் பொருள் நாழியளவே உடுத்தும் உடை மேலாடையும், இரும்பாடையும் இரண்டே. எனவே தானே நுகர்வோம் என எண்ணினால் பலவற்றை இழக்கநேரிடும். | உலகியல் உண்மை யாது? |
| ஒலிநயம் உணர்த்தல் | இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை, முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை பற்றி மாணவர்கள் உணர்தல். | **‘தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி வெண்குடை நிழற்றிய ஒருமை’** தெ**ண்**கடல் வெ**ண்**குடை **உ**ண்பது **உ**டுப்பது எதுகை மோனை பற்றி கூறுதல். | மோனை என்றால் என்ன? |
| உயரிய மனப்பான்மை பெறச்செய்தல். | பிறருக்கு உதவும் உயரிய மனப்பான்மையினை மாணவர்கள் பெறுதல். | கற்றறிவு உள்ளவனுக்கும் கல்லாதவருக்கும் உண்ணத் தேவைப்படும் பொருள் நாழியளவே என்ற உலகியல் உண்மையினை அறிதல். | உலகியல் உண்மை யாது? |

**தொகுத்துக் கூறல்:**

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று ‘புறநானூறு’. புறம் என்பது பண்டையத் தமிழ் மன்னர்களின் கொடை, வீரம், கொடைச்சிறப்பு, ஆட்சிச்சிறப்பு, கல்வி முதலியவை புறம் சார்ந்த செய்திகளாகும். ஆட்சி செய்யும் மன்னனுக்கும் கல்வியறிவற்ற ஒருவனுக்கும் உண்ணத் தேவைப்படும், பொருள் நாழியளவே. மற்றவருக்கு கொடுத்தல் உள்ளிட்ட கருத்துக்களை புறநானூற்றின் வழி விளக்கப்பட்டுள்ளது.

**மீள்பார்வை:**

1. புறம் என்பது யாது?
2. உலகியல் உண்மை யாது?

**வீட்டு வேலைகள்:**

1. புறநானூறு செய்தியினை எழுதிவருக?
2. எட்டுத்தொகை நூல்களை எழுதுக?

**பயிற்சி ஆசிரியர் கையொப்பம்** **வழிகாட்டி ஆசிரியர் கையொப்பம்**

**பேராசிரியர் கையொப்பம்**

குறிப்பு

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு :அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதுக.**
**ஆ.உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு ஆராய்க.**

15. கற்பித்தல் குறிக்கோள்களை நிறைவேற்ற உதவுவது எது?
…………………………………………………………………………………
…………………………………………………………………………………

16. பாடத்திட்டத்தின் இறுதியில் எழுதப்பட வேண்டியவை யாவை ?
…………………………………………………………………………………
…………………………………………………………………………………

## 4.7. தொகுத்துக் காண்போம்

மாணவர்கள் அவர்கள் பயிற்சி பெறும் காலத்தில் தங்களை தயார் செய்வதற்கான முதல்படி உற்றுநோக்கல் ஆகும். உற்றுநோக்கலைப் பதிவு செய்து எந்தக் கருத்து மாணவனைச் சென்றடைய வேண்டுமோ அந்த நோக்கத்தின் அடிப்படையில் பாடங்களைக் கற்பிக்க வேண்டும். மொழிக் கற்பித்தலின் நோக்கங்கள் மற்றும் நோக்கக்கூறுகள் பற்றி தெளிவாக அறிந்து கொண்டோம். புளும் என்பாரின் கற்பித்தல் கோட்பாடுகளை அறிந்து, அதற்கேற்ப எவ்வாறு பாடத்தைத் திட்டமிட வேண்டும் என்பதையும், அலகுத்திட்டம் பற்றியும், பாடத்திட்டம் பற்றியும், பாடம் கற்பித்தலின் படிநிலைகள் பற்றியும் தரப்பட்டுள்ளது. மாதிரி பாடத்திட்டம் ஒன்றும் சிறந்தமுறையில் தரப்பட்டுள்ளது. தயாரிக்கப்பட்ட பாடத்திட்டத்தின் இன்றியமையாமையை மாணவர்கள் தெளிவாகத் தெரிந்து கொண்டு எவற்றையெல்லாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதையும் இப்பாடத்தின் மூலம் அறிந்து கொண்டோம்.

## 4.8. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

1. கற்பித்தல் நுட்பங்களை அறிந்தும் அதன் நிறை குறைகளைத் தெரிந்து கொள்ளும் செயலை உற்று நோக்கல் எனலாம்.
2. பிற பாடங்களோடு தொடர்பு படுத்தி விளக்குதல்.வாழ்க்கை அனுபவங்களோடு ஒப்பிட்டு விளக்குதல
3. மாணவர், பாடப்பொருள், சமுதாயம்
4. மாணவர்கள்.
5. முயற்சியற்ற கவனம், முயற்சிசார் கவனம்
6. கற்பனை
7. அறிவுசார்களம், உணர்வுசார் களம், உள இயக்கசார் களம்
8. மாணவருடைய செயல்படும் நரம்பு மண்டல இயக்கங்களை அடிப்படையாகக் கொண்டது.

குறிப்பு

9. ஓர் அலகு என்பது தொடர்புடைய பாடக் கருத்துக்கள் அமைந்த பெரிய பாடப்பகுதியாகும். ஒரு குறிப்பிட்ட கருத்தினை மையமாகக் கொண்ட பாடத்திட்டங்களின் தொகுப்பாக இது அமையும்.
10. தயாரித்தல், முன்னறிவைச் சோதித்தல், பாடவளர்ச்சி, தொகுத்துக் கூறுதல், மீள்பார்வை, மதிப்பிடுதல்
11. 2700 சொற்கள்
12. வரிசையமைப்பு பாடத்திட்டம்
13. காரணகாரிய முறைப்படி கற்றல் - கற்பித்தல் நடைபெற பாடத்திட்டம் இன்றியமையாததாகிறது
14. 1. வகுப்பறை கற்பிக்கும் முறைகள், கற்பித்தல் உத்திகள், காட்சி கேள்வி துணைக் கருவிகள் பற்றித் தெளிவாக அறிந்து கொள்ள முடிகின்றது.

    2. கற்றல் விரைவாகவும், அதே நேரம் மகிழ்ச்சியாகவும் நடைபெறுவதால் நேரம் வீணாவதில்லை.
15. துணைக்கருவிகள்
16. மீள்பார்வையும், ஒப்படைப்பும்

## 4.9. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

1. புளுமின் கற்பித்தல் கோட்பாடுகளை விரிவாக எழுதுக.
2. பாடத்திட்டத்தின் இன்றியமையாமை யாவை?
3. அலகுததிட்டத்தின் படிநிலைகளை விளக்குக.

## 4.10. மேலும் பயில்வதற்கான நூல்கள்


1. முனைவர். ஞா.பழனிவேலு (2011), செந்தமிழ் கற்பித்தல் பொதுத்தமிழ், நதி பப்ளிகேஷன்ஸ், தஞ்சாவூர்.
2. வெ.கலைச்செல்வி (2013), பொதுத்தமிழ் கற்றல் - கற்பித்தல், சஞ்ஜீவ் வெளியீடு,ஈரோடு.
3. கணபதி.வி (1989), தமிழ் ஐவகைப் பாடங்களும் கற்பித்தலும், சாந்தா பப்ளிஷர்ஸ், சென்னை
4. கோவிந்தராஜன்.மு. (1990), நற்றமிழ் பயிற்றலின் நோக்கமும் முறையும் சரஸ்வதி பதிப்பகம், சென்னை.
5. முனைவர் அ.மீனாட்சிசுந்தரம்,(2014), பாடப்பொருள் மற்றும் தமிழ் கற்பித்தல்(பொதுத்தமிழ்), காவ்யமாலாபப்ளிஷர்ஸ், திண்டுக்கல்.
6. இ.வேணுகோபால், க.சாந்தகுமாரி (2015), தமிழ் கற்பிக்கும் முறைகள், சாந்தா பப்ளிஷர்ஸ், சென்னை.

# அலகு-5 நுண்ணிலைக் கற்பித்தல்

குறிப்பு

**பாடஅமைப்பு**

5.1. முன்னுரை
5.2. குறிக்கோள்கள்
5.3. நுண்ணிலைக் கற்பித்தல்
    5.3.1. நுண்ணிலைக் கற்பித்தல் திறன்களில் பயிற்சி
    5.3.2. நுண்ணிலைக் கற்பித்தல் சுழற்சி
    5.3.3. நுண்ணிலைக் கற்பித்தலுக்கான கொள்கைகளும் படிகளும்
    5.3.4. நுண்ணிலைக் கற்பித்தலின் கூறுகள்
    5.3.5. நுண்ணிலைக் கற்பித்தலின் பயன்கள்
5.4. பல்வகைத்தூண்டல்களைப் பயன்படுத்தும் திறன்
5.5. வலுவூட்டிகளைப் பயன்படுத்தும் திறன்
5.6. கரும்பலகையைப் பயன்படுத்தும் திறன்
5.7. இணைப்புப் பயிற்சி
5.8. தொகுத்துக் காண்போம்
5.9. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்
5.10. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்
5.11. மேலும் பயில்வதற்கான நூல்கள்

## 5.1. முன்னுரை

ஆசிரிய மாணவர்களே! தமிழ் மொழி கற்பிக்கும் முறைகளில் தொடர் கற்பித்தல் காலத்தில் ஆற்றலுடன் செயற்பட்டு இருப்பீர்கள். ஆற்றல் மட்டுமிருப்பின் கற்பித்தலில் நீங்கள் பெறும் வெற்றிவாய்ப்பு குறுகிய அளவினதாகவே இருக்கும். உங்களின் ஆற்றல், திறனாக மாற்றப் பெற்று சிறந்த ஆசிரியராக உருவாக வேண்டும் என்பதே எங்கள் நோக்கம். அதற்காக இப்பாடத்தில் மூன்று திறன்களோடு சேர்த்து இணைப்புப் பயிற்சியும் கொடுத்துள்ளோம். அதில் சிறந்த முறையில் முறையாகப் பயிற்சி பெற்று வெற்றி இலக்கை அடைவீராக!

## 5.2. குறிக்கோள்கள்

நீங்கள் இப்பாடத்தைப் பயின்ற பின்னர்,

- ❖ நுண்ணிலைக் கற்பித்தல் பயிற்சி பற்றித் தெளிவடைவீர்கள்.
- ❖ கற்றலுக்குத் திறனே அடிப்படை என உரைப்பீர்கள்.

குறிப்பு

❖ நுண்ணிலைத் திறன் சிலவற்றில் பயிற்சி பெறுவீர்கள்.
❖ நுண்ணிலைத் திறன் சிலவற்றை இணைத்து இணைப்புப் பயிற்சியை மேற்கொள்வீர்கள்.

## 5.3 நுண்ணிலைக் கற்பித்தல்

ஆசிரிய மாணவர்களுக்கு வகுப்பறையில் கற்பித்தலின் போது ஏற்படும் பிரச்சனைகளையும், இப்பிரச்சனைகளுக்கு எந்த முறையைக் கடைபிடித்து பாடங்களைக் கற்பிப்பதன் மூலம் அவர்களின் அறிவுத் திறன்களைக் கிளர்ந்தெழச் செய்யலாம் என்பதனையும் கருத்தில் கொண்டு அறிஞர் பெருமக்களால் பல முறை ஆய்வு நடத்தி முடிவில் ஒரு சில திறன்களைக் கையாண்டு கற்பித்தல் முறையில் தேர்ச்சியும் அடைந்துள்ளனர். இது போன்ற கற்பித்தலின் நிலைக்கு நுண்ணிலைக் கற்பித்தல் என்று பெயர்.

இது போன்ற கற்பித்தலில் ஏற்படும் குறைகளைக் கட்டுப்படுத்தப் பயிற்சியின்போது பயன்படுத்தக் கூடிய கல்வி நுட்பம் ஒன்றினை முதன்முதலில் 1961 ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஸ்டான்போர்டு பல்கலைக்கழகத்தில் "ஆலன், ராயன்" என்பவர்கள் பயன்படுத்தினார்கள். மேலும் இதுபோன்றே பல ஆராய்ச்சியாளர்கள் நடைமுறைப்படுத்தி வெற்றியும் கண்டுள்ளனர். தற்போது உலகிலுள்ள பெரும்பாலான நாடுகளில் இந்நுட்பம் ஆசிரியர் பயிற்சி பெறுவோருக்குப் பயன்படுகிறது.

ஒரு குறிப்பிட்ட திறனை எடுத்துக் கொண்டு அதில் குறைந்த அளவில் அதாவது 5 முதல் 6 நிமிடங்களில் பயிற்சி பெற்று வகுப்பறைக் கற்பித்தலைச் சிறப்புறச் செய்ய உதவுவது நுண்ணிலைக் கற்பித்தல் பயிற்சி ஆகும்.

நுண்ணிலைக் கற்பித்தல் என்பது பல்வேறு திறன்களைப் பெறுவதற்காக ஆசிரியர் பயிற்சி மாணவர்கள் மேற்கொள்ளும் பயிற்சி ஆகும். **நுண்ணிலைக் கற்பித்தல் என்பது கற்பித்தல் நுட்பம் அல்ல. ஒரு பயிற்சி நுட்பமாகும்.** (Micro Teaching is a training technique and not a teaching technique.) ஆசிரியர் பயிற்சி மாணவர்கள் கற்பித்தலில் உள்ள பல உட்திறன்களில் ஒன்றன் பின் ஒன்றாக, ஒவ்வொரு திறனிலும் பயிற்சி பெறுவதையே நுண்ணிலைக் கற்பித்தல் என்கிறோம்.

“நுண்ணிலைக் கற்பித்தல் என்பது வகுப்புநேரம் மற்றும் வகுப்பு அளவு குறைக்கப்பட்ட கற்பிக்கும் செயல்பாடு” என்று டீவைட். டபிள்யூ. ஆலன் -1966 (Dwight.w.Allen) கூறுகிறார்.

குறிப்பு

"நுண்ணிலைக் கற்பித்தல் என்பது அளவு குறைக்கப்பட்ட கற்பித்தல். இதில் புதிய திறன்களை வளர்க்கவும், பழைய திறன்களை மெருகேற்றவும் முடியும்" என்று எம். சி. நைட், 1971 (M.C.Knight) கூறுகிறார்.

நுண்ணிலைக் கற்பித்தல் என்பது கற்பித்தல் செயலுக்குப் பெரிதும் உதவுகிறது. பயிற்சி ஆசிரியர் ஓரளவு பயிற்சி பெறுவதால் கற்பித்தலில் வெற்றிபெற முடியும். நுண்ணிலைக் கற்பித்தல் மூலம் பயமின்மை, தன்னம்பிக்கை, சோர்வின்மை ஆகிய பண்புகள் பயிற்சி ஆசிரியரிடம் வளருகின்றன.

**வழிமுறை**

1. வகுப்பில் 6 முதல் 12 மாணவர்கள் மட்டுமே இருக்க வேண்டும்.
2. கால அளவு 5 முதல் 6 நிமிடங்கள்.
3. ஒரு கருத்து மட்டுமே பாடப் பொருளாகக் கற்பிக்கப்பட வேண்டும்.
4. உடன் பயில்வோரே மாணவர்களாகச் செயல்படுவார்கள்.
5. முன் கூட்டியே திட்டமிட்டபடி நடக்க வேண்டும்.

### 5.3.1 நுண்ணிலைக் கற்பித்தல் திறன்களில் பயிற்சி

நுண்ணிலைக் கற்பித்தல் திறன்களில் குறைந்தது மூன்று திறன்களில் நீங்கள் ஒவ்வொருவரும் பயிற்சி பெற வேண்டும். மூன்றையும் இணைத்து இணைப்புப் பயிற்சி பெற வேண்டும். கல்வியியல் துறையினராகிய நாங்கள் உங்களுக்குப் பின்வரும் மூன்று திறன்களைப் பரிந்துரைக்கிறோம். அவையாவன,

- ❖ பல்வகைத் தூண்டல்களைப் பயன்படுத்தும் திறன்
- ❖ வலுவூட்டிகளை பயன்படுத்தும் திறன்
- ❖ கரும்பலகையைப் பயன்படுத்தும் திறன்


மேலே கூறப்பட்டுள்ள ஒவ்வொரு நுண்ணிலைத் திறனுக்கும் நீங்கள் எழுத்து நிலையில் உங்களை ஆயத்தம் செய்து கொள்ள வேண்டும். அவ்வாயத்தம் பாட நிகழ்வுக்குறிப்பு எனப் பெறும். பாட நிகழ்வுக்கேற்ப எழுதுவதற்கான புலனுணர்வை உங்கள் கருத்தரங்குகளில் பெறுவீர்கள்.

உங்கள் ஒவ்வொருவரிடமும் உள்ள ஆற்றல்கள் சில திறன்களாக பாவனைக் குழுவில் வளர்க்கப்பெற்ற பின், மீண்டும் உங்களுக்குள்ளேயே இணைப்புப் பயிற்சி பெற்றுக் கொண்டு அதன் பின்னர் தான், பள்ளியில் உண்மையான தொடர் கற்பித்தலுக்கு வழி செய்ய வேண்டும். இதுவே முறையானது.

குறிப்பு

### 5.3.2. நுண்ணிலைக்கற்பித்தல் சுழற்சி

நுண்ணிலைக் கற்பித்தலானது திட்டமிடல், கற்பித்தல், கற்பித்தலுக்கு பின் மீட்டுணர்தல். குற்றங்கள் ஏற்படின் திருத்துவதற்காக மீண்டும் திட்டமிடல், மீண்டும் கற்பித்தல், மீண்டும் மீட்டுணர்தல் என்ற சுழற்சியில் பயிற்சி பெறப்படுகிறது.




### 5.3.3. நுண்ணிலைக் கற்பித்தலுக்கான கொள்கைகளும், படிகளும்

நுண்ணிலைக் கற்பித்தலில் பயிற்சி ஆசிரியர் ஒவ்வொருவரும் தனித்தனி திறனில் பயிற்சி பெறுகின்றனர். திறன் என்பது ஆசிரியரின் செயல்கள் அல்லது நடத்தைகள். இதைப் பயன்படுத்துவதன் நோக்கம் கற்றல் திறனில் கற்பித்தலின் போது உடன்பயில்பவரே மாணவராக அமர்ந்திருப்பர். ஒவ்வொரு திறனையும் குறைந்தது 5-6 நிமிடங்கள் பயிற்சி செய்தல் வேண்டும். உடன்பயிலும் மாணவரில் ஒருவர் உற்றுநோக்குபவராக இருப்பார். இதைப் பேராசிரியர் ஒருவர் மேற்பார்வை செய்வார். ஒருவர் கற்பித்தலில் முழுமைபெற வேண்டுமாயின் அல்லது சிறந்து விளங்க வேண்டுமாயின், அவர் கற்பித்தலின் உட்திறன்களில் முழுமையான பயிற்சி பெற வேண்டும் என்பதே நுண்ணிலைப் பயிற்சியின் அடிப்படைக் கருத்தாகும்.

### 5.3.4. நுண்ணிலைக் கற்பித்தலின் கூறுகள்

**பாடக்குறிப்பு**

குறிப்பிட்ட திறனில் விளக்கம், உட்கூறுகளின் விளக்கம் ஆகியவற்றை மனதில் கொண்டு பாடத்திட்டம் தயாரிக்கப்படுகிறது. குறுகிய காலத்திற்குள் கற்பித்தல் பயிற்சி முடிவதாக இருத்தல் வேண்டும். பாடக் குறிப்பில் உட்திறன்களை அடைப்புக் குறிக்குள் குறித்து வைக்கவேண்டும்.

குறிப்பு

**வகுப்பறை**

நுண்ணிலைப் பயிற்சிக்கென்று தனி வகுப்பறை இருத்தல் அவசியம், கற்பித்தல் திறனுக்கேற்ப அந்த அறை அமைந்திருக்க வேண்டும். கற்பித்தல் பயிற்சி நடைபெறும்போது சக மாணவர்கள், கற்பிக்கும் பயிற்சியாளர்கள் மற்றும் பேராசிரியர் ஆகியோர் இருப்பர்.

**மாணவர்கள்**

ஆசிரியர் பயிற்சியில் உடன்பயிலும் பயிற்சி ஆசிரியர்களையே மாணவர்களாகக் கொள்ளலாம். அதில் ஒருவரை உற்றுநோக்குபவராக அமரச் செய்யலாம். அதில் மாணவர்களாகச் செயல்படுவோர் தங்கள் அறிவு நிலை, முதிர்ச்சி நிலை கொண்டு செயல்படுவதைத் தவிர்த்தல் வேண்டும்.

**உற்றுநோக்குபவர்**

உடன்பயிலும் பயிற்சியாளர்களில் ஒருவரே உற்று நோக்குபவராகச் செயல்படுவர், அவர்களிடம் குறிப்பிட்ட திறனுக்குத் தேவையான அட்டவணைகள் இருக்கும். உற்றுநோக்குபவர்கள் பயிற்சியாளர்கள் கற்பிக்கும்போது வெளிப்படும் திறன்களின் உட்கூறுகளைக் குறியீடுகள் மூலம் குறித்துக் கொள்ள வேண்டும்.

**மதிப்பிடலும், குறியீடுகளும்**

மதிப்பிடல் அட்டவணையில் கற்பிப்பவரின் நிகழ்வுத்திறன் அதாவது திறனின் உட்கூறுகள் அதிகமாக இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். பயிற்சி ஆசிரியர் கற்பித்தலை ஒலி, ஒளி நாடாக்கள் மூலம் பதிவு செய்து கேட்கும் போது, எத்தகைய உட்திறன்களைப் பயன்படுத்தி உள்ளோம், எவற்றைப் பயன்படுத்தவில்லை என்பதைப் பற்றி ஆசிரியர் அறிந்து கொள்ளலாம்.

**செயல்விளைவு கூறல்**

பயிற்சி ஆசிரியர் கற்பித்து முடித்தவுடன் அவரும், உற்றுநோக்குபவரும், வகுப்பறையைவிட்டு வெளியே வந்து கலந்துரையாடுவார்கள். உற்றுநோக்குபவர் அட்டவணைக் குறியீடுகளின் அடிப்படையில் எந்தெந்த உட்கூறுகளை அதிகமாகப் பயன்படுத்தினார் என்றும், தவிர்க்க வேண்டியவை எவை என்பதைப் பற்றியும் கூறுவார். இப்பயிற்சியைச் சிறப்புச் செய்ய ஒலிப்பதிவு நாடா, ஒலி, ஒளி இணைந்த பதிவு நாடாக்கள், படக்காட்சி ஆகியவற்றைப் பயன்படுத்தலாம்.பாடக்குறிப்பைத் திருத்தி அமைத்தல் உற்றுநோக்குபவர் கூறிய கருத்துக்களின் அடிப்படையில் அமையும். பயிற்சி ஆசிரியர் அதே பாடப்பகுதியைத் திருத்தி அமைத்துக் கொள்ள வேண்டும்.

குறிப்பு

பயிற்சி ஆசிரியர் தேவையான மாற்றங்களைச் செய்து தயாரித்த பாடத் திட்டத்தினைக் கொண்டு முன்பு கற்பித்த அதே மாணவர்களுக்கோ அல்லது வேறு 5 மாணவர்களுக்கோ மீண்டும் கற்பிக்கிறார். இப்போது முன்பு சுட்டிக்காட்டப்பட்ட குறைகள் தவிர்க்கப்பட்டு குறிப்பிட்ட திறனைப் பயன்படுத்துவதில் முன்னேற்றம் இருத்தல் வேண்டும்.

**மீளக் கற்பித்தலின் விளைவுகள்**

மீளக் கற்பித்தல் முடிந்தவுடன் மீண்டும் பயிற்சி ஆசிரியரும், உற்றுநோக்குபவரும் வகுப்பறையை விட்டு வெளியே சென்று செயல்விளைவு பற்றிக் கலந்துரையாடுவார்கள். மீளக் கற்பித்தலில் பயிற்சி ஆசிரியர் ஏதேனும் குறை செய்திருந்தால் உற்றுநோக்குபவர் அதனைத் திருத்தி அமைக்குமாறு கூறுவார்.

### 5.3.5. நுண்ணிலைக் கற்பித்தலின் பயன்கள்

1. கற்பித்தலை எளிமையாக்குகிறது.
2. தன்னுடைய கற்பித்தலை தானே மதிப்பிட வழி வகுக்கிறது.
3. அச்சம், கூச்சம் போன்றவைகள் அகற்றப்படுகின்றன.
4. ஆசிரியர் மாணவர் உறவு வலுப்படுகிறது.
5. உடனுக்குடன் மறு வலுப்படுதல்
6. வகுப்பில் பாடம் எடுக்கும் அளவுக்கு தன்னம்பிக்கையை உருவாக்குகிறது.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதுக.**
**ஆ. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு ஆராய்க.**

1.நுண்ணிலைக் கற்பித்தல் பயிற்சியை ஆசிரியர் பயிற்சியில் அமைத்தவர்கள் யார்?

…………………………………………………………………………………….

…………………………………………………………………………………….

2. நுண்ணிலைக் கற்பித்தல் பயன்கள் ஏதேனும் இரண்டினைக் கூறுக?

…………………………………………………………………………………….

…………………………………………………………………………………….

## 5.4. பல்வகைத் தூண்டல்களைப் பயன்படுத்தும் திறன்

மாணவர்களின் கவனத்தை அடிப்படையாகக் கொண்டு கற்றல் அமைய வேண்டும். கற்பித்தலின் போது அவர்களின் கவனத்தை ஈர்த்தலும் ஒருநிலைப்படுத்தலும் நிலைக்கச் செய்தல் வேண்டும். மேலும் கவனத்தை மிக உச்ச நிலையில் வைத்துக் கொள்வதற்கு ஆசிரியர் சில கருத்துகளைத் தொகுத்துக் கொண்டு செயல்படுதல் சிறப்புடையது.

ஆசிரியர்களின் கற்பித்தல் செயல்களில் மாற்றம் தோன்றினால் மாணவர்களின் கவனம் ஈர்க்கப்படும். ஆசிரியர் கற்பித்தலின்போது

குறிப்பு

மாணவர்களின் கவனத்தை ஈர்க்க குரலில் ஏற்றத்தாழ்வு, தலை அசைவு, வினாக்கேட்டல் போன்றவைகளைப் பயன்படுத்தும் திறன் பல்வகை தூண்டல்களைப் பயன்படுத்தும் திறன் எனப்படுகிறது.

**உட் கூறுகள்**

**1. இடமாற்றம்**

ஆசிரியர் ஒரே இடத்தில் நின்று பாடம் நடத்துவது என்பது பொருத்தமில்லாதது. எனவே அவர் குறிப்பிட்ட செயலுக்காக இடம் நகர்தல் இன்றியமையாததாகும்.

(1) கரும்பலகையைப் பயன்படுத்தும்போதும்,

(2) சுவரில் மாட்டிய படத்தை விளக்கும்போதும்.

**2. இடைவினை மாற்றம்**

வகுப்பறையில் ஆசிரியரே பேசிகொண்டிருந்தால் மாணவர்கள் சலிப்படைவர். எனவே வகுப்பறைச் செயல்பாட்டில் ஆசிரியர், மாணவர் இருவரும் சமமான அளவில் உரையாடலை மேற்கொள்ள வேண்டும். கற்பிக்கும்பொழுது ஆசிரியர் மாணவரிடையே வினா எழுப்புவதும், விடைபெறுவதும் நடைபெறும். ஆசிரியர் திட்டமிட்டு வினா அமைத்தல் வேண்டும். அனைத்து மாணவர்களும் விடை அளிக்கும்படியான வினாவாக இருக்க வேண்டும்.

**3. கவனம் ஈர்த்தல்**

மாணவர்கள் கருத்தை ஒருமுகப்படுத்த சொற்களில் **அழுத்தம் தரல், எழுதியவற்றில் அடிக்கோடிடல், வண்ணச் சுண்ணக் கட்டிகளைப் பயன்படுத்துவது** போன்றவை கவனம் ஈர்த்தலாகும். சில முக்கியமான கருத்துக்களைக் கூறும் போது அழுத்தம் திருத்தமாகக் கூற வேண்டும். **“இது முக்கியம்” “இதை நன்றாக கவனி**” என்று கூறுவதன் மூலம் மாணவர்களின் கவனம் ஈர்க்கப்படும்.

**4. சைகைகள்**

ஆசிரியர் பணி என்பது மிகவும் சிறந்தது. அதே நேரத்தில் மிகவும் கடினமான பணி. ஆசிரியர் பணியில் நடிப்பென்பது மிகவும் அவசியம். நாம் கூறும் கருத்தைச் சைகைகளிலும் கூற வேண்டும்.

**5. பேச்சு நிறுத்தம்**

விளக்கம் தரும்போது ஆசிரியர் தொடர்ந்து பேசிக்கொண்டிராமல் திட்டமிட்டு, வேண்டுமென்றே பேச்சை நிறுத்தி மாணவரின் கவனத்தை ஈர்ப்பது பேச்சு நிறுத்தம் ஆகும். அப்போது மாணவர்கள் திடீரென நம்மை நோக்குவார்கள். மீண்டும் நாம் பாடத்தைத் தொடர வேண்டும்.

குறிப்பு

**6. குரல் ஏற்றத் தாழ்வு**

தேவையான இடத்தில் குரலை ஏற்றியும், இறக்கியும் கூற வேண்டும். ஆசிரியரின் பேச்சில் காணப்படும் வேக மாறுபாடும், குரல் ஏற்றத்தாழ்வும் இவ்வகையைச் சாரும்.

**7. புலன்வகை மாற்றம்**

நம் கண் மற்றும் பிற புலன்களைப் பாடப்பொருளுக்குத் தகுந்தவாறு மாற்றிக் கொள்ள வேண்டும். ஒருவர் இறந்த செய்தியைக் கூறும்போது முகத்தைச் சோகமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

## பல்வகைத் தூண்டல்களைப் பயன்படுத்தும் திறன்
## (Skill of Stimulus Variation)

**பாட நிகழ்வுகள்**

பாடம் : தமிழ்
கால அளவு : 6 மணித்துளிகள்
நாள் : 11 - 7 - 17
பயிற்சி ஆசிரியர் பெயர் : பவித்ரா
உற்றுநோக்குபவர் பெயர் : சுமதி
பேராசிரியர் பெயர் : முனைவர் மா.சுகந்தி

**கற்பித்தல் முறை**

ஆசிரியர் : வணக்கம் மாணவர்களே!

மாணவர் : வணக்கம் ஐயா.

ஆசிரியர் : ‘‘கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்தகுடி’’ என தமிழின் தொன்மையை புறப்பொருள் வெண்பாமாலை கூறுகிறது. (ஆசிரியர் குரலில் ஏற்றத் தாழ்வுடன் கூறுகிறார்) **(கு.ஏ.தா).**

ஆசிரியர் : தமிழினத்தின் தொன்மையைக் கூறும் நூல் எது? **(இ.வி.மா)**

மாணவர் : புறப்பொருள் வெண்பாமாலை (மாணவர் கூறியதை ஆசிரியர் வண்ணச்சுண்ணக்கட்டியால் கரும்பலகையில் எழுதுதல்) **(க.ஈ)** **(இ.மா)**

ஆசிரியர் : நன்று. (என்று கையசைக்கிறார்). **(சைகைகள்)**

ஆசிரியர் : ‘‘திரைக்கடல் ஓடியும் திரவியம் தேடு’’- யார் கூற்று?. **(இ.வி.மா)**

மாணவர் : ஔவையார்.

ஆசிரியர் : நன்று. என்று கூறி ஆசிரியர் தலையசைத்து மாணவர் கூறியதை கரும்பலகையில் வண்ணச்சுண்ணக்கட்டியால் எழுதுகிறார். **(இ.மா)** **(பு.வ.மா)** **(க.ஈ)**

குறிப்பு

ஆசிரியர் : சிங்கப்பூர், மலேசியா, பினாங்குத் தீவு, ஆகிய நாடுகளில் கோவில்கள் கட்டி ஆண்டு தோறும் திருவிழாக்களைச் சிறப்பாக நடத்தி வருகின்றனர். (குரலில் ஏற்றத் தாழ்வுடன் கூறுகிறார்) **(கு.ஏ.தா)**

மாணவர் : கோவில் திருவிழாக்களில் காவடி எடுப்பதும் தேர் இழுப்பதும் இன்றும் நடைபெற்று வருகின்றது ஐயா. **(இ.வி.மா)**

ஆசிரியர் : நன்று, (கைகளைத் தட்டிப் பாராட்டுதல்) **(சைகைகள்)** **(பு.வ.மா)** இலங்கையில் வாழும் தமிழர்களில் எத்தனை விழுக்காட்டினர் தொடக்கப் பள்ளி முதல் உயர்நிலைப் பள்ளி வரை தமிழிலேயே பயில்கின்றனர். **(இ.வி.மா)**

மாணவர் : 98 விழுக்காடு (மாணவர் கூறியதை ஆசிரியர் கரும்பலகையில் எழுதி அடிக்கோடிடுதல்).**(இ.மா) (க.ஈ)**

ஆசிரியர் : நன்று. தமிழானது சிங்கப்பூர், மலேசியா, இலங்கை போன்ற நாடுகளில் ஆட்சிமொழியாக விளங்குகின்றது. (ஆசிரியர் பாடம் நடத்திக்கொண்டிருக்கும் போதே திடீரென பேச்சை நிறுத்துகிறார்) **(பே.நி) (க.ஈ)**

ஆசிரியர் : தமிழை ஆட்சி மொழியாகக் கொண்ட நாடுகள் யாவை? **(இ.வி.மா)**

மாணவர் : இலங்கை, மலேசியா, சிங்கப்பூர்

ஆசிரியர் : நன்று என்று கூறி கைதட்டுகிறார். **(சைகைகள்)**

ஆசிரியர் : அமெரிக்க நாட்டுப் பேராசிரியர் இருவர் பெயர்கள் கூறு. (ஒரு மாணவனைப் பார்த்து கூறுமாறு சைகை செய்கிறார்). **(சைகைகள்) (இ.வி.மா)**

மாணவர் : A.L. இராஜன், ஜார்ஜ் எல்ஹார்ட், இந்திரா, இராமானுஜம் போன்றவர்கள் அமெரிக்க நாட்டு பேராசிரியர்கள் ஆவர்.

ஆசிரியர் : தமிழகத்தில் தமிழ்மொழி எப்பொழுது ஆட்சிமொழியாகக் கொண்டு வரப்பட்டது? **(இ.வி.மா)**

மாணவர் : இந்தியாவில் 1956-ம் ஆண்டு மொழிவாரி மாநிலங்களாக பிரிக்கப்பட்டபோதே தமிழ் ஆட்சி மொழியாகக் கொண்டுவரப்பட்டது ஐயா.

ஆசிரியர் : மிக மிக நன்று. (மாணவர்களைப் பார்த்து சைகை மூலம் நன்று என்று புலன்களை மாற்றி கூறுகிறார்). **(சைகைகள்), (பு.வ.மா)**

ஆசிரியர் : கிரேக்கம், இலத்தீன், ஈப்ரு, சீனம், எபிரேயம், தமிழ் என்ற மிகப் பழமையான மொழிகளெல்லாம் செம்மொழிகள் என அழைக்கப்படுகின்றன. (ஆசிரியர் கிரேக்கம், இலத்தீன் என்று கூறும் போதே பேச்சை நிறுத்தி, மாணவர் கவனத்தை ஈர்த்து , குரல் ஏற்றத் தாழ்வுடன் கூறுகிறார்). **(பே.நி), (க.ஈ),**

நுண்ணிலைக் கற்பித்தல்

குறிப்பு

**(கு.ஏ.தா)**

மாணவர் : செம்மொழி என்றால் என்ன ஐயா? **(இ.வி.மா)**

ஆசிரியர் : செவ்வியல் தன்மைக் கொண்ட இலக்கியங்கள் எல்லாமே செம்மாழி ஆகும்.

ஆசிரியர் : செவ்வியல் நூல்கள் யாவை? **(இ.வி.மா)**

மாணவர்கள் : 41 நூல்கள் உள்ளன ஐயா.
(மாணவர் கூறியதை ஆசிரியர் கரும்பலகையில் எழுதி அடிக்கோடிடுதல்). **(இ.மா) (க.ஈ)**

ஆசிரியர் : பதிணென் மேற்கணக்கு நூல்கள், பதிணென்கீழ்கணக்கு நூல்கள், தொல்காப்பியம், சிலப்பதிகாரம், மணிமேகலை, முத்தொள்ளாயிரம், இறையனார் களவியல் உரை.
(ஆசிரியர் கரும்பலகையில் எழுதிக் காட்டுதல்) **(இ.மா), (கு.ஏ.தா), (பு.வ.மா).**

ஆசிரியர் : நன்றி மாணவர்களே!

மாணவர்கள் : நன்றி ஐயா.

| வ.எண் | உட்கூறுகள் | திறன் பெறும்மதிப்பு | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | **இடமாற்றம்** | IIIII | 5 |
| 2 | **இடைவினை மாற்றம்** | IIIII IIII | 9 |
| 3 | **கவனம் ஈர்த்தல்** | IIIII I | 6 |
| 4 | **சைகைகள்** | IIIII | 5 |
| 5 | **பேச்சு நிறுத்தம்** | II | 2 |
| 6 | **குரல் ஏற்றத் தாழ்வு** | IIII | 4 |
| 7 | **புலன்வகை மாற்றம்** | IIII | 4 |

**பயிற்சி ஆசிரியர் கையொப்பம்** **பேராசிரியர் கையொப்பம்** **உற்றுநோக்குபவர் கையொப்பம்**

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதுக.**
**ஆ. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு ஆராய்க.**

3. பல்வகைத் தூண்டல் திறனின் உட்கூறுகள் யாவை?

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

4.எவையெல்லாம் மாணவர்களின் கவனத்தை ஈர்க்கும் செயல்களாகும்?

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

குறிப்பு

## 5.5. வலுவூட்டிகளைப் பயன்படுத்தும் திறன்

கற்பித்தலில் மாணவர்களின் கவனத்தை ஈர்க்க அவர்களது விரும்பத்தக்க நடத்தைகளைப் பாராட்டியும், விரும்பதகாதவற்றைக் கட்டுப்படுத்தியும் ஆசிரியர் கேட்கும் கேள்விக்கு மாணவர்களின் பதில்களைப் பாராட்டியும் ஊக்கப்படுத்த வேண்டும். மாணவரை ஊக்கப்படுத்த ஆசிரியர் மேற்கொள்ளும் நடத்தைகளுக்கு வலுவூட்டிகள் என்று பெயர்.

வலுவூட்டிகளில் இரண்டு வகைகள் உள்ளன. அவை நேர்வலுவூட்டிகள், எதிர் வலுவூட்டிகள். நேர்வலுவூட்டியில் பல பிரிவுகள் உள்ளன.

**1. உடன்பாட்டு மொழிசார் வலுவூட்டிகள்**

மாணவர்கள் அளித்த பதில் சரியாக அமைந்தால் நன்று என கூறிப் பாராட்டுவது.

**2. திரும்பக் கூறுதலும் வேறு வகையில் கூறுதலும்**

மாணவர் கூறிய விடைகளை மற்ற மாணவர்களுக்குக் கேட்கும் படியாக திரும்பக் கூறுதலாகும். வேறு வகையில் கூறுதல் என்பது மாணவர்கள் எளிதில் புரியும் வகையில் நடையினை மாற்றிக் கூறுவதாகும்.

**3. அதிகப்படியான மொழிசார் வலுவூட்டிகள்**

கேட்கப்பட்ட கேள்விகளுக்கு மாணவர் துல்லியமான பதிலைக் கூறினால் மிக நன்று, மிக மிக நன்று என்று கூறுதல்.

**4. உடன்பாட்டு மொழிசாரா வலுவூட்டிகள்**

மாணவர்கள் பயம் காரணமாக தடுமாறும் பொழுது ஆசிரியர் 'உம்''உம்' என்று ஊக்குவிப்பது.

**5. மாணவர்களின் துலங்கல்களைக் கரும்பலகையில் எழுதுதல்**

மாணவரின் சரியான விடையைக் கரும்பலகையில் எழுதுதல்.

**வலுவூட்டிகளைப் பயன்படுத்தும் திறன்**

**பாட நிகழ்வுகள்**

| | | |
|---|---|---|
| பாடம் | : | தமிழ் |
| கால அளவு | : | 6 மணித்துளிகள் |
| நாள் | : | 12 -7 - 17 |
| பயிற்சி ஆசிரியர் பெயர் | : | நந்தினி |
| உற்றுநோக்குபவர் பெயர் | : | சங்கீதா |
| பேராசிரியர் பெயர் | : | முனைவர் மா.சுகந்தி |

**குறிப்பு**

**கற்பித்தல் முறை**

ஆசிரியர் : வணக்கம் மாணவர்களே!
மாணவர் : வணக்கம் ஐயா.
ஆசிரியர் : இதிகாசங்கள் எத்தனை?
மாணவர் : மூன்று.
ஆசிரியர் : மிக நன்று. **(அ.மொ.சார்.வ)**, 'ம்''ம்' என்ற ஒலியுடன் தலையசைத்து மேலும் சரியான விடையைக் கூறக் கரும்பலகையில் எழுதுகிறார்.
மாணவர் : 1. இராமாயணம் 2. மகாபாரதம் 3. சிவபுராணம் (மாணவன் ஒருவரை கரும்பலகையில் எழுதச் சொல்லுதல்) **(உ.மொ.சாரா.வ), (மா.து.க.எ.)**
ஆசிரியர் : இராமாயணத்தை இயற்றியவர் யார்?
மாணவர் : வால்மீகி
ஆசிரியர் : மிக நன்று என்று பாராட்டி மாணவன் கூறிய பதிலை மீண்டும் கூறிக் கரும்பலகையில் தெளிவாக எழுதுகிறார். **(அ.மொ.சார்.வ), (மா.து.க.எ)**
ஆசிரியர் : வால்மீகி எந்த மொழியில் இராமாயணத்தை இயற்றினார்?
மாணவர் : வடமொழி
ஆசிரியர் : மிகவும் சரியானது என்று பாராட்டி மாணவன் கூறிய பதிலை வரவழைக்க 'ம்''ம்' என்ற ஒலியுடன் தலையசைத்து மேலும் சரியான விடையைக் கூறக் கரும்பலகையில் எழுதுதல்.**(அ.மொ.சார்.வ), (மா.து.க.எ), (உ.மொ.சாரா.வ)**
ஆசிரியர் : தமிழில் இராமாயணத்தை இயற்றியவர் யார்?
மாணவர் : கம்பர்
ஆசிரியர் : நன்று என்று பாராட்டி சைகை மூலம் தன் கைகளை விரல் விட்டு ஒன்று என எண்ணுதல் பிறகு அவருடைய பெயருக்கு வேறு பெயர் கவிச் சக்கரவர்த்தி கம்பர் என்று கூறிக் கரும்பலகையில் எழுதுகிறார். **(உ.மொ.சார்.வ),(மா.து.க.எ),(தி.கூ.வே.கூ), (உ.மொ.சாரா.வ).**
ஆசிரியர் : கம்பர் இயற்றிய நூல்கள் யாவை?
மாணவர் : கம்ப இராமாயணம், சடகோபர் அந்தாதி, ஏரெழுபது, சிலையெழுபது, சரஸ்வதி அந்தாதி என்பன.
ஆசிரியர் : நன்று என்று பாராட்டி ம் ம் என்று கூறி விடைகளுக்கு ஏற்ப தலையசைத்து மீண்டும் கரும்பலகையில் எழுதுகிறார். **(உ.மொ.சார். வ), (உ.மொ.சாரா. வ), (மா.து.க.எ).**
ஆசிரியர் : கம்பராமாயணம் எத்தனை காண்டங்களை உடையது.
மாணவர் : ஆறு

குறிப்பு

ஆசிரியர் : 'ம்''ம்' என்று கூறி பாராட்டி கைகளை விரல் விட்டு பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்று வரிசையாகக் கூற ஆசிரியர் கரும்பலகையில் எழுதினார். **(உ.மொ.சாரா. வ), (மா.து.க.எ)**

ஆசிரியர் : இராமனை அடையாளம் கண்டு கொள்ள ஏதேனும் குறியீடுகள் கூறு.

மாணவர் : கையில் வில், சங்கு சக்கரம், நெற்றியில் திரு நாமம் முதலியன.

ஆசிரியர் : மிகவும் நன்று என்று கூறி, இராமனின் திருவுருவத்தைக் கரும்பலகையில் படமாக வரைந்து காட்டி மாணவர்களுக்கு இராமனின் வரலாற்றை நம்பிக்கையூட்டுமாறு கூறினார். **(அ.மொ.சார்.வ), (மா.து.க.எ), (தி.கூ.வே.கூ)**

ஆசிரியர் : 'அறம் வெல்லும் பாவம் தோற்கும்' இக்கூற்றில் 'அறம் என்பவர் யார்?'

மாணவர் : 'அறம் என்பவர் இராமன்'

ஆசிரியர் : மிக நன்று என்று பாராட்டி, பரதன், இலக்குவணன், சுக்கிரீவன், குகன், வீடணன் இவர்களெல்லாம் யார் என ஆசிரியர் கூறுகிறார். (பெயர்களைக் கரும்பலகையில் எழுதுகிறார்.). **(அ.மொ.சார்.வ), (தி.கூ.வே.கூ), (மா.து.க.எ).**

மாணவர் : இராமனின் தம்பிகள் ஐயா,

ஆசிரியர் : நன்று என்று பாராட்டி ம் ம் என்று கூறி தலையசைத்து விட்டு கரும்பலகையிலுள்ளதை சுட்டிக் காட்டுகிறார். **(உ.மொ.சார்.வ), (உ.மொ.சாரா.வ)**

ஆசிரியர் : நன்றி மாணவர்களே

மாணவர் : நன்றி ஐயா.

| வ. எண் | உட்திறன்கள் | நிகழ்வுக் குறியீடு | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | **உடன்பாட்டு மொழிசார் வலுவூட்டிகள்** | III | 3 |
| 2 | **திரும்பக் கூறுதலும் வேறு வகையில் கூறுதலும்** | III | 3 |
| 3 | **அதிகப்படியான மொழிசார் வலுவூட்டிகள்** | ~~IIII~~ | 5 |
| 4 | **உடன்பாட்டு மொழிசாரா வலுவூட்டிகள்** | ~~IIII~~ | 6 |
| 5 | **மாணவர்களின் துலங்கல்களைக் கரும்பலகையில் எழுதுதல்** | ~~IIII~~ III | 8 |

**பயிற்சி ஆசிரியர் கையொப்பம்** **பேராசிரியர் கையொப்பம்** **உற்றுநோக்குபவர் கையொப்பம்**

குறிப்பு

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதுக.**
**ஆ. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு ஆராய்க.**

5. வலுவூட்டுதல் திறனின் உட்கூறுகளைக் கூறுக?

………………………………………………………………………………………

……………………………………………………………………………………..

6. திரும்பக் கூறுதலும் வேறு வகையில் கூறுதலும் என்றால் என்ன?

………………………………………………………………………………………

…………………………………………………………………………………..…

## 5.6. கரும்பலகையைப் பயன்படுத்தும் திறன்

வகுப்பறைக் கற்பித்தலில் பயன்படுத்தப்படும் துணைக்கருவிகளுள் கையாளுவதற்கு எளிமையானதும், அனைவராலும் பயன்படுத்தக் கூடியதும், மாணவர்களுக்குக் கற்றலை ஊக்குவிப்பதும் கரும்பலகையாகும். வகுப்பறையில் 45 நிமிடக் கற்பித்தலை வெளிப்படுத்தும் வண்ணம் கரும்பலகையை ஆசிரியர்கள் திறமையாகக் கையாள வேண்டும். முக்கியமான கருத்துக்கள், வருடங்கள், படங்கள், பெயர்கள் போன்றவற்றைக் கரும்பலகையில் மாணவர்களின் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் வரிசைக் கிரமமாகவும் தெளிவாகவும் துல்லியமாகவும் எழுத வேண்டும். கற்பிக்க உதவும் சாதனங்களில் மிகவும் சிறப்புடையது கரும்பலகையாகும். எனவே ஆசிரியர் பயிற்சி மாணவர்கள் கரும்பலகையைப் பயன்படுத்தும் திறனில் பயிற்சி பெறுவது அவர்களுடைய கற்பித்தல் பணியை மேம்படுத்த உதவும். கரும்பலகையை திறமையாக பயன்படுத்தும் வழிமுறைகளை இங்குக் காணலாம்.

**கரும்பலகை பயன்பாட்டில் அடங்கியுள்ள உட்கூறுகள்**

**தெளிவாக எழுதுதல்**

எழுத்துக்களைப் பெரியதாகவும், வார்த்தைகளுக்கு இடையில் இடைவெளி விட்டும் எழுதுதல் அவசியம்.

**தொடர்புடைமை**

எழுத்தக்கூடிய செய்திகள் பாடப்பொருளுக்கு தொடர்புடையதாகவும் சுருக்கமாகவும் இருத்தல் வேண்டும். இவ்வாறு எழுதும் தொடர்புடைய கருத்துக்கள் மாணவர்களுக்குப் புரியும்படியாக இருத்தல் வேண்டும்.

**வேறுபாடுகள்**

வேறுபட்ட கருத்துக்களைப் பார்த்தவுடன், மாணவன் அறியுமாறு வண்ண சுண்ணக் கட்டிகளை பயன்படுத்தி வட்டமிட்ட சொற்களாகவோ

அல்லது சிறிய பெரிய எழுத்துக்களாகவோ வேறுபடுத்திக் காட்டும் வகையில் எழுதுதல் வேண்டும்.

**முறைப்படுத்துதல்**

கரும்பலகையில் எழுதக்கூடிய கருத்துக்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக இல்லாமல் வரிசையாக முறையுடன் இருத்தல் மிக அவசியம்.

**வரைபடங்கள்**

பாடப்பொருளுக்கு தொடர்புடைய படங்களை தெளிவாக கரும்பலகையில் வரைந்து காட்டுதல்.

**தூய்மை**

கரும்பலகையில் எழுதக்கூடிய கருத்துக்கள் அளவுடனும், அவசியமானதாகவும் மட்டும் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு**

**கரும்பலகையைப் பயன்படுத்தும் திறன்**

**பாட நிகழ்வுகள்**

| | | |
|---|---|---|
| பாடம் | : | தமிழ் |
| கால அளவு | : | 6 மணித்துளிகள் |
| நாள் | : | 12 - 7 - 17 |
| பயிற்சி ஆசிரியர் பெயர் | : | பவித்ரா |
| உற்றுநோக்குபவர் பெயர் | : | மதி |
| பேராசிரியர் பெயர் | : | முனைவர் மா.சுகந்தி |

**கற்பித்தல் முறை**

**பாடத்திட்டம் - இலக்கணம் - புணர்ச்சி**

ஆசிரியர் : வணக்கம் மாணவர்களே! நாம் இன்றைய வகுப்பில் புணர்ச்சியைப் பற்றி படிப்போம். (ஆசிரியர் கரும்பலகையில் புணர்ச்சி என்று எழுதுகிறார்) **(தெ.எ)** நிலை மொழியின் ஈற்றெழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் இணைவதை புணர்ச்சி என்கிறோம். **(தொ)** உதாரணம் **:** வாழை **+** மரம் **=** வாழைமரம். இதில் ‘வாழை’ என்பது நிலைமொழி “மரம்” என்பது வருமொழி. **(வே) (தெ.எ)** இவை இரண்டும் இணைந்து வாழைமரம் என்றாகிறது. **(மு)** அடுத்ததாக புணர்ச்சியின் வகையைப் பற்றி படிப்போம். புணர்ச்சியானது

1.இயல்புப்புணர்ச்சி

2.விகாரப்புணர்ச்சி என இரு வகைப்படும். **(வரை) (தெ.எ) (மு)** என்று கூறி ஆசிரியர் கரும்பலகையில் பெரிய எழுத்துகளில் அழகாகவும் தெளிவாகவும் எழுதுகிறார். **(தூ)**

**இயல்புப் புணர்ச்சி (தெ.எ)**

நிலைமொழியும், வருமொழியும் இயல்பாகப் புணர்வதை இயல்புப் புணர்ச்சி என்கிறோம். **(தொ)**

நுண்ணிலைக் கற்பித்தல்

குறிப்பு

**(எ.கா) :** பனை + மரம் ⟶ பனை மரம் **(வே) (மு) (தூ)**

**விகாரப் புணர்ச்சி (தெ.எ)**

நிலைமொழியும், வருமொழியும் இணையும் போது சில மாற்றங்கள் நிகழலாம். அதனை 'விகாரம்' என்பர். இதனை மூன்று வகையாகப் பிரிக்கலாம். **(தொ)**

அவை, **(வரை)**

தோன்றல், திரிதல், கெடுதல் **(தூ), (தெ.எ)**

**(i) தோன்றல் விகாரம் (தெ.எ)**

நிலைமொழியும், வருமொழியும் இணையும் போது ஓர் எழுத்து புதிதாகத் தோன்றுதல் 'தோன்றல் விகாரம்' எனப்படும். **(தொ)**

**(எ.கா)** - வாழை + பழம் ⟶ வாழைப்பழம் **(வே) (மு) (தூ)**

**(ii) திரிதல் விகாரம் (தெ.எ)**

நிலைமொழியின் ஈற்றில் உள்ள எழுத்து மற்றொரு எழுத்தாக மாறுபட்டு வருவது திரிதல் விகாரம் ஆகும். **(தொ)**

(எ.கா) - மண் + குடம் ⟶ மட்குடம் **(வே) (மு) (தூ)**

**(iii) கெடுதல் விகாரம் (தெ.எ)**

நிலை மொழியும், வரு மொழியும் இணையும் போது நிலை மொழியின் ஈற்றெழுத்து மறைந்து (கெட்டு) வருதலே கெடுதல் விகாரம் ஆகும். **(தொ)**

(எ.கா) - மரம் + வேர் ⟶ மரவேர் **(வே) (மு) (தூ)**

| வ. எண் | உட்திறன்கள் | நிகழ்வுக் குறியீடு | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | தெளிவாக எழுதுதல் | ~~IIII~~ IIII | 9 |
| 2 | தொடர்புடைமை | ~~IIII~~ I | 6 |
| 3 | வேறுபாடுகள் | ~~IIII~~ | 5 |
| 4 | முறைப்படுத்துதல் | ~~IIII~~ I | 6 |
| 5 | வரைபடங்கள் | II | 2 |
| 6 | தூய்மை | ~~IIII~~ I | 6 |

**பயிற்சி ஆசிரியர் கையொப்பம்** | **பேராசிரியர் கையொப்பம்** | **உற்றுநோக்குபவர் கையொப்பம்**

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதுக.**
**ஆ. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு ஆராய்க.**

7. கரும்பலகைப் பயன்பாடு குறிப்பு வரைக?

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

8. கரும்பலகையில் எவ்வாறு எழுத வேண்டும்?

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

**குறிப்பு**


## 5.7. இணைப்புப் பயிற்சி

நுண்ணிலைக் கற்பித்தலில் ஒவ்வொரு திறனிலும் ஆசிரியர் பயிற்சி மாணவர்கள் தனித்தனியாகப் பயிற்சி பெறுகின்றார்கள். அனைத்துத் திறன்களிலும் பயிற்சி பெற்ற பிறகு அவற்றை இணைத்துக் கற்பிப்பது பெருநிலைக் கற்பித்தலுக்கு இன்றியமையாதது. எனவே நுண்ணிலைக் கற்பித்தலுக்கும் பெருநிலைக் கற்பித்தலுக்கும் இடையே ஒரு பாலம் ஏற்படுத்த வேண்டும் என்று கல்வியாளர்கள் கருதுகின்றனர். இதற்கு இணைப்புப் பயிற்சி என்று பெயர். இது 5 நிமிட சிறுகக் கற்பித்தலுக்கும், 45 நிமிட வகுப்பறைக் கற்பித்தலுக்கும் அடிப்படையாக அமைகின்றது.

**இணைப்புப் பயிற்சியின் முக்கிய பகுதிகள்**

| | | |
|---|---|---|
| 1. | காலம் | 15- 20 நிமிடங்கள் |
| 2. | பாடப் பொருள் | பாடநூலின் பகுதியிலிருந்து எடுத்தல் |
| 3. | மாணவர்கள் | 15-20 மாணவர்கள் |
| 4. | திறன்கள் | 3-5 திறன்கள் இணைக்கப் பெறுதல் |
| 5. | நோக்கம் | ஆசிரியர் பயிற்சி மாணவர்கள் கற்றலில் குறிப்பிடத்தக்க நிலை எய்தல் |

குறிப்பு




நுண்ணிலைக் கற்பித்தல் என்பது பயிற்சி ஆசிரியர்களுக்கு மிகவும் தேவையான ஒரு பயிற்சி ஆகும். இந்த சிறு கற்பித்தல் மூலமாகவே விரிவுக் கற்பித்தலுக்கு தேவையான மனத்துணிவையும், தன்னம்பிக்கையையும் ஆசிரியர் பயிற்சி மாணவர்கள் பெறுகின்றனர்.

**துகள்திறன்களும், பதிவுத்தாள்களும்**

மேலே கூறப் பெற்ற ஒவ்வொரு நுண்ணிலைத் திறனுக்குரிய துகள் திறன்களைப் பதிவுத் தாளில் காண்போம். பேராசிரியர் மேற்பார்வையில் நீங்கள் துகள் திறன் பதிவுத்தாளை நிரப்ப வேண்டும்.

**தூண்டல் மாறுபாடுகள்**

திறன்: பல்வகைத் தூண்டல்களைப் பயன்படுத்தும் திறன்

மாணவர் பெயர் : சுமதி

காலம் : 5 மணித்துளிகள் பதிவெண்: ...............

வகுப்பு : ஒன்பது நாள்: ................

பாடப்பகுதி: “நல்லது செய்தல்”

குறிப்பு

| | துகள் திறன்கள் / கால இடைவெளி | 30 வி 1 | 30 வி 2 | 30 வி 3 | 30 வி 4 | 30 வி 5 | 30 வி 6 | 30வி 7 | 30 வி 8 | 30வி 9 | 30வி 10 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | **இடமாற்றம்** | | | | | | | | | | | |
| 2. | **இடைவினை மாற்றம்** | | | | | | | | | | | |
| 3. | **கவனம் ஈர்த்தல்** | | | | | | | | | | | |
| 4. | **சைகைகள்** | | | | | | | | | | | |
| 5. | **பேச்சு நிறுத்தம்** | | | | | | | | | | | |
| 6. | **குரல் ஏற்றத் தாழ்வு** | | | | | | | | | | | |
| 7 | **புலன்வகை மாற்றம்** | | | | | | | | | | | |

கொடுக்கப்பட்டுள்ள பதிவுத்தாளில் 7 துகள் திறன்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு 30 விநாடிக்கும் பதிவாளர்கள் தம் பதிவுகளைக் குறிக்கவேண்டும். ஒவ்வொரு 30 விநாடிக்கும் நேரம் குறிப்போர் (Timer) மொழிக்குறிப்பை எழுப்ப, பதிவாளர் தத்தம் பதிவுத்தாளில் அடுத்த அடுத்த அலகுகளில் பதிவுகளை குறிப்பார்.

இத்திறனில் பங்கேற்கும் ஆசிரிய மாணவர்கள் நான்கு நிலை மாற்றங்களை ஏற்பர்.

- ஆசிரியர் (Teacher)
- மாணவர் (Student)
- பதிவாளர் (Registrar)
- நேரம் குறிப்போர் (Timer)

பத்து ஆசிரிய மாணவர்கள் கொண்ட குழுவில் பாவனைக் குழுவாக 6 ஆசிரிய மாணவர்கள் பள்ளி மாணவர்களாக இயங்குவர். ஒருவர் பதிவாளராகவும் ஒருவர் ஆசிரியராகவும் ஒருவர் நேரம் குறிப்போராகவும் செயற்படுவர். நேரம் குறிப்போர் வகுப்பறையின் கண்காணிப்பாளர்(Controller of the classroom) என்ற தகுதியைப் பெறுகிறார்.

குறிப்பு

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதுக.**
**ஆ. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு ஆராய்க.**

9. இணைப்புப் பயிற்சி என்றால் என்ன?

……………………………………………………………………………………………
…………………………………………………………………………..………

## 5.8. தொகுத்துக் காண்போம்

இப்பகுதியில் நுண்ணிலைக் கற்பித்தல் திறன்கள் பற்றியும், அதில் பயிற்சி பெறும் முறை பற்றியும் அறிந்தோம். ஓவ்வொரு திறன்களும் எடுத்துக்காட்டுடன் தரப்பட்டுள்ளது. அதனைப் பயன்படுத்தி வேறு பாடத்திற்கும் திறன் பயிற்சிகளை மேற்கொண்டு ஆசிரிய மாணாக்கர்கள் தங்களை திறன்களில் மேம்படுத்திக் கொள்ளலாம். பயிற்சியாசிரியரின் வகுப்பறைக் கற்பித்தலுக்கு இது துணைபுரியும் என்பதை உணர்வீர்கள்.

## 5.9. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாவிற்கான விடைகள்

1. ஆலன் மற்றும் ராயன்.
2. கற்பித்தலை எளிமையாக்குகிறது.தன்னுடைய கற்பித்தலை தானே மதிப்பிட வழி வகுக்கிறது.
3. ஆசிரியர் இயக்கம், ஆசிரியரின் முகபாவனை, குரல் ஏற்றத்தாழ்வு, கவனம் ஈர்த்தல்,மாணவர் பேச்சு,மாணவர் இயக்கம்.
4. சொற்களில் அழுத்தம் தரல், எழுதியவற்றில் அடிக்கோடிடல், வண்ணச் சுண்ணக் கட்டிகளைப் பயன்படுத்துவது.
5. உடன்பாட்டு மொழிசார் வலுவூட்டிகள், திரும்பக் கூறுதலும் வேறு வகையில் கூறுதலும், அதிகப்படியான மொழிசாரா வலுவூட்டிகள், உடன்பாட்டு மொழிசாரா வலுவூட்டிகள்.
6. மாணவர் கூறிய விடைகளை மற்ற மாணவர்களுக்குக் கேட்கும் படியாக கூறுவது திரும்பக் கூறுதலாகும். வேறு வகையில் கூறுதல் என்பது மாணவர்கள் எளிதில் புரியும் வகையில் நடையினை மாற்றிக் கூறுவதாகும்.
7. முக்கிய கருத்துக்கள், வருடங்கள், படங்கள், பெயர்கள் போன்றவற்றை எழுதப்பயன்படுகிறது

8. கையெழுத்தில் தெளிவு, எழுத்துக்கள் மற்றும் சொற்களிடையே இடைவெளி, கோடுகளின் பருமன்.
9. நுண்ணிலைக் கற்பித்தலுக்கும் பெருநிலைக் கற்பித்தலுக்கும் இடையே ஒரு பாலம் போன்ற அமைப்புக்கு இணைப்புப் பயிற்சி என்று பெயர்.

## 5.10. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

1. நுண்ணிலைக் கற்பித்தல் குறிப்பு வரைக?
2. வலுவூட்டுதல் திறனின் உட்கூறுகளைக் கூறுக?
3. இணைப்புப் பயிற்சி என்றால் என்ன?

## 5.11. மேலும் பயிலுவதற்கான நூல்கள்

1. முனைவர்ஞா.பழனிவேலு(2011), செந்தமிழ் கற்பித்தல், பொதுத்தமிழ் நதிபப்ளிகேஷன்ஸ், தஞ்சாவூர்.
2. வெ.கலைச்செல்வி (2013),பொதுத்தமிழ் கற்றல் - கற்பித்தல்,சஞ்ஜீவ் வெளியீடு,ஈரோடு.
3. கணபதி .வி (1989), தமிழ் ஐவகைப் பாடங்களும் கற்பித்தலும், சாந்தா பப்ளிஷர்ஸ், சென்னை
4. கோவிந்தராஜன் .மு. (1990), நற்றமிழ் பயிற்றலின் நோக்கமும் முறையும் சரஸ்வதி பதிப்பகம், சென்னை.
5. முனைவர் அ.மீனாட்சிசுந்தரம் (2012), தமிழ் கற்பித்தல் பொதுத்தமிழ், காவ்யமாலா பப்ளிஷர்ஸ், திண்டுக்கல்.
6. இ.பா.வேணுகோபால், க. சாந்தகுமாரி(2013), பாடப்பொருள் மற்றும் தமிழ் கற்பித்தல் : பொதுத்தமிழ், சாரதா பதிப்பகம்.

*****

# அலகு – 6 துணைக்கருவிகளைப் பயன்படுத்துதல்

குறிப்பு

**பாடஅமைப்பு**

6.1. முன்னுரை
6.2. குறிக்கோள்கள்
6.3. துணைக்கருவிகள்
6.4. துணைக்கருவிகளின் வகைகள்
6.4.1. காட்சிக் கருவிகள்
6.4.2. கேள்விக் கருவிகள்
6.4.3. காட்சி – கேள்விக் கருவிகள்
6.5. துணைக்கருவிகளைப் பயன்படுத்துதல்
6.5.1. துணைக்கருவிகளைப் பயன்படுத்துதலின் நோக்கம்
6.5.2. துணைக்கருவிகளின் பயன்கள்
6.5.3. துணைக்கருவிகள் பயன்படுத்துதலின் குறைகள்
6.6. தொகுத்துக் காண்போம்
6.7. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்
6.8. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்
6.9. மேலும் பயில்வதற்கான நூல்கள்

## 6.1 முன்னுரை

தமிழ் மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர், மொழிப் பாடத்தின் கருத்துப் பொருளை மாணவர்கள் எளிதில் உணருமாறு கற்கவும், ஐம்பொறிகளும் அனுபவம் பெறுமாறு கற்றலை எளிமையாக்கவும் வழிவகை செய்ய வேண்டும். புலன்களே கற்றலின் நுழைவுவாயில். ஒரு பாடத்திலுள்ள செய்திகளை ஐம்புலன்கள் வழியே அறிவது அதைப்பற்றி எழுதுவதற்குச் சமம். ஆசிரியர் பாடப்பொருளைக் கற்பிக்குமிடத்து சொல்லால் மட்டுமே விளக்கிச் சொல்பவரானால் வகுப்பிலுள்ள பலதரப்பட்ட மாணவர்களுக்கும் அவர் கற்பித்தார் என்று கூற முடியாது. மீத்திறன் மிக்கோர், சராசரி மாணவர், மெல்லக் கற்போர் என்ற மூன்று நிலை மாணவர் விரவியிருக்கும் வகுப்பில் அனைவரையும் கற்கச் செய்யக் கூடிய கல்வியை வகுப்பறையில் ஆசிரியர் அளிக்க வேண்டும். இவ்வகையில் கற்பித்தல், கற்றல் வெற்றி பெற ஆசிரியருக்குத் துணைநிற்பன காட்சித் துணைக்கருவிகள், கேள்வித் துணைக் கருவிகள், காட்சி - கேள்வித் துணைக்கருவிகள்

முதலியனவாகும். இவை கற்பித்தலையும், கற்றலையும் மேம்படுத்தி சிறந்த நற்பயனைத் தரவல்லன. இப்பாடத்தில் துணைக்கருவிகள் பற்றிய விளக்கம் தெளிவாகத் தரப்பட்டுள்ளது.

## 6.2. குறிக்கோள்கள்

நீங்கள் இப்பாடத்தைப் பயின்ற பின்னர்,

- காட்சிக் கருவிகள் எவையெவை எனத்தெரிந்து கொள்வீர்கள்.
- கேள்விக் கருவிகள் பற்றிய தெளிவான அறிவைப் பெறுவீர்கள்.
- காட்சிக் கேள்வி கருவிகளை பயன்படுத்தும் விதத்தை அறிந்து கொள்வீர்கள்.
- மொழிப்பாடம் கற்பிப்பதில் பயன்படக் கூடிய துணைக்கருவிகளின் பயன்களை பட்டியலமைப்பீர்கள்.

## 6.3. துணைக் கருவிகள்

மொழியாசிரியர், மொழிப்பாடம் கற்பித்தலில் காட்சிக்கருவி, கேள்விக்கருவி ஆகியவற்றின் தேவையை உணர்கிறார். புலனுணர்விற்கு விருந்தளிக்கக் கூடிய துணைக் கருவிகள் எவை என அறிகிறார். காட்சிக் கருவிகளில் முக்கியமானதும், எப்பொழுதும் பயன்படுத்தக் கூடியதுமான கரும்பலகை, வரைபடங்கள், தொடர் அட்டைகள் போன்றவைகள் பயன்படுமிடத்தை ஆசிரியர் சுட்டிக்காட்ட இயலும்.

கற்றல் கற்பித்தலில் பயன்படக்கூடிய துணைக் கருவிகளின் பட்டியலின் வழியே, கற்றலில் மாணவர் அடையும் பயனை ஆசிரியர் தீர்மானிக்க முடியும். இந்நிலையில் கற்பித்தலுக்கு துணையாக அமையக்கூடிய துணைக்கருவிகள், பொருள்கள் பற்றிய செய்திகளை ஆசிரியர் தெளிவாக அறிந்திருக்க வேண்டும். குறிப்பிட்ட பாடத்திற்காகவும், தேவைக்கும் மிகுதியான செய்திகளைத் துணைக்கருவிகளின் வழியே அளிக்கவும், கற்பித்தலை திறமையுடன் செயற்படுத்தவும் துணைக்கருவிகள் துணை செய்கின்றன. வகுப்பை நன்முறையில் வழி நடத்திச் செல்லவும் இது உதவுகிறது.

மொழியாசிரியர் துணைக்கருவிகளைச் செம்மையாகக் கையாளுவதற்கு நிறைந்த அனுபவமும் நல்ல பயிற்சியும் வேண்டும். கீழ்கண்டவாறு துணைக் கருவிகளை வகைப்படுத்தலாம்.

- முதலாவது வகை நேரில் காட்டப்படும் பொருள்கள். ஆசிரியர்கள் மாணவர்களை அழைத்து சென்று காட்டுதல். உதாரணமாக தஞ்சைப் பெரிய கோவில்

குறிப்பு

போன்ற இடங்களுக்கு நேரில் அழைத்துச் சென்று காட்டுதல் மாணவா்களுக்கு நன்மை தரும்.

- இரண்டாவது வகையைச் சாா்ந்தவை பொம்மைகள். பொருள்களை நேரே பாா்க்க முடியாத போது அவற்றைப் போல மரம் மற்றும் கணிமண் ஆகியவற்றால் செய்யப்பட்ட பொம்மைகளைக் காட்டலாம்.
- மூன்றாவது வகையைச் சாா்ந்தவை படங்கள். அச்சிட்ட படங்கள், கையினால் வரையப்பெற்ற ஓவியங்கள், நிழற்படங்கள் ஆகியன இதிலடங்கும்.
- நான்காவது வகையைச் சாா்ந்தவை மாதிரிகள். நன்கு தோ்ந்தெடுக்கப்பெற்றுத் திறம்படப் பயன்படுத்தப்பட்டால் இத்துணைக் கருவிகள் நிலையான பயனுள்ள கவா்ச்சிகளை மாணாக்கரிடையே தோற்றுவித்து அவா்களைக் கற்க ஊக்குவிக்கும் என்று மெக்கவுன் என்பாரும், ராபா்ட்ஸ் என்பாரும் கூறுகின்றனா்.

உளநூற்படி கண்ணால் பாா்த்துக் கற்பது நீண்ட நாள் நினைவில் நிற்கும். மறதி ஏற்படாது''.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதுக.**
**ஆ. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு ஆராய்க.**

1. துணைக்கருவிகளின் நோக்கம் என்ன?

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

2. துணைக் கருவிகளின் ஏதேனும் ஒரு வகையைக் கூறுக?

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

## 6.4. துணைக்கருவிகளின் வகைகள்

துணைக்கருவிகளை பயன்படுத்தி புலன்கள் வழியாகவே அனைவரும் கல்வி கற்கின்றனா். புலன்களைப் பயன்படுத்திக் கற்பதே சிறந்த, நிலைத்த அறிவை ஏற்படுத்தும். ஐம்புலன்களையும் நாம் கல்வி கற்பதில் பயன்படுத்தினாலும் கண் மற்றும் செவி போன்றவற்றை மிகுதியாகப் பயன்படுத்துகிறோம். இந்த இருபுலன்கள் வாயிலாக நாம் பெறும் அனுபவங்கள் சிறந்தனவாக இருக்கின்றன. எனவே இவ்விரு புலன்களையும் கல்வியில் பயன்படுத்துகிற அளவைக் கருதி இக்கருவி காட்சிக் கேள்விக் கருவி என்றும் இவ்வனுபவங்களைத் தருகின்ற கருவிகள் காட்சிக் கேள்விக் கருவிகள் என்றும் பெயா் பெற்றன. இவற்றைக் குறித்து கீழே காண்போம்.

**கற்பித்தலில் பயன்படும் துணைக்கருவிகள்**

1. கரும்பலகை
2. மின்னட்டைகள்
3. விளம்பரப்பலகை
4. வரைபடங்கள்
5. விளக்கப்படங்கள்
6. தேசப்படங்கள்
7. கேலிப்படங்கள்
8. சுவரொட்டிகள்
9. மாதிரிகள்
10. படத்தொகுப்பேடு
11. தொலைக்காட்சி
12. உலகப்படங்கள்
13. பொம்மலாட்டம்
14. காந்தப்பலகை
15. புகைப்படக்கருவிகள்
16. கண்ணாடித்தாள்கள்
17. சொல்லட்டைகள்
18. சுழலட்டைகள்
19. எபிடயாஸ் கோப்
20. நழுவம் படம் வீழ்த்தி
21. 16 எம்.எம்.கருவி
22. 35 எம்.எம் கருவி
23. படச்சுருள் வீழ்த்தி
24. வானொலி
25. ஒலிப்பதிவு நாடாக்கருவி
26. ஒலிப்பதிவுத் தட்டு
27. தலைக்கு மேல் பிம்பம் வீழ்த்தி
28. சேகரிப்பைகள்
29. மென்பலகை
30. வீடியோ சாதனங்கள்
31. கணிப்பொறிகள்

**எட்கர் டேலின் அனுபவக்கூம்பு**

பொதுவாக மனிதன் பெறும் அனுபவங்களை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம் என்று கல்வியாளரான எட்கர்டேல் கூறுகிறார். அவை,

1. காட்சிக் கருவிகள்
2. கேள்விக் கருவிகள்
3. காட்சிக் கேள்விக் கருவிகள்

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு:அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதுக.**
**ஆ. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு ஆராய்க.**

3. கற்பித்தலில் பயன்படும் துணைக்கருவிகள் ஏதேனும் ஐந்தினைக் கூறுக?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………


4.துணைக்கருவிகள் எத்தனை வகைப்படும்?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

குறிப்பு

**எட்கார்டேலின் அனுபவக் கூம்பு**




### 6.4.1. காட்சிக்கருவிகள்

கண்ணால் மட்டுமே கண்டுணரக் கூடிய கருவிகளைக் கொண்டு கற்பித்தலை சிறப்படையச் செய்யலாம். அவ்வகைக் கருவிகள் காட்சிக் கருவிகள் எனப்படுகின்றன.

| | |
|---|---|
| 1. கரும்பலகை | 2. வரைபட அட்டை |
| 3. செய்திப்பலகை | 4. கேலிச்சித்திரம் |
| 5. சுவரொட்டி சித்திரம் | 6. விளக்கப்படங்கள் |
| 7. மாதிரிகள் | 8. மின்னட்டைகள் |
| 9. படத்தொகுப்பு | 10. தேசப்படங்கள் |
| 11. உலகப்படங்கள் | 12. காந்தப்பலகை |
| 13. சொல்லட்டைகள் | 14. சுழலட்டைகள் |
| 15. 16 எம்எம் கருவி | 16. 35 எம்எம் கருவி |
| 17. எபிடையாஸ்கோப் | 18. தலைக்கு மேல் பிம்பம் வீழ்த்தி |
| 19. நழுவங்கள் | 20. பொம்மலாட்டம் |
| 21. கண்காட்சிகள் | 22. நாளிதழ்கள் |

### 1. கரும்பலகை

கரும்பலகையைச் சுண்ணப்பலகை என்றும் அழைப்பார்கள். இது இங்கிலாந்து நாட்டில் முதன்முதலாகத் தோன்றி சுமார் 400

ஆண்டுகளாக பயன்பட்டு வருகின்ற சிறந்த காட்சித்துணைக் கருவியாகும். ஆசிரியர் முக்கியமான ஒரு செய்தியைக் கரும்பலகையில் குறிக்கும் போது மாணவரின் கவனம் நிலைநிறுத்தப் பெறுகிறது. கரும்பலகையை ஓர் உயிருள்ள உதவியாளன் என்றுதான் ஆசிரியர் கருத வேண்டும். "உண்மையில் எந்த மாநிலத்திலோ, நாட்டிலோ கரும்பலகையின்றி ஒரு நல்ல பள்ளியையோ, கரும்பலகையையோ அடிக்கடி பயன்படுத்தாத பெருமைமிக்க ஆசிரியரை பார்க்கவில்லை" – ஹொராஸ்மன். ஆசிரியரின் எண்ணத்தைச் சுழலும் வேகத்தில் கரும்பலகையானது பிரதிபலிக்கச் செய்கின்றது. மேலும் ஆசிரியருடன் சேர்ந்து உழைக்கிறது.

**கரும்பலகையை பயன்படுத்தும் முறை**

- வகுப்பில் கரும்பலகை தினமும் சுத்தம் செய்யப்பட்டு இருக்க வேண்டும்.
- வெளிச்சம்படும் படியாகவும், வேண்டாத ஒளி பிரதிபலிப்பு ஏற்படா வண்ணம் அமையுமாறும் பார்த்துக் கொள்ள வேண்டும்.
- எழுதுவதற்கு தேவையான சுண்ணக் கட்டிகள், அழிப்பான் போன்றவற்றுடன் செல்ல வேண்டும்.
- ஆசிரியர் நன்றாகவும், தெளிவாகவும் கரும்பலகையில் எழுத வேண்டும்.
- பெரிய வடிவில் எழுத வேண்டும்.
- மேலிருந்து கீழும் இடப்புறத்திலிருந்து வலபுறம் நோக்கியும் எழுத வேண்டும்.
- ஆசிரியருக்கு இடப்புறத்தில் இருக்கவேண்டும்.
- 4’அகலம் தரையிலிருந்து 26’, 39’’ உயரம் கொண்டதாக அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- வகுப்பில் உள்ள கரும்பலகைக்கும், முன் வரிசையில் உட்காரும் மாணவர்களுக்கும் குறைந்தது மூன்று மீட்டர் இடைவெளி இருத்தல் இன்றியமையாததாகும்.

**பயன்கள்**

பலவிதமான வினாக்கள், பாடச்சுருக்கம், தேசப்படங்கள், குறிப்புத்திட்டங்கள் போன்றவற்றை கரும்பலகையில் எழுதவும், வகுப்பிலுள்ள மாணவர்கள் எல்லோரும் கற்பதற்கும் உதவியாக இருக்கிறது.

**கரும்பலகையின் வகைகள்**

1. பச்சை வண்ணக்கரும்பலகை

குறிப்பு

2. சுவர் கரும்பலகை
3. மரக்கரும்பலகை
4. சுருட்டும் கரும்பலகை

**2. வரைபட அட்டை**

ஒரு வரைபடம் விளக்கப்படமாகவோ, கோட்டுப்படமாகவோ, இரண்டும் சேர்ந்ததாகவோ இருக்கலாம். எழுத்துக்கள் பெரிய அளவில் இருத்தல் வேண்டும். ஒரு வரைபடமானது பூவின் பல பாகங்களாகவோ, இலைகளின் பல வகைகளாகவோ அல்லது வரிசையான விளக்கப்படங்களாகவோ இருக்கலாம். இவற்றில் சுழல் அட்டை, மின் அட்டை, பொருத்து அட்டை, தொடர் அட்டை போன்றவை அடங்கும்.

வரைபடங்கள் வரைந்து பாகங்கள் சிறிய குறிப்புகளுடன் குறிக்கப்பட்டால் அவை விளக்கப்படங்கள் ஆகும். குறிப்பிடும் கருத்தை எளிமையாகவும், தெளிவாகவும் ஆக்குவதே வரைபடங்களின் நோக்கமாகும். ஒரு கலந்துரையாடலைத் தொடங்கவோ பாடத்தை திருப்புதல் செய்யவோ படங்கள் உதவுகின்றன.

**3. செய்திப் பலகை**

மாணவர்கள், ஆசிரியர்கள் உபயோகிக்கும் பொருட்டு வகுப்பு அறையில் செய்திப்பலகைகளுக்கு அதிக இடம் ஒதுக்க வேண்டும். படங்களையும் நாளிதழ் துண்டுகளையும் குண்டூசியினால் பொருத்தி வைக்க செய்திப்பலகையானது மிருதுவான துணியால் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

புதிய கருத்துகளைப் பற்றிக் கற்பிக்கும் போது அப்பாடப்பொருள் தொடர்பான படங்கள், செய்திகள் முதலானவற்றை அமைக்கலாம். செய்திகளுக்கான தலைப்புகள் தந்தி மொழியைப் போல சுருக்கமாகவும், அழகாகவும் அமைக்கப்பட வேண்டும்.

**பயன்கள்**

1. நாளிதழ் துண்டுகள்
2. படங்கள்
3. சுவரொட்டி விளம்பரங்கள்
4. அறிவிப்புகள்
5. மாணவர்கள் செய்துமுடித்த பயிற்சிகள் போன்றவற்றை வெளியிடலாம்.
6. உலகத்தின் பல பகுதிகளில் நிகழும் செய்திகள் அறிவிப்புகள் போன்றவற்றை வெளியிடலாம்.
7. செய்திப்பலகை (அ) அறிவிப்புப் பலகைகள் உபயோகிக்கப்பட வேண்டும்.

**4. கேலிச்சித்திரம்**

ஒரு கருத்து அல்லது நிகழ்வை அல்லது ஒரு நபரைப் பற்றிய விமா்சனம் நகைச்சுவை உணா்வை உண்டாக்கும் வண்ணம் வரையப்படுவதே கேலிப்படம் ஆகும். மக்கள் மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த இப்படங்கள் உதவுகின்றன.

**5. சுவரொட்டிகள்**

மக்களின் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் சுருக்கமான செய்திகள் அளிக்க சுவரொட்டிகள் தயாரிக்கப்படுகின்றன. இவை வியாபார ரீதியாகவும், மக்களுக்கு விழிப்புணா்வை ஏற்படுத்துவதற்காகவும் பயன்படுகின்றன.

**6. விளக்கப்படங்கள்**

கூறுகள், பொருள், சுருக்கக் குறியீடுகள், கோடுகள் ஆகியவற்றைக் கொண்டு கருத்தை விளக்கும் படங்கள் விளக்கப்படங்கள் ஆகும். இவை கோடுகளையும், குறியீடுகளையும் கொண்டிருக்கும். விளக்கப்படங்களில் பலவகைகள் உள்ளன. அவற்றின் சில பின்வருமாறு:

1. மர உருவ விளக்கப்படம்
2. தொழில் நுட்ப விளக்கப்படம்
3. செயல் விளக்கப்படம்

**7. மாதிரி உருவங்கள்**

மாதிரி உருவங்கள் எனப்படுபவை உண்மைப் பொருளைப் போன்றே தோற்றமளிக்கும் வகையில் செய்யப்படும். நீளம், அகலம், உயரம், என்ற முப்பரிமாணம் கொண்ட உருவங்களாகும். ஐவகை நிலங்களைப் பற்றி நடத்தும் பொழுது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை நிலக்காட்சிகளை முப்பரிமாண உருவங்களாகச் செய்ய இயலும். இதில் உருவங்கள், மாதிரிப் பொருட்கள், பொம்மைகள், காட்சி மேடைகள், பறவைகள், பூச்சிகள், கிளிஞ்சல்கள், செடிகள் ஆகியன அடங்கும்.

**8. மின் அட்டைகள்**

மின் அட்டை என்பது அட்டையின் பின்புறம் மின் இணைப்புக் கலங்களிலிருந்து மின் இணைப்புக் கொடுக்கப்படும். அட்டையின் முன்புறம் பொத்தான்களும், விளக்குகளும் இருக்கும். சரியான விடைக்கு நேராக விளக்கு எரியும்.

**9. படத்தொகுப்பேடு**

செய்தித்தாள்கள், சிறப்பிதழ்கள் போன்றவற்றில் வெளிவரும் படங்களைக் கத்தரித்துப் படத்தொகுப்பேட்டில் சேகரித்து வைத்துக்

குறிப்பு

கொண்டால் தேவையான பொழுது மொழி கற்பித்தலில் இவற்றை நன்கு பயன்படுத்தலாம்.

**10. தேசப்படங்கள்**

சமூக அறிவியல் பாடத்தைக் கற்பிக்க இப்படங்கள் உதவுகின்றன. ஒரு நாட்டின் ஆறுகள். கனிம வளங்கள், தேசியச் சாலைகள், இருப்புப் பாதைகள், விவசாயப் பொருட்கள், இயற்கை வளங்கள் ஆகியவற்றைக் குறிக்கத் தேசப்படங்கள் துணை செய்கின்றன.

**11. உலகப்படங்கள்**

உலகின் பல இடங்களுக்குச் சென்று பார்க்க முடியவில்லை என்றாலும் உலக வரைபடம் மூலம் உலகின் பல இடங்களைத் தெரிந்து கொள்ளலாம். உலகத் தலைவர்கள், அறிவியல் விஞ்ஞானிகள் போன்றோரைப் பற்றிய வாழ்க்கை வரலாறுகளைக் கற்பிக்கும் போது அவர்களது உருவப்படங்களை பயன்படுத்துவது சிறந்ததாகும்.

**12. காந்தப்பலகை**

காந்தப்பலகை என்பது கரும்பலகை போன்றது. படங்களையும், பொருட்களையும், சிறு காந்தத் துண்டுகளை வைத்துக் காந்தப்பலகை மீது பொருத்தலாம். காந்தங்கள் பின்புறத்தில் பொருத்தப்பட்ட மாதிரி உருவங்களையும் காந்தப்பலகையில் பொருத்தலாம். இதனால் அவை விழுவது தடுக்கப்படும்.

**13. சொல்லட்டைகள்**

கடினமான சொற்களை சொல்லட்டையில் எழுதி அதனை மாணவரை வாசிக்கச் செய்யலாம். சொல்லட்டையின் பின்புறம் அதற்கான அருஞ்சொற் பொருள் எழுதி அதன் அர்த்தங்களையும் மாணவர்களுக்குக் கொடுக்கும் பொழுது மாணவர்கள் எளிதில் படிப்பதற்கு வசதியாக இருக்கும்.

**14. சுழலட்டைகள்**

இவ்வகை அட்டையில் இருவட்ட வடிவமான அட்டைகள் இருக்கும். ஒன்று சிறியதாகவும், மற்றொன்று பெரியதாகவும் இருக்கும். இரண்டும் பொதுமையத்தில் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இரண்டும் ஒன்றின் மேல் ஒன்று சுழலும்படி அமைத்தல் வேண்டும். பெரிய அட்டையை ஆறு பகுதிகளாகப் பிரித்து அதே போல் சிறிய அட்டையையும் ஆறுபகுதிகளாகப் பிரித்து சிறிய அட்டையில் எழுதப்பட்டிருப்பதற்கான சரியான விடையை, அதனைச் சுழட்டி பெரிய அட்டையில் காணப்படும் விடையுடன் பொருத்த வேண்டும். இதுவே சுழலட்டை எனப்படும்.

**15. 16 எம்.எம் கருவி (அ) திரைப்படங்கள்**

16 எம்.எம். அல்லது 8 எம்.எம் திரைப்படங்கள் சிக்கலானதும், பொருட்செலவு பிடிக்கக் கூடியதும் ஆகும். இதற்கு விலை உயர்ந்த கருவிகளும் பயிற்சி பெற்ற உதவியாளர்களும் அதிகப் பணமும் தேவைப்படும். எனினும் கருத்துப் பரிமாற்றத்திற்குத் திரைப்படங்களைக் காட்டிலும் வலிமை வாய்ந்த சிறப்பான சாதனங்கள் இல்லை எனலாம். கற்பிக்க வேண்டிய பாடத்தில் அசைவுகளைக் காண்பிக்க வேண்டியிருந்தாலோ, கருத்துக்களைத் தெளிவாக விளக்க வேண்டியிருந்தாலோ, உணர்ச்சி பூர்வமான சூழலை உருவாக்க வேண்டியிருந்தாலோ திரைப்படங்களைத் தேர்ந்தெடுக்கலாம். திரைப்படங்கள் மிக நீளமாகத்தான் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. சில கல்வி நோக்கங்கள் நிறைவேறுவதற்கு மிகக் குறுகிய கால அளவிற்கு ஓடும் திரைப்படங்கள் போதுமானவை.

**16. 35.எம்.எம் கருவி**

35.மி.மீ நிழற்படத்தில் ஒன்று முதல் மூன்றடி வரை வெட்டி எடுத்து அதில் 30 முதல் 50 படங்களை நிழற்பட முறையில் அச்சிட்டுப் பயன்படுத்துவதே நிழற்படங்கள் எனப்படும். நிழற்படத் துண்டுகளில் கருப்பு வெள்ளை மற்றும் வண்ண நிழற்படங்கள் என இருவகை உண்டு.

**17. எபிடயாஸ்கோப்**

இக்கருவிகள் எபிஸ்கோப், டயாஸ்கோப் என்ற இரு தனித்தனியான கருவிகள் இணைத்து உருவாக்கப்பட்ட கருவியாகும். சாதாரணமாக பொருளின் ஒளி ஊடுருவும் தன்மையைக் கொண்டு ஒளிபுகும் பொருள் என்றும், ஒளிபுகாப் பொருள் என்றும் இருவகைப்படும். கல்வி கற்கப் பயன்படும் புத்தகத்திலுள்ள படங்களையோ அல்லது சில சிறிய பொருட்களையோ திரையில் வீழ்த்தக் கூடிய கருவிக்கு எபிஸ்கோப் என்று பெயர். ஒளிப்புகக் கூடிய கண்ணாடியில் தயாரித்த நழுவங்களை பெரிதாக்கி திரையில் வீழ்த்தக் கூடிய கருவிக்கு ‘டயாஸ்கோப் அல்லது மாயவிளக்கு’ என்று பெயர்.

**18. தலைக்கு மேல் பிம்பம் வீழ்த்தி (Over head projector)**

பாடத்திற்குத் தேவையான குறிப்புகளையும், சுருக்கக் குறிப்புகளையும், விளக்கப்படங்களையும் ஆசிரியர் முன் கூட்டியே ஒளிபுகும் தாள்களில் (Transparent Sheets) எழுதி, தலைமேல் படம் வீழ்த்தும் கருவி மூலம் திரையில் காட்டலாம். இதனால் கற்பித்தலுக்கு ஆகும் கால அளவு குறைகிறது. கரும்பலகையைப் பயன்படுத்துவதற்கு

மிகச் சிறந்த பதிலியாகத் தலைமேல் படம் வீழ்த்தும் கருவியைக் குறிப்பிடலாம். வண்ணமுள்ள, வண்ணமில்லாத ஒளிபுகும் தாள்களைப் பயன்படுத்தலாம்.

**குறிப்பு**

**பயன்கள்**

- ❖ மாணவரது ஆர்வத்தை தூண்டலாம்.
- ❖ அமைதியையும், கட்டுப்பாட்டையும் நிலைநிறுத்தலாம்.
- ❖ அறையை இருட்டாக்க வேண்டியதில்லை.

**19. நழுவங்கள்**

3¼ அங்குலம் சதுர அளவுக் கண்ணாடித் துண்டுகளைப் பயன்படுத்திக் கையாலேயே நழுவங்களைத் தயாரிக்கலாம். கண்ணாடித் துண்டின் மீது இந்தியன் மை, ஒட்டுவதற்காக முட்டையின் வெண்கருவை எழுதும் பக்கத்தில் தடவி அதன் மீது தேவையான படங்களை வரையலாம். இப்பக்கத்தை மற்றொரு கண்ணாடித் துண்டினால் மூடி ஓரங்களைக் கருப்பு அல்லது பழுப்பு நிறக்காதிதங்களைக் கொண்டு ஒட்ட வேண்டும். இதேபோல் கண்ணாடித் துண்டின் ஒரு பக்கத்தில் புகையைப் பிடித்து அல்லது வண்ணக் கலவையைப் பூசி ஊசியினால் கவனமாக எழுத்துக்களை எழுதலாம்.

**பயன்கள்**

- ❖ அதிகம் கற்றல், விரைவில் கற்றல், கூடுதல் நினைவாற்றல் திறன் முதலியன துணைக் கருவிகளைப் பயன்படுத்துவதால் ஏற்படுகின்றன.
- ❖ கற்பித்தல் மிகப் பயனுள்ளதாகவும், கற்றல் மிக எளிதானதாகவும் அமைகின்றன.

**20. பொம்மலாட்டம்**

இது பழமையான இந்திய கிராம கலை நிகழ்ச்சியாகும். பொம்மைகள் குணச்சித்திர வேடத்திற்கேற்ப உடையணிந்திருக்கும். பொம்மலாட்டக்காரர் கதைக்கேற்ப பொம்மையை அசைத்துக் கதையைக் கூறச் செய்வார். இது கற்றலுக்கு உதவும் மிகச் சிறந்த துணைக்கருவி.

**21. கண்காட்சிகள்**

பள்ளிகளில் அடிக்கடி கண்காட்சிகள் நிகழ்த்தப்படுகின்றன. இது மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் துணைக்கருவியாக உள்ளது. இது மாணவர்கள் மத்தியில் படைப்பாற்றல் வளர வழி செய்கிறது. இதற்கு பணச்செலவு அதிகமாகும், நேரம் அதிகம் செலவாகும்.

குறிப்பு

### 22. நாளிதழ்கள்

இது குறைந்த செலவில் எளிதில் கிடைக்கக் கூடியதாகும். இது அனைவருக்கும் எளிமையாகப் புரியும் வண்ணம் செய்தியை எடுத்துரைக்கிறது.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதுக.**
**ஆ. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு ஆராய்க.**

5. விளக்கப்படங்களின் வகைகளைக் கூறுக?

…………………………………………………………………………………….…
……………………………………………………………………………..………

6. காட்சிக்கருவிகள் ஏதேனும் இரண்டினைக் கூறுக?

……………………………………………………………………………..………
………………………………………………………………………………………

## 6.4.2. கேள்விக் கருவிகள்

புலன்களின் வாயிலாகவே அனைவரும் கல்வி கற்கின்றனர். ஐம்புலன்களையும் நாம் கல்வி கற்பதில் பயன்படுத்தினாலும் கண் மற்றும் செவியை மிகுதியாகப் பயன்படுத்துகிறோம். இந்த இரு புலன்களின் வாயிலாக நாம் கற்கின்ற அனுபவங்கள் சிறந்தவையாக இருக்கின்றன.காதால் கேட்கக்கூடிய துணைக்கருவிகள் இதில் அடங்கும்.

**கேள்விக் கருவிகளின் வகைகள்**

1. வானொலி
2. ஒலிப்பதிவு நாடா
3. மொழிப் பயிற்றாய்வுக் கூடம்

### 1. வானொலி

சுவை மிக்க நிகழ்ச்சிகளை மக்கள் பலரும் ஒரே நேரத்தில் கேட்டு மகிழ உதவுவது வானொலி. இது கல்வித் துறையில் மாணாக்கர்களுக்கு அறிவு புகட்டவும் பொது அறிவை வளர்க்கவும் உதவுகிறது. வானொலிப் பாடங்களை இரு வகைகளாகப் பிரிக்கலாம்.

**நன்மைகள்**

- ❖ காலத்தாலும் தொலைவாலும் பிரிக்கப்பட்ட சிறந்த தலைவர்களின் பேச்சுக்களைக் கேட்கச் செய்கிறது.
- ❖ இசை, நாடகம் போன்ற நிகழ்ச்சிகளைக் கேட்க உதவுகிறது.

### 2. ஒலிப்பதிவு நாடா

கல்வி உலகில் தொழில் நுட்ப வளர்ச்சியின் ஆரம்ப காலகட்டத்தில் பயன்படுத்தப்பட்ட முக்கியமான துணைக்கருவியே ஒலிப்பதிவு நாடாக் கருவி. நாம் நாடாவில் பதிவு செய்து விட்டால் அதனை நம் விருப்பப்படி எத்தனை முறை வேண்டுமானாலும் போட்டுக் கேட்கலாம்.

**குறிப்பு**

ஒலிப்பதிவு நாடாக் கருவியில் காந்த சக்தி கொண்ட நாடாக்கள் இருக்கும். இதில் ஒலியின் அதிர்வுகள் பதிவு செய்யப்படுகின்றன. வேண்டாத ஒலிகளை அழித்து விட்டுப் புதிய ஒலிகளைப் பதிவு செய்யலாம்.

**பயன்படுத்துதல்**

மாணவர்களுக்குத் தேவையான குறிப்பிட்ட பகுதியை மட்டும் கற்றுத்தருவதற்கான ஒலிப்பதிவு நாடாக்கள் தயாரிக்கப்பட்டன. அவை கல்வி ஒலிப்பதிவு நாடாக்கள் என்றழைக்கப்பட்டன.

- ❖ மாணவர்களின் இயல்புக்கு ஏற்றவாறு மொழி நடையை ஆசிரியர் பயன்படுத்த வேண்டும்.
- ❖ ஒலிப்பதிவு நாடாக் கருவியைக் கொண்டு பாடம் நடத்தும் போது ஆசிரியர் பேசிக் கொண்டு இருக்காமல் மாணவரோடு சேர்ந்து உரையாட வேண்டும்.
- ❖ பாடப் பொருளைத் தெளிவாக விளக்க வேண்டும். நல்ல குரல் வளம், குரல் ஏற்ற இறக்கம், குரல் அழுத்தம் போன்ற உத்திகளால் மாணவர்களுக்குக் கற்றல் அனுபவத்தை அளிக்க வேண்டும்.

**நன்மைகள்**

- ❖ மாணவனின் கற்றலுக்கு உதவுகிறது.
- ❖ கேட்டல் திறனை வளர்க்கிறது.
- ❖ மொழிப்பாட வகுப்பில் இசையைக் கற்கப் பயன்படுகிறது.

**3. மொழிப் பயிற்றாய்வுக் கூடம்**

நவீன கற்பித்தல் சூழலில் மொழியைக் கற்றுக் கொள்ள உதவும் இன்றியமையாத ஒரு நுட்பமே மொழிப் பயிற்றாய்வுக் கூடம். எந்த ஒரு மொழியையும் மிக எளிதில் கேட்டல் மற்றும் காட்சி அனுபவத்துடனும், ஆர்வத்துடனும் மாணவர்களைக் கற்றல் செயலில் ஈடுபடுத்த இம்முறை உதவுகிறது. தாய்மொழி அல்லாத பிற மொழியைக் கற்க மொழிப் பயிற்றாய்வுக் கூடம் உதவுகிறது.

தொழில் நுட்ப வளர்ச்சியானது கல்வித்துறையிலும் நல்ல மாற்றங்களைத் தந்துள்ளது. தாய்மொழியல்லாத பிறமொழி ஒன்றை முறைப்படிக் கற்றுக்கொள்ள மொழி பயிற்றாய்வுக் கூடம் பயன்படுகின்றது. 1960களில் மேலை நாடுகளில் வளர்ச்சி பெற்ற இந்நிலை தற்போது சென்னையிலுள்ள உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் வரை வந்துள்ளது.

பொதுவாகப் பிற மொழியினைக் கற்றுக்கொள்ள விரும்புபவருக்கு அம்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவரையே

பேசச் செய்து, பதிவு செய்து, கேட்டு பேச்சுப் பயிற்சிக்கு வாய்பளிக்கிறது இப்பயிற்சிக் கூடம்.

மொழி கற்பித்தலின் நோக்கங்கள் புரிந்து கொள்ளுதல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகும். இவற்றை மொழியின் அடிப்படைத் திறன்கள் என்பர். ஒவ்வொரு மொழியிலும் உள்ள ஒலிப்பு முறைகள், பேசும்போது குரலில் தோன்றும் ஏற்றத்தாழ்வு, பேசும் வேகம் இவை இயல்பாக இருததல் வேண்டும். ஆய்வுக்கூடப் பயிற்சி இத்தகைய நோக்கங்களை நிறைவு செய்கின்றது.

மொழிப் பயிற்றாய்வுக் கூடம் தனித்தனிக் கற்றலை மையமாகக் கொண்டது. தனித்தேவைகளை நிறைவு செய்கின்றது. வாய்மொழியில் பயிற்சி பெறுவதற்குச் சிறப்பிடம் தருகிறது.

**அமைப்பு**

1. கருவறைக் கருவி (Console)
2. முதன்மை நிலை நாடா (Master Tapes)
3. இரட்டைப் பகுதிகள் உள்ள நாடர் (Twin track tapes)
4. ஒலிப்பதிவு நாடாக் கருவிகள் (Tape Recorders)
5. தலையணித் தொகுதிகள் (Headsets)
6. நுண்ணொலிக் கருவிகள் (Microphones)

**1. கருவறைக் கருவிகள் (Console)**

கட்டளையிடும் கருவியாக இதைக் கொள்ளலாம். இதன் மூலம் ஆசிரியர் மொழிப்பயிற்றாய்வுக் கூடத்தில் பயிற்சி பெறும் மாணவர்களுடன் தொடர்பு கொள்வர்.

பொதுவாக இக்கருவியில்,

அ. ஒலிபரப்பு மற்ற ஒலிப்பதிவு நாடாக் கருவிகளில் ஒலிப்பதிவு செய்து கொள்வதற்கேற்ற வகையில் அமைந்த பொத்தான்கள் (Distributing Switches) இருக்கும்.

ஆ. பயிற்சியைக் கண்காணித்துத் திருத்த, மதிப்பிடத்தக்க வகையில் உள்ள நிர்வாகப் பொத்தான்கள் (Monitoring Switches) இருக்கும்.

இ. பயிற்சி பெறும் தனி மாணவருடன் பயிற்சி தொடர்பாக உரையாட ஏற்ற முறையில் அமைந்த பொத்தான்கள் (Intercom Switches) இருக்கும்.

ஈ. பயிற்றாய்வுக் கூடத்தில் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கும் மாணவர்களுடன் பொதுவான குறிப்புக்களைக் கூறுவதற்கு ஏற்ற பொத்தான்கள் (Group call Switches) அமைந்திருக்கும்.

குறிப்பு

உ. பயிற்சி பெறுபவர்களோடு வகுப்பின் பிற மாணவர்களுக்கும் செய்திகளைத் தரும் வகையில் அமைந்த பொத்தான்கள் (All call Switches) அமைந்திருக்கும்.

**2. முதன்மை நிலை நாடாக்கள் (Master Tapes)**

பயிற்சி பெறும் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவரால் ஒலிப்பதிவு செய்யப்பட்ட பயிற்சிக்காக அமைந்த நாடக்களே முதன்மை நிலை நாடாக்கள் ஆகும்.

**3. இரட்டைப் பகுதிகள் உள்ள நாடாக்கள் (Twin track tapes)**

இந்த வகை நாடாக்கள் மொழிப்பயிற்றாய்வுக் கூடத்தின் சிறப்பு அங்கம் எனலாம். சில பயிற்சிகளுக்கு இவ்வகை நாடாக்கள் பயன்படுத்தப் பெறும்.

எடுத்துக்காட்டாக, ஒலி திருத்தத்திற்கான பயிற்சிகளில் அல்லது ஒலி அழுத்தத்திற்கான பயிற்களில் பயன்படுகிறது. மாதிரிப் பேச்சுகளை நாடாவின் ஒரு பகுதியிலும் மற்றும் பயிற்சியாளர்களின் ஒலிப்பு அடுத்த பகுதியிலும் அமையும். மாதிரி ஒலிப்பதிவு அழியாது(Permanent). பயிற்சியாளரின் ஒலிப்பதிவு அழியக் கூடியது. இது,

மாதிரி ஒலிப்பு மாதிரி ஒலிப்பு
―――――――――――――――
பயிற்சியாளர் ஒலிப்பு

என்ற வகையில் அமைந்திருக்கும்.

**4. ஒலிப்பதிவு நாடாக் கருவிகள் (Tape Recorders)**

பயிற்சியாளர்கள் ஒவ்வொருவரும் பயிற்சி பெறுவதற்காக இக்கருவிகள் கூடத்தில் உள்ளன. ஆய்வுக்கூடத்தின் வசதிற்கேற்ப இக்கருவிகளின் எண்ணிக்கை அமைந்திருக்கும். பிற கருவியினின்றும் தடுப்புகளால் பிரிக்கப்பட்ட பகுதிகளில் ஏற்ற இருக்கை வசதிகளுடன் கூடியதாகக் கருவிகள் வைக்கப்பட்டிருக்கும்.

**5. தலையணித் தொகுதிகள் (Headsets)**

பயிற்சியாளர்கள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட பகுதிகளில் சென்று அமர்ந்து ஒலிப்பதிவு நாடாக்கருவிகளுடன் தலையணித் தொகுதியை அணிந்த பின்னர் பயிற்சிக்கு ஆயத்தமாகுதல் வேண்டும். இத்தொகுதியில் இரண்டு காதுகளுடன் இணைந்த ஒலிபேசிகளும் (Ear Phones) அதோடுகூடப் பயிற்சியாளர் பதில் தருவதற்கு அமைந்த நுண்ணொலிக் கருவியும் அமைந்திருக்கும். இத்தலையணித் தொகுதியை அணிந்தவுடன் பயிற்சியாளர் ஒலிப்பதிவு நாடாவுடன் அல்லது கருவறைக் கருவியுடன் தொடர்பு கொள்ள இயலும். பிற

பயிற்சியாளர்களின் ஒலிப்புகள் பயிற்சியாளரைப் பாதிக்கா வண்ணம் தலையணித் தொகுதிகள் அமைந்துள்ளது. கவனச்சிதைவைத் தடுக்கவும் துணைபுரிகின்றது.

**6. நுண்ணொலிக் கருவிகள் (Microphones)**

பயிற்சியாளர் பயிற்சியின் போது தூண்டலுக்கு ஏற்ற துலங்களைச் செய்தால் அவற்றை ஒலிப்பதிவு நாடாக்களில் பதிய வைப்பதற்காக அமைந்து இருக்கும் நுண்கருவி இதுவாகும். தலையணித் தொகுதியை அணிந்தவுடன் ஒலி பேசிகள் இரண்டும் இரண்டு காதுகளில் அமைவது போலவே வாய்க்குச் சற்று முன்னர் ஒலியை ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் இக்கருவி அமையும்.

**கற்றல் வகைகள்**

ஆய்வுக் கூடங்களில் கற்பித்தலானது கீழ்க்கண்ட வகைகளில் கொடுக்கப்படுகிறது.

1. ஒலிப்பரப்பு வகை (Broadcast Procedure)
2. நூலக வகை (Linear Operation)
3. தொலைபேசி வகை (Dial access)
4. இணைந்த முறை (Combination Type)

**1. ஒலிபரப்பு வகை (Broadcast Procedure)**

பயிற்சியாளர்கள் பகுதியிலிருந்து ஒலிப்பரப்பப்படும் பேச்சு ஒலியை மாணவர்கள் தங்களின் தலையணித் தொகுதியில் கேட்டு நுண்ணொலிக் கருவியில் அதேபோல் உச்சரிக்கப் பழகுவார்கள். இம்முறையில் ஆசிரியரே முன்னிலைப்படுத்தப்படுவார். பயிற்சி முறைகளை ஆசிரியரின் கட்டுப்பாட்டுக்குள் மாணவர்கள் பெற இயலும்.

**2. நூலக வகை (Linear Operation)**

மொழிப் பயிற்றாய்வுக் கூடத்தில் நூலகம் இருக்கும். அங்கு ஒலிப்பதிவு நாடாக்கருவிகள் இருக்கும். மாணவர்கள் தங்களுக்குத் தேவையானவற்றை எடுத்துச்சென்று ஒலிக்கச் செய்து, ஒலிப்பதிவுசெய்து, மீண்டும் மீண்டும் கேட்டு பயிற்சி பெறுவார்கள். மாணவர்களின் ஆர்வம், வேகம், ஈடுபாடு ஆகியவற்றிற்கேற்ப பயிற்சியில் துல்லியம் பெறுவார்கள்.

**3. தொலைபேசி வகை (Dial access)**

மாணவர்கள் தங்களுக்குரிய பகுதியில் உள்ள தொலைபேசி எண்ணை சுழற்றியவுடன் அதற்குரிய மின்தொடர்பு அந்த எண்ணுக்குரிய ஒலிப்பயிற்சியை அளிக்கும். அதைக் கேட்டு மாணவர்கள் ஒலிக்கப் பழகுவார்கள்.

குறிப்பு

**4. இணைந்த முறை** (Combination Type)

மாணவர்கள் தனித்தனித் தடுப்புப் பிரிவுகளில் அமர்ந்து ஒலிபரப்புவகை மற்றும் நூலகவகை இரண்டையும் மேற்கொண்டு பயிற்சி பெறுவார்கள்.

**மொழிப் பயிற்றாய்வுக் கூடத்தின் சிறப்புத்தன்மைகள்**

அ. மீளச் செய்தல்

ஆ. பாடப்பகுதிகளைத் தேர்ந்தெடுத்தல்

இ. சுயவேகம்

ஈ. திருத்தம் பெறுதல்

**அ) மீளச் செய்தல் (Retracing)**

மொழி சில வரையறைகட்குட்பட்ட முறைகளில் அமைகின்றது. எனவே கேட்க, போலச்செய்ய, ஒலிக்க மீண்டும் ஒலிக்க பிழைகளை உணர, திருத்த பயிற்றாய்வுக் கூடத்தில் வாய்ப்பு உள்ளது.

**ஆ. பாடப்பகுதிகள் தேர்ந்தெடுத்தல் (Material Selection)**

பதிவு செய்யப்பட்ட மொழிப்பயிற்சி நாடாக்கள் இங்கு உள்ளதால் மாணவர்கள் தங்களுக்குத் தேவையானவற்றைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சி பெறலாம்.

**இ) சுயவேகம் (Self pace)**

மொழிப் பயிற்சிகளில் பயிற்சியாளர்கள் தங்கள் வேகத்திற்கு ஏற்பச் செயல்படலாம் பிறர் குறுக்கீடு இதில் இல்லை.

**ஈ) திருத்தம் பெறுதல்**

பயிற்சி பெறும்போது பயிற்சியாளர்களிடம் குறைகள் காணப்படின் கருவறையின் மூலம் ஆசிரியர் திருத்தம் தருவார். தனிப்பட்ட முறையில் திருத்தம் பெறுவதால் செம்மை செய்துகொள்ள வழி கிடைக்கிறது.

**பயன்கள்**

1. தாய்மொழியாளரின் இயல்பான பேச்சுக்களைக் கேட்டுப் பயிற்சி பெறும் வாய்ப்புகள் உள்ளன.
2. பயிற்சியாளர்கள் வாய்மொழிப் பயிற்சியில் கலந்து கொள்ள அதிகக் காலம் கிடைக்கிறது.
3. பயிற்சியாளர்கள் குறுக்கீடு இல்லையாதலால் எவ்வித அச்சமும், கூச்சமுமின்றி பயிற்சி பெறலாம்.
4. கருவறை மூலமாக ஆசிரியர் தனிக்கற்றலுக்கு உதவமுடியும்.
5. தங்கள் வேகத்திற்கும், திறமைக்கும் ஏற்பக் கற்க இயலும்.
6. விரும்பிய பயிற்சிகளில் பன்முறைபயிற்சிபெறலாம்.

குறிப்பு

7. தங்கள் தவறுகளைத் தாங்களே கண்டு திருத்திக் கொள்ளமுடியும்.

**மொழிப் பயிற்றாய்வுக் கூடம் - மதிப்பீடு:**

பிற மொழியைக் கற்றுக்கொள்ளவே பெரிதும் பயன்படும் இவ்வாய்வுக் கூடங்களில் நிறைகளோடு சில குறைகளும் உள்ளன.

1. ஒலியினை மட்டுமே கற்பிக்க முடியும்.(ஒலிகற்றல் மட்டுமே மொழிகற்றல் ஆகாது).
2. பயிற்சியாளர்களுக்கு ஆர்வம் இல்லையேல் பயன் இல்லாது போய்விடும்.
3. பாடத்திட்டம் பயிற்சிகள் தயாரிப்பதில் ஆசிரியருக்குச் சுமை அதிகம்.
4. மொழிப்பாடக் கருவிகளை இயக்குவதில் சிலருக்கு இடர்பாடுகள் ஏற்படக் கூடும்.
5. பொருட்செலவு மிகுதியாகும். அத்தொடு கூட மிகச் சிலருக்கே குறிப்பிட்ட நேரத்தில் பயிற்சி தரமுடியும்.

**மொழிப் பயிற்றாய்வுக் கூடமும் - தாய்மொழியும்**

பிற மொழிகளைக் கற்கப் பயன்படும் இவ்வாய்வுக் கூடம் தாய்மொழிக் கற்பித்தலிலும் துணை புரியக்கூடும். ஒவ்வொரு தாய்மொழியும் பிறருக்கு அந்நிய மொழிதான். தமிழ்மொழியில் ஒலித்தற்கரிய ஒலிகள் உள்ளன. எனவே மொழிப் பயிற்றாய்வுக் கூடத்தின் மூலமாக தொடக்கநிலை, நடுநிலை மாணாக்கர்களுக்கு ஒலித்தற் பயிற்சி கொடுப்பதன் மூலம் அவர்களின் வாய் மொழிப் பயிற்சியை மேம்படுத்தலாம்.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதுக.**
**ஆ. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு ஆராய்க.**

7. கேள்விக் கருவிகளின் வகைகளைக் கூறுக?

.............................................................................................................

.............................................................................................................

8. மொழிப் பயிற்றாய்வுக் கூடத்தில் கொடுக்கப்படும் பயிற்சிகள் யாவை?

.............................................................................................................

.............................................................................................................

## 6.4.3. காட்சிக் கேள்விக் கருவிகள்

காட்சிக் கேள்விக் கருவிகள் ஆர்வத்தைத் தூண்டி ஊக்கமுடன் கற்க வழி செய்கின்றன. ஒரே நேரத்தில் கண்ணால் பார்த்து, காதால் கேட்கக்கூடிய சாதனங்கள் இதில் அடங்கும். எ.கா: திரையிடக் கூடிய துணைக்கருவிகள், திரைப்படங்கள்.

குறிப்பு

***வரையறை***

***" காட்சி கேள்விக் கருவியானது பாடத்தை உறுதியுடனும், யதார்த்தமாகவும் ஜீவகளையுள்ளதாகவும் கற்க உதவும் சாதனம்."*** என்று எஸ்.ஜேம்ஸ் கூறுகிறார்.

***" காட்சி கேள்விக் கருவியானது கற்றலுக்கு வலுவூட்டலை ஏற்படுத்தும் மற்றும் துவக்குவிக்கும் உணர்ச்சிப்பொருட்கள் ஆகும்"*** என்று பர்டன் கூறுகிறார்.

**தொலைக்காட்சி**

தொலைக்காட்சியில்காட்சி, கேள்விஆகிய இருவழிக்கற்றலுக்கும் வழி இருப்பதால் வானொலியைக் காட்டிலும் இது சிறந்து விளங்குகின்றது. ஒலியும், ஒளியும் இணைந்திருப்பதுடன் இயக்கமும் சேர்ந்துள்ளது. தொலைக்காட்சியின் பயனே இது பலவிதக் காட்சிகளையும் இயக்கங்களையும் பயன்படுத்துவதால் ஏற்படுகிறது. தமிழ்ப்பாடம் கற்பித்தலில் வாழ்க்கைக் கல்வி தொடர்பான கற்பித்தல் தொலைக்காட்சி மூலம் அமைகிறது.

உரையாடல், நாடகம், இசை, சொற்பொழிவு போன்றவை இடம் பெறுவதால் மொழி கற்பித்தலில் தொலைக்காட்சி மிகவும் பயனுடையதாக விளங்குகிறது. தகுந்த நேரத்தை ஒதுக்கி பள்ளியில் மொழி கற்பத்தலில் தொலைக்காட்சியை அதிகம் பயன்படுத்தலாம்.

தற்போது தொலைதூரக் கல்விக்கும் கற்பித்தல் முறையை செய்து காட்டுவதற்கும் தொலைக்ககாட்சி அதிக அளவில் பயன்பட்டு வருகின்றது. இன்னும் திட்டமிட்டு செயல்பட்டால் வருங்காலத்தில் கற்றல்-கற்பித்தலில் மிக அதிக அளவில் தொலைக்காட்சியை பயன்படுத்தி நல்ல பலன் எய்த முடியும்.

**கல்வியில் தொலைக்காட்சியின் பங்கு**

- மாணவர்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு பாடப்பொருள் பற்றி நிகழ்ச்சிகள் ஒளி-ஒலி பரப்புகிறது.
- சிறந்த ஆசிரியர்கள் பல்வேறு பாடங்களைக் கற்பிப்பதை ஒளி-ஒலி பரப்புகிறது.
- பல்வேறு அரிதான விலங்குகளை, மலர்களை, தாவரங்களைக் காண முடிகிறது.
- அறிவியல் செய்முறைகளை நேரடியாக காண்பதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது.
- பாட சம்பந்தமான வினாடி வினா, அறிவோம் அறிவை போன்ற நிகழ்ச்சிகளை ஒளி-ஒலிபரப்பு செய்கிறது.

- பல்வேறு உயிரினங்களின் வாழ்க்கை முறையை நேரடியாகக் காண முடிகிறது.
- கண்ணால் காண முடியாத நுண்ணுயிரிகளையும் தொலைக்காட்சி மூலம் காண்பிக்கும் போது அவற்றை முழுமையாக பார்த்து தெரிந்து கொள்ள முடிகிறது.
- செயற்கைக்கோள் விண்ணுக்கு அனுப்புவதை காண்பித்து நாட்டுப்பற்றையும் ஆராய்ச்சியில் ஆர்வத்தையும் வளர்க்கிறது.

**கணிப்பொறி**

கணிப்பொறிக் கல்வி இன்று அனைத்துத்துறை வளர்ச்சிகளுக்கும் அடிப்படையானதாக உள்ளது. எந்த பாடத்தைக் கற்பவராயினும் கணினி அறிவியலையும் கற்றிருக்க வேண்டும் என்பது கட்டாயத் தேவையாகிவிட்டது.

**கணினி வழி தமிழ்க் கற்றல் - கற்பித்தல்:**

கணினி தகவல் தொடர்பு ஊடகங்களின் வளர்ச்சி காரணமாகக் தமிழ் கற்கும் - கற்பிக்கும் முயற்சிகள் இன்று பெருகியுள்ளன.

**கணிப்பொறி வழிக்கற்றல் பொருள்**

கணிப்பொறி வழிக்கற்றல் என்பது மாணவர்களின் வழியே கணிப்பொறியை இயக்கி, கணினித்திரையில் வெளிப்படும் தகவல்களைக் கற்றிடுவதைக் குறிக்கிறது.

**கற்பித்தலில் கணிப்பொறியின் பங்கு**

பயிற்சி, சோதனை, சேகரிப்பு, கணக்கீடு, கண்டுப்பிடித்தல், இணையதளம் போன்றவற்றில் மாணவர்களைப் பங்கேற்கச்செய்கிறது.

இணையத்தின் வருகை கணிப்பொறி வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்துள்ளது. உலகளாவிய அறிவை இருக்கும் இடத்திலேயே அறிந்து கொள்வதற்கும் இணையம் பெரிதும் உதவுகிறது.

நம்மிடம் எவ்வாளவு திறம்மிக்க கணிப்பொறி இருந்தாலும் அது கணிப்பொறிகளுடன் இணைக்கப்படும் போதுதான் அதிகமான பயனைப்பெறமுடியும்

**தமிழ் இணையம்**

தமிழைக் கணினியில் பயன்படுத்த வழி ஏற்பட்டவுடன் பலரும் தமிழ் இணையத்தளங்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

**இணையத்தின் பல்வேறு பயன்பாடுகள்**

- மின்னஞ்சல்
- குரல் அஞ்சல்

குறிப்பு

- சொல்லாடல்
- ஒளிப்பட மாநாடுகள்
- மின்வணிகம்
- மின்பயணம்
- மின் இதழ்கள்
- மின் நூலகங்கள்
- மின் களஞ்சியம்
- மின் அகராதிகள்

**பல்லூடகம்**

பல்லூடகம் கணினி சார்ந்த தொழில் நுட்பமாகும். ஒளி – ஒலி அசைவுகளை பல்வேறு ஊடகங்களை இணைத்து பயன்படுத்துவது பல்லூடகம் ஆகும்.

பொதுவாக பல ஊடகங்கள் செய்யும் வேலையை ஒரே ஊடகம் செய்யுமானால் அதை பல்லூடகம் என்கிறோம்.

**விண்ணரங்கம்**

விண்ணரங்கம் என்பது மின்வழி முறையில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட இடங்களில் உள்ள மூன்று அல்லது நான்கு பேரை ஒன்றாக ஒருங்கிணைத்து ஒருவழி அல்லது இருவழி காட்சி மூலம் அவர்களை விவாதிக்கச் செய்து கருத்து பரிமாற்றத்திற்கு உதவும் தொழில்நுட்பமாகும். இதன் மூலம் தமிழ் கற்றலை மேம்படுத்தலாம்.

**அலகு13-ல்** காட்சிக் கேள்விக் கருவிகளின் வகைகளான கணிப்பொறி மற்றும் கணிப்பொறி தொடர்பான தலைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதுக.**
**ஆ. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு ஆராய்க.**
9.தாய்மொழிக்கற்றலில் தொலைக்காட்சியின் பங்கினைக் கூறுக.
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

## 6.5. துணைக்கருவிகளைப் பயன்படுத்துதல்

- ✓ குறிப்பிட்ட பாடத்திற்காகவும், தேவைக்கும் மிகுதியான செய்திகளைத் துணைக்கருவிகளின் வழியே அளிக்கவும், கற்பித்தலைத் திறமையுடன் செயற்படுத்தவும் துணைக்கருவிகள் துணை செய்கின்றன.
- ✓ வகுப்பினை நன்முறையில் வழி நடத்திச் செல்லவும் இது உதவுகிறது.

- ✓ மொழியாசிரியர்கள் துணைக்கருவிகளைச் செம்மையாகக் கையாளுவதற்கு நிறைந்த அனுபவமும், நல்ல பயிற்சியும் வேண்டும்.
- ✓ கற்பித்தலுக்கு துணையாக அமையக்கூடிய துணைக்கருவிகள் மற்றும் பொருள்கள் பற்றிய செய்திகளை ஆசிரியர் தெளிவாக அறிந்திருக்க வேண்டும்.
- ✓ மொழிப்பாடம் கற்பித்தலில் பயன்படக்கூடிய துணைக்கருவிகளின் பயன்களை நன்கு அறிந்திருக்க வேண்டும்.

### 6.5.1. துணைக்கருவிகளைப் பயன்படுத்துதலின் நோக்கம்

- ➢ கரும்பலகையின் தேவைகளையும், அதன் பயன்பாட்டினை நிறைவு செய்வதனையும் அறிந்து கொள்ளலாம்.
- ➢ காட்சிக் கருவிகளின் பயன்பாட்டை தெரிந்து செயல்படுதல்.
- ➢ வகுப்பினை நன்முறையில் வழி நடத்திச் செல்ல துணை புரிகிறது.
- ➢ கவனமுடன் தயாரிக்கப்பட்ட துணைக்கருவிகளின் பட்டியலின் வழியே, கற்றலில் மாணவர் அடையும் பயனைத் தீர்மானித்தல்.
- ➢ பாடத்திற்குத் தேவையான கருத்துக்களை எளிமையாக கொண்டு சேர்த்தல்.
- ➢ செய்திகளையும், கருத்துக்களையும் அறிந்து கொள்வதில் ஆர்வத்தினைத் துண்டுதல்.
- ➢ அனுபவத்துடன் கற்றலை மேற்கொள்வதால் அதிக தாக்கத்தினை ஏற்படுத்துதல்.

### 6.5.2. துணைக்கருவிகளின் பயன்கள்

- ✓ கற்றலை வலுப்படுத்துகின்றன.
- ✓ கற்பவரை கற்றலுக்கு ஊக்குவிக்கிறது.
- ✓ கற்பவர் நேரடி அனுபவம் பெறுகிறார்.
- ✓ ஆசிரியரின் கற்பித்தல் திறமையடையும்.
- ✓ மாணவர்கள் புலக்காட்சி அனுபவம் பெறுகின்றனர்.
- ✓ தனியாள் வேற்றுமைக்கேற்ப கற்பிக்கத் துணை செய்கின்றன.
- ✓ கற்கும் நேரம் குறைகிறது.
- ✓ மாணவர்களின் ஆக்கத்திறன் மேம்படுகிறது.
- ✓ வகுப்புச்சூழல் சுவையானதாக மாறுகிறது
- ✓ எளிதில் புரிந்து கொள்ளும் விதத்திலும், மறவாத வகையிலும் அமைகிறது.

குறிப்பு

### 6.5.3. துணைக்கருவிகள் பயன்படுத்துதலின் குறைகள்

- ஆசிரியர்களின் திறமைக்கேற்ப இவை பயனளிக்கும்.
- பொருத்தமான நேரத்தில் பொருத்தமான துணைக்கருவிகளைப் பயன்படுத்தாவிட்டால் பயனளிக்காது.
- நோக்க அடிப்படையில் தாயரிக்கப்படும் பொருட்களே கற்றலை மேம்படுத்தும்

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதுக.**
**ஆ. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு ஆராய்க.**

10.மொழியாசிரியர்கள் துணைக்கருவிகளைச் செம்மையாகக் கையாளுவதற்குத் தேவையானவை யாவை?

………………………………………………………………………………................

………………………………………………………………………………............

11. துணைக்கருவிகளின் பயன்கள் ஏதேனும் இரண்டினைக் கூறுக?

…………………………………………………………………………………

…………………………………………………………………………....................

## 6.6. தொகுத்துக் காண்போம்

ஆசிரியர் பாடம் நடத்தும்பொழுது மாணவர்களுக்குப் புரியுமாறு தெளிவாகப்பேசுவதுடன் ஏற்ற இடத்திற்கு தகுந்த துணைக்கருவிகளைப் பயன்படுத்த வேண்டும். மாணவர்களின் அறிவு வளர்ச்சிக்கு ஏற்ப காட்சிக்கருவிகளையும், கேள்விக் கருவிகளையும் பயன்படுத்திக் கற்பித்தல் மட்டுமல்லாமல் காட்சிக் கேள்விக் கருவிகளையும் பயன்படுத்திக் கற்பிக்கும்போது மாணவர் சிறப்பான பயனை அடைவர். தொலைக்காட்சி மற்றும் கைபேசி அனைவரும் அன்றாட வாழ்வில் பயன்படுத்தக் கூடிய சிறந்த காட்சிக் கேள்வி உபகரணமாகும். குரலால் கேட்பதை விட கண்ணால் பார்ப்பதே சிறந்தது. ‘ஒரு படம் ஆயிரம் வார்த்தைகளுக்கு நிகராகும்’ என்ற பேகனின் சீனப்பழமொழி இதற்குப் பொருந்தும். இதனையும் விடச் சிறந்தது செய்து கற்றல் ஆகும். கண்டும், கேட்கும் கற்றலை விடச் சிறந்தது செய்து கற்றல் என்பதில் ஐயமே இல்லை. இவற்றையெல்லாம் நாம் துணைக்கருவிகளின் மூலமாகத் துய்த்து உணரலாம்.

## 6.7. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

1. குறிப்பிட்ட பாடத்திற்காகவும், தேவைக்கும் மிகுதியான செய்திகளைத் துணைக்கருவிகளின் வழியே அளிக்கவும், கற்பித்தலை திறமையுடன் செயற்படுத்தவும்

துணைக்கருவிகள் துணை செய்கின்றன.

2. முதலாவது வகை நேரில் காட்டப்படும் பொருள்கள்.
3. கரும்பலகை, மின்னட்டைகள், விளம்பரப்பலகை, வரைபடங்கள், விளக்கப்படங்கள்
4. துணைக்கருவிகளை கற்பித்தலில் 3 வகைகள். அவை காட்சிக் கருவிகள், கேள்விக் கருவிகள், காட்சிக் கேள்விக் கருவிகள்.
5. மர உருவ விளக்கப்படம்,தொழில்நுட்ப விளக்கப்படம்,செயல் விளக்கப்படம்.
6. கரும்பலகை, வரைபட அட்டை, செய்திப்பலகை, கேலிச்சித்திரம், சுவரொட்டி சித்திரம்.
7. வானொலி, ஒலிப்பதிவு நாடா, மொழிப் பயிற்றாய்வுக் கூடம்.
8. ஒலித்தல் பயிற்சி, கேட்டல் பயிற்சி, மொழிப் பயிற்சி, கருத்துணரும் பயிற்சி
9. சிறந்த ஆசிரியர்கள் பல்வேறு பாடங்களை கற்பிப்பதை ஒளி-ஒலிபரப்புகிறது. பல்வேறு அரிதான விலங்குகளை மலர்களை தாவரங்களை காண முடிகிறது.
10. நிறைந்த அனுபவமும், நல்ல பயிற்சியும்
11. 1. மாணவர்களின் ஆக்கத்திறன் மேம்படுகிறது.
    2. வகுப்புச்சூழல் சுவையானதாக மாறுகிறது.

## 6.8. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்.

1. மொழிப்பாடம் கற்பித்தலில் துணைக்கருவிகளின் பங்கினை விவரிக்க
2. கரும்பலகையின் பயன்களை கூறுக?
3. மொழிப் பயிற்றாய்வுக் கூடத்தின் அமைப்பைக் கூறுக?

## 6.9. மேலும் பயிலுவதற்கான நூல்கள்

1. முனைவர் ஞா.பழனிவேலு (2011) செந்தமிழ் கற்பித்தல்-பொதுத்தமிழ், நதிபப்ளிகேஷன்ஸ், தஞ்சாவூர்.
2. வெ.கலைச்செல்வி (2013) பொதுத்தமிழ் கற்றல்-கற்பித்தல் சஞ்ஜீவ் வெளியீடு, ஈரோடு.
3. கோவிந்தராஜன்.மு. (1990) நற்றமிழ் பயிற்றலின் நோக்கமும் முறையும், சரஸ்வதி பதிப்பகம், சென்னை.
4. முனைவர் சு.தண்டபாணி (2009), தமிழ் கற்பித்தல், மீனா பதிப்பகம், மதுரை.
5. பூ. தினதயாள், மா.சிவக்குமார், பொதுத்தமிழ் 2011-2012, ஸ்ரீ கிருஷ்ணா பப்ளிகேஷன்.
6. முனைவர் இ.பா.வேணுகோபால் (1994), பைந்தமிழ் கற்பிக்கும் முறைகள், கற்பகம் பதிப்பகம், மதுரை.
7. கூகுள் இணையதளம்.

குறிப்பு

# அலகு - 7 கேட்டல் திறன்

**பாடஅமைப்பு**


7.1 முன்னுரை

7.2 குறிக்கோள்கள்

7.3 கேட்டல் திறன்

7.3.1 கேட்டல் திறனின் நோக்கம்

7.3.2 கேட்டல் திறனின் முறைகள்

7.3.2.1. வெறும் கேட்டல்

7.3.2.2. உற்றுக்கேட்டல்

7.3.2.3. செவிமடுத்தல்

7.3.2.4. நுட்பமாகக் கேட்டல்

7.3.3 கேட்டல் திறனின் பயிற்சி

7.3.3.1. ஒலிகளைக் கேட்டல்

7.3.3.2. விட்டு விட்டுக் கேட்டல்

7.3.3.3. அரைகுறையாகக் கேட்டல்

7.3.3.4. ஒருசார் மனப்பான்மையுடன் கேட்டல்

7.3.3.5. தயாரிப்புடன் கேட்டல்

7.3.3.6. பேசுதலைக் கேட்டல்

7.3.3.7. படித்தலைக் கேட்டல்

7.3.3.8. வானொலி கேட்டல்

7.3.3.9. விளம்பரம் கேட்டல்

7.3.3.10. புதிர்கள் கேட்டல்

7.3.4 கேட்டல் திறனின் பயன்கள்

7.4. தொகுத்துக் காண்போம்

7.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

7.6. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

7.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்


## 7.1 முன்னுரை

மொழி ஆசிரியர்கள் மாணவர்களுக்கு மொழியைக் கற்பிக்கும் போது, உயிரும் உணர்வும் உள்ள மொழியைத் திறம்பட பேசுவதற்கு சிறந்த வழிகாட்டியாக இருக்க வேண்டும். மொழிப்பாடம் கற்பித்தலின் அடிப்படை நோக்கம் மாணவர்களிடம் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் என்ற நான்கு திறன்களை வளர்ப்பதாகும். மொழியின் அமைப்பைக் குழந்தை தாயிடமும், பிறரிடமும் அவர்கள் பேசுவதைக்

கேட்டே கற்றுக் கொள்கிறது. எனவே புதிய செய்திகளை அறிந்து பொருளுணரவும், தற்கருத்து வளர்ச்சிக்கும் கேட்டல் காரணமாகிறது.

எனவே அடிப்படைத்திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் போன்ற திறன்களை மாணவர்களிடம் வளர்ப்பதில் ஆசிரியர் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும். எனவே முதல் திறனான கேட்டல் பற்றி இப்பாடத்தில் காண்போம்.

**குறிப்பு**

## 7.2 குறிக்கோள்கள்

- ❖ கேட்குந்திறனே மொழித்திறனுக்கு அடிப்படை என்பதை விவரிப்பீர்கள்.
- ❖ கேட்குந்திறனின் முறைகளை விளக்குவீர்கள்.

## 7.3. கேட்டல் திறன்

குழந்தை பிறந்தவுடன் பெறக்கூடிய திறன் கேட்குந்திறனாகும். கேட்குந்திறன் இருந்தால்தான் குழந்தையால் பேச முடியும். எனவே மற்ற திறன்களுக்கு அடிப்படையாய் அமைவது கேட்குந்திறனேயாகும். நாம் தாய்மொழி தெரியாத மொழியினருடன் வாழும்போது பெறக்கூடிய திறன் கேட்குந்திறன். மொழி அறிவுக்கு அடிப்படையாய் அமையுந்திறன் கேட்குந்திறன்.

**கேட்டல் வரையறை**

"கேட்டல்" என்பது பிறர் பேசும் ஒலிகளையும், ஒலிகளால் அமைந்த சொற்களையும், சொற்கள் கூட்டமாய் நின்று உணர்த்தும் பொருளையும் கேட்கும் முறையாகும்.

### 7.3.1. கேட்டல் திறனின் நோக்கம்

- ❖ சொற்களஞ்சியப்பெருக்கம் அடைதல்
- ❖ சொல்லாட்சித் திறன் பெறுதல்
- ❖ சொல்வேகத் திறன் பெறுதல்
- ❖ சொற்களை ஏற்ற இடத்தில் கையாளுதல்
- ❖ ஒரு வார்த்தைக்கு பல பொருள்களை அறிதல்
- ❖ ஆளுமைத் திறனை வளர்த்தல்
- ❖ நினைவாற்றலை வளர்த்தல்
- ❖ மொழியறிவு பெறுதல்
- ❖ எண்ணத்தூண்டல் ஏற்படுதல்
- ❖ எளிதில் புரிந்து கொள்ளுதல்
- ❖ செயலாக்கம் ஏற்படுதல்
- ❖ நாகரிகத் தன்மையைப் பெறுதல்
- ❖ தற்கருத்து ஏற்படுதல்
- ❖ கற்பனைத் திறன் அதிகரித்தல்

குறிப்பு

- ❖ தகவல் தொடர்பு ஏற்படுதல்

### 7.3.2. கேட்டல் திறனின் முறைகள்

#### 7.3.2.1. வெறும் கேட்டல்

இவ்வகைக் கேட்டலை எளியநிலை கேட்டல் எனலாம். ஏனெனில் எவனொருவன் அருகில் பேச்சு ஒலிகள் எழுகிறதோ, அங்கு அனைவரும் கேட்கின்றனர். இதனையே வெறும் கேட்டல் என்கிறோம்.

(எ-கா) நாம் தெருவில் செல்லும் வழியில் ஏதோ ஒரு மேடை பேச்சாளன் பேசுவதைக் கேட்டல்.

#### 7.3.2.2. உற்றுக்கேட்டல்

இவ்வகைக் கேட்டல் வெறும் கேட்டலை விட சற்று உயர்ந்த நிலை ஆகும். ஒருவர் கூறும் செய்திகள் கருத்துக்களை உற்றுக்கேட்டு அதில் என்ன, எவ்வாறு என புரிந்து கொள்ள முனைவதே உற்றுக்கேட்டல் என்கிறோம்.

#### 7.3.2.3. செவிமடுத்தல்

செவிமடுத்தல் என்பது மொழிப் பொருள் கொள்ளல் என்பதாகும். கூறுகின்ற கருத்தின் பொருளை முழுமையாக புரிந்து கொள்ளுதல் ஆகும். இதனையே செவிமடுத்தல் என்கிறோம்.

#### 7.3.2.4. நுட்பமாகக் கேட்டல்

இவ்வகை கேட்டல் கல்விச் சூழலுக்கு உரியது. கற்றலுக்கும், சிந்தனைக்கும் ஏற்றது. நுட்பமாகக் கேட்டல் என்பது ஒரு சொல்லைக் கேட்கும் திறனில் தொடங்கி ஒரு கட்டுரை அல்லது செய்யுளின் முழுநிலையைக் கேட்கும் திறனில் பெறும் பயிற்சியை அடிப்படையாகக் கொண்டு உள்ளது. சுருங்கக் கூறின்

சொல் - பொருள் - தொடர் - அமைப்பு – முழுநிலை

### 7.3.3. கேட்டல் திறனின் பயிற்சி

- ❖ ஒலிகளைக் கேட்டல்
- ❖ விட்டு விட்டுக் கேட்டல்
- ❖ அரைகுறையாகக் கேட்டல்
- ❖ ஒருசார் மனப்பான்மையுடன் கேட்டல்
- ❖ தயாரிப்புடன் கேட்டல்
- ❖ பேசுதலைக் கேட்டல்
- ❖ படித்தலைக் கேட்டல்
- ❖ வானொலி கேட்டல்
- ❖ விளம்பரம் கேட்டல்
- ❖ புதிர்கள் கேட்டல்

### 7.3.3.1. ஒலிகளைக் கேட்டல்

பேசுபவருடைய மொழி வகுப்பு நிலைக்கேற்ப அமைதல் வேண்டும். இல்லையேல் மாணாக்கர் சொற்களின் ஒலியை மட்டும் கேட்பர். அவர்களால் பொருள் உணர்ந்து கொள்ள முடியாது. எனவே, அதற்கு ஏற்ற வகையில் எளிய மொழியில் பேசுதல் வேண்டும்.

### 7.3.3.2. விட்டு விட்டுக் கேட்டல்

வகுப்பில் ஆசிரியர் பாடம் நடத்தும் போது மாணாக்கர் தொடர்ந்து கேட்டு வருகின்றனரா என அறிந்து பேசுதல் வேண்டும். எனவே, அதற்கு ஏற்ற வகையில் இடையிடையே மாணவர்களிடம் வினா கேட்க வேண்டும். அவர்கள் விடையளிப்பதன் மூலம் அவர்கள் கேட்டு வந்ததை நாம் அறியலாம்.

### 7.3.3.3. அரைகுறையாகக் கேட்டல்

ஆசிரியர் கூறுவதை சில மாணவர்கள் அரைகுறையாகக் கேட்பர். அதற்கு ஏற்றாற் போல், ஆசிரியர் முன்னதாகவே நான் கூறும் செய்தியை முழுமையும் கேட்டு அதன் பின்னர் ஐயங்களைக் கேளுங்கள் எனக் கூறுதல் வேண்டும்.

### 7.3.3.4. ஒருசார் மனப்பான்மையுடன் கேட்டல்

ஆசிரியர், மாணாக்கர் உறவுநிலை சரியானதாக அமைதல் வேண்டும். மாணாக்கர் வெறுப்பு மனப்பான்மையுடன் இருந்தால் ஆசிரியர் எத்துணை சுவையாகக் கூறினாலும் கேட்கமாட்டார்கள். எனவே சிறந்த கேட்டல் நிகழ வேண்டுமாயின், ஆசிரியர் மாணாக்கர் உறவுநிலை சரியானதாக அமைந்திருத்தல் வேண்டும்.

### 7.3.3.5. தயாரிப்புடன் பேசுதல்

ஆசிரியர் பேச்சைக் கேட்டு மாணாக்கர் மையக்கருத்தையும், படிப்படியான வளர்ச்சியையும் அறிந்து கொள்வதற்கு உதவும் வண்ணம் ஆசிரியர் நன்கு தயாரித்து முறையாகப் பேசுதல் வேண்டும். அப்பொழுதுதான் மாணாக்கர் மையக்கருத்தையும், அதனை விளக்கக் கூறும் எடுத்துக்காட்டுக்களையும் நன்கு அறிவார்கள்.

### 7.3.3.6. பேசுதலைக் கேட்டல்

தொடக்கநிலை வகுப்புகளில் மாணாக்கரது குடும்பம், ஊர் போன்ற தலைப்புகளில் அவர்களைப் பேசச் செய்து கேட்க செய்தல் வேண்டும். நடுநிலை வகுப்புகளில் பொதுத் தலைப்புகளைப் பற்றிப் பேசலாம், கதைகளைக் கூறலாம். பின்னர், இவற்றைப் பற்றிய வினாக்கள் கேட்கலாம்.

குறிப்பு

### 7.3.3.7. படித்தலைக் கேட்டல்

உரைநடைப் பாடத்தைப் படித்து மாணாக்கர்களைக் கேட்க செய்தல் வேண்டும். நடுநிலைப் பள்ளிகளில் பாடநூல்களைப் பயன்படுத்துவதோடு நூல் நிலையத்திலிருந்து எடுக்கப்பட்ட பொது நூல்களிலிருந்தும் ஒரு பகுதியைப் படித்து அவர்களைக் கேட்கச் செய்யலாம்.

### 7.3.3.8. வானொலி கேட்டல்

ஒருவர் பேச்சை நேரில் கேட்பதைவிட வானொலிப் பேச்சைக் கேட்பது சற்று சிக்கல் நிறைந்ததாகும். வானொலிப் பேச்சு ஒரு பொதுவான வேகத்தில் அமையும். இடையில் நிறுத்தமின்றிச் செல்லும். எனவே, வானொலி கேட்டல் திறனுக்கு அதிக கவனிப்புத் திறன் தேவை. அதனால், முன்னதாகவே மாணாக்கர் எதைப் பற்றிக் கேட்க இருக்கின்றனரோ, அந்தச் செய்திகளைக் குறித்துக் கொள்ள வேண்டும். வானொலிப் பாடம் முடிந்தவுடன் சிறு சிறு வினாக்கள் கேட்கப்படும் என்பதனை மாணாக்கர்களுக்கு முன் கூட்டியே கூற வேண்டும்.

### 7.3.3.9. விளம்பரம் கேட்டல் :

விளம்பரம் என்பது தொலைக்காட்சி, வானொலி, ஒலிபெறுக்கி ஆகியவற்றின் மூலம் ஏதாவது ஒரு விற்பனைப் பொருளைப் பற்றியோ, நிகழ்சியைப் பற்றியோ மக்களுக்குக் கேட்டல் மூலம் கொண்டு செல்லப் பயன்படும் ஊடகமாகும். இதில் காட்சியை விட, விளம்பரப்படுத்தப் பயன்படும் வாசகங்கள் கேட்போரின் கவனத்தை ஈர்த்து, அந்த பொருளைப் பற்றிய கருத்து மனதுள் செலுத்தப் படுகிறது. சிறு குழந்தை முதல், பெரியவர்கள் வரை விளம்பர வாசகங்களால், கூறப்படும் ஒலிப்பு முறையால் ஈர்க்கப்படுகின்றனர். காம்ப்ளானுக்குச் செய்யப்படும் விளம்பரத்தில் காட்சியை விட அது பற்றிய வாசகத்தைக் கேட்பவன் ஈர்க்கப்படுகிறான்.

**“நான் வளர்ந்துட்டேனே மம்மி”**

விளம்பரங்களின் உத்தி அதனைக் கேட்கவேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தி, பொருளை வாங்க வாசகனைத் தூண்டுவதுதான். எனவே கேட்டலின் மூலமே அனைத்துப் பொருட்களும் மக்களைச் சென்றடைகின்றன்.

### 7.3.3.10. புதிர்கள் கேட்டல்

மாணவர்களின் கேட்டல் திறனை மேம்படுத்த மொழித் தொடர்பான புதிர்களைக் கேட்டு அவர்களின் கற்றல் ஆர்வத்தை மேம்படுத்த வேண்டும். புதிர்களுக்கு மாணவர்களால் விடை அளிக்க

குறிப்பு

இயலாத போது ஆசிரியர் விடையைக் கூறி உதவ வேண்டும். கேட்கப்படும் புதிர்கள் மாணவர்களுக்கு முன் அறிமுகம் இல்லாதவையாக இருத்தல் வேண்டும். சான்றாக! என்னை கருமவீரர் என்று அழைத்தனர். நான் யார்? என்று கேட்டல். புதிர்களைக் கேட்பதன் மூலமாக மாணவர்களுக்கு நினைவு கூறல், மீட்டறிதல், புரிந்து கொள்ளும் திறன் ஆகியவை மேம்படும்.

### 7.3.4. கேட்டல் திறனின் பயன்கள்

- ❖ சிந்திக்கும் திறன் பெருகும்.
- ❖ தன்னம்பிக்கை வளரும்.
- ❖ தாழ்வு மனப்பான்மை குறையும்.
- ❖ கேட்கும் திறனால் மொழியாற்றல் பெருகும்.
- ❖ நினைவாற்றல் அதிகரித்து ஆக்கத்திறன் பெருகும்.

**முன்னேற்றத்தைச் சோதித்துஅறிக.**
**குறிப்பு: அ. உமதுபதிலைக் கீழேகொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.**
**ஆ.உமதுபதிலைப் பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளபதிலோடுஒப்பிட்டு அறிக.**
1.கேட்டல் திறனின் நோக்கம் ஏதேனும் இரண்டினைக் கூறுக?
………………………………………………………………………………………
……………………………………………………………………………………..
2.கேட்டல் திறனின் பயன்கள் ஏதேனும் இரண்டினைக் கூறுக?
………………………………………………………………………………………
…………………………………………………………........................................................

## 7.4. தொகுத்துக் காண்போம்

இப்பாடப்பகுதியில், அடிப்படைத் திறன்களான கேட்டல் திறனின் நோக்கம், பயிற்சி, முறைகள் மற்றும் பயன்கள் ஆகியவை தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளன. திருந்தியபேச்சின் நல்லியல்புகளும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. இப்பாடத்தைப் பயின்று அடிப்படைத் திறன்களான கேட்டல் மற்றும் பேசுதல் திறன்களை வளர்ப்பது மொழிக்கற்றலை மேற்கொள்ளக் கூடிய இன்றியமையா வழிமுறைகளாகும்.

## 7.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாவிற்கான விடைகள்.

1. சொற்களஞ்சியப் பெருக்கமடைதல், சொல்லாட்சித் திறன் பெறுதல்
2. சிந்திக்கும் திறன் பெருகும், தன்னம்பிக்கை வளரும்

## 7.6. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

1. கேட்டல் திறனின் பயிற்சிகளை விவரித்து எழுதுக?
2. கேட்டல் திறனின் நோக்கங்கள் யாவை?

குறிப்பு

## 7.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்


1. முனைவர் ஞா.பழனிவேலு (2011), செந்தமிழ் கற்பித்தல், பொதுத்தமிழ், நதி பப்ளிகேஷன்ஸ், தஞ்சாவூர்.
2. வெ.கலைச்செல்வி (2013), பொதுத்தமிழ் கற்றல் - கற்பித்தல், சஞ்ஜீவ் வெளியீடு,ஈரோடு.
3. கோவிந்தராஜன்.மு. (1990), நற்றமிழ் பயிற்றலின் நோக்கமும், முறையும், சரஸ்வதி பதிப்பகம், சென்னை.
4. டாக்டர்.ந.சுப்புரெட்டியார் (1964), தமிழ்பயிற்று முறை, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
5. முனைவர் அ. மீனாட்சிசுந்தரம் (2014), பாடப்பொருள் மற்றும் தமிழ் கற்பித்தல், காவ்யமாலா பப்ளிஷர்ஸ், திண்டுக்கல்.


*****

குறிப்பு

# அலகு - 8 பேசுதல் திறன்

**பாடஅமைப்பு**

8.1 முன்னுரை
8.2 குறிக்கோள்கள்
8.3. பேசுதல் திறன்
8.3.1 பேசுதல் திறனின் நோக்கம்
8.3.1.1. திருத்தமாகப் பேசுதல்
8.3.1.2. அழுத்தமாகப் பேசுதல்
8.3.1.3. தெளிவுடன் பேசுதல்
8.3.1.4. அச்சம் கூச்சமின்றிப் பேசுதல்
8.3.1.5. அளந்தறிந்து பேசுதல்
8.3.2. பேசுதல் திறனின் முறைகள்
8.3.2.1. அழுத்தந்திருத்தமாகப் பேசுதல்
8.3.2.2. இலக்கண வழுவின்றிப் பேசுதல்
8.3.2.3. மரபு மொழிகளைப் பின்பற்றிப் பேசுதல்
8.3.2.4. பழமொழிகளைப் பின்பற்றிப் பேசுதல்
8.3.3. பேசுதல் திறனின் பயிற்சி
8.3.4. திருந்திய பேச்சின் நல்லியல்புகள்
8.3..5 பேசுதல் திறனின் பயன்கள்
8.4. தொகுத்துக் காண்போம்
8.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்
8.6. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்
8.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்

## 8.1 முன்னுரை

தாய்மொழியைப் பேச்சு மொழியாகப் பயன்படுத்தும் முறை வட்டாரத்திற்கு வட்டாரம் வேறுபடுகிறது. பேச்சு மொழியில் ஒருவகையாகவும் எழுத்து மொழியில் வேறொரு வகையாகவும் மொழி கையாளப்படுகிறது. எனவே நிலையான ஒரே பேச்சு மொழியை மாணவர்கள் கையாளுவதில்லை. மேலும் அச்சம், கூச்சம், தயக்கம் இவற்றின் காரணமாக மாணவர்கள் சிறப்பாக பேச மாட்டார்கள். எனவே பள்ளி மாணவர்களின் பேசுதல் திறனை வளர்க்க வேண்டியது ஆசிரியரின் கடமையாகும்.

எனவே அடிப்படைத்திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் போன்ற திறன்களை மாணவர்களிடம் வளர்ப்பதில் ஆசிரியர்

குறிப்பு

அதிக கவனம் செலுத்துதல் வேண்டும். எனவே பேசுதல் பற்றி இப்பாடத்தில் காண்போம்.

## 8.2 குறிக்கோள்கள்

- ❖ பேச்சுத்திறனின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பீர்கள்,
- ❖ பேச்சின் திறனின் பயிற்சிகளை விளக்குவீர்கள்.
- ❖ திருத்தமான பேச்சின் இயல்புகளை மதிப்பீடு செய்வீர்கள்.

## 8.3. பேசுதல் திறன்

மொழிக் கற்பித்தலின் நோக்கம் அவரவர் தமது தாய்மொழியில் நன்றாகப் படிக்க நன்றாக எழுத பயிற்சியளிப்பதே ஆகும். மொழிக் கற்றலில் அடிப்படைத் திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் போன்றவைகளில் சிறந்து விளங்க வேண்டும். மொழிக் கற்பித்தலின் நோக்கம் மாணவர்களை நன்றாகப் பேச, நன்றாக படிக்க, நன்றாக எழுதப் பயிற்சியளிப்பதேயாகும். இதில் படிப்பின் முதல் நிலை பேச்சாகும்.

வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் தன்னை உணர்த்துவதும், பிறரை உணர்வதும் பேச்சின் அடிப்படையில் தான். ஒருவரின் அறிவுக் கூர்மையை அவரின் பேச்சின் மூலம் மதிப்பிட முடியும். மாணவர்களைத் தெளிவாகவும், திருத்தமாகவும் தமிழில் பேசப் பழக்குவது ஆசிரியருடைய கடமையாகும்.

### 8.3.1. பேசுதல் திறனின் நோக்கம்

- ➢ திருத்தமாகப் பேசுதல்
- ➢ அழுத்தமாகப் பேசுதல்
- ➢ தெளிவுடன் பேசுதல்
- ➢ அச்சம் கூச்சமின்றிப் பேசுதல்
- ➢ அளந்தறிந்து பேசுதல்

#### 8.3.1.1. திருத்தமாகப் பேசுதல்

கருத்துச் செறிவும், சொற்கோவையும் பொருத்தமான ஒலிப்பும் செம்மையாக இருப்பின் பேச்சில் திருத்தம் தாமாகவே ஏற்படும். வாய்மொழிப் பயிற்சியின் வாயிலாக மாணாக்கர்கள் பிழையின்றிப் பேச இயலும். பிறர் தமது கருத்துக்களை எளிதில் உணர்ந்து கொள்ளும் வகையில் தெளிவாகவும், இனிமையாகவும் பேசுவதே திருத்தமான பேச்சின் நோக்கமாகும்.

#### 8.3.1.2. அழுத்தமாகப் பேசுதல்

ஒலிக்கு அழுத்தம் கொடுக்காவிடில் பொருள் மாறுபடும். சொல்வதை அழுத்தம் திருத்தமாகச் சொல்வதினால் கேட்போருக்குச்

குறிப்பு

சொல்லும் செய்தி எளிதில் விளங்கும். சில சொற்களுக்கு மட்டும் அழுத்தம் கொடுத்துப் பிறருடைய கவனத்தை விரைவில் கவர முடியும்.

**8.3.1.3. தெளிவுடன் பேசுதல்**

பேச்சில் தெளிவு இல்லையேல் கூறுவதொன்று கொள்வதொன்றாகக் கொள்ள நேரிடும். எளிய சொற்களில் கேட்போர் மனங்கொள்ளும் வகையில் ஏற்ற எடுத்துக்காட்டுகளுடன் இயல்பாய், இனிமையாய், விரைவின்றி, முன்னுக்குப் பின் முரணின்றி, விளக்கமாய் தெளிவாய் பேசுதலே தெளிவான பேச்சாகும்.

**8.3.1.4. அச்சம் கூச்சமின்றிப் பேசுதல்**

தெளிவாகப் பேசுதலுக்கு அச்சம், கூச்சம் இருக்கக் கூடாது. சிலர் ஆசிரியர்கள் முன் அல்லது புதிய மனிதர்களிடம் பேசும் போது அச்சப்படுவார்கள். அச்சம், கூச்சம் தவிர்த்தல் உச்சரிப்பை நன்கு திருத்தும். அதன் காரணமாய்ப் பேச்சும் தெளிவடையும். பேச்சுத் திறனை வளர்ப்பதன் சிறப்பு நோக்கமே அச்சம், கூச்சமின்றிப் பேசுதலேயாகும்.

**8.3.1.5. அளந்தறிந்து பேசுதல்**

பேச்சின் கருத்துக்களைப் பிறர் உணர்ந்து கொள்ளக் கூடிய அளவிற்கு நிதானமாய் அளந்தறிந்து பேசவேண்டுவது இன்றியமையாததாகும். எங்ஙனம் கருத்து சொல்லப் போகின்றோம் என்பதை அறிந்து அவற்றைச் சொற்களால் அளந்து பேச வேண்டும்.

**8.3.2. பேசுதல் திறனின் முறைகள்**

**8.3.2.1. அழுத்தந்திருத்தமாகப் பேசுதல்**

நாம் பேசுவது அழுத்தமாகவும், திருத்தமாகவும் அமைய வேண்டுவது இன்றியமையாதது. அழுத்தந்திருத்தமாகப் பேசுவது என்பதில் கருத்துத் தெளிவு, உணர்ச்சியில் தெளிவு, ஒலிப்பில் தெளிவு, பயன்படுத்தும் சொற்களில் தெளிவு ஆகியன அடங்கும்.

ஒலிப்பில் தெளிவினை ஏற்படுத்த மாணவர்களுக்கு நாநெகிழ், நாபிறழ் பயிற்சிகளை அளிக்கலாம். நாவின் நுனி மேலும் கீழும் அசையுமாறுள்ள ஒலிகளை உச்சரிக்கப் பயிற்சி அளிப்பது நாநெகிழ் பயிற்சியாகும்.

ல ல ல ல லா ர ர ர ர ரா ன ன ன ன னா

ழ ழ ழ ழ ழா ற ற ற றா

ள ள ள ள ளா ந ந ந நா ண ண ண ணா

நாக்கு பிறழ்ந்து சரியான உச்சரிப்பை அளிக்கும் பயிற்சிகள் நாபிறழ் பயிற்சிகளாகும். ஒத்த ஒலிகளைப் பலமுறை ஒலிப்பதன் மூலம் ஒலிப்பில் தெளிவு பிறக்கும்.

குறிப்பு

"யார் தச்ச சட்டை, எங்க தாத்தா தைச்ச சட்டை"
"மலை மேல் மழை பெய்தது"
"ஓடுகிற நரிகளில் ஒரு நரி கிழநரி"
"புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது"
"பழம் நழுவிப் பாலில் விழுந்தது"

**8.3.2.2. இலக்கண வழுவின்றிப் பேசுதல்**

ஒருவர் தான் பேசுவதைப் பிழையின்றி பேசவேண்டும். அப்போழுது தான் கேட்போருக்குப் பொருள் மயக்கம் ஏற்படாது. திணை, பால், எண், இடம், காலம், மரபு ஆகியவற்றில் இலக்கண வழுவின்றிப் பேசுதல் வேண்டும். பேச்சு வழக்குச் சொற்களைப் பயன்படுத்தக் கூடாது. எழுத்து வழக்குச் சொற்களையே பயன்படுத்த வேண்டும்.

உயர்திணைக்கு, உயர்திணை எழுவாயும், பயனிலையும், அ∴றிணைக்கு அ∴றிணை எழுவாயும், பயனிலையும் பொருத்தமாக அமையுமாறு பேச வேண்டும். கூறியது கூறல் தவிர்க்கப்பட வேண்டும். அ∴றிணை, உயர்திணைப் பெயர்கள் கலந்து வந்தால் சிறப்புக் கருதி உயர்திணைப் பயனிலை கொண்டே பேச வேண்டும்.

**8.3.2.3. மரபு மொழிகளைப் பின்பற்றிப் பேசுதல்**

ஒவ்வொரு மொழியும் தனக்கென்று மரபுச் சொற்களையும், மரபுச் சொற்றொடர்களையும் கொண்டுள்ளது. எலிக்குஞ்சு என்பதை எலிக்குட்டி என்றும், சிங்கக் குருளை என்பதை சிங்கக்குட்டி என்றும், பூந்தோட்டம் என்பதை பூங்காடு என்றும், எறும்புச்சாரை என்பதை எறும்புக் கூட்டம் என்றும் தவறாகக் கூறக்கூடாது.

**மரபுத்தொடர்களும் அவற்றின் பொருளும்**

| | |
|---|---|
| எடுப்பார் கைப்பிள்ளை | - யார் சொன்னாலும் கேட்டு நடப்பவன் |
| தாளம் போடுகிறான் | - துன்பப்படுகிறான் |
| மனப்பால் குடித்தல் | - கற்பனை செய்தல் |
| ஆகாயத்தாமரை | - இல்லாத ஒன்று |
| கோயில் பெருச்சாளி | - பிறர் சொத்தைத் திருடுபவன் |

**8.3.2.4. பழமொழிகளைப் பின்பற்றிப் பேசுதல்**

காலங்காலமாக சமுதாயத்தில் மக்களால் தொடர்ந்து பேசப்பட்டு வரும் பழமையான தொடர்கள் பழமொழிகளாகும். பேசுதல் திறனில் பொருத்தமான இடத்தில் பொருத்தமான பழமொழியைப் பயன்படுத்த வேண்டும். தகுதியான தரமான பழமொழிகளைப் பேசுவதற்குத் திட்டமிடும் பொழுதே தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

### 8.3.3. பேசுதல் திறனின் பயிற்சி

1. ஆசிரியர் பேச்சு
2. நாபிறழ் பயிற்சி
3. நாநெகிழ் பயிற்சி

**1. ஆசிரியர்பேச்சு**

ஆசிரியரின் பேச்சு திருத்தமாகவும், தெளிவாகவும் இருத்தல் வேண்டும். ஆசிரியரின் பேச்சில் திருந்திய பேச்சின் நல்லியல்புகள் யாவும் பொருந்தியிருப்பின், மாணாக்கர்களும் அவற்றைப் பின்பற்றக் கூடும். எனவே ஆசிரியரின் பேச்சு முன் மாதிரியாக விளங்க வேண்டும்.

**2. நாநெகிழ்பயிற்சி**

தனி ஒலிகளின் மூலம் பயிற்சி அளித்தல், அ முதல் ஔ வரையிலுள்ள எழுத்துகளைத் தனியொலியாக ஒலிக்கச்செய்தல். அதுபோல பெரும்பாலான மாணாக்கர் ல, ள, ழ, ர, ற, ந, ன. ண ஆகிய எழுத்துக்களைக் கொண்ட சொற்கள் உச்சரிப்பதனால் தான் தவறுகள் நிகழ்கின்றன. நாவின் நுனி மேலும் கீழும் அசையுமாறு உள்ள ஒலிகளைப் பன்முறை உச்சரிக்கச் செய்வதால் பேச்சில் ஏற்படும் குறைபாடுகளை நீக்கலாம்.

**3. நாபிறழ் பயிற்சி**

ஒத்த ஒலிகளைத் துல்லியமாக ஒலித்தல், ஒத்த ஓசைகள் பயிலும் சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பன்முறை பயிற்சி தந்து, நாக்கு பிறழ்ந்து, நன்கு திருத்தமுறும். இதை குழுப்பயிற்சியாகத் தொடங்கி தனிப் பயிற்சியாக அமைக்கலாம். உதாரணம்,

1. அவள் அவல் தின்றாள்.
2. மலையில் மழை பொழிந்தது.
3. யார் தச்ச சட்டை தாத்தா தச்ச சட்டை.

### 8.3.4. திருந்திய பேச்சின் நல்லியல்புகள்

மனிதனின் உள்ளத்தில் எழும் உணர்ச்சிகளையும் கருத்துக்களையும் பிறர்க்கு எடுத்தியம்பவே மொழி தோற்றுவிக்கப்பட்டது. பேசப் பெறுகின்ற மொழி செம்மையாகவும், திருத்தமாகவும் இருந்தால் தான் கேட்பவரின் உள்ளத்தில் தெளிவாகப் பதியும்.

1. ஒலிப்பு
2. குரல்
3. வேகம்
4. உணர்ச்சி
5. அமைதி

**1. ஒலிப்பு**

செந்தமிழ் மொழியில் ஒத்த ஓசையுடைய எழுத்துக்கள் சில

குறிப்பு

உள்ளன. ல, ள, ழ, ர, ற, ந, ன. ண போன்ற மயங்கொலிச் சொற்களை ஒலிக்கும் பொழுது நன்கு கவனத்துடன் ஒலிக்க வேண்டும். எனவே பேசுகின்ற பொழுது திருத்தமான உச்சரிப்புடனும், தெளிவான ஒலிப்புடனும் பேசப் பழகுதல் வேண்டும்.

**2. குரல்**

உணர்ச்சி நிலைகளுக்கும், இடத்திற்கும் ஏற்றவாறு குரலில் படுத்தல், எடுத்தல், வியத்தல் முதலிய ஏற்றத் தாழ்வுகளை அமைத்துப் பேசுதல் இனிமை தரும். கேட்போர் மனம் கொள்ளும் வகையில் குரல் இனிமை பெற்று இயல்பாய் அமைதல் வேண்டும்.

**3. வேகம்**

விரைவாகவும், மெதுவாகவும் இல்லாமல் பேச்சை பின்பற்றும் அளவில் வேகம் அமைத்துப் பேசுதல் வேண்டும். திருந்திய பேச்சின் நல்லியல்பாக நிதானத்தை கடைபிடித்துப் பேசுதல் வேண்டும்.

**4. உணர்ச்சி**

“உணர்ச்சியற்ற பேச்சு உப்பில்லா உணவிற்குச் சமம்.” சிறந்த பேச்சில் உயிரும், உணர்ச்சியும் அமைதல் வேண்டும். பேசும் பொருளின் ஆழத்தையும், இன்றியமையாமையையும் மாணாக்கர்களுக்கு உணர்த்தி கருத்திற்கேற்ற உணர்ச்சியுடன் பேசப் பழகுதல் வேண்டும்.

**5. அமைதி**

அச்சம் கூச்சமின்றி, படபடப்பு இல்லாமல், பேச்சு அமைதியாக இருத்தல் வேண்டும். நல்ல பேச்சில் அமைதியுடன் பேச்சு பண்பு பொதிந்திருக்க வேண்டும்.

**8.3.5. பேசுதல் திறனின் பயன்கள்**

- திருந்திய பேச்சு, திருந்திய படிப்பிற்கும் திருந்திய எழுத்திற்கும் வழி வகுக்கும்.
- மொழியை உயிருள்ளதாக்கி மாணாக்கர்களிடத்தே பற்றையும், பாசத்தையும் உண்டாக்கும்.
- குறைந்த காலத்தில் நிறைந்த செய்திகளை அறிந்து கொள்ள முடியும்.
- மொழியின் தனிச் சிறப்புகளை அறிந்து சுவைக்க உதவும்.
- அச்சமும், கூச்சமும் நீங்கி மாணாக்கர்கள் தன்னம்பிக்கை பெறுவர்.

குறிப்பு

**முன்னேற்றத்தைச் சோதித்துஅறிக.**
**குறிப்பு: அ. உமதுபதிலைக் கீழேகொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.**
**ஆ.உமதுபதிலைப் பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.**
1. பேசுதல் திறனின் நோக்கம் ஏதேனும் மூன்றினைக் கூறு?
…………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
2. திருந்திய பேச்சின் நல்லியல்புகள் யாவை?

…………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

## 8.4. தொகுத்துக் காண்போம்

இப்பாடப்பகுதியில், அடிப்படைத் திறனான பேசுதல் திறனின் நோக்கம், பயிற்சி, முறைகள் மற்றும் பயன்கள் ஆகியவை தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளன. திருந்தியபேச்சின் நல்லியல்புகளும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. இப்பாடத்தைப் பயின்று அடிப்படைத் திறனான பேசுதல் திறனை வளர்ப்பது மொழிக்கற்றலை மேற்கொள்ளக் கூடிய இன்றியமையா வழிமுறைகளாகும்.

## 8.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாவிற்கான விடைகள்.

1. திருத்தமாகப் பேசுதல், அழுத்தமாகப் பேசுதல், தெளிவுடன் பேசுதல்
2. ஒலிப்பு, குரல், வேகம், உணர்ச்சி, அமைதி

## 8.6. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

1. பேசுதல் திறனின் முறைகளை விவரித்து எழுதுக?
2. திருந்திய பேச்சின் நல்லியல்புகளை தொகுத்து எழுதுக?

## 8.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்


1. முனைவர் ஞா.பழனிவேலு (2011), செந்தமிழ் கற்பித்தல், பொதுத்தமிழ், நதி பப்ளிகேஷன்ஸ், தஞ்சாவூர்.
2. வெ.கலைச்செல்வி (2013), பொதுத்தமிழ் கற்றல் - கற்பித்தல், சஞ்ஜீவ் வெளியீடு,ஈரோடு.
3. கோவிந்தராஜன்.மு. (1990), நற்றமிழ் பயிற்றலின் நோக்கமும், முறையும், சரஸ்வதி பதிப்பகம், சென்னை.
4. டாக்டர்.ந.சுப்புரெட்டியார் (1964), தமிழ்பயிற்று முறை, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
5. முனைவர் அ. மீனாட்சிசுந்தரம் (2014), பாடப்பொருள் மற்றும் தமிழ் கற்பித்தல், காவ்யமாலா பப்ளிஷர்ஸ், திண்டுக்கல்.

குறிப்பு

# அலகு - 9 படித்தல்திறன்

**பாடஅமைப்பு**


9.1 முன்னுரை

9.2 குறிக்கோள்கள்

9.3 படித்தல் திறன்

9.3.1 படித்தல் திறனின் நோக்கம்

9.3.2 படித்தல் திறனின் முறைகள்

9.3.2.1. வாய்விட்டுப் படித்தல்

9.3.2.2. வாய்க்குள் படித்தல்

9.3.2.3. சொல்முறைப் படிப்பு

9.3.2.4. சொற்றொடர் முறைப் படிப்பு

9.3.2.5. ஆழ்ந்த படிப்பு

9.3.2.6. அகன்ற படிப்பு

9.3.2.7. நூலகப் படிப்பு

9.3.3 படித்தல் திறனின் பயிற்சி

9.3.3.1. எழுத்துமுறைப் பயிற்சி

9.3.3.2. சொல்முறைப் பயிற்சி

9.3.3.3. சொற்களஞ்சியப் பெருக்கம்

9.3.4 படித்தல் திறனின் பயன்கள்

9.4. தொகுத்துக் காண்போம்

9.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

9.6. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

9.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்


## 9.1 முன்னுரை

மொழி முதலில் ஒலி வடிவமாக வெளியிடப்பட்டது. பின்னர் இவ்வொலிகளுக்கு எழுத்து வடிவங்கள் உண்டாயின. மொழியின் முதல் காரணமான ஒலிகள் சேர்ந்து எழுத்துக்கள் உருவாயின. அச்சிலோ, கையெழுத்திலோ உள்ள செய்திகளைக் கண்ணால் பார்த்து, வாயால் உச்சரித்து, மனத்தால் பொருளுணர்ந்து கொள்வதைத்தான் படிப்பென்கின்றோம். ஆகவே படிப்புத்திறனில் காணல் - நினைவு கூர்தல் - பொருள் புரிதல் ஆகியவை அங்கங்களாகும். பொருள் புரிதல் வாழ்வின் உயர்நிலையாகும். எனவே படித்தல் திறனில் மாணவர்கள் பயிற்சி பெற ஆசிரியர்கள் வழிகாட்டியாக அமைய வேண்டும்.

எனவே அடிப்படைத் திறன்களான கேட்டல், பேசுதல் திறன்களைப் போன்றே படித்தல் திறனை மாணவர்களிடம் வளர்ப்பதில் ஆசிரியர் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும்.

## 9.2 குறிக்கோள்கள்

நீங்கள் இப்பாடத்தைப் பயின்ற பின்னர்,

- ❖ படிப்புத்திறனைக் கற்பிக்கும் முறைகளை வகைப்படுத்துவீர்கள்.
- ❖ ஆழ்ந்த படிப்பு, அகன்ற படிப்பு ஆகிய முறைகளை விளக்கி அவற்றிற்கிடையேயுள்ள வேறுபாட்டை எடுத்துரைப்பீர்கள்.

## 9.3. படித்தல் திறன்

தாய்மொழிப் பயிற்சியில் வாய்மொழிப் பயிற்சிக்கு அடுத்த முக்கியமான பிரிவு படிப்பாகும். ‘‘ஓதுவதொழியேல்’’ என்ற ஔவை பாட்டியின் வாக்கில் ஓதுவது – படிப்பு – கையெழுத்தின் வளத்தைக் கண்ணால் பார்த்து வாயால் உச்சரித்துச் சொல்ல பொருள் உணர்வதை படிப்பு என்கிறோம். படிக்கும் பழக்கத்தை முதல் வகுப்பிலிருந்தே தொடங்க வேண்டும். முதலில் வாசிப்பதற்குக் கற்கவேண்டும். பின்னர் கற்பதற்கு வாசிக்கவேண்டும். வாசிப்பில் மாணவர்களுக்குத் தொடக்க நிலையிலிருந்தே ஆர்வமிருப்பின் படிப்புப் பழக்கம் உருவாகி அடைவு பெருகும்.

### 9.3.1. படித்தல் திறனின் நோக்கம்

கீழ்வகுப்பில் படிப்பில் திறமையான பழக்கங்கள் மேம்பட்ட பின்னர் தானாகப் படிக்கும் பழக்கத்தை உண்டாக்க வேண்டும்.

- சிறந்த உச்சரிப்புடன் படித்தல்
- திருத்தமாய் படித்தல்
- ஒலியமைப்புடன் படித்தல்
- உள்ளதை உள்ளவாறே படித்தல்
- உணர்வுகளுடன் உணர்ந்து படித்தல்
- நிறுத்தற் குறியீடுகளை உணர்ந்து படித்தல்

### 9.3.2. படித்தல் திறனின் முறைகள்

1. வாய்விட்டுப் படித்தல்
2. வாய்க்குள் படித்தல்
3. சொல்முறைப் படிப்பு
4. சொற்றொடர் முறைப் படிப்பு
5. ஆழ்ந்த படிப்பு
6. அகன்ற படிப்பு
7. நூலகப் படிப்பு

குறிப்பு

### 9.3.2.1. வாய்விட்டுப் படித்தல்

நூலிலிருக்கும் எழுத்துக்களைக் கண்ணால் பார்த்து வாயால் உச்சரித்துச் சொல், பொருள் உணர்தலையே வாய்விட்டு படித்தல் என்கிறோம்.

**பயன்கள்**

- பேசுவதற்கு இது துணைபுரியும்.
- நூலிலிருந்து பேசுவதற்குப் பல சொற்களை எடுத்துக் கொள்ளும் போது இயல்பாக பேசுவதற்கு பயிற்சி ஏற்படுகிறது.
- ஒரு நாடகத்தைப் பார்த்து அதில் வரும் கதைமாந்தர்களைப் போல் நடித்தும், பேசும் போதும் வாய்மொழிப் பயிற்சியின் அளவு அதிகமாகும்.

**நிறைகள்**

1. ஓசை நயத்தையும், செய்யுள் இன்பத்தையும், சுவையையும் நன்கு அறிய முடிகிறது.
2. உணர்ச்சியையும், உளச்சுவையையும் தட்டியெழுப்புவதற்குப் படிப்பு துணை செய்கிறது.
3. பெருங்கூட்டத்தில் கூச்சமின்றிப் பேசவும், பழகவும் வாய்விட்டுப் படித்தலானது வாக்கு வன்மையை அளிக்கிறது.

**குறைகள்**

1. முதல் இரண்டு வகுப்புகளுக்கு மேல் இதை வளர்ப்பதில் முயற்சி எடுப்பதில்லை.
2. சொற்களைத் தவறாக உச்சரித்தல், எழுத்துப் பிழைகள், தெளிவற்ற பேச்சு முதலியவை குறைவாக காணப்படுகின்றன.

### 9.3.2. 2. வாய்க்குள் படித்தல்

வாய்க்குட் படிப்பு ஓலைச் சுவடிகள், கைச்சுவடிகள், அச்சு நூல்கள் முதலியவற்றை மனதிற்கு உள்ளேயே வாய் திறக்காமல், உதடுகள் அசையாமல், தொண்டையின் அசைவு கூட இல்லாமல் ஒலித்துச் சத்தமின்றிப் படித்தலைத்தான் வாய்க்குள் படித்தல் என்கிறோம்.

**பயன்கள்**

- படிப்பின் நோக்கம் கருத்துணர்தலே ஆகும். இதற்கு பெருந்துணை புரிவது வாய்க்குள் படித்தல் ஆகும்.

- விரைவும், விரிவும் அமைந்த இவ்வகைப் படிப்பில் தான் கருத்துணர்தல் எளிதில் கைவரப் பெறுகின்றன.

**நிறைகள்**

- பேச்சுக்கருவிகளுக்கு வேலையில்லை. எனவே உடல் உறுப்புகள் சோர்வடைவதில்லை.
- படிக்கும் பொருளில் அதிக கவனம் செலுத்தலாம்.
- படிப்பு விரைந்து செல்வதுடன் கருத்துணர்தல் ஆற்றல் வளரும்.
- அதிக பகுதிகளைப் படிக்கலாம்.

**குறைகள்**

- குரல் பயிற்சிக்கும், உச்சரிப்பில் திருத்தம் பெறுவதற்கும் வாய்ப்பு இல்லை.
- உரையாடல், பேச்சு, சொற்பொழிவுகள் முதலியவற்றிற்கு துணை செய்யாது.
- செய்யுள் படித்து இன்புற முடியாது.
- நயங்கள் சுவை உணர முடியாது.

### 9.3.2.3. சொல்முறைப் படிப்பு

சொல்முறையை கண்டறிந்தவர் ''காமெனியஸ்''. சொல்லின் பொருளை முதலில் கற்பிப்பதால் இது சொல்முறைப் படிப்பு என்று அழைக்கப்படுகிறது. சொற்களை முழுமையாகக் கற்ற பின்னர் அவற்றைக் குறிக்கும் எழுத்துக்களைக் கற்கின்றனர்.

**பயன்கள்**

1. சொற்கள் பொருள் உணர்ந்து படிப்பதால் படிப்பில் ஆர்வம் ஏற்படுகின்றது.
2. தெரிந்ததைக் கொண்டு தெரியாததைக் கற்பித்தல் எனும் வளநூல் கொள்கையை ஏற்றுள்ளது.

### 9.3.2.4. சொற்றொடர்முறைப் படிப்பு

இது கதைமுறை எனவும் அழைக்கப்படுகிறது. எளிய சொற்றொடர்கள் பலவற்றைக் கற்றபின் அச்சொற்றொடர்களால் அமைந்த சொற்களையும் கற்பதே சொற்றொடர் முறை படிப்பாகும். மொழியின் உறுப்பாக சொற்றொடர் காணப்படுகிறது. இது குழந்தைகளுக்கு ஏற்ற இயற்கை முறை ஆகும்.

**பயன்கள்**

1. இயற்கையோடு இணங்கிய முறை.
2. சொற்றொடர்களைக் கற்பதன் மூலம் பொருளைத் தெளிவாக

குறிப்பு

உணருகின்றனர்.

3. படிப்பில் ஆர்வம் ஏற்படும்.

4. தொகுதியினின்று பகுதிக்குச் செல்லல் எனும் உளவியல் முறைக்கு ஏற்ற முறையாகும்.

### 9.3.2.5. ஆழ்ந்த படிப்பு

ஒரு மொழியின் அமைப்புகளை முழுமையாக நுணுக்கமாக ஆழ்ந்தும் ஊன்றியும் நன்கு தெளிவாகக் கற்பதே ஆழ்ந்த படிப்பாகும். மொழியின் ஒலி அமைதி, சொல் மரபு, தொடர் மரபு, பக்தி மரபு, நடைமுறை இலக்கணம், சொற்களஞ்சியப் பெருக்கம், இலக்கணக் கூறுகளை உணர்தலும், மொழி இயல்பையும் இம்முறையில் அறியலாம்.

**நோக்கம்**

- சொல்லழகு, பொருளழகுகளை உணர்ந்து இன்புற்று சுவைத்தல்.
- கருத்துக்களின் இனிமையைத் துய்த்து இன்புறல்.
- மாந்தர்களின் குணவியல்புகளை மாண்புற ஆய்தல்.
- பாடஅமைப்பின் ஒழுங்கையும் தன்மையையும் அறிதல்.

### 9.3.2.6. அகன்ற படிப்பு

ஆழ்ந்து படிக்கின்ற பாட நூல்களுடன் விரைவாகவும், வாய்க்குள் படிக்க வேண்டிய கதைப்புத்தகங்கள், துணைப்பாட நூல்கள், நூலக நூல்கள் ஆகியனவற்றைப் படிக்கும் பிறிதொரு வகை படிப்பிற்கு அகன்ற படிப்பு என்று பெயர்.

**நோக்கம்**

- பிறர் துணையின்றி விரும்பியவாறு பல நூல்களைப் படித்தல்.
- மனநிறைவும் மகிழ்ச்சியும் எய்துதல்.
- விரைவாகப் படிக்கும் திறன் வளர்த்தல்.
- பொது அறிவும், உலக அறிவும் பெறுதல்.
- கற்பனை ஆற்றலையும், படைப்பாற்றலையும் வளர்த்தல்.
- சொற்களஞ்சியப் பெருக்கம் உண்டாதல்.

### 9.3.2.7. நூலகப் படிப்பு

நூலகம் = நூல் + அகம் பல்வேறு வகையான நூல்களைத் தன்னகத்தே கொண்டுள்ள பகுதியை நூலகம் என்கிறோம். நூலகம் என்பது பல்வேறு தலைப்புகளில் அமைந்த நூல்களை ஓர் ஒழுங்கு முறைப்படி சேகரித்துப் பாதுகாத்து வைக்கும் இடமாகும். ஒவ்வொரு கல்வி நிறுவனத்தின் வளர்ச்சியிலும், மாணவர்களின் அறிவு

வளர்ச்சியிலும் நூலகங்களே இதயப்பகுதியாகவும், மூளையாகவும் இயங்குகின்றன.

நூலகத்தில் படிப்பதற்கெனத் தனிப்பாட வேளைகளை ஒதுக்கிவைப்பது ஆசிரியர் கடமையாகும். நூலகப் பாடவேளையில் அந்நூலகப் புத்தகங்களை வகுப்பிற்கு எடுத்து வந்து அவற்றை மாணாக்கர் தம் அறிவு நிலைக்கேற்ப அவரவர் விரும்பும் துறைபற்றிய கதை நூல்களை அவர்கட்கு வழங்கிப் படிக்கச் சொல்ல வேண்டும். கதை படித்து முடிந்த பின் அக்கதை பற்றிய சுருக்கத்தையோ, கருத்துக்களையோ அதன்வழி பெற்ற அறநெறிகளையோ முதலில் கூறுமாறும் பின்னர் எழுதுமாறும் பயிற்சி தரவேண்டும். இப்பயிற்சி பிற்காலத்தில் அச்சிறுவர் வாழ்க்கையில் பெரும் பயனளிக்க இம்முறை பயன்படும்.

**நோக்கங்கள்**

- கற்றலில் ஆர்வத்தைப் பெருக்குதல்,
- பொது அறிவை வளர்த்தல்,
- கற்றலில் மகிழ்ச்சியையும், ஈடுபாட்டையும் உண்டாக்குதல்,
- குறிப்பெடுக்கும் பழக்கம் உண்டாதல்,
- பிற்கால வாழ்க்கைக்கு நூலகப் படிப்பு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

**நிறைகள்**

1. நூலகப் படிப்பு வாய்க்குள் படிததல் திறனை வளர்க்கும்.
2. அகன்ற படிப்புக்கு துணையாக அமையும்.
3. மாணாக்கர்களுக்குத் தன்னம்பிக்கை ஏற்படும்.
4. படிப்புப் பழக்கத்தை வளர்ப்பதற்கு இது சிறந்த தூண்டுகோலாக அமையும்.
5. சொற்களஞ்சியப் பெருக்கம் எற்பட வாய்ப்பாக அமையும்.

**குறைகள்**

1. காலக் கழிவு ஏற்படும்.
2. அனைவரும் விரும்பும் நூல்களைக் கொடுப்பது கடினம்.
3. ஆசிரியர் முன்னேற்பாடு செய்யவேண்டும்.
4. தொடர்பணி கொடுக்காவிட்டால் நூலகப் படிப்பின் பயன் இல்லாது போகும்.

### 9.3.3. படித்தல் திறனின் பயிற்சி

#### 9.3.3.1. எழுத்துமுறைப் பயிற்சி

இது மிகப் பழமையான முறை. பண்டைய காலத்தில் இருந்து

குறிப்பு

எல்லா நாடுகளிலும் இம்முறை பின்பற்றப்படுகிறது. கிரேக்கர்கள், ரோமானியர்கள், போனீஷியர்கள் ஆகியோர் மேற்கொண்டனர். எழுத்துக்களை முதலில் கற்பித்து அதன் பிறகு படிக்கக் கற்பித்ததால் இ∴து எழுத்து முறை எனப் பெயர் பெற்றது.

**பயன்கள்**

1. தமிழ் எழுத்துக்களை கற்பது எளிது.
2. எழுத்துக் கூட்டிக் கற்றுக் கொண்ட மாணவர்கள் ஆசிரியரின் துணையின்றி தாமதமாக கற்க இயலும்.
3. எழுத்து பிழையின்றி படிக்கவும், எழுதவும் எளிதில் கற்றுக் கொள்வர்.

**9.3.3.2. சொல்முறைப் பயிற்சி**

சொல்முறையைக் கண்டறிந்தவர் ‘‘காமெனியஸ்’’. சொல்லைப் பொருளுணர்த்தும் அளவாகக் கொண்டு கற்பிப்பதால் இதற்கு சொல்முறை பயிற்சி என்று அழைக்கப்படுகிறது. சொற்களை முழுமையாக கற்ற பின்னர் அவற்றைக் குறிக்கும் எழுத்துகளைப் பிறகு கற்கின்றனர்.

**பயன்கள்**

1. சொற்கள் பொருள் உணர்ந்து படிப்பதால் படிப்பில் ஆர்வம் ஏற்படுகின்றது.
2. தெரிந்ததைக் கொண்டு தெரியாததைக் கற்பித்தல் எனும் வளநூல் கொள்கையை ஏற்றுள்ளது.

**9.3.3.3. சொற்களஞ்சியப் பெருக்கம்**

மாணவர்களின் படிக்கும் பழக்கத்தால், அவர்கள் புதிய புதிய சொற்களைக் கற்றுக் கொள்கின்றனர். நாள்தோறும் வழங்கும் சொற்கள், நாள்தோறும் வழங்காச் சொற்கள், என இரண்டையும் அவர்கள் உணர்வதற்கு, பல்வேறு நூல்களைப் பயில வேண்டும். ஆசிரியர் பாடத்தைக் கற்பிக்கும்போது புதிய சொற்களை எடுத்துரைக்க வேண்டும். ஒவ்வொரு மாணவரும் பெற்றுள்ள சொற்களின் தொகுப்பே ‘**சொற்களஞ்சியம்**’ ஆகும்.

**சொற்களஞ்சியப் பெருக்கத்தின் நிறைகள்**

- ✓ படிப்பில் விரைவு ஏற்படுகிறது.
- ✓ படிக்கும் பழக்கம் மேம்படுகிறது.
- ✓ மொழிநடை சிறப்படைகிறது.
- ✓ கருத்துணர்தல் திறன் ஏற்படுகிறது.

**குறிப்பு**

**சொற்களஞ்சியப் பெருக்கத்தின் குறைகள்**

- மாணவர்கள் படித்தால் மட்டுமே சொற்களஞ்சியப் பெருக்கம் ஏற்படும்.
- மாணவர்களின் ஆர்வம் குறையலாம்.
- பொருள் அறியாத சொற்களால் பயனில்லை.
- அனைத்து மாணவர்களும் ஒரே மாதிரி சொற்களஞ்சியப் பெருக்கம் அடைய வாய்ப்பில்லை.

### 9.3.4 படித்தல் திறனின் பயன்கள்

- பேசுவதற்கு இது துணைபுரியும்.
- நூலிலிருந்து பேசுவதற்குப் பல சொற்களை எடுத்துக் கொள்ளும் போது இயல்பாக பேசுவதற்கு பயிற்சி ஏற்படுகிறது.
- சொற்கள் பொருள் உணர்ந்து படிப்பதால் படிப்பில் ஆர்வம் ஏற்படுகின்றது.
- தெரிந்ததைக் கொண்டு தெரியாததைக் கற்பித்தல் எனும் வளநூல் கொள்கையை ஏற்றுள்ளது.
- இயற்கையோடு இணங்கிய முறை.
- சொற்றொடர்களை கற்பது மூலம் பொருளை தெளிவாக உணருகின்றனர்.
- படிப்பில் ஆர்வம் ஏற்படும்.
- தொகுதியினின்று பகுதிக்குச் செல்லல் எனும் உளவியல் முறைக்கு ஏற்ற முறையாகும்.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமதுபதிலைக் கீழேகொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.**
**ஆ.உமதுபதிலைப் பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.**

1. படித்தல் திறனின் நோக்கம் ஏதேனும் இரண்டினைக் கூறுக?

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………

2. படித்தல் திறனின், முறைகள் நான்கினைக் கூறுக?

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………

## 9.4. தொகுத்துக் காண்போம்

இப்பாடப்பகுதியில் படித்தல் திறனின் நோக்கம், வகைகள், பயிற்சி, முறைகள் ஆகியவை கூறப்பட்டுள்ளன. மேலும் படிப்பில் ஆர்வத்தை ஏற்படுத்த ஆசிரியர் மேற்கொள்ளக் கூடிய இன்றியமையா வழிமுறைகளும் கூறப்பட்டுள்ளன. பாடப்புத்தகங்களைப் படிக்கும்

குறிப்பு

வழிமுறைகளாகிய ஆழ்ந்தபடிப்பு, அகன்றபடிப்பு போன்றவையும் விவரிக்கப்பட்டுள்ளன.

## 9.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாவிற்கான விடைகள்.

1. சிறந்த உச்சரிப்புடன் படித்தல், திருத்தமாய் படித்தல், ஒலியமைப்புடன் படித்தல்
2. வாய்விட்டுப் படித்தல், வாய்க்குள் படித்தல், சொல்முறை படிப்பு, சொற்றொடர் முறை படிப்பு

## 9.6. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

1. படித்தல் திறனை மேம்படுத்துவதற்கான பயிற்சி முறைகளைக் கூறுக?
2. சொற்களஞ்சியப் பெருக்கம் என்றால் என்ன?

## 9.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்


1. முனைவர் ஞா.பழனிவேலு (2011), செந்தமிழ் கற்பித்தல், பொதுத்தமிழ், நதி பப்ளிகேஷன்ஸ், தஞ்சாவூர்.
2. வெ.கலைச்செல்வி (2013), பொதுத்தமிழ் கற்றல் - கற்பித்தல், சஞ்ஜீவ் வெளியீடு,ஈரோடு.
3. கணபதி .வி (1989), தமிழ் ஐவகைப் பாடங்களும் கற்பித்தலும், சாந்தா பப்ளிஷர்ஸ், சென்னை.
4. கோவிந்தராஜன்.மு. (1990), நற்றமிழ் பயிற்றலின் நோக்கமும், முறையும், சரஸ்வதி பதிப்பகம், சென்னை.
5. டாக்டர்.ந.சுப்புரெட்டியார் (1964), தமிழ்பயிற்று முறை, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்


*****

# அலகு - 10 எழுதுதல் திறன்

குறிப்பு

**பாடஅமைப்பு**


10.1 முன்னுரை

10.2 குறிக்கோள்கள்

10.3 எழுதுதல் திறன்

10.3.1 எழுதுதல் திறனின் நோக்கம்

10.3.2. எழுதுதல் திறனின் முறைகள்

10.3.2.1. பார்த்து எழுதுதல்

10.3.2.2. வரியொற்றி எழுதுதல்

10.32.3. சொல்வதை எழுதுதல்

10.3.3. எழுதுதல் திறனின் பயிற்சி

10..3.3.1. நல்ல கையெழுத்தின் இயல்புகள்

10.3.4. எழுதுதல் திறனின் பயன்கள்

10.4. தொகுத்துக் காண்போம்

10.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

10.6. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

10.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்


## 10.1 முன்னுரை

மொழித்திறன்களுள் மிகவும் முக்கியமானதாகவும், இறுதியாகவும் விளங்குவது எழுத்துத்திறனாகும். ஒருவருடைய எண்ணங்களை வெளிப்படுத்தப் பேச்சு எவ்வளவு துணை நிற்கின்றதோ, அதுபோலவே எழுத்தும் துணை நிற்கிறது. மொழியின் ஒலி வடிவங்களை நன்கு அறிந்தும் அவற்றைச் சரியாக எழுதாத பொழுது அதனால் பயன் இல்லை. எனவே தொடக்கப்பள்ளி முதலே மொழியாசிரியர்கள் மாணவர்களின் எழுத்துப் பயிற்சியில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். எனவே அடிப்படைத் திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல் திறன்களைப் போன்றே எழுதுதல் திறனையும் மாணவர்களிடம் வளர்ப்பதில் ஆசிரியர் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும்.

## 10.2 குறிக்கோள்கள்

நீங்கள் இப்பாடத்தைப் பயின்ற பின்னர்,

❖ நல்ல கையெழுத்தின் நல்லியல்புகளை அறிவீர்கள்.

குறிப்பு

❖ எழுத்துத்திறனை வளர்ப்பதன் தேவை, எழுத்துப்பயிற்சியின் முறைகள் ஆகியவற்றை அறிவீர்கள்.

## 10.3. எழுதுதல் திறன்

மொழிப் பயிற்சியால் படிப்பதற்கு அடுத்த நிலையில் கற்பிக்கப் பெற வேண்டிய ஒன்று எழுத்துப் பயிற்சியாகும். நேரில் இருப்பவர்களுக்கு, பேசுவதன் மூலம் எண்ணங்களை வெளியிடுகின்றோம். நேரில் இல்லாதவர்களுக்கு, எழுத்து மூலமாக எண்ணங்களைத் தெரிவிக்கின்றோம். மடல்கள் வரையவும், நூல்கள் இயற்றவும் அறிஞர் பெருமக்களின் எண்ணங்களையும், ஆய்வுரைகளையும் வெளியிட உதவியாய் இருப்பது எழுத்தேயாகும்.

ஒரு மொழியிலுள்ள ஒலிகளை வரி வடிவங்களாக அமைப்பது எழுத்தாகும். வரிவடிவ எழுத்துக்களை எழுதிக் காட்டச் செய்தலே எழுத்துப் பயிற்சியாகும்.

### 10.3.1. எழுதுதல் திறனின் நோக்கம்

✓ எக்காலத்திலும் நிலைத்திருக்கச் செய்தல்.

✓ இடம் கடந்த தொடர்பு

✓ காலம் கடந்த தொடர்பு

### 10.3.2. எழுதுதல்திறனின் முறைகள்

மாணவர்கள் செறிவுடனும், அழகுடனும், விரைவுடனும் எழுதக் கற்றுக் கொண்ட பிறகு தக்க பயிற்சிகளை அளிக்க வேண்டும்.

1. பார்த்து எழுதுதல்
2. வரியொற்றி எழுதுதல்
3. சொல்வதை எழுதுதல்

### 10.3.2.1. பார்த்து எழுதுதல்

குழந்தைகள் எதைப் பார்த்தாலும் அதன்படியே பார்த்து எழுத விரும்புகின்றனர். இவ்விருப்பத்தை ஆசிரியர்கள் வளரச் செய்து பயன்படும் முறைகளில் கொண்டு செலுத்துதல் வேண்டும். முதலில் பெயர்கள் எழுதிய படங்களை குழந்தைகளுக்கு காட்டி வரையச் செய்யலாம்.

1. கையெழுத்து திருத்தமாய் எழுத வழிவகுக்கிறது.
2. விரைந்து எழுதுவதற்குப் பயிற்சி தரப்படுகிறது.
3. உற்று நோக்கும் திறன் வளர்கின்றது.
4. எழுத்துக் கூட்டி எழுதுவதற்கு உதவுகிறது.
5. சொல்லிக் கொண்டே எழுதுவதால் நல்ல மொழிப் பயிற்சி வளரும்.

குறிப்பு

**10.3.2.2. வரியொற்றி எழுதுதல்**

கையெழுத்து சிறந்து விளங்குவதற்கு வரியொற்றியெழுதுதல் சிறந்த பயிற்சி ஆகும். இருகோடுகள் அல்லது நான்கு கோடுகள் இட்ட குறிப்பேட்டில் எழுதுமாறு செய்தல் வேண்டும். மாணவர்கள் நாள்தோறும் இப்பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். இருகோடுகள், நான்கு கோடுகளில் எழுதி பழகிய பின்னா் எழுதிப் பழகலாம். அச்சிட்ட பயிற்சியேடுகளையும் பயன்படுத்த வேண்டும்.

**10.3.2.3. சொல்வதை எழுதுதல்**

ஆசிரியா் சொல்வதைக் கேட்டு மாணவர்கள் பாராது எழுதுவது சொல்வதை எழுதுதல் எனப்படும். பார்த்து எழுதுவதைவிடக் கேட்டு எழுதுதலில் சுறுசுறுப்பும் விரைவும் அதிகமாக உண்டு. மாணவா்களின் ஆா்வம், எழுதும் வேகம், கேட்டல் திறன் ஆகியன இதனால் மேம்படும். சொல்வதெழுதுவதில் ஆசிரியா் சொல்ல மாணவா் கேட்டு எழுதுதுல், மாணவா் சொல்ல மாணவா் எழுதுதல், பிறா் சொல்வதைக் கேட்டல், தொலைக்காட்சி மற்றும் ஒலிநாடாக்களை கேட்டு எழுதுதல் ஆகியன அடங்கும்.

**சொல்வது எழுதுவதின் இயல்புகள்**

- எழுதுவதில் வேகம் கூடுகிறது.
- கருத்துணா்ந்து எழுதும் ஆற்றல் மேம்படுகிறது.
- கேட்கும் பொருள் மனதில் நன்கு பதிகிறது.
- ஒலி வேறுபாடுகளை மாணவர்கள் அறியமுடிகிறது.
- பிழைகளில்லாமல் எழுதும் பயிற்சி ஏற்படுகிறது.
- செவிப்புலன் உணா்ச்சி தூண்டப்படுகிறது.
- நினைவாற்றல் வளா்கிறது.

**10.3..3. எழுதுதல் திறனின் பயிற்சி**

**1.தசைப்பயிற்சி**

கைவிரல், மணிக்கட்டு பயிற்சி பெற வேண்டும். பெரிய புத்தகங்களை அடுக்கவும், தூக்கி வைக்கவும் செய்யலாம். அதே போல் சிறிய பொருளுக்கும் பயிற்சி எடுக்கலாம் அப்போது தசைநார்கள் நன்கு வளா்ச்சியடையும்.

**2. விரலால் கிறுக்கச் செய்தல்**

தரையில் மணலைப் பரப்பி அதன்மேல் வலது ஆட்காட்டி விரல் கொண்டு அவா்கள் விருப்பம் போல் எழுதுமாறு செய்தல் வேண்டும்.

**3. எளிய படங்கள் வரைதல்**

பரங்கிக்காய், மரங்கள், ஆரஞ்சு, ஏணி முதலிய படங்களை வரையச் செய்து தசைநார்கள் வலுப்பெறச் செய்யலாம்.

குறிப்பு

**4. வெட்டி ஒட்டுதல்**

அட்டையில் பல உருவங்களை வெட்டி எடுத்து விட்டு அந்த அட்டையை ஒரு தாளின் மேல் வைத்து வண்ணப் பென்சிலால் உருவத்தை உண்டாக்குதல் வேண்டும். உருவங்களை வரையவும் உருவங்களின் இயல்புகளை புரிந்து கொள்ள உதவுகிறது.

**8.4.3.1. நல்ல கையெழுத்தின் இயல்புகள்**

இடமிருந்து வலமாக எழுதப்பெறும் மொழி நம் தமிழ் மொழியாகும். இம்மொழியில் எழுத்துகள் வட்ட வளைவு, சுழி, மேற்கோடு ஆகிய பல அமைப்புகளைக் கொண்டவை. இவற்றைச் செம்மையாக எழுதக் கற்றுக் கொள்ள வேண்டும். கையெழுத்து செய்தித் தொடர்பாக அமைவதால் பொருள் புரிதலுக்குத் துணை செய்ய வேண்டும். கையெழுத்தின் நல்லியல்புகளாகக் கீழ்க்கண்டவை விளங்க வேண்டும்.

1.தெளிவு

2.அளவு

3.அழகு

4.இடைவெளி

5.விரைவு

**1.தெளிவு**

படிப்பவர் புரிந்துகொள்ளும் வகையில் எழுதுவது, தனித்தனியாக எழுதுதல், எழுத்துக்களுக்கு உரிய உருவங்களைச் சிதைக்காமல், கூட்டாமல், குறைக்காமல் சரியாக இடைவெளி ஏற்படுத்தி எழுதுவது, மேலும் தேவையான இடங்களில் நிறுத்தற்குறிகளை இடுதல் போன்றவற்றை நன்கு கவனித்து எழுதுவது தெளிவு எனப்படும்.

**2. அளவு**

எழுத்துக்கள் ஒரே அளவாய், சீராய் இருந்தால், அதுவே ஒரு தனியழகாக இருக்கும். ஒரு வரியில் பெரியதாகவும், மறு வரியில் சிறியதாகவும், சில வரியில் சுமாராகவும் எழுதினால் பார்ப்பதற்கே வெறுப்பாகத் தோன்றும். எழுத்துக்களின் உருவங்கள் சரியாய் அமைந்து மேற்கோடு, சுழி முதலியவை ஒரே அளவாய் இருக்க வேண்டும். எழுத்துக்கு எழுத்து, சொல்லுக்குச் சொல், வரிக்கு வரி இடைவெளி விட்டு ஒரே அளவாக எழுத வேண்டும்.

**3. விரைவு**

எழுத்துக்கள் அழகாகவும், தெளிவாகவும் இருக்க வேண்டுமென்பதற்காக மிகவும் மெல்ல நிறுத்தி எழுதக்கூடாது. தெளிவுடன் விரைந்து எழுதி அழகும் கூட்ட வேண்டும். ஆசிரியர் ஒரு

பகுதியை எழுதச் சொல்லி, நிறுத்து என்றதும் நிறுத்தச் செய்து, எடுத்துக் கொண்ட கால அளவைக் கணக்கிட்டு, மாணாக்கர்களிடம் உள்ள எழுத்து விரைவைக் கணக்கிடலாம். எழுத்து விரைவை அதிகரிக்கச் செய்தல் ஆசிரியரின் கடமையாகும்.

**4. அழகு**

இடைவெளிகள் விட்டு எழுதுகின்ற பொழுது பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும். தேவையற்ற முறையில் சிலவற்றைச் சேர்த்து எழுதுவதையும் கோடுகளை வளைத்தும், நீட்டியும் எழுதுவதை தவிர்த்தல் நன்று. புள்ளிகளை வட்டமாகச் சிலர் எழுதுவர். இவ்வாறு எழுதக் கூடாது. முத்து முத்தாய் எழுதினால் பார்ப்பதற்கு அழகாக விளங்கும். ஒருவனது கையெழுத்துக்களைக் கொண்டே குணவியல்புகளைக் கூறலாமென்கிறார்கள்.

**5. இடைவெளி**

சொல்லுக்குச் சொல் இடைவெளி விட்டு எழுதுதல் வேண்டும். பத்தியைத் தொடங்குகின்றபொழுது பாதியிலிருந்து தொடங்குதல் வேண்டும். இடைவெளி விட்டு எழுதுகின்ற எழுத்து அழகுடன் விளங்கும். எழுத்துக்களின் ஒழுங்கு வரிசையை வீதியின்கண் அமைந்த மாடமாளிகையின் வரிசைக்கு ஒப்புமைக்காட்டிப் புலப்படுத்தியிருக்கிறார் தமிழ்ப் புலவர் கச்சியப்ப முனிவர்.

### 10.3.4. எழுதுதல் திறனின் பயன்கள்

1. கையெழுத்து திருத்தமாய் அமைவதற்கு வழி வகுக்கும்.
2. விரைவாக எழுதுவதற்கும் பயிற்சியாக அமையும்.
3. மனத்தை ஒரு நிலைப்படுத்தும் ஆற்றல் வளர்கிறது.
4. கருத்து வளம் ஏற்பட வழி வகுக்கும்.
5. உற்று நோக்கும் திறன் வளர்கிறது.

**முன்னேற்றத்தைச் சோதித்துஅறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழேகொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.**
**ஆ.உமது பதிலைப் பாடத்தின்இறுதியில்கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.**

1. எழுதுதல் திறன் என்றால் என்ன?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

2. நல்ல கையெழுத்தின் இயல்புகள் யாவை?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………

குறிப்பு

## 10.4. தொகுத்துக் காண்போம்

இப்பாடப்பகுதியில் எழுதுதல் திறனின் நோக்கம், வகைகள், பயிற்சி, முறைகள் ஆகியவை கூறப்பட்டுள்ளன. நல்ல கையெழுத்தின் இயல்புகள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

## 10.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாவிற்கான விடைகள்.

1. ஒரு மொழியிலுள்ள ஒலிகளை வரி வடிவங்களாக அமைப்பது எழுத்தாகும். வரிவடிவ எழுத்துகளை எழுதிக் காட்டச் செய்தலே எழுதுதல் திறனாகும்.
2. தெளிவு, அளவு, அழகு, இடைவெளி, விரைவு.

## 10.6. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

1. நல்ல கையெழுத்தின் நல்லியல்புகளைக் கூறுக?
2. எழுதுதல் திறனின் முறைகளை விவரிக்க.

## 10.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்


1. முனைவர் ஞா.பழனிவேலு (2011), செந்தமிழ் கற்பித்தல், பொதுத்தமிழ், நதி பப்ளிகேஷன்ஸ், தஞ்சாவூர்.
2. வெ.கலைச்செல்வி (2013), பொதுத்தமிழ் கற்றல் - கற்பித்தல், சஞ்ஜீவ் வெளியீடு,ஈரோடு.
3. கணபதி .வி (1989), தமிழ் ஐவகைப் பாடங்களும் கற்பித்தலும், சாந்தா பப்ளிஷர்ஸ், சென்னை.
4. கோவிந்தராஜன்.மு. (1990), நற்றமிழ் பயிற்றலின் நோக்கமும், முறையும், சரஸ்வதி பதிப்பகம், சென்னை.
5. டாக்டர்.ந.சுப்புரெட்டியார் (1964), தமிழ்பயிற்று முறை, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்


*****

# அலகு: 11 பாடநூல், மொழியாசிரியர், நூலகம்

**பாடஅமைப்பு**

11.1. முன்னுரை
11.2. குறிக்கோள்கள்
11.3. பாடநூல்
11.3.1. பாடநூல் அமைப்புமுறை
11.4. பாடநூல் உள்ளடக்கம்
11.5. வல்லுநர்களின் வழிகாட்டல்
11.6. தொடக்கநிலை, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலை வகுப்புகளில் மொழிப்பாடத் திட்ட நோக்கங்கள் அவற்றின் மொழிப்பாடங்கள்.
11.7. மொழியாசிரியர்
11.7.1. மொழியாசிரியரின் கல்வித்தகுதி
11.7.2. மொழியாசிரியரின் சிறப்புப் பண்புகள்
11.8. நூலகம்
11.8.1. நூலகத்தின் வகைகள்
11.8.1.1. பொது நூலகம்
11.8.1.2. பள்ளி நூலகம்
11.8.1.3. வகுப்பு நூலகம்
11.8.1.4. மேற்கோள் நூலகம்
11.9. தொகுத்துக் காண்போம்
11.10. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்
11.11. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்
11.12. மேலும் பயில்வதற்கான நூல்கள்

## 11.1 முன்னுரை

பாடநூல்கள், மாணவர்கள் பள்ளியில் மொழியைப் பிழையறக் கற்றுக் கொள்ள உதவும் கருவியாகும். பாடநூல்களின் வாயிலாகத்தான் கல்வியின் நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டும். கல்வியின் நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டுமானால் பாடநூல் மாணவர்களைக் கவரக் கூடியதாக இருக்க வேண்டும். பாடநூல்களின் அமைப்பு முறை பற்றியும், பல்வேறு நிலைகளில் பாடநூல்கள் எவ்வாறு அமைந்திருக்க வேண்டும்

குறிப்பு

என்பது பற்றியும், பயிற்றுவிப்பதில் ஏற்படக்கூடிய சிக்கல்களையும் அவற்றின் தீர்வுகள் பற்றியும் இப்பாடத்தின் மூலம் அறியலாம். மேலும் நாம் ஏற்கனவே அறியாத, புரியாத, தெரியாத செயல்களை கற்றுத்தருபவர் ஆசிரியர். நாட்டின் எதிர்காலம் வகுப்பறையில் நிர்ணயிக்கப்படுகிறது என்ற கோத்தாரி அவர்களின் கூற்று ஆசிரியர்களின் பணிக்கு விடப்பட்ட சவாலாகும். எனவே மாணவர்களுக்கு சிறப்பாக மொழியைக் கற்றுத்தரக்கூடிய மொழியாசிரியரின் சிறப்புப் பண்புகள் பற்றியும் காண்பதோடு நூலகம் மற்றும் நூலகத்தின் வகைகள் பற்றியும் இப்பாடத்தின் மூலம் அறிந்துகொள்ளலாம்.

## 11.2 குறிக்கோள்கள்

நீங்கள் இப்பாடத்தைப் பயின்ற பின்னர்,

- பாடநூலின் அமைப்பினை அறிந்து கொள்வீர்கள்
- பல்வேறு நிலைகளில் பாடநூல் அமைந்திருக்கும் விதத்தினை விவரிப்பீர்கள்.
- மொழியாசிரியரின் கல்வித் தகுதிபற்றியும் அவரின் சிறப்புப் பண்புகள் பற்றியும் விவரிப்பீர்கள்.
- நூலகத்தின் வகைகளை விவரிப்பீர்கள்.

## 11.3. பாடநூல்

ஆசிரியராலும், மாணவராலும் மீண்டும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய, கல்வி ஏற்பாட்டின் நோக்கத்தை அடைய உதவும் மிகச் சிறந்த கருவியே பாடநூல். கல்வியின் நோக்கங்களையும், குறிக்கோள்களையும் ஒரு நாட்டின் எதிர்காலத் தேவைகளையும் பூர்த்தி செய்யக் கல்வி அமைப்பின் ஊடகமாக விளங்குவதே பாடநூல். மொழிப்படிப்பை பொறுத்தமட்டிலும் ஆழ்ந்த படிப்பை வளர்ப்பதற்குப் பாடநூல்கள் பயன்படுகின்றன. இதற்காகவே பல வகுப்புகளிலும் பாடநூல்கள் வைக்கப்பெறுகின்றன.

ஒவ்வொரு வகுப்புக்கும் பாடத்திட்டம் பட்டியலிட்டுத் தந்து பாடத்தலைப்புகளில் கல்வி ஏற்பாட்டின் குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் பாடங்கள் எழுதப்பெறும். பாடத்திட்டம் குறிப்பிடுவது போன்று மொழித்திறன்களைத் தேர்ந்தறியும் பயிற்சிகளையும் பெற்று விளங்குவது பாடநூலாகும்.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதுக.**
**ஆ. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு ஆராய்க.**
1. பாடநூல் என்றால் என்ன?
…………………………………………………………………………………………
…………………………………………………………………………
2.மொழிப்படிப்பை பொருத்தமட்டில் எதை வளர்ப்பதற்கு பாடநூல் பயன்படுகின்றன?
…………………………………………………………………………………………
…………………………………………………………………………

பாடநூல், மொழியாசிரியர், நூலகம்

**குறிப்பு**

### 11.3.1. பாட நூல் அமைப்பு முறை

### 1. புறத்தோற்றம் - அகத்தோற்றம்

பாடநூல்கள் மாணாக்கரின் கண்ணைக் கவரும் தோற்றத்தைக் கொண்டிருக்க வேண்டும். பாடப்புத்தகங்கள் பார்வைக்கு, அழகான தோற்றமுடையனவாக அமைதல் வேண்டும். அவை நல்ல தாள், சிறந்த அச்சு, உயர்ந்த கட்டமைப்பு, கையாளுவதற்கேற்ற அளவு முதலிய பண்புகளோடு அமைதல் சிறந்ததாகும். அச்சின் அளவு, பக்க அளவு, வரியின் நீளம் முதலிய கூறுகளும் கவனம் பெறுதல் வேண்டும்.

இதழியற்கலையின் கருத்துக்கு ஏற்ப தொடக்க நிலைக்கான பாட நூல்களின் புறத்தோற்றம் கற்போரின் கண்ணையும் கருத்தையும் கவரக் கூடியதாய் இருக்க வேண்டும். நூல் “தனது” எனப் பெருமைப்படும் படியான தோற்றப் பொலிவு நல்லது. எடுத்ததும் படிக்க வேண்டும் என்னும் எண்ணக் கிளர்ச்சியைத் தரும் எண்ணங்களில் பறவைகள் மற்றும் விலங்குகள் படம் அமையலாம்.

அகத்தோற்றம் அழகுற அமைய வேண்டுமாயின் நூல்களை நல்ல தாளில் அச்சிட வேண்டும். பழுப்பு நிறத் தாள்களைப் பயன்படுத்தக்கூடாது. நூல்களில் கண்ணைக் கவரும் படங்கள் இருந்தால் அவை கருத்தை ஈர்க்கும். வகுப்பிற்குத் தகுந்த பெரிய எழுத்துகளில் நூல்களை அச்சிடுதல் வேண்டும்.

### 2. பாடப்பொருள்

பாடத்திட்டத்தினையொட்டிப் பாடப்பொருள் அமைதல் வேண்டும். அவை மாணவரின் அறிவுநிலை, பொருளுணரும் திறன், மனப்பான்மை, கவர்ச்சி ஆகியவற்றிற்கேற்ப அமைதல் வேண்டும். மொழியின் வரிவடிவம் அறிமுகப்படுத்தப்படும் தொடக்கநிலையில் மாணவர் அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் சொற்களஞ்சியமே மிகுதியும் இடம்பெறுதல் வேண்டும். பின்னர் வகுப்பு நிலைக்கேற்றபடி சொற்களஞ்சியத்தை விரிவுபடுத்த வேண்டும்.

மாணாக்கர்களின் ஆர்வத்தையும், கவனத்தையும் ஈர்க்கவல்ல பொருள்களைக் கொண்டு விளங்க வேண்டும். மாணாக்கர்களின் பருவநிலைக்கு ஏற்றவாறும், அவர்களுடைய பட்டறிவுக்கு ஏற்றவாறும்,

பாடநூல்,
மொழியாசிரியர், நூலகம்

**குறிப்பு**

அவர்களின் அன்றாட வாழ்க்கையில் நுகரக்கூடியதற்கு ஏற்றவாறும் பொருளமைப்பு இருத்தல் வேண்டும்.

இலக்கியம், வரலாறு, நாட்டுப்பற்று, புதிய தகவல்கள் முதலிய பலவகைப் பாடங்களும் வகுப்பு மாணவர்களின் வயது, மனநிலை, பட்டறிவு ஆகியவற்றிற்கு ஏற்றவாறு அமைத்து எளிமையுடையதாக அருமையை நோக்கிச் செல்லவேண்டும். வாய்மொழி, எழுத்து ஆகிய இருவகைக் கட்டுரைகளும் எழுதுவதற்கேற்பப் பொருளமைப்புப் பெற்றதாக இருக்க வேண்டும்.

மொழித்தொடர்பான கட்டுரைகள், இலக்கியம் பற்றிய கட்டுரைகள் தவிர, பிற பாடப்பொருள் பாடங்கள் இடம்பெறும் பொழுது அந்தந்தத்துறை வல்லுநரிடம் பாடச் செய்திகளைப் பற்றி உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். தவறான செய்திகள் ஒருபோதும் பாடநூல்களில் இடம் பெறலாகாது.

**3. நூலாசிரியர்**

நூல்களை எழுதும் ஆசிரியர்கள் நன்றாகக் கற்றவர்களாகவும் பட்டறிவு மிக்கவர்களாகவும் இருத்தல் வேண்டும். நூல்கள் நன் முறையில் அமைய வேண்டுமாயின் நால்வருடைய கூட்டு முயற்சி தேவை. பொருள் துறையில் ஆழ்ந்து கற்ற ஒருவரும், மொழித்துறையில் புலமைமிக்க மற்றொருவரும், மாணாக்கர்களின் உளப்பாங்கினையும், பயிற்று முறைகளையும் நன்கு கற்று பட்டறிவு மிக்க உளவியல் அறிஞரும், நூல்களைப் பதிப்பிப்பதில் திறமை வாய்ந்த வேறொருவரும் (பதிப்பாளர்) சேர்ந்து ஒத்துழைத்து நல்ல நூல்களை உருவாக்கலாம். கீழ் வகுப்புகளுக்குரிய பாடங்கள் ஒரே ஆசிரியரால் எழுதப்பட்டிருப்பது நலம்.

நால்வகைப் பிரிவினர் நூலாக்கத்தில் இருப்பது பெருஞ்சிறப்பு என்பர். அவர்கள்

1. மொழித்துறை வல்லுநர்கள்
2. பொருள் பகுதி வல்லுநர்கள்
3. உளவியலறிஞர்
4. பதிப்புத்துறை வல்லுநர்.

**4. கவிதை, பாடப்பகுதிகள்**

வெறும் மொழியறிவை மட்டிலும் நோக்கமாகக் கொண்டு கவிதைகளைக் கற்பித்தல் தவறு. உணர்ச்சியினைத் தூண்டி, இலக்கிய இன்பத்தை மாணாக்கர்கள் நுகரும் வாய்ப்புகளை நல்குவதுதான் கவிதை கற்பித்தலின் முதல் நோக்கம் ஆகும்.

**தொடக்கப்பள்ளிகளில்** உலகநீதி, கொன்றைவேந்தன், வெற்றி வேற்கை, மூதுரை, நல்வழி, நன்னெறி, கதைப்பாடல்கள், பஞ்சதந்திரக் கதைகள், ஆட்டப்பாடல்கள், தாலாட்டுகள், செவிலிப்பாடல்கள் கதைப்பாடல்கள், தேசிங்குராஜன் கதை, கட்டபொம்மன முதலியன வைக்கப்படுகின்றன.

**நடுநிலைப பள்ளிகளில்** கதை, பக்திப்பாடல்களான தேவாரம், திருவாசகம், திருவருட்பா, நாலாயிர திவ்விய பிரபந்தம், பதினென்கீழ்க்கணக்கு நூல்களில் திருக்குறள், நாலடியார், ஏலாதி, சிறுபஞ்சமூலம்

**உயர்நிலைப்பள்ளிகளில்** சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற முற்காலக் காப்பியங்கள். கம்பராமாயணம், வில்லிபாரதம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், நளவெண்பா முதலியவை. **இடைக்கால இலக்கியங்கள்**: தேம்பாவணி, சீறாப்புராணம், இரட்சணீய யாத்திரிகம். **பிற்கால இலக்கியங்கள்**: மனோன்மணீயம், பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு, பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு. **தற்கால இலக்கியங்கள்**: இக்கால கவிஞர்களின் பாடல், புதினம், சிறுகதை, நாவல், புதுக்கவிதை. **சிற்றிலக்கியம்**: அந்தாதி, பிள்ளைத்தமிழ், தூது போன்ற செய்யுட் பகுதிகளைப் பாடமாக வைக்கலாம்.

**5. உரைநடைப்பகுதிகள்**

**தொடக்கநிலைப் பள்ளி**க்குரிய பாடநூல்களில் வரும் உரைநடைப் பாடங்கள் மாணாக்கர்களின் அறிவுநிலை, பட்டறிவு, மொழியறிவு முதலியவற்றைப் பொறுத்து அமைய வேண்டும். பாடங்கள் மாணாக்கர்களுக்கு சலிப்பு தரும் முறையில் மிக நீளமாக இருத்தல் கூடாது. இவை மாணாக்கர்களின் பட்டறிவுக்குட்பட்ட பொருள்களைப் பற்றியே அமைதல் வேண்டும்.

**நடுநிலைப்பள்ளி**க்குரிய உரைநடைப்பகுதிகள் ஒரே மாதிரியான பொருள்பற்றி இராமல் பல்வேறு வகைப்பொருள் பற்றியனவாக இருத்தல் வேண்டும். பஞ்சதந்திரக் கதைகள், விக்கிரமாதித்தன் கதைகள், அரபுக்கதைகள் போன்ற கற்பனை ஊற்றை விளைவிக்கும் பொருள்களைப் பற்றியனவாகவும், அறிவியற் புதுமைகள், புதிய பயிர்த்தொழில் முறைகள், கைத்தொழில் நுணுக்கம், குடிசைத்தொழில், மாணாக்கர் அறியும் நிலையிலுள்ள பெரியார்களின் வரலாறு முதலிய செய்திகளைத் தருவனவும், மகிழ்ச்சிச் செலவுகள், புதியநாடுகளைக் கண்ட நிகழ்ச்சிகள், வீரச் செயல்கள், புதிய குடியேற்றங்களைப் பற்றிய வரலாறுகள், நீர்த்தேக்க – மின்சாரத் திட்டங்கள் ஆகிய நேர்முக

பாடநூல்,
மொழியாசிரியர், நூலகம்

**குறிப்பு**

பாடநூல், மொழியாசிரியர், நூலகம்

குறிப்பு

அனுபவங்களைப் பற்றியனவும் உரைநடைப் பாடங்களாகக் கொள்ளலாம்.

**உயர்நிலைப் பள்ளி**களுக்குரியவை, இலக்கியச் சுவையை விளக்கும் இலக்கியப் பகுதிகள், நுண்கலைகள் (Fine Arts), அறிவியல் புதுமைகள், உள்நாட்டு வெளிநாட்டுப் பிரச்சனைகள், சிறந்த அறிஞர்களின் சொற்பொழிவுகள், தன்வரலாறுகள் (சுயசரிதை), தமிழ் இலக்கிய மணம் கமழும் கவிதைகள், வெளிநாட்டுச் செலவுகள், இலக்கியச் சுவையூட்டும் சிறுகதைகள், புதிய நாடுகளைக் கண்டு பிடித்த வரலாறுகள் போன்றவற்றை வைக்கலாம்.

**6. நடையும் - பயிற்சிகளும்**

உரைநடைப் பகுதிகளில் மேற்கொள்ளப்பெறும் சொற்றொடர் அமைப்புமுறை, நடை ஆகியவை வகுப்பு நிலைக்கேற்றவாறு அமைதல் வேண்டும். அன்றியும், நடை எளிமை, இனிமை, தூய்மை முதலிய பண்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும். வகுப்புக்குத் தகுந்தவாறு நடை படிப்படியாக உயர்ந்து சென்றால் நிறைந்த பயனை விளைவிக்கும்.

உரைநடையில் சந்தங்கள், மோனைகள், சொல் வித்தைகள், வழக்கற்ற சொற்கள், மிகப்பழைய வழக்காறுகள் முதலியற்றைத் தவிர்த்தல் நலம். ஒவ்வொரு பாடத்தின் ஈற்றிலும் மொழிப்பயிற்சிகளும், அருஞ்சொல் விளக்கங்களும். பிற வினாக்களும் சுருக்கமாய் இடம்பெறச் செய்ய வேண்டும்.

**7. சமயம், ஒழுக்கம் பற்றிய பகுதிகள்**

சமயம், ஒழுக்கம் முதலியவைப்பற்றித் தேர்ந்தெடுக்கப்பெறும் பகுதிகள் சமயப் பிணக்கை உண்டு பண்ணாதவாறு, பல சமயத்தினருக்கு ஏற்புடையதாக அல்லது ஒத்தனவாயும் இருந்தால் எல்லோரும் நூல்களை விரும்பி ஏற்பர். திருக்குறள். நாலடியார் போன்ற அறநூல்களின் கருத்துக்கள் எல்லா சமயத்தினருக்கும் பொதுவானவை. தேவாரம், திருவாசகம், திவ்வியபிரபந்தம், திருவருட்பா ஆகிய பக்தி இலக்கிய நூல்களும், தாயுமானவர் பாடல்கள், பட்டினத்தார் பாடல்கள், வீரமாமுனிவரின் தேம்பாவணி, சீறாப்புராணம், குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள், எச்.ஏ.கிருட்டிணப் பிள்ளையின் இரட்சணீய யாத்திரீகம் முதலியவையும் இப்பகுதிக்கு ஏற்றவை.

**8. பிற செய்திகள்**

பாடப்பொருள்களில் எவ்விதப் பிழைகளும் இடம் பெறுதல் ஆகாது. எடுத்துக்காட்டாக, இயற்கை எய்திய பெரியோர்கள் இன்றும்

குறிப்பு

இவ்வுலகில் வாழ்வதாகக் கூறுதலைத் தவிர்க்க வேண்டும். பதிப்புக்குப் பதிப்பு இவற்றைக் கவனிப்பது அவசியம்.

தமிழ் நூல்களில் நகைச்சுவையினைக் காண்பது குதிரைக் கொம்பாக உள்ளது. ஒன்றிரண்டு அத்தி பூத்த மாதிரி காணப்பெறினும் தரமாக இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். ஆனால், இக்காலத்தில் தோன்றியுள்ள மறுமலர்ச்சி இலக்கியங்களில் இத்தகைய நகைச்சுவைப் பண்பு தலைக்காட்டத் தொடங்கியுள்ளது.

கல்கி, எஸ்.வி வி, புதுமைப்பித்தன் போன்றோர் எழுதியுள்ளவற்றிலும், உலகம் சுற்றிய தமிழன் ஏ.கே.செட்டியார் எழுதியுள்ள பயண நூல்களிலும், ‘மகிழ்நன்’ கட்டுரைகளிலும், மேனாட்டு Humour உடன் ஒப்பிடத்தக்க சில நகைச்சுவைப் பகுதிகளைக் காணலாம். இவற்றைப் பாடநூல்களில் சேர்க்கலாம்.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதுக.**
**ஆ. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு ஆராய்க.**

3. பாடநூல் புறத்தோற்றத்தில் இருக்க வேண்டிய பண்புகள் யாவை?

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

4. நூலாக்கத்தில் இருக்க வேண்டிய நால்வகைப்பிரிவினா் யாா்?

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

## 11.4. பாடநூல் உள்ளடக்கம்

பாடநூல் பல்வேறு அலகுகளாகப் பிரிக்கப்பட்டு, அதன்கீழ் பல்வேறு பாடத்தலைப்புகள் அமைய வேண்டும். மொழிப்பாடத்தில் இலக்கியம், இலக்கணம், மொழி ஆகியவற்றோடு அறிவியல், மருத்துவம், வரலாறு, புவியியல் தொடர்பான பாடப்பகுதிகளும் இடம்பெற வேண்டும். பாடப்பொருள் அமைப்புமுறை உளவியல் முறைப்படி அமைய வேண்டும். துணைப்பாடம், கடிதம், கட்டுரை, உரையாடல், நாடகம், சிறுகதை, கவிதை, மொழிப்பயிற்சி ஆகியனவும் இடம்பெற வேண்டும். வழிகாட்டும் குறிப்புகள், அட்டவணைகள், வரைபடங்கள், படங்கள், கலைச் சொற்கள், துணை நூற்பட்டியல் ஆகியனவும் தவறாது இருத்தல் வேண்டும். பாடப்பொருள்களுக்கிடையே ஒருங்கிணைப்பு இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

பாடநூல் 120 பக்கங்கள் முதல் 176 பக்கங்கள் வரை இருக்க வேண்டும். 8 –ஆம் வகுப்பு பாடநூல் 145 பக்கங்களை கொண்டது. ஒரு வகுப்பில் இடம் பெற்ற பாடப்பகுதி மறு வகுப்பில் இடம்பெறலாகாது.

பாடநூல்,
மொழியாசிரியர், நூலகம்

**குறிப்பு**

செய்யுள் பகுதிகளை ஓசை நயம் குன்றாதவாறு பொருளுணர்ச்சியும், எளிமையும் தோன்ற சந்திபிரித்து அச்சிடுதல் வேண்டும். செய்யுட் பகுதியில் ஒவ்வொரு செய்யுளுக்கும் தலைப்பும், கதைப் பகுதியில் நிகழ்ச்சித் தலைப்பும் கொடுத்தல் வேண்டும். செய்யுளிலும், உரைநடைப் பாடங்களிலும், ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் தேவையான குறிப்புரைகளும், வினாக்களும் கொடுத்தல் வேண்டும். செய்யுட் பகுதிகளுக்கு நூற்குறிப்பும், ஆசிரியர் வரலாறும் தருதல் வேண்டும். இவ்வகுப்புகளுக்கு இலக்கணப் பாடத்தை மற்ற பாடங்களோடு இணைத்துக் கற்பிக்க வேண்டும்.

- ❖ செய்யுட்பகுதி
- ❖ கடவுள் வாழ்த்து
- ❖ நீதிப்பகுதி
- ❖ கதைப்பகுதி
- ❖ பலபொருட் பாடல்கள்
- ❖ மறுமலர்ச்சிப் பாடல்கள்
- ❖ உரைநடைப் பகுதிகள்

**இலக்கண அமைப்பை விளக்குதல்**

தமிழ்மொழி காலத்தால் முந்தியது, அழியாமல் நிலைத்து நிற்பது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்திலக்கணம் கொண்டது. எனவே இவற்றை எடுத்துரைக்கும் வகையில் உள்ள பாடல்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அசை, சீர், தளை, அடி, தொடை, பா வகைகளைப் பாடல்கள் வழி ஆசிரியர் கற்பிக்கும் படியான பாடல்கள் அமைய வேண்டும்.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதுக.**
**ஆ. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு ஆராய்க.**
5.மொழிப்பாடத்தில் எந்த பாடப்பகுதிகள் இடம்பெற வேண்டும்?
……………………………………………………………………………………
……………………………………………………………………………………
6. நீதிப்பகுதியில் இடம் பெறும் நூல்கள் யாவை?
……………………………………………………………………………………
……………………………………………………………………………………

## 11.5. வல்லுநர்களின் வழிகாட்டல்

மொழியாசிரியர் தாம் கற்பிக்கும் மொழியின் மீது பற்றுடையவராக இருக்க வேண்டும். அப்போது தான் மொழியின் சிறப்பியல்புகளை உள்ளம் உணர்ந்து எடுத்துக் கூறும் ஆற்றல்

ஏற்படவும், மொழியின் வளர்ச்சிக்கான செயலில் ஈடுபடவும் முடியும். இலக்கிய, இலக்கண நூல்களை விருப்பத்தோடு படிக்கவும் மொழிப்பற்று தேவை. தாம் படித்த செய்திகளைச் சுவைப்படக் கூறவும் மொழிப்பற்று அவசியம்.

பாடநூல், மொழியாசிரியர், நூலகம்

**குறிப்பு**

செய்திகளை எடுத்துக் கூறும் கற்றலைத் தமிழாசிரியர் பெற்றிருத்தல் வேண்டும். செய்யுட் பகுதிகளைக் கற்பிக்குங்கால் சான்றுகள், மேற்கோள்கள் போன்றவற்றை எடுத்துக் கூற வேண்டும். தேவையான நிகழ்ச்சிகள், வாழ்க்கைத் துணுக்குகள் போன்றவற்றை உரைநடைப் பாடம் நடத்தும் போது எடுத்துக் கூற வேண்டும். மொழியாசிரியர் இலக்கண, இலக்கியப் புலமையுடையவராக இருத்தல் வேண்டும். இலக்கண, இலக்கியத்திற்குப் பயிற்சியுடையவராக இருத்தல் வேண்டும். மொழியிற் புலமையிருந்தால் மொழி மரபு பிறழாமல், பிழையின்றி எழுதவும், பேசவும் முடியும். வகுப்பிற்குரிய பாடநூல்களில் தெளிவும், அப்பாடத்தின் மூல நூல்களை அறிந்திருத்தலும் அவசியமாகும். அதுவே விரிவாகவும், விளக்கமாகவும் பாடத்தைக் கற்பிக்க உறுதுணையாக அமையும்.

**அடிப்படை விதிகள்**

1. எளிமையிலிருந்து கடினத்திற்குச் செல்லுதல்.
2. தெரிந்ததிலிருந்து தெரியாதவற்றிற்குச் செல்லுதல்.
3. புரிந்ததிலிருந்து புரியாததிற்குச் செல்லுதல்.
4. பாடப்பகுதிகளை முடிவு செய்தல்.
5. முரண்பாடற்ற வகையில் கருத்துக்களை அமைத்தல்.
6. கலை ஏற்பாட்டின் நோக்கங்கள் நிறைவேறும் வகையில் எழுதுதல்.
7. தாய்மொழிக்கல்விக்கு ஒதுக்கப்படும் கால அளவு.
8. மாணவனின் மனவயது, காலவயது, மற்றும் சூழல்.
9. மொழிப்பாடப் பயிற்சிகள்.
10. மதிப்பீடு
11. வாழ்க்கையோடு தொடர்பு
12. ஆசிரியரின் கல்வித்தகுதி, பணி அனுபவம் பற்றி அறிதல்.

பாடநூலினைத் தயாரிக்கும் பொழுது கீழ்க்கண்ட கூறுகளில் ஆசிரியர் கவனம் செலுத்த வேண்டும்.

- ✓ தமிழிலக்கிய வகையைச் சுட்டுதல்.
- ✓ தமிழிலக்கியக் கருத்துக்களை எடுத்துரைத்தல்.
- ✓ தமிழ்மொழியின் இலக்கண அமைப்பை விளக்குதல்.

பாடநூல், மொழியாசிரியர், நூலகம்

**குறிப்பு**

- ✓ தமிழர் பண்பாட்டு மரபுகளைப் போற்றுதல்.
- ✓ வாழ்வியல் நெறிகளை வலியுறுத்தல்.
- ✓ ஏழைகளுக்கு உதவுதல்.
- ✓ நலிந்தோர்க்கு நல்வாழ்வு தருதல்.
- ✓ இறைப்பற்றை ஊட்டுதல்.
- ✓ அழகுணர்ச்சியை வளர்த்தல்.
- ✓ படைப்பாற்றலைத் தூண்டுதல்.
- ✓ அன்பு நெறியை மேற்கொள்ளச் செய்தல்.
- ✓ புதுமைகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதுக.**
**ஆ. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு ஆராய்க.**

7. பாடநூல் தயாரித்தலில் அடிப்படை விதிகள் ஏதேனும் இரண்டினைக் கூறுக?

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

8. பாடநூலினைத் தயாரிக்கும் பொழுது ஆசிரியர் கவனத்தில் செலுத்த வேண்டியது எது?

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

## 11.6. தொடக்கநிலை, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலை வகுப்புகளில் மொழிப்பாடத்திட்ட நோக்கங்கள் அவற்றின் மொழிப்பாடங்கள்

### தொடக்கநிலை வகுப்பின் மொழிப்பாடத்திட்ட நோக்கங்கள்

தொடக்கநிலை வகுப்பின் மொழிப்பாடத்திட்ட நோக்கமானது அடிப்படை திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியனவற்றை அடிப்படையாக வைத்து கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வகை அடிப்படை திறன்களின் நோக்கமானது பின்வருமாறு ;

**கேட்டல்**

- ➢ எளிய கேட்டறிந்த பாடல்களையும், கதைகளையும் சொல்லக்கேட்டுப் புரிந்து கொள்ளுதல்.
- ➢ சூழ்நிலையில் நன்கு அறிந்த சிறிய வாய்மொழி வேண்டுகோள்களையும், அறிவுரைகளையும் புரிந்து கொள்ளுதல்.

- மிகவும் அறிமுகமான சூழ்நிலையில் உரையாடல், வசனம், ஆகியவற்றைக் கேட்டுப்புரிந்து கொள்ளுதல்.
- இயற்கை சார்ந்த பாடல்களைக் கேட்டறிதல்.
- சிந்தனையைத் தூண்டும் கதைகளைக் கேட்டறிதல்,
- குழு அறிமுக உரையாடலைக் கேட்டறிதல்.
- வருணனை விடுகதைப் பாடல்களைக் கேட்டறிதல்.
- கலந்துரையாடலைக் கேட்டுப் புரிந்து கொள்ளுதல்.
- நாடகத்தைக் கேட்டுப் புரிந்து கொள்ளுதல்.

பாடநூல்,
மொழியாசிரியர், நூலகம்

**குறிப்பு**

**பேசுதல்**

- எளிய சொற்றொடர்களையும், பாடல்களையும் தனியாகவும், குழுவாகவும் திரும்பச் சொல்லச் செய்தல்.
- பாடல்களை உரிய செய்கைகளுடனும் உடல் அசைவுகளுடனும் ஒப்புவிக்கும் திறன்.
- ஆம், இல்லை என்று பதில் வருமாறு எளிய வினாக்களுக்கு விடை கூறும் திறன்.
- தன்னைச் சுற்றியுள்ளவை சார்ந்த விவரங்களைப் பேசுதல்,
- படக்கதையைப் பார்த்து நிகழ்வைக் கூறுதல்.
- வினா எழுப்பும் திறன்.
- தங்கு தடையின்றிப் பேசுதல், இயல்பாக உரையாடுதல்.
- உரிய ஒலிப்புடன் பேசுதல், பாடுதல் (ல, ள,ழ, ண,ன, ர, ற)
- வருணனை கலந்து பேசுதல், கலந்துரையாடல்.
- குறிப்பிட்ட தலைப்பில் பேசுதல்.
- நாடகங்களில் பங்கேற்று நடித்தல்.

**படித்தல்**

- பொது அகரவரிசை எழுத்துகளைத் தனியாகவும் சொற்களிலும் அடையாளம் காணும் திறன்.
- எளிய சந்தப் பாடல்களைப் பாடுதல்.
- உரிய ஒலிப்புடன் உரக்கப் படித்தல், சிறுவர் படக்கதைகளைப் படித்தல்.
- அறிவிப்புகள், விளம்பரங்கள்,சாலைக்குறியீடுகளைப் படித்தல்
- கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள், கதைகளை உரிய ஒலிப்புடன் படித்தல்.
- எளிய எண் விவரங்களைப் படித்தறிதல்.

பாடநூல், மொழியாசிரியர், நூலகம்

குறிப்பு

- செய்தித்தாள் படித்தல்.

**எழுதுதல்**

- உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய் எழுத்துகளை வரியொற்றி எழுதுதல்.
- சொல்வது எழுதுதல், இடைவெளி விட்டு எழுதுதல்.
- எளிய சொற்களையும், சொற்றொடர்களையும் எழுதுதல்.
- படங்களைப் பார்த்துப் பெயரை எழுதுதல்.
- படங்களைப் பார்த்து சிறுதொடர் எழுதுதல்.
- எளியகதையிலிருந்து வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுதல்.
- வடமொழி ஒலிப்புகளுக்கான எழுத்துக்களை எழுதுதல்
- பத்தியைப் படித்து எளிய வினாக்களுக்கு விடையளித்தல்,
- உறவுமுறைக் கடிதம் எழுதுதல், நாட்குறிப்பு எழுதுதல்.
- கட்டுரை, உரையாடல் எழுதுதல்.

**தொடக்கநிலை மொழிப்பாடங்கள்**

ஆடிப்பாடி மகிழ்வோம், என் இனிய உலகம், எனது ஊர், காய்! காய்! காய்!, வண்ண வண்ணப் பூக்கள், மழையே வா, பசுவும் கன்றும், பந்து எங்கே?, சிறிய கோடு, பெரிய கோடு, கண்டதும் கேட்டதும், ஓடி விளையாடு பாப்பா, கூடி ஆடி மகிழ்வோம், விளையாடுவோம் வாங்க, கௌதாரியும் முயலும், ஊர் செழித்தது, மரபுச் சொற்களை அறிவோம், தமிழின் சிறப்புகள், படவிளக்க அகரமுதலி, செய்யுள் பகுதி, மனப்பாடப் பகுதி, மெய்சொல்லல் நல்லது, படித்தால் தெரியும், அணையா விளக்கு, செம்மொழி – பண்பாட்டு மொழி, செய்யுட் பகுதி, வாழ்த்து, திருக்குறள், நீதிநெறி விளக்கம், பெண் கல்வி, கும்மியடி பெண்ணே! பெண்ணே, நூறு வயது தருவன, பகைவனுக்கு அருள்வாய்.

**நடுநிலை வகுப்பின் மொழிப் பாடத்திட்ட நோக்கங்கள்**

இலக்கணமும் மொழித்திறனும், பேசுதல், எழுதுதல், படைப்புத்திறன், விவாதத் திறன், வினா எழுப்புதல், கடிதம் எழுதுதல், ஒருபக்க அளவில் கட்டுரை எழுதுதல், கூடிப் பேசுதல், மொழிவிளையாட்டுகள், உரை பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளித்தல், சொற்றொடர் வகைகள், செய்தி வெளிப்படுத்தும் திறன், கட்டுரைப் பயற்சி, உரையாடலைச் செய்தியாக்குதல், விடுபட்ட இடங்களில் தமிழெண்களை எழுதுதல், சூழ்நிலையை எதிர் கொள்ளும் திறன், உரிய எழுத்து வழக்குச் சொற்களை அறிதல், பிழைநீக்கி

எழுதுதல், வல்லினம் மிகா இடம் அறிதல், நிறுத்தற்குறியிடுதல்.

**நடுநிலை மொழிப்பாடங்கள்**

வாழ்த்து, திருக்குறள், தமிழ்தாத்தா உ.வே.சா, கடைசி வரை, பாரததேசம், பறவைகள் பலவிதம், தனிப்பாடல், அந்தக்காலம் இந்தக்காலம், தயக்கம் இன்றி தமிழிலேயே பேசுவோம், நாடும் நகரமும், குற்றாலக் குறவஞ்சி, புறநானூறு, முதுமொழிக்காஞ்சி, மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார், கோவூர்கிழார், உயிர்மெய் ஆய்தம், மகிழ்ச்சிக்கான வழி, திருவள்ளுவமாலை, நளவெண்பா, உலகம் உள்ளங்கையில், விவேக சிந்தாமணி, பாரதத் தாய், இந்திய விடுதலையில் தமிழகப் பெண்களின் பங்கு, மரத்தின் வேண்டுகோள்.

**உயர்நிலை வகுப்பின் மொழிப்பாடத்திட்ட நோக்கங்கள்**

எழுதுதல் திறன், மொழித்திறன் பயிற்சி, மயங்கொலிச் சொற்கள், பொருள் வேறுபாடு அறிதல், தமிழ் எண்ணுருக்களை அறிதல், கட்டுரை, குறிப்புச் சட்டகம், மதிப்புக் கல்வி, வேர்ச்சொற்களைச் சொற்றொடருக்கேற்ப மாற்றுதல், பெயரெச்சத்தை வினையெச்சமாக மாற்றி எழுதுதல், வினைமுற்றைப் பெயரெச்சமாக மாற்றுதல், மாறியுள்ள சொற்களை முறைப்படுத்தி எழுதுதல், மையக்கருத்தை அறிதல் திறன், குறட்பாவை பிரித்து அலகீட்டு வாய்ப்பாடு எழுதுதல், குறிப்புகளைக் கொண்டு விளம்பரம் எழுதுதல், அணியைச் சுட்டி விளக்குதல், இணையான தமிழ்ப் பழமொழியை எழுதுதல், சொற்களஞ்சியப் பெருக்கம் செய்தல், இலக்கணம், பல்துறை அறிவு பெறுதல், பகுத்தும் தொகுத்தும் கூறுதல்.

**மொழிப்பாடங்கள்**

திராவிட மொழிகள், எழுத்து, சிறுபஞ்ச மூலம், பாஞ்சாலி சபதம், இக்காலக் கவிதைகள், மு.வரதராசனாரின் கடிதம், முத்தொள்ளாயிரம், கலிங்கத்துப்பரணி, உலகளாவிய தமிழர், திரு.வி.கலியாண சுந்தரனாரின் தமிழ்ப்பணி, நோய்தீர்க்கும் மூலிகைகள், பொருள்கோள், சிலப்பதிகாரம், அன்றாட வாழ்வில் சட்டம், பொது, பேச்சுக்கலை, அண்ணாவின் கடிதம், பெரியபுராணம், திரைப்படக்கலை உருவான விதம், நாலாயிரத்திவ்விய பிரபந்தம், பல்துறை வேலைவாய்ப்புகள், நூலகம்.

**மேல்நிலை வகுப்பின் மொழிப்பாடத்திட்ட நோக்கங்கள் மற்றும் மொழிப்பாடங்கள்**

மேல்நிலை வகுப்பின் மொழிப்பாடத்திட்ட நோக்கமானது தொடக்கநிலை, நடுநிலை, உயர்நிலை, மொழிப்பாடத்திட்ட

பாடநூல்,
மொழியாசிரியர், நூலகம்

**குறிப்பு**

பாடநூல், மொழியாசிரியர், நூலகம்

குறிப்பு

நோக்கங்களை நிறைவேற்றுவதோடு அல்லாமல் கீழ்க்கண்ட நோக்கங்களையும் நிறைவேற்றுவதாக அமையவேண்டும்.

1. வாழ்த்து

(அ) இறை வாழ்த்து (ஆ) மொழி வாழ்த்து (இ) நாட்டு வாழ்த்து

2. தொகை நூல்கள்

(அ) புறநானூறு (ஆ) அகநானூறு (இ) நற்றிணை (ஈ) குறுந்தொகை

3. திருக்குறள்

(அ) அடக்கமுடைமை (ஆ) ஒப்புரவறிதல் (இ) காலமறிதல்

(ஈ) வலியறிதல் (உ) செய்நன்றியறிதல் (ஊ) பொறையுடைமை

(எ) அறிவுடைமை (ஏ) வினைத்திட்டம்.

4. தொடர்நிலைச் செய்யுள்

(அ) சீவக சிந்தாமணி (ஆ) சீறாப்புராணம் (இ) மனோன்மணியம்

(ஈ) குயில்பாட்டு (உ) தேம்பாவணி (ஊ) பாண்டியன் பரிசு

5. சிற்றிலக்கியங்கள்

(அ) அழகர் கிள்ளைவிடுதூது (ஆ) கலிங்கத்துப்பரணி

(இ) முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் (ஈ) பெத்தலேகம் குறவஞ்சி

(உ) இராசராச சோழனுலா (ஊ) திருவேங்கடத்தந்தாதி

(எ) மதுரைக்கலம்பகம் (ஏ) முக்கூடற்பள்ளு

6. மறுமலர்ச்சிப் பாடல்கள்

(அ) எந்நாளோ (ஆ)பூக்கட்டும் பதுமை (இ)விடுதலை விளைந்த உரிமை

(ஈ) தளை (உ) கண் (ஊ) தண்ணீர் வங்கிகள்

(எ) மாலைக்கால வருணனை (ஏ)புத்தகசாலை (ஐ)காடு (ஒ) சிக்கனம்.

7. வழிபாட்டுப் பகுதி

(அ) தேவாரம் (ஆ) திருப்பாவை (இ) இரட்சணியயாத்ருகம்

(ஈ) வீரசோழியம் (உ) புத்தபிரான் (ஊ) இயேசுபிரான் (எ) நபிகள் நாயகம்.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**

**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதுக.**

**ஆ.உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு ஆராய்க.**

9.நடுநிலை வகுப்புகளில் மொழிப்பாடங்கள் ஏதேனும் இரண்டினை எழுதுக?

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

10. உயர்நிலை வகுப்பின் நோக்கங்கள் ஏதேனும் இரண்டினை எழுதுக?

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

## 11.7. மொழியாசிரியர்

தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்பிக்க தனித் தனியே

மொழி ஆசிரியர்கள் உள்ளனர். அவர்கள் தங்கள் மொழிகளில் மிகப் புலமை உள்ளவர்களாகத் திகழ்வர். அதிக இலக்கண இலக்கிய அறிவு, மொழிப் பற்று கொண்டவராகத் திகழ்வர். மொழியைச் செம்மையாக கற்பிக்க வேண்டும் என்ற அடிப்படையே மொழி ஆசிரியர்களின் நியமனம் ஆகும்.

**"ஆசிரியர் பணியே அறப்பணி**
**அதற்கே உன்னை அற்பணி"**

என்பர். அதனை பணி என்று சொல்வதைக் காட்டிலும் தொண்டு என்று குறிப்பதே பொருத்தமாகும்.

"மாதா, பிதா, குரு, தெய்வம்" என்னும் சொற்றொடர் ஆசிரியரின் பெருமையினைக் குறிப்பதாகும். மாதா, பிதாவிற்கு பிறகு வணங்கும் தெய்வத்திற்கு முந்தைய நிலையில் குருவிற்கு இடமளித்துள்ளனர். இதிலிருந்து நாம் ஆசிரியரின் பெருமையினை அறியமுடியும்.

ஆசிரியர்களுக்குரிய பண்புகள் பலவாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அதற்குரிய இலக்கணத்தை பலரும் வகுத்துள்ளனர். பவணந்தி முனிவர் நல்லாசிரியருக்குரிய இலக்கணத்தை பின்வருமாறு எடுத்துரைத்துள்ளார்.

**"குலனருள் தெய்வங் கொள்கை மேன்மை**
**கலைபையில் தெளிவு கட்டுரை வன்மை**
**நிலமலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்**
**உலகிய லறிவோ டுயர்குண மினையவும்**
**அமைபவ னூலுரை யாசிரி யன்னே - நன்னூல் 26**

உயர்குடிப் பிறப்பும், உயிர் இரக்கமும், கடவுள் வழிபாட்டினால் எய்திய மேன்மையும், பல நூல்களிலே பழகிய தேர்ச்சியும், நூல் பொருளை மாணவர்கள் எளிதில் உணரும்படி எடுத்துச்செல்லும் சொல்வன்மையும், நிலம், மலை, துலாக்கோல், பூவையொத்த குணங்களும், உலக வழக்கை அறியும் அறிவும், உயர்குணம் ஆகியவையும் ஒருங்கே அமையப் பெறுபவரே நல்லாசிரியராவார்.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு:அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.**
**ஆ.உமது பதிலைப் பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.**

11. ஆசிரியர் பணியை பணி என்று சொல்வதைக் காட்டிலும் …………. என்று குறிப்பதே பொருத்தமாகும்.

12.மொழி ஆசிரியர்களை நியமிப்பதின் அடிப்படை யாது?
.......……………………………………………………………………………
……………………………………………………………………………..…

பாடநூல், மொழியாசிரியர், நூலகம்

**குறிப்பு**

பாடநூல்,
மொழியாசிரியர், நூலகம்

குறிப்பு

### 11.7.1. மொழியாசிரியரின் கல்வித்தகுதி

ஆசிரியர்பணி என்பது தொழில் என மாறிய நிலையில் அப்பணிக்கெனத் தகுதிகளும், பண்புகளும் வரையறுக்கப்பட்டன. மொழியாசிரியர்களுக்கு மொழிப்பாடம் தனிப்பெரும்பான்மையான பாடமாக இருப்பதால் அதில் ஆழ்ந்த புலமை பெற்றிருக்க வேண்டும். இயல், இசை, நாடகம், மொழிபெயர்ப்பு, பன்மொழிப்புலமை ஆகியவற்றில் சிறந்து விளங்க வேண்டும். கல்வித்துறை வரையறை செய்துள்ள கல்வித் தகுதிகளைப் பெற்றுள்ளவரே, மொழியாசிரியர் பணியில் நியமிக்கப்படுகின்றார். பி.லிட், அல்லது பி.ஏ.(தமிழ்) பட்டத்துடன் பி.எட் பட்டமும் இதற்குத் தகுதிகள் ஆகும். அத்துடன் தாம் கற்பிக்கும் மாணவர்களின் மனநிலைக்கேற்ப உளவியல் முறைகளையும், புதிய கற்பித்தல் முறைகளையும், தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தும் திறனையும், கற்பித்தலின்போது பயன்படுத்த வேண்டிய பல்வேறு கற்பித்தல் திறன்களையும் கற்றிருந்தால் தான், தன் பணியில் அவர் சிறப்பாகச் செயல்பட முடியும்.

**பிற ஆசிரியர்களுடன் கலந்துரையாடல்**

மொழி ஆசிரியர் தொழில் முறையில் மற்ற ஆசிரியர்களுடன் பழகவேண்டிய நிலையில் உள்ளனர். மொழிப் பாடத்திட்டத்தில் உரைநடைப் பகுதியில் அரசியல், பொருளியல், அறிவியல், தொழில்நுட்பம், தொடர்பான பாடங்களும் இடம் பெறுகின்றன. ஆகவே அவற்றைத் தெளிவாகப் புரிந்து, கற்பித்தலைத் திறம்படச் செய்ய, அப்பாடங்கள் தொடர்பான ஆசிரியர்களுடன் கலந்து ஆலோசனை பெறுவது சிறப்பு ஆகும். பாட இணைச் செயல்களான இலக்கிய மன்றம், கலை நிகழ்ச்சிகள், பேச்சுப் போட்டி, சுற்றுலா, ஆண்டுவிழா, பள்ளி இதழ் தயாரிப்பு போன்றவற்றில் பிற ஆசிரியர்களுடன் இணைந்து செயல்பட வேண்டும். கல்வி பற்றி நடைபெறும் கருத்தரங்கங்களிலும் கலந்து கொள்வது அவர்தம் பணி சிறக்க ஏதுவாகின்றது.

| வ.எண் | கல்வித்தகுதி | தொழிற் கல்வி | படிப்புக் காலம் |
|---|---|---|---|
| 1. | புலவர் பட்டம் (Pandit) | சான்றிதழ் அல்லது பட்டயம் | 5 மாதம் / ஓராண்டு |
| 2. | இளங்கலை இலக்கியம் (B.Lit) | சான்றிதழ் அல்லது பட்டயம் | 5 மாதம் / ஓராண்டு |
| 3. | பட்டபடிப்பு இளங்கலைத் தமிழ் (BA Tamil) | இளம் கல்வியியல் பட்டம் (B.Ed) | 2 ஆண்டு |
| 4. | முதுகலைத் தமிழ் (MA Tamil) | இளம் கல்வியியல் பட்டம் (B.Ed) | 2 ஆண்டு |

### 11.7.2. மொழியாசிரியரின் சிறப்புப் பண்புகள்

**1. மொழிப்பற்று**

தாய்மொழிப்பற்று ஒவ்வொருவருக்கும் தேவையான ஒன்றாகும். மொழி கற்பிக்கும் ஆசிரியர் பற்றுக் கொண்டவராக இருத்தல் இயற்கை. மொழிப்பற்று இருந்தால்தான் அம்மொழியின் சிறப்பியல்புகளைப் பிற மொழிகளோடு தொடர்பு படுத்திச் சிறப்பாகக் கற்பிக்க முடியும். மொழிப்பற்று இருந்தால்தான் இலக்கண இலக்கியங்களை நயத்துடன் கற்பிக்க முடியும். எனவே மொழி ஆசிரியர்களுக்கு மொழிப் பற்று இன்றியமையாத ஒன்று ஆகும்.

**2. கற்பிக்கும் திறன்**

செய்திகளை சிறப்பாக எடுத்துக்கூறும் ஆற்றலை மொழியாசிரியர் பெற்றிருத்தல் வேண்டும். செய்யுள் பகுதிகளைக் கற்பிக்கும்போது சான்றுகள், மேற்கோள்கள் போன்றவற்றை எடுத்துக் கூறவேண்டும். உரைநடைப் பாடம் நடத்தும்போது வாழ்க்கைத் துணுக்குகள் மற்றும் சுவையான நிகழ்வுகளை எடுத்துக் கூறும் திறனை மொழியாசிரியர் பெறவேண்டும். வரலாற்று நாடகங்களைக் கற்பிக்கும்போது நடிப்புமுறையினையும், அறிவியற் பாடத்தைக் கற்பிக்கும்போது கண்டறியும் முறையினையும் இலக்கணப்பாடத்தைக் கற்பிக்கும்போது விளையாட்டு முறையினையும் பயன்படுத்திக் கற்பிக்க ஆசிரியர் திறமை வாய்ந்தவராகத் திகழ்தல் வேணடும்.

**3. இலக்கண இலக்கியப் புலமை**

மொழியாசிரியர் இலக்கியத்தில் நல்ல பயிற்சியும், இலக்கணப் புலமையும் உடையவராய் இருத்தல் வேண்டும். மாணவர் மொழி மரபு மாறாமல், பிழையின்றிப் பேசவும், எழுதவும் வழிகாட்டுவதற்கு இலக்கண அறிவு பெறுதல் அவசியம். இலக்கிய ஆர்வம் மாணவர் பெரில் சிறந்த தேர்ச்சி பெறத்தூண்டுகோலாக அமையும்.

**4. எடுத்துக் கூறும் ஆற்றல்**

கற்பிக்கும் திறனில், மாணவர் கவனத்தை ஒருமுகப்படுத்திக் கற்பித்தல் ஒரு திறனாகக் கருதப்படுகிறது. ஆசிரியர் சொற்சுவை, பொருட்சுவை விளங்கச் செய்யுட் பகுதியையும், உரைநடையையும், கற்பிக்கும் ஆற்றல் பெற்றிருப்பின், மாணவர்களின் கவனம் சிதைவுறாது பாடத்திலேயே நிலைத்திருக்கும். செய்யுள் பகுதிகளை நடத்தும்போது அவற்றோடு பொருட் தொடர்புடைய செய்திகளை எடுத்துக் கூறுவது நற்பயன் அளிக்கும். நகைச்சுவை உணர்ச்சியை வெளிப்படுத்திக் கற்பித்தால், அது மாணவரை வெகுவாகக் கவரும்.

பாடநூல்,
மொழியாசிரியர், நூலகம்

குறிப்பு

**கேட்டார் பிணிக்கும் தகையவாய் கேளாரும்**
**வேட்ப மொழிவதாம் சொல் (குறள் - 643)**

என்னும் குறளுக்கு ஏற்ப ஆசிரியர் பாடத்தை கற்பிக்கும்பொழுது அதைத் தெளிவாக எடுத்துக் கூறும் ஆற்றல் பெற்றிருப்பின், மாணாக்கர் பயனுறுவர்.

**5. குரலில் ஏற்றத் தாழ்வு அமைத்துப் பேசும் திறன்**

மொழிக் கற்பித்தலில் பெரும்பாலும் சொற்பொழிவு முறையே பின்பற்றப்படுகின்றது. ஆகவே ஆசிரியர் கற்பிக்கும் பொழுது ஒரே குரலில் செய்திகளைக் கூறினாரெனின், மாணவர்களுக்குச் சலிப்பு ஏற்படுதலும், அதனால் கவனமாற்றம் ஏற்படுதலும் இயற்கை. ஆகவே குரலில் ஏற்றத்தாழ்வு அமையும்படி கற்பித்தல் அவசியம் ஆகும்.

உணர்ச்சிகளுக்கேற்ப வீரம், சோகம், பரிவு, இன்பம் போன்ற பண்புகள் விளங்கப் பேசுதல் உரைநடையில் கதை, நாடகம் ஆகியவற்றில் வரும் கதை மாந்தரின் உரைகளை உணரச்சிக் கேற்பக் கூறுதல், அழுத்தம் தரவேண்டிய இடங்களில் குரல் அழுத்தம் கொடுத்தல் போன்ற திறன்களை ஆசிரியர் பெற்றிருக்கவேண்டும்.

**6. எழுதும் திறன் பெற்றிருத்தல்**

ஆசிரியரது எழுத்து அழகுற அமையவேண்டியது அவசியமானது ஆகும். மொழியைப் பொருத்தளவில் பேச்சுத்திறனைப்போலவே எழுத்துத்திறனும் ஆசிரியர் பெற்றிருக்கவேண்டும். ஆசிரியர் எவ்வழியோ அவ்வழியே மாணாக்கர். இத்தகைய திறன் மாணவர்களின் கையெழுத்துத் திறனைச் சிறந்த முறையில் வளர்த்திட உதவும்.

**7. உள்ளங்களை ஒன்றாக்கி இணைத்தல்**

மொழித்திறனையும் நல்ல சமூகப் பண்புகளையும், முன்னோர்களின் நாகரீக ஒழுக்கப் பண்பாட்டுப் பெருமைகளையும் மாணவர்களிடத்து வளர்த்து அவர்களிடையே ஒத்துணர்வு ஏற்படுத்துவது மொழியாசிரியர்தம் பணியாகும்.

**8. உளநூல் வல்லுநர்**

இன்று கல்வியில், உளநூல் கருத்துக்கள் சிறந்த இடத்தைப் பெற்றுள்ளன. கல்வி உளவியலின் மூலம், மாணவரது நாட்டம், கவர்ச்சி, மனப்பான்மை, நுண்ணறிவு, இயல்பூக்கம் போன்றவற்றை அறியலாம்.

**"குழந்தை ஒரு புத்தகம்: அதன் ஒவ்வொரு**
**பக்கத்தையும் ஆசிரியர் கற்க வேண்டும்"**

பாடநூல்,
மொழியாசிரியர், நூலகம்

குறிப்பு

என்கிறார் ரூசோ. எனவே மொழி ஆசிரியர்கள் சிறந்து விளங்க வேண்டுமாயின்மாணாக்கர்களை அவர்களின் தனியாள் வேற்றுமைக்கேற்ப அறியும் உளநூல் வல்லுநர்களாகத் திகழ்தல் வேண்டும்.

**9. கலையார்வம் மிக்கவர்**

செய்யுட்களில் அமைந்துள்ள சொல்நயம், பொருள்நயம் போன்றவற்றின் சுவையை உணரும் கலையார்வம் பெற்றவராக விளங்குதல் வேண்டும். வாக்கிய அமைப்பு, நடை, உவமைகள், வர்ணனைகள், பழமொழிகள், மரபுத் தொடர்கள் ஆகியவற்றை உணர்ந்து போற்றுபவராக இருத்தல் வேண்டும். ஆசிரியரின் கலையார்வமே, மாணவரிடத்தில் கவர்ச்சியையும், கலையார்வத்தையும், இலக்கிய நுகர்வினையும் ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

**10. பருவமறிந்து பயிற்றும் முறை**

**உளவியல் காரணிகள்**, பொருளாதாரம், பெற்றோர் மனக்கசப்பு, அமைதியற்ற வீட்டுச் சூழ்நிலை போன்றனவாகும். சோர்வு, உடல் நோய்கள் போன்றன **உடலியல் காரணிகளாகும்**. வகுப்பறைச் சூழ்நிலை போன்றவை சரிவர அமைந்தால் தான் கற்றல் சிறக்கும். ஆகவே, மொழியாசிரியர் மாணவர் மனநிலையறிவதுடன், கற்றலைப் பாதிக்கும் காரணிகளை மாற்றுபவராகவும் விளங்குதல் வேண்டும்.

**11. மாணவர்களுக்கு நல்ல முன்மாதிரியாக இருத்தல்**

மாணவர்கள் சிறந்த ஒழுக்கமுடையராகவும் உயர்ந்த ஆளுமைப் பண்புகள் நிறைந்தவராகவும் வளர வேண்டுமெனில், மாணவர்கள் பின்பற்றுவதற்கேற்ற நல்லதொரு மாதிரியாக, ஆசிரியர் திகழ்தல் வேண்டும். ஆசிரியரின் நடை, உடை, பாவனைகளை நன்கு உற்று நோக்கும் மாணவர்கள் தம் நடத்தைகளில் அவற்றைப் பிரதிபலிக்கின்றனர். எனவே ஆசிரியர் சிறந்த நூல் பழக்கங்களையே மாணவர்கள் முன் வெளிப்படுத்த வேண்டும்.

**12. மாணவரைச் சிறந்த குடிமகனாக உருவாக்கும் பொறுப்பேற்றல்**

**“நடத்தை மாற்றம் விளைவிப்பதே கல்வி”.** அனுபவத்தாலும், பயிற்சியாலும், மேன்மையான நடத்தை மாற்றத்தை உண்டாக்கி, அதன்மூலம் மாணவரிடத்தில் சிறந்த ஆளுமைப் பண்பை வளர்த்துச் சிறந்த குடிமகனாக விளங்க உதவுவதே கல்வியாகும். மொழிப்பற்றை ஊட்டும் மொழியாசிரியர் தம் மாணவரிடத்துச் சிறந்த நற்பண்புகளை உருவாக்குதல் அவரின் கடமையாகும். இதன் மூலம் மாணவர்கள் சிறந்த ஆளுமைப் பண்புகளைப் பெற்றுச் சிறந்த குடிமக்களாக விளங்கிட வழி ஏற்படுகின்றது.

**குறிப்பு**

**“உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்” (குறள் - 140)**

எனும் குறள் கூறும் மாண்பை உணர்ந்து செயல்படல் வேண்டும்.

இவ்வாறு மொழியாசிரியர் மேற்கூறிய பண்புகளையெல்லாம் பெற்றுத் தம் திறமைகளை மென்மேலும் வளர்த்துக் கொண்டால் சிறந்த எடுததுக்காட்டான மொழியாசிரியராகத் திகழ்வார் என்பதில் ஐயமில்லை.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு:அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.**
**ஆ.உமது பதிலைப் பாடத்தின் இறுதியில்கொடுக்கப்பட்டுள்ள பதிலோடுஒப்பிட்டு அறிக.**

13. மொழி ஆசிரியர்களுக்கு இன்றியமையாததாக விளங்குவது யாது?
…………………………………………………………………………………
…………………………………………………………………………………

14.“குழந்தை ஒரு புத்தகம்: அதன் ஒவ்வொரு பக்கத்தையும் ஆசிரியர் கற்க வேண்டும்” என்று கூறியவர் யார்?
…………………………………………………………………………………
…………………………………………………………………………………

## 11.8. நூலகம்

**‘’தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு’’ (குறள் - 396)**

என்ற திருவள்ளுவரின் வாக்கிற்கிணங்க அறிவை அளிப்பது நூல்களே. அந்நூல்களைப் பேணுவது நூலகமே என்பதை அறிவோம்.

பல வகைப்பட்ட நூல்களைத் தொகுத்து முறைப்படுத்தி வைத்துள்ள இடம் நூலகம் ஆகும். சிறந்த அறிஞர்களின் படைப்புகள், தத்துவ நூல்கள், நகைச்சுவை நிறைந்த கதைகள், நாடகங்கள், வரலாற்று நூல்கள், மொழி நூல்கள், வரலாற்று நாவல்கள், அறிவியல் நூல்கள், கவிதைகள், கலைக்களஞ்சியம் போன்ற அனைத்து வகையான நூல்களும் படித்திடக் கிடைக்கும் இடமே நூலகம்.

எல்லா மக்களுக்கும் பயன்படும் நோக்கில் நாள்தோறும், நூலகங்கள் இயங்கி வருகின்றன. அதேபோன்று, கல்வி நிலையங்களான பள்ளி, கல்லூரிகளிலும் நூலகங்கள் அமைந்துள்ளன.

**“புனிதமுற்று மக்கள் புதுவாழ்வு வேண்டில்
புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்’’**

என்ற பாவேந்தர் பாரதிதாசனின் வாக்கிற்கேற்ப மக்கள் சிறந்த வாழ்வு வாழ்வதற்கு நூலகம் இன்றியமையாதது.நூலகமானது பல்வேறு

அறிஞர்களின் கருத்துக்களும் குழுமியிருக்கும் ஓர் உயிரோட்டமான அறையாகும். நூலகம் என்பது பல தலைமுறையின் அனுபவம், பேரறிவு ஆகியவற்றின் புதையல். சுருங்கச் சொல்லின் நூலகம் மகிழ்வு தரும் வீடு, சமூகத்தின் உயிர்நாடி, மக்களைக் கவர்கின்ற பிருந்தாவனம்.

பாடநூல்,
மொழியாசிரியர், நூலகம்

**குறிப்பு**

**நூலகத்தைப் பற்றி அறிஞர்களின் கருத்து**

**சார்லஸ் லேம்ப்**

நூலகம் என்பது பெரியோர்களின் ஆன்மாக்கள் உறையும் புனிதமான கோவில். எப்போதும் அறிவு மணம் கமழ்ந்து கொண்டிருக்கும்.

**ஆர்.கே.மிட்டல்**

ஒரு திறமையான நன்கு பராமரிக்கப்பட்ட நூலகமானது நவீன கல்வி அமைப்பில் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு:அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.**
**ஆ.உமது பதிலைப் பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.**

15. புனிதமுற்று மக்கள் புதுவாழ்வு வேண்டில் புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும் என்று கூறியவர் யார்?

……………………………………………………………………………......

……………………………………………………………………………......

16. நூலகத்தைப் பற்றி சார்லஸ் லேம்ப் என்ற அறிஞரின் கருத்து யாது?

……………………………………………………………………………...............

……………………………………………………………………………...............

### 11.8.1. நூலகத்தின் வகைகள்

- ❖ பொது நூலகம்
- ❖ பள்ளி நூலகம்
- ❖ வகுப்பு நூலகம்
- ❖ மேற்கோள் நூலகம்

#### 11.8.1.1. பொது நூலகம்

- ➢ ஓர் அரசின் தலையாய கடமை மக்களை அறிவுடையோர் ஆக்குதலே. அதற்கிணங்க ஊர்தோறும் நூலகம் அமைத்தல் வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு பொது நூலகங்கள் செயல்படுகின்றன.
- ➢ சமூகத்தின் எந்நிலையைச் சார்ந்தவராயினும் சிறியோர் முதல் பெரியவர்கள் வரை வயது வேறுபாடின்றி உறுப்பினராகவும் அங்கிருந்து நூல்களை எடுத்துப் படிக்கவும் பொது நூலகங்கள் வழிவகுக்கின்றன.

பாடநூல், மொழியாசிரியர், நூலகம்

**குறிப்பு**

- தமிழக அரசு 1948ம் ஆண்டு சென்னைப் பொது நூலகச் சட்டத்தை இயற்றி நூலகப்பணிகளின் சீரான செயல்பாட்டிற்கு வித்திட்டது.

### 11.8.1.2. பள்ளி நூலகம்

- பள்ளியில் அமைந்துள்ள பாடநூல்களான உரைநடை, செய்யுள் பகுதி, துணைப்பாட நூல் ஆகியனவும் பள்ளி நூலகத்தில் இடம் பெற வேண்டும்.
- மாணவர்கள் ஓய்வு நேரத்தினைப் பயனுள்ள வகையில் கழிக்க உதவும் விதமாக பள்ளி நூலகம் செயல்படுகிறது.

**பள்ளி நூலகத்தில் இடம் பெற வேண்டிய நூல்கள்**

- பள்ளி நூலகத்தில் ஆங்கிலம், தமிழ், வரலாறு, கணிதம், அறிவியல், புவியியல், ஆட்சித்துறை, சட்டத்துறை, கணிப்பொறித்துறை, கைத்தொழில் எனப் பல்வேறு பொருட்களில் நூல்கள் இடம்பெற வேண்டும்.
- மொழிப்பாடம் தொடர்பான பிற நூல்கள் இடம் பெற வேண்டும்.
- எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, நீதி இலக்கியங்கள், காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள், புதினங்கள், சிறுகதைகள், புதுக் கவிதை, பயண இலக்கியம், சிறுவர் இலக்கியம், நாட்டுப்புற இலக்கியம், நாடக நூல்கள் போன்ற இலக்கியங்கள்.
- நன்னூல், தொல்காப்பியம், நம்பியகப்பொருள், தண்டியலங்காரம், வீரசோழியம், புறப்பொருள் வெண்பாமாலை போன்ற இலக்கண நூல்கள்.
- ஆய்வு நூல்கள், கலை நூல்கள், பொது அறிவு நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள், பருவ இதழ்கள், காலச்சுவடு, கலைக்களஞ்சியங்கள், நிகண்டுகள், அகராதிகள், ஆய்வு ஏடுகள், கல்வியியல் நூல்கள், உளவியல் நூல்கள், இசை நூல்கள் போன்ற பிற நூல்கள்.

**நிறைகள்**

- நூலகத்தில் நமக்கு தேவையான புத்தகங்களைத் தேர்ந்தெடுத்துப் படித்து அறிவை வளர்த்து கொள்ள முடியும்.
- நூலகப் படிப்புக்குத் துணையாக அமையும்.
- மாணவர்களுக்குத் தன்னம்பிக்கை ஏற்படும்.
- படிப்புப் பழக்கத்தை வளர்ப்பதற்கு இது சிறந்த தூண்டுகோலாக அமையும்.

- ❖ சொற்களஞ்சியப் பெருக்கம் ஏற்பட வாய்ப்பாக அமையும்.

**குறைகள்**

- ❖ காலக் கழிவு ஏற்படும்.
- ❖ அனைவரும் விரும்பும் நூல்களைக் கொடுப்பது கடினம்.
- ❖ ஆசிரியர் முன்னேற்பாடு செய்ய வேண்டும்.
- ❖ தொடர் பணி கொடுக்காவிட்டால் நூலகப் படிப்பின் பயன் இல்லாது போகும்.

### 11.8.1.3. வகுப்பு நூலகம்

- ➢ பள்ளியில் மாணவர்கள் ஓரிடம், நூலகம் வேறிடம் என்ற நிலையை மாற்ற நம் பள்ளிக்கல்வித்துறை புத்தகப் பூங்கொத்து என்னும் வகுப்பு நூலகத் திட்டத்தைத் தொடங்கியது.
- ➢ அந்தந்த வகுப்புகளுக்கேற்றவாறு நூல்கள் தொகுத்து வைக்கப்பட்டிருக்கும்.
- ➢ இதில் ஒரே ஆசிரியரின் பல நூல்கள் ஒரே நூலின் பல படிகள் மாணவரின் அறிவு நிலைக்கேற்ற விருப்பத்திற்கேற்ற கதைகள், வீர, தீர, நிகழ்ச்சிகள், வேடிக்கைகள், புதுமைகள் ஆகியன இடம் பெறுதல் நன்று.
- ➢ இங்கு வகுப்பு ஆசிரியர் நூலகராகச் செயல்படுவர்.

### 11.8.1.4. மேற்கோள் நூலகம்

- ❖ நூலகத்தில் பொது அகராதிகள், கலைச்சொல் அகராதிகள், வாழ்க்கை வரலாற்றுச் சுருக்க அகராதிகள், தமிழ்ப் பேரகராதி, கலைக்களஞ்சியங்கள், நிகண்டுகள், சங்க இலக்கியங்கள், புராணங்கள், இலக்கண நூல்கள் இடம் பெற வேண்டும்.
- ❖ செந்தமிழ்ச் செல்வி, செந்தமிழ் கலைமகள், அமுதசுரபி, மஞ்சரி போன்ற இதழ்களின் பிரதிகளும் இருத்தல் வேண்டும்.
- ❖ சிறுவர்களுக்கு விருப்பம் தரும் கண்கவர் ஓவியங்களைக் கொண்ட அறிவு வளர்க்கும் நூல்கள் இரயில் வழிகாட்டிகள் பஞ்சாங்கங்கள் அட்டவணை நூல்கள் ஆண்டு நூல்கள் இடம் பெறலாம்.

பாடநூல்,
மொழியாசிரியர், நூலகம்

**குறிப்பு**

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.**
**ஆ. உமது பதிலைப் பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.**

17. நூலகத்தின் வகைகள் யாவை?

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

18. பள்ளிக்கல்வித்துறை தொடங்கிய வகுப்பு நூலகத் திட்டத்தின் பெயர் என்ன?

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

## 11.9. தொகுத்துக் காண்போம்

இப்பாடத்தில் பாடநூலில் புதுமைகள் ஏற்பட வேண்டிய அவசியத்தை உணர்ந்து கொண்டிருப்பீர்கள். பாடத்திட்டமும், பாடநூல்களும் எவ்வாறு வடிவமைக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன என்பதை அறிந்து கொண்டீர்கள். பாடத்திட்டம், பாடநூல்கள், மாணவனின் ஆர்வம், ஆசிரியரின் திறமை ஆகியவற்றின் ஒருங்கிணைப்பில்தான் நல்ல கல்வி பெறமுடியும் என்பது திண்ணம். மேலும் மொழியாசிரியர் பற்றியும், மொழியாசிரியரின் கல்வித்தகுதி மற்றும் மொழியாசிரியரின் பண்பு நலன்கள் பற்றியும், நூலகம் மற்றும் நூலக வகைகள் பற்றியும் நூலகத்தினால் ஏற்படும் பயன்கள் பற்றியும் இப்பாடத்தில் பயின்று மகிழ்ந்தோம்.

## 11.10. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாவிற்கான விடைகள்

1. பாடநூல் என்பது ஆசிரியராலும், மாணவராலும் மீண்டும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய, கல்வி ஏற்பாட்டின் நோக்கத்தை அடைய உதவும் மிகச் சிறந்த கருவியே பாடநூல்.
2. ஆழ்ந்த படிப்பு
3. மாணாக்கர்களின் கண்ணை கவரும் வண்ணம், சிறந்த அச்சு, உயர்ந்த கட்டமைப்பு, கையாளுவதற்கேற்ற அளவு
4. மொழித்துறை வல்லுநர், பொருள் பகுதி வல்லுநர்கள், உளவியலறிஞர், பதிப்புத்துறை வல்லுநர்
5. மொழிப்பாடத்தில் இலக்கியம், இலக்கணம், மொழி ஆகியவற்றோடு அறிவியல், மருத்துவம், வரலாறு, புவியியல் தொடர்பான பாடக்கருத்துகள் இடம் பெறுகின்றன.
6. திருக்குறள், நாலடியார்,
7. எளிமையிலிருந்து கடினத்திற்கும், தெரிந்ததிலிருந்து தெரியாததற்கும் பாடநூல் கருத்து செல்ல வேண்டும்.

8. தமிழிலக்கிய வகையை சுட்டுதல், தமிழிலக்கிய கருத்துக்களை எடுத்துரைத்தல்.
9. தமிழ்தாத்தா உ.வே.சா, கடைசி வரை, பாரத தேசம்.
10. எழுதும் திறன், மொழித்திறன் பயிற்சி
11. தொண்டு
12. மொழியைச் செம்மையாக கற்பிக்க வேண்டும் என்ற அடிப்படையே மொழி ஆசிரியர்களின் நியமனம் ஆகும்.
13. மொழிப் பற்று
14. ரூசோ
15. பாவேந்தர் பாரதிதாசன்
16. நூலகம் என்பது பெரியோர்களின் ஆன்மாக்கள் உறையும் புனிதமான கோவில். எப்போதும் அறிவு மணம் கமழ்ந்து கொண்டிருக்கும்.
17. பொது நூலகம், பள்ளி நூலகம், வகுப்பு நூலகம், மேற்கோள் நூலகம்
18. புத்தகப் பூங்கொத்து

## 11.11. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

1. பாடநூல் உள்ளடக்கத்தை பற்றி விவரித்து எழுதுக?
2. மேல்நிலை வகுப்பிற்குரிய மொழிப்பாடங்களைத் தொகுத்து எழுதுக?
3. மொழியாசிரியரின் பண்பு நலன்களை விவரி.
4. நூலகத்தின் வகைகளை விவரி.

## 11.12. மேலும் பயில்வதற்கான நூல்கள்

1. முனைவர் ஞா.பழனிவேலு (2011), செந்தமிழ் கற்பித்தல், பொதுத்தமிழ் நதிபப்ளிகேஷன்ஸ், தஞ்சாவூர்.
2. வெ.கலைச்செல்வி (2013), பொதுத்தமிழ் கற்றல் - கற்பித்தல் சஞ்ஜீவ் வெளியீடு, ஈரோடு.
3. முனைவர். அ. மீனாட்சிசுந்தரம், (2014), பாடப்பொருள் மற்றும் தமிழ் கற்பித்தல், காவ்யமாலா பப்ளிஷர்ஸ், சின்னாளப்பட்டி, திண்டுக்கல்
4. கோவிந்தராஜன் .மு. (1990), நற்றமிழ் பயிற்றலின் நோக்கமும் முறையும், சரஸ்வதி பதிப்பகம், சென்னை.
5. சு.தண்டபாணி (2009) தமிழ் கற்பித்தல் மீனா பதிப்பகம், மதுரை

பாடநூல், மொழியாசிரியர், நூலகம்

**குறிப்பு**


6. கி.நாகராஜன் (2000) தமிழ் உரைநடை, சாந்தா பப்ளிஷர்ஸ், சென்னை
7. திருமதி.சந்திரிகா ராஜமோகன், பாடப்பொருள் மற்றும் தமிழ் கற்பித்தல் பொதுத் தமிழ், சாந்தா வெளியீடு, சென்னை, 2013-2014.
8. முனைவர் உ.பிரபாகரன் (2009) பொதுத்தமிழ் (தாள்-1) சம்யுத்தா பதிப்பகம் நாமக்கல்.
9. ஒன்றாம் வகுப்பு முதல் பனிரெண்டாம் வகுப்பு வரையிலான தமிழ்ப் பாட நூல்கள், சென்னை, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம்.
10. http://www.education.com


*****

# அலகு - 12 - கற்பித்தல் பொதுமுறை

குறிப்பு

**பாடஅமைப்பு**

12.1. முன்னுரை

12.2. குறிக்கோள்

12.3. கற்பித்தல் பொதுமுறை

12.3.1. செய்யுள் பயிற்று முறை

12.3.1.1. செய்யுள் கற்பித்தலின் நோக்கங்கள்

12.3.1.2. செய்யுள் கற்பித்தலின் பயன்கள்

12.3.1.3. செய்யுள் கற்பிக்கும் முறைகள்

12.3.2. உரைநடை பயிற்று முறை

12.3.2.1. உரைநடை விளக்கம்

12.3.2.2. உரைநடை கற்பித்தலின் நோக்கங்கள்

12.3.2.3. உரைநடையின் வகைகள்

12.3.2.4. அகராதியை பயன்படுத்தும் முறை

12.3.3.இலக்கணம் பயிற்றுமுறை

12.3.3.1. இலக்கணத்தின் இன்றியமையாமையும் பயனும்

12.3.3.2. இலக்கணம் கற்பிப்பதன் நோக்கம்

12.3.3.3. இலக்கண வகைகள்

12.3.3.4. இலக்கணம் கற்பிக்கும் முறைகள்

12.3.4. துணைப்பாடம் பயிற்று முறை

12.4.5.1 துணைப்பாடம் கற்பித்தலின் நோக்கங்கள்

12.4.5.2 துணைப்பாடம் கற்பித்தலின் முறைகள்

12.3.5 மொழி பயிற்சியும் கட்டுரை வரைதலும்

12.3.5.1. மொழி பயிற்சி விளக்கம்

12.3.5.2. மொழி பயிற்சி முறைகள்

12.3.5.3. கட்டுரை வரைதல்

12.3.5.4. சிறந்த கட்டுரையின் கூறுகள்

12.3.5.5. கட்டுரையின் வகைகள்

12.3.5.6. கட்டுரை எழுதும் முறை

12.4. தொகுத்துக் காண்போம்

12.5. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாவிற்குரிய விடைகள்

12.6. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்

12.7. மேலும் பயில்வதற்கான நூல்கள்.

**குறிப்பு**

## 12.1. முன்னுரை

பள்ளி செல்லும் இளைய தலைமுறையினரை இலக்கிய இன்பத்தில் ஈடுபடச்செய்ய வேண்டியது ஆசிரியரின் கடமையாகும். அது மட்டுமன்று செய்யுளை மாணவர்களுக்குக் கற்று கொடுக்கும் போது எவ்வாறு அதனை இசைபடக் கொடுத்தால் சென்றடையும் என்பதை அறிந்து கற்பிக்க வேண்டும். உரைநடை, இலக்கணம் மற்றும் துணைப்பாடம் போன்றவற்றையும் அவ்வாறு பயிற்றுவிக்க வேண்டும். உரைநடைப் பாடமானது ஆழ்ந்த படிப்பையும், துணைப்பாடம் என்பது அகன்ற படிப்பையும் கற்றலில் ஏற்படுத்தக்கூடிய ஆற்றல் பெற்றவை என்பதை மாணவர்களுக்கு உணர்த்த வேண்டியது அவசியம். அத்துடன் முன்னோர் தந்துவிட்டுச் சென்ற மொழியின் இலக்கணத்தை எங்ஙனம் பள்ளி மாணவர்களுக்குக் கற்பிப்பது? கற்பிக்கப்பட வேண்டியதன் நோக்கம் யாது? போன்ற அனைத்திற்கும் சரியான விளக்கத்தை இப்பாடத்தில் நீங்கள் அறிந்து கொள்ளலாம். அதுமட்டுமன்று பள்ளியில், ஆக்கத்திறனில் ஒன்றான எழுத்தை மாணவர்களிடையே வளர்க்க எழுதும் திறனைக் கொண்ட கட்டுரை வரைதலையும் இப்பாடத்தின் மூலம் அறியலாம்.

## 12.2. குறிக்கோள்கள்

நீங்கள் இப்பாடத்தைப் பயின்ற பின்னர்,

- செய்யுள் இசையுடன் இணைந்தது என்பதைச் சுட்டிக் காட்டுவீர்கள்.
- உரைநடைப் பாடத்தில் அகராதியைப் பயன்படுத்துவதன் இன்றியமையாமையை உரைப்பீர்கள்.
- துணைப்பாடம் கற்றலால் விளையும் நன்மைகளைப் பட்டியலிட்டுக் காட்டுவீர்கள்
- இலக்கணம் கற்பித்தலின் வகைகளை விரித்துரைப்பீர்கள்.
- எழுத்துப் பயிற்சியானது மொழிப்பயிற்சியில் பெறுமிடத்தை வரையறை செய்வீர்கள்.
- கட்டுரை வகைகளுக்கு இடையேயுள்ள வேறுபாட்டைப் புலப்படுத்துவீர்கள்.

## 12.3. கற்பித்தல் பொதுமுறை

பாடலுக்கு ஏற்ப, ஒரு பாடலில் அதன் அடிகளுக்கேற்ப, ஓர் அடியில் கூட அதன் சீர்களுக்கேற்ப, கற்பிக்கும் முறைகளை அமைத்தல் வேண்டும். பாட்டுக்கு ஏற்ப கற்பிக்கும் ஆசிரியர், கற்பிக்கும் முறையை வகுத்துக் கொள்ள வேண்டும். செய்யுள் கற்பிக்கத்

தொடங்கும் முறைகள் கவிஞன் வரலாறு கூறித் தொடங்குதல், விளக்க முறை, சூழ்நிலை காட்டும் முறை, வினா முறை போன்ற முறைகள் மூலம் செய்யுளை எவ்வாறு கற்பிக்க வேண்டும் என்பதை அறியலாம். உரைநடை என்பது மொழித்திறமையை அடிப்டையாகக் கொண்டுதான் உருவாக்கப்பட்டுள்ளது. உரைநடைப் பாடம் கற்பிக்கும் மொழியாசிரியர் அகராதியைப் பயன்படுத்தும் முறையை மாணவர்களுக்குக் கற்பித்தல் வேண்டும். இதனால் மாணவர் அகராதியைப் பயன்படுத்தக் கற்றுக் கொள்ள முடிகின்றது. இலக்கியங்கள் தோன்றிய பின்னர், அவற்றை ஆய்ந்து அவ்வக்கால மொழியமைப்பைக் கொண்டு அம்மொழிக்குரிய இலக்கணத்தை உருவாக்கினர். அகத்தியரே தமிழ் மொழிக்கு முதன் முதலில் இலக்கண நூலைத் தந்தவர் என்று தமிழ் இலக்கிய வரலாறு கூறுகிறது. மாணவர்களுக்குப் பல்துறைப் பயிற்சியும் இலக்கிய ஆர்வமும் பெருகுவதற்குத் துணைபுரிபவை துணைப்பாட நூல்களாகும். துணைப்பாட நூல்கள், நூலக நூல்கள் முதலியவை அகன்ற படிப்புக்கு உரியனவாகும். புதிய சொற்களுக்குப் பொருள் கூறுதலையும், பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, சொல்லிலக்கணம் கூறல், சந்தி பிரித்தல் போன்றவற்றையும் மொழிப் பயிற்சியாகக் கொண்டனர். மொழியின் வளர்ச்சிக்கு உரைநடை இலக்கணம் செய்யுளிலக்கணத்தை விட இன்றியமையாதது. மனத்தில் தோன்றும் கருத்துக்களைக் கோர்வைப்படுமாறு காரணகாரியத் தொடர்பில் அழகான மொழியில் அமைப்பது கட்டுரையாகும். கட்டுரையின் முக்கிய பாகங்கள் முகவுப்பகுதி, உடல் பகுதி, முடிவுப்பகுதி. இயற்கையில் மனத்தில் தோன்றி எழும் எண்ணங்கள், மொழியைப் பொறுத்தவரையில், இரண்டு விதமாக வெளிப்படும். அவை வாய்மொழி, எழுத்துமொழி என்பதாகும். இவ்வாறான கற்பித்தல் முறைகள் மூலம் மாணவர்களைக் கற்றலில் ஈடுபடச் செய்து எவ்வாறு அவர்களின் அறிவுத் திறனை பெருக்கலாம் என்பதையும், இலக்கியச் சுவையை பெறலாம் என்பதையும், கட்டுரை மூலம் எவ்வாறு கருத்துக்களை வெளியிடலாம் என்பதையும், இப்பாடத்தின் மூலம் அறிந்துகொண்டு ஆசிரிய மாணவர்களாகிய நீங்கள் சிறந்த மாணவர்களை உருவாக்கலாம்.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**

**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதுக.**
**ஆ.உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு ஆராய்க.**

1. தமிழ் மொழிக்கு முதன்முதலில் இலக்கண நூலைத் தந்தவர்…..
2. கட்டுரையின் இரண்டு விதங்கள் யாவை?

……………………………………………………………………………

குறிப்பு

## 12.3.1. செய்யுள் பயிற்றுமுறை

கவிஞர்கள் தாம் கண்ட காட்சிகளை, வாழ்க்கை நுகர்வுகளை இனிமையான சொற்களின் மூலம் காட்சியாகச் செய்யுள் வடிவில் தருகிறார்கள். செய்யுள்களைப் படிக்கவும், பொருளுணர்ந்து கொள்ளவும் தனித்திறன் வேண்டும். பள்ளிகளில் கற்பிக்கப்படும் செய்யுட்பகுதியினால் மாணவர்களின் பல்வேறு ஆற்றல் வளர வாய்ப்புள்ளது. பண்பாட்டை அறிந்து கொள்ளுதல், வாழ்க்கை முறைகளைச் செம்மைப்படுத்துதல் போன்ற அடிப்படை நோக்கங்களை மனத்தில் கொண்டு செய்யுட்பகுதி கற்பிக்கப்படுகிறது.

### 12.3.1.1. செய்யுள் கற்பித்தலின் நோக்கங்கள்

செய்யுட் பாடம் கற்பித்தலின் போது ஓசைநயம், சொற்சுவை, பொருட்சுவை, எழிலுணர்வு, பண்பாட்டை அறிதல், அறநெறியில் வாழ்தல், ஆய்வுச் சிந்தனை, இலக்கியப் பற்று, இறையுணர்வு, உணர்வுகளை வெளியிடல், கருத்துணர்வு, படைப்பாற்றல், கற்பனையாற்றல், மொழிப்பற்று போன்ற நோக்கங்களை அறிந்துகொள்ள துணை நிற்பதே செய்யுள் கற்பித்தலின் சிறப்பாகும்.

**ஓசைநயம்**

செய்யுளை இசையுடன் பாடுவது சிறந்ததாகும். ஓசையை எடுத்தல், படுத்தல், வியத்தல் என்ற நிலையில் படித்தும் காட்டலாம்.

ஓசைநயத்திற்குக் கம்பரின் பாடல் ஒன்றை எடுத்துகாட்டாகக் கூறலாம்.

***“பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவ மனுங்க***
***செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடி பெயர்ப்பாள்***
***அஞ்சொலிள மஞ்ஞையென வன்னமென மின்னும்***
***வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்.”***

**சொற்சுவை**

செய்யுள் இயற்றும் போது தக்க சொற்களைத் தக்க இடத்தில் அமைத்துக் கவிபுனையும் ஆற்றல் இயற்கையிலேயே தமிழ்ப் புலவர்களிடம் நிறைந்திருந்தது. புலவர்களின் உணர்ச்சிப் பெருக்கின் விளைவாகச் சொல் விளையாட்டைத் தமது படைப்புகளில் காட்டுவது இயல்பு. அத்தகைய சொல்லழகினை மாணாக்கர்களுக்கு எடுத்தியம்புவது ஆசிரியரின் கடமையாகும்.

***“எடுமெடு மெடுமென எடுத்ததோர்***
***இகலொலி கடலொலி யிகக்கவே***
***விடுவிடு விடுபரி கரிக்குழாம்***
***விடும்விடு மெனுமொலி மிகைக்கவே”***

என்ற கலிங்கத்துப்பரணிப் பாடல் சொற்சுவைக்கு எடுத்துக் காட்டாகும்.

**பொருட்சுவை**

குறிப்பு

கம்பர் தமது காப்பியம் முழுவதிலும் பொருட்சுவை தரும்படியே எழுதியுள்ளார். இலங்கையில் சீதையைக் கண்டு திரும்பிய அனுமன் **“கண்டனன் கற்பினுக்கு அணியைக் கண்களால்”** என இராமனிடம் கூறும் செய்தியில் பொருட்சிறப்பைக் காணமுடிகிறது. கண்டேன் சீதையை என்று கூறாமல், சீதைக்கு சிறப்புத் தரும் கற்பையே சிறப்பாக எடுத்துரைப்பது பொருட்சிறப்பின் மேன்மையாகும். கம்பராமாயணம் போலவே தமிழ் நூல்கள் அனைத்தும் பொருட்சுவை மிக்கதாக விளங்குகின்றன.

**எழிலுணர்வு**

அழகு என்பது முற்றுப்பெற்ற வனப்பு. எழில் என்பது மேன்மேலும் வளர்ந்து வரும் வனப்பு. இலக்கியங்களை ஆராயுந்தோறும் இன்பம் தருவதாகும். செய்யுளைத் தாமாகப் படிக்கும் பொழுதும் முறையோடு பிறர் கூறுவதைக் கேட்கும் பொழுதும் அச்செய்யுளின் ஓசைநயமும், சொற்சுவையும். பொருட்சுவையும் படிப்படியாகத் தம்மை இழுக்கும்.

நல்ல செய்யுள் வடிவங்களைக் கேட்டுப் பயிற்சிபெற்ற செவியானது, நயமான இலக்கியங்களைத் தேர்ந்தெடுத்துச் சுவைக்கும் திறனைப் பெற்றுவிடும். உயர்ந்த கவிதை இலக்கியப் பயிற்சி பெற்றவர்கள் உண்மைக் கவிதையை உணரும் ஆற்றல் பெறுவதோடு அதனைத் தாமும் சுவைத்து மற்றவர்க்கும் உணர்த்தும் ஆற்றல் பெற்று விளங்குவர். இதுவே மக்களை மாக்களிடமிருந்து பிரித்துக் காட்டும் ஒரு சிறந்த அடையாளமாகும். ஆகவே சிறந்த மக்களாக ஆவதற்கும், நுட்பமான இனிய இலக்கியச் சுவைகளை உணர்வதற்கும் எழிலுணர்வு வளர்ச்சி இன்றியமையாததாகும்.

**அறநெறியில் நிற்றல்**

அறநெறிக் கருத்துக்களைப் பெரும்பான்மையாகக் கொண்டு விளங்குவது தமிழிலக்கியமாகும். ஈத்துவக்கும் இன்பம், யாதும் ஊரே யாவரும் கேளிர், இனியவை காண்க, அல்லது செய்தல் ஓம்புமின், இயல்வது கரவேல், உயர்ந்த எண்ணம், வாழியநிலனே, பண்புடையார்ப் பட்டுண்டு உலகம், உண்பது நாழி உடுப்பவை இரண்டே, நரையிலா நல்வாழ்வு, நன்றி மறப்பது நன்றன்று, மனமே சாட்சி போன்ற தமிழ் இலக்கியக் கருத்துகளிலிருந்து மக்கள் முதல் மன்னன்வரை அறநெறியை உயிராகக் கொள்ள வேண்டும் என்னும் கருத்து

குறிப்பு

வலியுறுத்தப்படுகிறது. இவ்வாறான கருத்துக்களை உணரச் செய்வதே செய்யுள் நடத்துவதன் நோக்கமாகும்.

**இலக்கியப் பற்று**

தமிழிலக்கியங்களைத் தேர்ந்தெடுத்துக் கற்பிப்பதோடு அயல் மொழி இலக்கியங்களையும் கற்பிக்கவேண்டும். இதனை வலியுறுத்தவே பாரதியார் பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழில் பெயர்க்கப்பட வேண்டும் என்கிறார். இலக்கியங்களை மாணவர்களுக்குக் கற்பிக்கும் போது சுவைபட, நல்ல விளக்கத்தோடு நடத்தினால் அவ்விலக்கியங்களின் உட்கூறுகளைப் புரிந்து கொள்ளமுடியும். ஆசிரியர் ஒரு பாடலை நடத்துவதைக் கொண்டு மாணவர்கள் அந்நூல் முழுவதும் படிக்கும் அளவிற்கு ஆர்வத்தைத் தூண்டவேண்டும். இதனால் செய்யுள் கற்பித்தலின் நோக்கம் நிறைவேறும்.

**ஆய்வுத்திறன்**

சிந்தனையின் விளைவாகக் கற்பனை தோன்றுகிறது. கற்பனை ஆக்கம் பெற்றால் செய்யுள் பிறக்கிறது. காவியத்தைப் படிக்கும்போது ஆய்வுக் கண்ணோட்டத்துடன் படிக்கவேண்டும். ஆசிரியர் அவ்வாறு நடத்த வேண்டும். காவியங்களில் பல்வேறு காவிய மாந்தர்கள் படைக்கப்படுகிறார்கள். கதைமாந்தர்களின் சிறப்பினை ஆய்வுநோக்கத்துடன் பார்ப்பது எளிது. எடுத்துக்காட்டாக சிலப்பதிகாரம் நடத்தும்போது கற்பில் சிறந்தவள் கண்ணகியா? மாதவியா? எனும் தலைப்பில் ஆய்வரங்கம் நடத்தினால் மாணாக்கர்களின் ஆய்வுத் திறனை வளர்க்க முடியும்.

**இறையுணர்வு**

அறத்தின் வழி நின்று பொருள் ஈட்டி இன்பமயமாக வாழ்தலை வீடுபேறு அடையும் வழியாகத் திருக்குறள் உணர்த்துகிறது. இறைவனின் அருள் இல்லாமல் இவ்வுலகில் எதுவும் நிகழாது என்பது நம் முன்னோர்களின் கருத்தாகும். இந்த நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டவையே பக்தி இலக்கியங்களாகும். இறைவனுடன் இரண்டறக் கலந்து இன்பம் அடைவதே நிலையான இன்பம். அதனை உணர்த்துவதே தமிழ் இலக்கியமாகும். உலகின் எம்மொழியிலும் இல்லாத அளவிற்கு பக்தி இலக்கியங்கள் நிறைந்து காணப்படுவது தமிழ் மொழியில்தான். இத்தகைய சிறப்புடைய செய்யுளை நடத்துவதன் நோக்கம் இறையுணர்வு மாணவர்களிடம் வளரவேண்டும் என்பதேயாகும்.

**குறிப்பு**

**உணர்வுகளைத் தூண்டுதல்**

உள்ளத்து உணர்வுகளைக் கற்பனையுடன் கலந்து அளிப்பது செய்யுள். எத்தகைய உணர்ச்சிகளால் உந்தப் பெற்றுக் கவிஞன் அந்தச் செய்யுளை இயற்றினானோ அத்தகைய உணர்ச்சியின் பெருக்கினை நாமும் செய்யுளைக் கற்பிக்கும் போது அல்லது படிக்கும் போது உணரமுடியும்.

**"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் பசியினால் இளைத்தே**
**வீடு தோறிரந்தும் பசியறா தயர்ந்த வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்**
**நீடிய பிணியால் வருந்துகின்றோர் என்நேர் உறக் கண்டுளந் துடித்தேன்**
**ஈடின் மானிகளாய் ஏழைகளாய் நெஞ்சிளைத் தவர் தமைக்கண்டே இளைத்தேன்"**

என உயிர்களிடத்துக் காணும் துன்ப நிகழ்ச்சிகளைக் கண்டுமனம் துன்புறுகின்றார் கவிஞர். அத்துன்பத்தை நாமும் உணருமாறு செய்யுள் படைத்துள்ளார்.

**படைப்பாற்றல்**

இயற்கைக் காட்சிகளைக் கவிஞன் கண்டு அதனைச் சிறந்த சொற்களால் கற்பனை செய்து பாடுவது இயல்பு. எடுத்துக்காட்டாக ஓர் அழகிய நீர்நிலை. அதில் அன்னப்பறவைகள் விளையாடுகின்றன. செந்நிறமலர்கள் பூத்துள்ளன. அம்மலர்களின் மேல் கதிரவனின் கதிர்கள் பட்டவுடன் அந்நீர்நிலை தீப்பிடித்துவிட்டதாகக் கருதி அப்பறவைகள் கத்துகின்றன. தமது குஞ்சுகளை இறக்கைகளில் வைத்துப் பாதுகாக்கின்றன. இது முத்தொள்ளாயிரக் கவிஞனின் கற்பனை.

***"அள்ளற் பழனத்து அரக்காம்பல் வாய் அவிழ***
***வெள்ளந் தீப்பட்டதென வெரீ இப் - புள்ளினந்தான்***
***கைச்சிறகாற் பார்ப்பொடுக்குங்கவ் வையுடைத்தரோ***
***நச்சிலைவேற் கோக் கோதைநாடு"***

இக்கற்பனையாற்றலைப் படிக்கும் ஒவ்வொருவரும் இப்படைப்பினைப் போற்றிப் புகழ்வது இயல்பு. தாமும் படைக்கவேண்டும் என்னும் ஆர்வம் கொள்ளும்போது, கற்பனைமிக்க செய்யுளை இயற்றமுடியும்.

**மொழிப்பற்று**

சிறந்த மனிதனின் இயல்புகளாக மொழிப்பற்றும், நாட்டுப்பற்றும் இணைந்து செயல்படுவதைக் குறிப்பிடுவார்கள். மனிதர்களிடம் காணப்படும் பண்புகளுள் முதன்மையானவை மொழிப்பற்றும், நாட்டுப்பற்றுமேயாகும். அத்தகைய பண்புகளை மாணாக்கர்களிடத்து ஊட்டுவதே செய்யுள் கற்பித்தலின் முதன்மை நோக்கமாகும்.

குறிப்பு

*“இருந்தமிழே உன்னால் இருந்தேன் - இமையோர்*
*விருந்தமிழ்தம் ஈந்திடினும் வேண்டேன்”*

என்னும் தமிழ்விடு தூதுப் பாடல் வாயிலாகவும்,

*“தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத்*
*தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்குநேர்”*

என்னும் பாரதிதாசனின் தன்மான உணர்ச்சிப் பாடல்களாலும் மொழிப்பற்றினை உணர்த்த முடியும்.

**பண்புகளை வளர்த்தல்**

மக்கட்கூட்டத்தின் சிறப்பியல்பாகவும், தமிழ் மக்களின் சிறப்பியல்பாகவும் விளங்குவதையே பண்பாடு என்கிறோம். வள்ளுவர் போன்ற பெருமக்கள் அறிவு வளர்ச்சியினும் பண்புவளர்ச்சிக்கே சிறப்பளிக்கின்றனர். அரம் போலும் கூர்மையுடைய கல்வியறிவு உடையார் எனினும் மக்கட் பண்பு அற்றவர்கள் ஓரறிவு உடைய மரம் போல்வர் என்கிறார். மக்கட் பண்புடையோரையே சான்றோர், பெருந்தகையார் என்று போற்றுகின்றார்.

*“பண்புடையார் பட்டுண்டு உலகம் அ.்.தின்றேல்*
*மண்புக்கு மாய்வது மன்”* **(குறள் - 996)**

என்ற குறளின் மூலம் பண்பாட்டின் பெருமையை எடுத்துரைக்கிறார். செய்யுட்பாடம் நடத்துவதன் நோக்கம் செய்யுளுக்கு ஏற்ப மாறுபடும் அவற்றை அந்தந்தச் செய்யுட்பகுதியிலிருந்து அறிந்து கொள்ளுதல் சிறப்பாகும்.

**12.3.1.2 செய்யுள் கற்பித்தலின் பயன்கள்**

செய்யுள் கற்பனையின் வெளியீடாகும். உள்ளங்களின் சிறந்த உவகை நிறைந்த காலத்தின் படைப்பே கவிதை என்று ஆங்கிலக் கவிஞர் ஷெல்லி கூறுகிறார். அருமையான உள்ளக் காட்சிகளைக் கொண்டு காட்டுவதே கவிதை என்று பாரதி கூறுகிறார். இத்தகைய உள்ளக்காட்சிகளைப் படம் பிடித்துக் காட்டும் செய்யுள் படிப்பவரின் உள்ளத்தைக் திறப்பதற்கும் அதைத் திருத்துவதற்கும், அதைச் செம்மைப்படுத்துவதற்கும், தவறுகளைப் போக்குவதற்கும், நல்வழிப்படுத்துவதற்கும் பயன்படுகிறது. சொல்லோவியம் வழியாகக் கவிஞன் அழகுணர்வைத் தூண்டுகிறான்

**12.3.1.3. செய்யுள் கற்பிக்கும் முறைகள்**

இந்த முறையில் தான் தமிழ் கற்பிக்க வேண்டும் என்ற வரையறை இல்லை. மாணவன் பயன்பெறும் வகையில் செய்யுள் பாடத்தை நடத்த வேண்டும். பாடலுக்கு ஏற்ப, ஒரு பாடலில் அதன் அடிகளுக்கேற்ப, ஓர்

அடியில் கூட அதன் சீர்களுக்கேற்ப, கற்பிக்கும் முறைகளை அமைத்தல் வேண்டும். பாட்டுக்கு ஏற்ப கற்பிக்கும் ஆசிரியர் கற்பிக்கும் முறையை வகுத்துக் கொள்ள வேண்டும். செய்யுள் கற்பிக்கத் தொடங்கும் முறைகள் சில வருமாறு.

- ❖ கவிஞன் வரலாறு கூறித் தொடங்குதல்.
- ❖ விளக்க முறை
- ❖ சூழ்நிலையைக் காட்டும் முறை
- ❖ வினா முறை

**கவிஞன் வரலாறு கூறித் தொடங்குதல்**

பாடலை விளக்குவதற்கு முன் பாடலை எழுதிய கவிஞன் வரலாற்றைக் கூறித் தொடங்குவதுதான் இம்முறையாகும். அதிவீரராம பாண்டியன், இரட்டைப் புலவர், காளமேகப் புலவர், சீத்தலைச் சாத்தனார் போன்றோரின் பாடலை நடத்தும் பொழுது வரலாறு கூறித் தொடங்கும் முறை ஏற்றது. பறையருக்கும் இங்குத் தீய புலையருக்கும் விடுதலை என்ற பாரதியின் பாடலைக் கற்பிக்கும்போது பாரதியின் வரலாறு கூறித் தொடங்கும் முறை பயன் விளைவிக்கும்.

**விளக்கமுறை**

பாடலில் அமைந்துள்ள கருத்தையும், அழகையும் சொல்லையும் விளக்கிக் கூறும் முறையே இதுவாகும். இம்முறை மூலம் அளவில் சுருங்கிய பாடலும் பரந்த வனமாக அமைகிறது. இம்முறையே விழுமிய முறை என்று கூறப்படுகிறது. எடுத்துக்காட்டாக ‘‘குழைகின்ற கவரி இன்றி ...... தமியன் சென்றான்’’ என்ற கம்பராமாயணப் பாடலைக் கற்பிக்கும் போது முதலில் பாடலை ஓசையுடன் வாசித்தால் பாடலின் பொதுப் பொருள் நன்கு விளங்கும். பிறகு, பாடலின் ஒவ்வொரு அடியையும் தனித்தனியே அழுத்தம் தந்து வாசிக்க வேண்டும். வேண்டுமானால் அருஞ்சொற்களின் பொருளைத் தெரிவித்துப் பாட்டை மீண்டும் ஓசையுடன் வாசித்தால் பாட்டில் வருணிக்கப்படும் காட்சி மனதில் நன்கு பதியும்.

**சூழ்நிலையைக் காட்டும் முறை**

கவிஞன் எந்த சூழ்நிலையில் எந்த சந்தர்ப்பத்தில் பாடலைப் பாடினானோ அந்த சூழ்நிலையை, அந்த சந்தர்ப்பத்தை மாணவன் அறிந்து கொண்டால் பாடலை நன்கு சுவைக்க முடியும். கவிதையில் அமைந்துள்ள சூழ்நிலையை விளக்கும் பொழுதுதான் கவிதையும் கற்போர் உள்ளத்தில் பதியும். சீருக்கு சீர் அளந்து கவிஞன் சிந்திய உணர்ச்சிப் பெருக்கை நாம் இன்று பெற சூழ்நிலை முறை ஏற்றது.

குறிப்பு

**வினாமுறை**

இம்முறையை ***'ஒருங்கிணைந்து காணும்முறை'*** என்றழைக்கலாம். இம்முறையில் பாடலை ஓசையுடன் வாசித்து, பின் தயாரிக்கப்பட்ட சில வினாக்கள் வழி பாடலை நடத்தி, பின்னர் தொகுத்துக் காணுதல் என்ற போக்கைக் காணலாம். இம்முறையில் செய்யுள் பாடம் கற்பிக்கும் போது, கவிஞன் உள்ளத்தை வெளிக்காட்ட முடியாது.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக**
**குறிப்பு: அ.உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுது**
**ஆ.உமது பதிலை பாட இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டுஅறிக**
3.செய்யுள் கற்பித்தலின் நோக்கங்கள் ஏதேனும் இரண்டினைக் கூறுக?
……………………………………………………………………………........
.......................................................................................................................................
4. கவிதை படிப்பதால் கற்பனை வளர்க்கப்படுவதில்லை. சரி/தவறு
5. செய்யுள் மனிதனை நல்வழிப்படுத்தும் தன்மையுடையது. சரி/தவறு

## 12.3.2 உரைநடை பயிற்றுமுறை

உரைநடை என்பது மொழித்திறமையை அடிப்டையாகக் கொண்டுதான் உருவாக்கப்பட்டுள்ளது. ஏனெனில் கற்றலில் ஈடுபடும் மாணவர்கள் மொழித்திறன் உடையவராக இருக்க வேண்டும் என்பதே இதன் அடிப்படை. இப்பாடத்தினைக் கற்பதால் உரைநடையின் பொருள், திறன், பொருண்மை, ஆகியவற்றின் மூலம் கற்றவர் பெற்ற திறமையை மதிப்பிடலாம். ஆசிரியர் மாணவனை வாய்க்குள் வாசிக்கச் செய்தல் வேண்டும். பாடப்பொருளை வாழ்வியல் அனுபவத்துடன் பொருத்திக் கற்பிக்க வேண்டும். துணைக் கருவி வழியால் விளக்கம் கொடுக்க வேண்டும். வாய்க்குள் படிக்கவும் பயிற்சி தருதல் இன்றியமையாதது.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதுக.**
**ஆ. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு ஆராய்க.**
6. உரைநடை எதை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது?
………………………………………………………………………………
………………………………………………………………………………
7.கற்றலில் ஈடுபடும் மாணவர்கள் எந்தத்திறன் உடையவர்களாக இருக்க வேண்டும்?
………………………………………………………………………………
………………………………………………………………………………

### 12.3.2.1. உரைநடை விளக்கம்

உரைநடை என்பது மொழித்திறன்கள் வளர உறுதுணை செய்வது. தமிழ்மொழிப்பாடத்தில் உரைநடை ஆழ்ந்த படிப்பை

வளர்க்கக் கூடியது. இதனால் தான் மொழிப்பாடத்தில் உரைநடை முதலிடம் பெற்றுள்ளது என்பதை நாம் அறிவோம்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் முதல் வகுப்பு முதல் பனிரெண்டாம் வகுப்பு வரை அனைத்து வகுப்பு மாணவர்களுக்கும் உரைநடைப் பகுதியைப் பாடமாக வைத்துள்ளன. மாணவர்களின் மனவயது காலவயதிற்கேற்ற படிநிலைகளில் ஒவ்வொரு வகுப்புக் கற்றலுக்கும் தொடர்பு உண்டாகுமாறு பாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

உரைநடை = உரை + நடை எனப் பிரிந்து உரை = பேச்சு, நடை = போக்கு அல்லது பேசும் பாங்கு என பொருள் கொள்ளப்படும். உரைநடை என்பது மொழித்திறமையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. கற்றலில் ஈடுபடும் மாணவர்கள் மொழித்திறன் உடையவராக இருக்க வேண்டும் என்பதற்காக உரைநடைப் பாடம் கற்பிக்கப்படுகிறது.

**12.3.2.2 உரைநடை கற்பித்தலின் நோக்கங்கள்**

மாணவர்களுக்கு உரைநடை பயிற்றலின் நோக்கங்களாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்.

- பிழையறப் பேசவும், எழுதவும் திறன் பெறுதல்
- கருத்து வளத்தையும் சொல் வளத்தையும் பெருக்க உதவுகிறது.
- பாடப்பகுதியைச் சுருக்கமாக அறிந்து கொள்ள உதவுகிறது.
- இலக்கண மரபுகளைப் புரிந்து கொண்டு பயன்படுத்த உதவுகிறது.
- பிழையறப் பேசும் பயிற்சி பெறும் திறன் வளர்கிறது.
- சொற்களஞ்சியப் பெருக்கம் அடைய உதவுகிறது.
- தமிழ் மொழியைப் பிழையின்றித் தெளிவாகவும், கோர்வையாக பேசவும், எழுதவும் பயிற்றுவிக்க உதவுகிறது.
- பண்பாட்டை வளர்க்க உதவுகிறது.
- அகராதியைப் பார்த்துப் பொருளறியச் செய்ய உதவுகிறது.
- மொழிப்பற்று வளரச் செய்கிறது.
- ஒரு பகுதியை படித்து அதன் பொருளை சுருக்கமாகவும் தெளிவாகவும் அறிந்து கொள்ளச் செய்தல்.
- மாணவர்களின் சொற்களஞ்சியம் பெருக்குதல், சொல்லாட்சி திறன் வளர்த்தல், மரபுத் தொடர்கள் அறியச் செய்தல்.
- மாணாக்கரிடம் கருத்து வளம், சொல்வளம் பெருக்குதல்.

**குறிப்பு**

- ➢ உரைநடைப்பகுதியில் இயல்பாகக் காணப்படும் இலக்கணத்தை உணரச் செய்தல்.
- ➢ நடையின் ஒலிச் சிறப்பை உணரச் செய்தல்.
- ➢ உடைநடைப் பாடம் என்பது மொழிக் கற்றலில் அடிப்படைத் திறன்களை வளர்க்கக் கூடியது.

**12.3.2.3 உரைநடையின் வகைகள்**

தமிழ் உரைநடையைப் பத்து வகைகளாகப் பகுக்கலாம்.

1. வெள்ளை நடை
2. கொடும்புணர் நடை
3. மணிப்பிரவாள நடை
4. செந்தமிழ் நடை
5. கொச்சை நடை
6. செய்யுள் நடை
7. இலக்கிய நடை
8. தருக்க நடை
9. கொடுந்தமிழ் நடை
10. கலப்பு நடை

**வெள்ளை நடை**

அனைவருக்கும் பொருள் எளிதில் விளங்கக் கூடிய முறையில் அமைந்தது வெள்ளை நடை.

**கொடும்புணர் நடை**

கொடும்புணர் நடை என்பது எளிதில் படித்துணர முடியாத முறையில் இருக்கும்.

(எ – கா) **கற்றதனாலாய பயனென் கொல் வாலறிவன்**
**நற்றாடொ ழாஅ ரெனின். (குறள்-2)**

**மணிப்பிரவாள நடை**

வடமொழியும், தமிழ் மொழியும் கலந்து எழுதப்பட்டது மணிப்பிரவாள நடை.

(எ-கா) நாலாயிரத்திவ்ய பிரபந்த விளக்கவுரை இவ்வகை.

**செந்தமிழ் நடை**

செந்தமிழ் நடை என்பது பிறமொழிக் கலப்பும், இலக்கணப் பிழையும் இன்றி எழுதுவதாகும்.

**கொச்சை நடை**

கொச்சைநடை என்பது இழிமக்கள் பேசக் கூடியது.

**செய்யுள் நடை**

செய்யுள் செறிவும் சுருக்கமும் கொண்டது. கற்பனையை அடிப்படையாகக் கொண்டு காரண காரிய முறைப்படி ஆராயாது

பொருளை முழுப்பொருளாகக் கொண்டு அழகினைக் கூறுவது செய்யுள் நடையாகும்.

குறிப்பு

**இலக்கிய நடை**

செய்யுள் மணம் கமழ, திரி சொற்கள் விவரம்அரிது உணருமாறு அமைந்து கற்றோருக்கு மட்டுமே விளங்குவது இலக்கிய நடை.

**தருக்க நடை**

தருக்க நடை வினா – விடையாய் அமையும்.

**கொடுந்தமிழ் நடை**

வட்டார வழக்கு ஒட்டி புதிய சொல் கலப்பு ஏற்பட்ட நடை கொடுந்தமிழ் நடை.

**கலப்புநடை**

தாய்மொழிச் சொற்கள் குறைவாகவும், பிறமொழிச் சொற்கள் மிகுதியாகவும் அமைவது கலப்பு நடை எனப்படும்.

**12.3.2.4 அகராதியை பயன்படுத்தும் முறை**

உரைநடைப் பாடம் கற்பிக்கும் மொழியாசிரியர் அகராதியைப் பயன்படுத்தும் முறையை மாணவர்க்குக் கற்பித்தல் வேண்டும். உரைநடை, செய்யுள் பாடம் நடத்தும் போது இலக்கியச் சொல், புதிய சொல் இடம் பெறுமானால் இதனை அகராதி கொண்டு அறிந்து மாணவனைக் கூறச் செய்தல் வேண்டும். இதனால் மாணவர் அகராதியைப் பயன்படுத்தக் கற்றுக் கொள்ள முடிகின்றது. புதிய பொருளை அறிதலில் தடையிருப்பின் துணைக்கருவிகளைப் பயன்படுத்தலாம். அகராதி மட்டுமின்றி கலைக்களஞ்சியத்தைப் பயன்படுத்தும் முறையையும் பள்ளி மாணவருக்குக் கற்பிக்க வேண்டும்.

**மூலநூல்கள் - அகராதியை பயன்படுத்தும் திறன் வளர்த்தல்**

புதிய பாடத்திட்டத்தின் படி நடுநிலைப் பள்ளிப் பருவத்திலேயே மாணவருக்கு அகராதி பார்த்து பொருளறியும் திறன் வளர்க்கப்படுகிறது.

துணைப் பாடநூல்களில் மேற்கோள்களாகச் செய்யுள்களோ, உரைநடைப் பகுதிகளோ காட்டப் பெறலாம். மாணவர் மூல நூலைப் பார்த்து அச்செய்யுள்கள் அல்லாத பகுதிகள் வரும் இடங்களையறிந்து அவற்றைப் படித்தல் நன்று.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக:**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதுக.**
**ஆ. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டுஆராய்க.**

8. உரைநடை பிரித்து பொருள் தருக?

……………………………………………………………………………..

………………………………………………………………………………

9.அகராதியோடு வேறு எதைக் கொண்டு மாணவருக்கு கற்பிக்க வேண்டும்?

………………………………………………………………………………

குறிப்பு

## 12.3.3. இலக்கணம் பயிற்றுமுறை

உயர்ந்த கருத்துக்களைத் திறம்பட எடுத்தியம்பும் செய்யுள்களையும், நற்றமிழ் சுவையூறும் உரைநடையையும் நாம் இலக்கியம் என்கிறோம்.

பண்டைய இலக்கியங்களில் காணப்பட்ட சொல்லமைப்பு, தொடரமைப்பு கருத்து ஒற்றுமை, பாடுபொருள், யாப்பமைதி, அயல் மொழிக் கருத்துத் தாக்கம் போன்றவற்றை எடுத்துரைக்க எழுந்ததே இலக்கணமாகும். சான்றாக நாயக்கர் காலத்தில், சிற்றிலக்கியம் என்னும் இலக்கிய வகை மிகுதியும் எழ அதன் இலக்கணத்தை வரையறை செய்ய பன்னிருபாட்டியல், நவநீதப்பாட்டியல், போன்ற பாட்டியல் நூல்கள் எழுந்தன.

இங்ஙனம் அவ்வக்கால இலக்கிய எழுச்சிக்கு ஏற்ப இலக்கண நூல்களும் எழலாயின. ஒரு மொழியைத் திருத்தமாகவும், செம்மையாகவும் உரையாடுவதற்கும், எழுதுவதற்கும், மொழியின் அமைப்பை முற்றும் உணர்ந்து செயல்படுவதற்கும், விதிவிலக்குகளை விளக்குவதற்கும் வாயிலாய் இருக்கும் நூலே இலக்கணம் என்றழைக்கப்படும்.

### 12.3.3.1. இலக்கணத்தின் இன்றியமையாமையும் பயனும்

நாம் கருதிய பொருளைக் கருதியவாறு பிறர் அறியவும், பிழையின்றி எழுதவும், பேசவும் வேண்டிய விதிகளைக் கூறுவது இலக்கணம் என்பதை ஆசிரிய மாணவர்களாகிய நீங்கள் அறிவீர்கள். மொழிக்கட்டமைப்பிற்குட்பட்ட வரையறுத்த விதிகளை விளக்குவதும், ஒழுங்குமுறைப்படுத்துவதும் இலக்கணம் என்று கூறலாம். இக்கருத்தை அரண் செய்வது போல பாலர்டு விளக்கம் கொடுப்பது காணத்தக்கது. இலக்கணம் என்பது மொழியின் அமைப்பைப் பற்றிப் படித்தலே. மொழியைத் தெரிந்து கொள்ளவும், மொழிதரும் இலக்கியத்தை நுகரவும், துணை செய்து இவற்றின் பின்னின்று இயங்கும் கருவியாகவும் விளங்குவது இலக்கணம்.

டாக்டர் ‘ஸ்வீட்’ என்ற ஆங்கிலப் பேராசிரியர், இலக்கணம், மொழியின் பல்வேறு கூறுகளைக் கூறும் பகுதியெனக் குறிப்பிடுகின்றார். தமிழில் ‘நூல்’ என்ற சொல்லே இலக்கணத்தைக் குறிக்கும்.

இலக்கணமும் மொழியும் ஒன்றுடன் ஒன்று இணைந்தவை ஒன்றைவிட்டு ஒன்றைப் பிரிக்க முடியாது. குறிப்பிட்ட சமுதாயத்தினர் பின்பற்றிய மொழி மரபுகளைப் பதிவு செய்யும் ஏடு, ‘இலக்கண நூல்’ எனலாம். அகராதி எங்ஙனம் சொற்களின் பொருளைத் தருகிறதோ,

அங்கனமே மொழி மரபுகளைக் கூறக் கூடியது இலக்கணம். மரபுத் தொடர்களும், சொற்றொடர்களும் ஏன் இப்படி வழங்கப்படுகின்றன என்பதை விளக்குவது இலக்கணம். பிழையற்ற வாக்கியத்தை எவ்வாறு அமைப்பது என்றும், மரபுத் தொடர்களை, சொற்றொடர்களை எங்ஙனம் பயன்படுத்த வேண்டும் என்பதையும், இலக்கணம் கற்பிப்பதன் வழி பள்ளி மாணவனுக்கு மொழியாசிரியர் கற்பிக்கிறார்.

இலக்கணம் படிக்காமலேயே ஒருவர் மொழியைக் கற்கலாம். ஆனால் இலக்கணம் படிப்பதால் பிழைகளைத் தவிர்க்கலாம். இலக்கணம் மொழியின் கண்ணாகும். இலக்கணம் கற்பித்தலின் பயனைப் பற்றி சிவஞான முனிவர் பின்வருமாறு கூறுகிறார்.

- மொழியின் எண்ணையும் எழுத்தையும் ஒருவன் அறிந்தால் அவன் அறியாமை நீங்கும்.
- அறியாமை அகற்றி நல்லோர் போற்றும் வாழ்வு வாழ முடியும்.
- மொழியைப் பிழையறப் பேசவும், எழுதவும் அறிவதால் மொழி தரும் இலக்கியங்களை ஆழ்ந்து கற்கமுடியும்.
- இலக்கணம் என்னும் கருவியின் துணை கொண்டு, மொழியைக் கற்றலில் மாணவருக்கு ஏற்படும் சிக்கல்களைத் தீர்க்க முடியும்.
- செய்யுள் பாடம் கற்கும் மாணவன் யாப்பிலக்கண உறுப்புகளைக் கொண்டு, செய்யுளைப் பிரித்துப் பொருள் காண்கிறான்.
- செய்யுளில் பயின்று வரும் சொற்களில் உள்ள இரட்டுற மொழிதலின் சிறப்பை அறிந்து இலக்கிய இன்பம் நுகர வாயிலாக விளங்குவது இலக்கணம்.
- இலக்கண அறிவு பெறும் மாணவன் பள்ளியில் இலக்கியம், இலக்கணம் சார்பான செய்திகளைப் பயின்று, தானும் இலக்கியம் படைக்க முயல்கிறான். அம்முயற்சிக்கு வழி அமைத்துக் கொடுப்பது இலக்கணப் பாடம் கற்றதனால் எனலாம்.
- விரித்துணர, உணர்த்த, விளக்க, மொழிக் கல்வியில் இலக்கணம் இன்றியமையாதது.

### 12.3.3.2. இலக்கணம் கற்பிப்பதன் நோக்கம்

- மாணவன் மொழியை திருத்தமாக, பிழையில்லாது, பேச, எழுதச் செய்வது.

குறிப்பு

- மொழியின் இயல்பை அறிந்துகொள்வது. மொழிப் பாடத்தில் இலக்கணம் கற்கும் போது அவ்விதிகளைச் செய்யுள், உரைநடை, கட்டுரை போன்ற பாடங்களுடன் பொருத்திக் காண்பது.
- மொழியின் அமைப்பை விளக்குவதுடன், பேச்சு வழக்கில் காணப்படும் மொழி மரபுகளைத் தெற்றென எடுத்துக் காட்டுவது.
- மொழி மரபு, மொழிப் போக்கு இவற்றின் வேறுபாட்டை மாணவர்க்குத் தெளிவாக்குவது.
- மொழிப்பாடம் பயிலும்போது மாணவர் தாம் செய்யும் பிழைகளைத் தாமே அறிந்து, பிழைகளைத் திருத்திக் கொள்ள உதவுவது.
- யாப்பறிவையும், அணியறிவையும், மொழிப் பாடம் பயிலும் மாணவர்கள் தெளிவாகப் பெறுவது.

**12.3.3.3.இலக்கண வகைகள்**

இலக்கண வகைகளை மூன்றாக வகுக்கலாம். அவையாவன:

அ. ஒழுங்குமுறை இலக்கணம் அல்லது விதிமுறை இலக்கணம்

ஆ. நடைமுறை இலக்கணம்

இ. வரலாற்று முறை இலக்கணம்

**அ. ஒழுங்குமுறை இலக்கணம்**

விதியினைக் கூறி விளக்கம் தருகின்ற முறையே ஒழுங்கு முறை இலக்கணமாகும். தமிழ் இலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்து வகைப்படும். இலக்கணத்தை வரிசை முறையில் கற்பதனால் அதனை ஒழுங்குமுறை இலக்கணம் எனப் பெயரிட்டழைத்தனர்.

**ஆ.நடைமுறை இலக்கணம்**

மாணாக்கர்கள் தனிப்பட்ட இலக்கண அறிவை நடைமுறையில் பயன்படுத்திக் கொண்டு, மொழிப் பாடத்துள் வருகின்ற இலக்கணக் கூறுகளை உரைநடை, செய்யுள், கட்டுரை, போன்ற பிற பாடங்களுடனும் தொடர்புபடுத்தி நடத்தப்பெறும் இலக்கணமே நடைமுறை இலக்கணமாகும். நடைமுறை இலக்கணம் மாணாக்கர்கள் தம் மொழியறிவை வளர்த்துச் செம்மைப்படுத்தும் பணியில் நற்பங்கு பெறுகின்றதெனலாம்.

**இ. வரலாற்றுமுறை இலக்கணம்**

இலக்கண அறிவு முழுமை பெற்ற நிலையில் இலக்கண விளக்கம் தொடங்கப் பெறுகின்றது. காலப் பின்னணியில் இலக்கணச் செய்திகளை விளக்குகின்ற இலக்கணத்திற்கு வரலாற்றுமுறை இலக்கணம் என்று பெயர். வரலாற்று முறை இலக்கணத்தை ஆராயும்போது மொழியாராய்ச்சி அங்கே தொடங்குகின்றது என்று பொருள். காலப்போக்கில் வலிமை பெற்ற இலக்கணக் கூறுகளையும் வலுவிழந்த இலக்கணக் கூறுகளையும் உணர்தலே வரலாற்று முறை இலக்கணம் எனப் பெறும்.

**12.3.3.4. இலக்கணம் கற்பிக்கும் முறைகள்**

1. விதி விளக்கு முறை
2. விதி வரும் முறை
3. திட்டமிட்டுக் கற்றல் முறை
4. கிளையகக் கற்றல் முறை

**1. விதி விளக்குமுறை**

இது பழங்காலந் தொட்டே ஆசிரியர்களால் கையாளப் பெற்று வரும் முறையாகும். எழுத்துப் பிழை, சொற்பிழை, இலக்கணப் பிழை, முதலியவற்றைத் திருத்தி மொழியைச் செம்மையாக்குவதற்கு மிகவும் ஏற்றது. முதற்கண் விதியினை எடுத்துக் கூறி, அதற்கேற்ற எடுத்துக்காட்டுகள் பலவற்றைப் பின்னர் தந்து மாணாக்கர்களுக்கு விதியினை நன்கு விளக்குகின்ற முறைக்கு விதி விளக்கு முறை என்று பெயர்.

***"இ ஈ ஐ வழி யவ்வு மேனை***
***உயிர் வழி வவ்வு மேமுன்னிவ் விருமையும்***
***உயிர் வரினுடம்படு மெய்யென்றாகும்"*** **(நன்னூல் 62)**

நிலைமொழி ஈற்றிலும் வருமொழி முதலிலும் நின்ற உயிர்களை உடம்படுத்தும் மெய்க்கு உடம்படுமெய் என்று பெயர்.

இ, ஈ, ஐ என்னும் உயிர் எழுத்துக்களின் முன்னர் யகரம் உடம்படுத்தும் மெய்யாக வரும்.

அ, ஆ, உ, ஊ, எ, ஒ, ஔ என்னும் உயிர் எழுத்துகளின் முன்னர் வகரம் உடம்படுத்தும் மெய்யாக வரும்.

ஏ என்னும் உயிர் எழுத்து வருகின்ற பொழுது யகரமும், வகரமும் உடம்படுத்தும் மெய்யெழுத்தாக வரும்.

மணி ̧ அழகு - மணியழகு
தீ ̧ அணைந்தது - தீயணைந்தது
சில ̧ ஆண்டுகள் - சிலவாண்டுகள்

**குறிப்பு**

நிலா ͺ அழகு - நிலாவழகு

நடு ͺ அறை - நடுவறை

ஓ ͺ எனக் கதறினான் - ஓவெனக் கதறினான்

அவனே ͺ அழகன் - அவனேயழகன்

ஏணியே ͺ உடைந்தது - ஏணியேவுடைந்தது

இவ்வாறு எடுத்துக்காட்டுக்களைத் தந்து விதியினை விளக்குகின்ற முறைக்கு விதி விளக்குமுறை என்று பெயர். மேலும் மாணாக்கர்களைப் பல எடுத்துகாட்டுகளைக் கூறச் செய்து யகர வகர உடம்படு மெய்களை விளக்குதல் வேண்டும்.

சுண்ணாம்பு நீரில் பச்சை வண்ணத்தைக் கலந்தால் வெண்மை நிறம் மாறி பச்சை நிறமாகக் காட்சியளிக்கும் தன்மையையே உயிருடன் கூடிய மெய் பெறுவதை ஒப்பிட்டுக் காட்டி விளக்கினால் நூற்பா எளிதில் விளக்கமுறும் மாணாக்கர்களின் அறிவும் திருத்தமுறும்.

**2. விதி வரும் முறை**

மாணாக்கர்கள் பட்டறிவிற்கெட்டிய வாழ்க்கையோடு ஒட்டிய எடுத்துகாட்டுக்கள் பலவற்றை எடுத்துரைக்க அவற்றினின்றும் ஒரு பொதுவான விதியை மாணாக்கர்களிடமிருந்தே வரவழைக்கின்ற முறைக்கு விதிவரும் முறை என்று பெயர். எடுத்துக்காட்டுக்களைக் கொண்டு மாணாக்கர்களே ஊகித்தறியும் சிறந்த முறையே விதிவரும் முறையாகும்.

முத்துக்குமரன் வந்தான் - எவன் வந்தான்?

தேன்மொழி வந்தாள் - யார் வந்தார்?

அனிதா வந்தாள் - அனிதாவா வந்தாள்?

திருமலைக்குமரன் வந்தான் - திருமலைக்குமரன் ஏன் வந்தான்?

சாதனா வந்தாள் - சாதனாவே வந்தாள்?

மேற்கண்ட சொற்றொடர்களை மாணாக்கர்களைக் கவனிக்கச் செய்து, முன் உள்ள சாதாரண சொற்றொடர்களை வினாக்களாக மாற்றிய எழுத்துக்கள் எவை, அவை சொற்றொடரில் எங்கெங்கு வந்துள்ளன. முதலில் வந்துள்ள எழுத்துக்கள் எவை? இறுதியாக வந்துள்ள எழுத்துக்கள் எவை? முதலிலும் இறுதியிலும் வந்துள்ள எழுத்து எது? என வினாக்களை வினவி

1. எ, யா, ஆ, ஓ, ஏ என்னும் ஐந்து எழுத்துக்களும் வினா எழுத்துக்கள்.
2. முதலில் வந்துள்ள எழுத்துக்கள் எ, யா
3. இறுதியிலும் வந்துள்ள எழுத்துக்கள் ஆ, ஓ

குறிப்பு

4. முதலிலும் இறுதியிலும் வரும் எழுத்து ஏ

என்னும் விடைகளை மாணாக்கர்களைக் கூறச் செய்து உடனுக்குடன் ஆசிரியர் கரும்பலகையில் எழுதிக் காட்டுதல் வேண்டும். பின் மாணாக்கர்களை எ, யா முதலிலும் ஆ, ஓ இறுதியிலும் ஏ முதலிலும் இறுதியிலும் வினாவாக வரும் எனக் கூறச் செய்யலாம். பிறகு ஆசிரியர் இவ்விதி **நன்னூலில்** எங்ஙனம் கூறப் பெற்றுள்ளது என்பதை விளக்குதல் வேண்டும்.

**"எயா முதலும் ஆஓ ஈற்றும்**

**எயிரு வழியும் வினாவா கும்மே" (நன்னூல் - 67)**

என நூற்பாவினை அறிமுகம் செய்து விளக்குதல் வேண்டும். பின்னர் வினா எழுத்துக்களைக் கண்டுபிடிக்கும் பயிற்சிகளை அதிக அளவில் கொடுக்கவேண்டும். இங்ஙனம் மாணாக்கர்களையே எடுத்துக்காட்டுகளிலிருந்து பொது விதியை வரவழைக்கச் செய்கின்ற முறைக்கு விதி வரும் முறை என்று பெயர்.

**அலகு-3ல்** திட்டமிட்டுக் கற்றல் மற்றும் கிளையகக் கற்றல் கொடுக்கப்பட்டுள்ளது.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதுக.**
**ஆ. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு ஆராய்க.**
10. தமிழில் ……. என்ற சொல் இலக்கணத்தைக் குறிக்கும்
11. இலக்கணம் எத்தனை வகைப்படும்?
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

## 12.3.4. துணைப்பாடம் பயிற்று முறை

மாணவர்களுக்குப் பல்துறைப் பயிற்சியும், இலக்கிய ஆர்வமும் பெருகுவதற்குத் துணைபுரிபவை துணைப்பாட நூல்களாகும். துணைப்பாட நூல்கள், நூலக நூல்கள் முதலியவை அகன்ற படிப்புக்கு உரியனவாகும். கல்விக் கூடங்களில் ஆறாம் வகுப்பிலிருந்தே ஆழ்ந்து பயிலும் பாட நூல்களோடு மாணவர்களின் சிந்தனையைத் தூண்டுவதற்கு ஆசிரியர்கள் துணைப்பாடங் கற்பித்தலின் நோக்கம், கற்பிக்கும் முறை ஆகியவை பற்றி அறிந்து கொள்வது மிகவும் தேவையானது.

**குறிப்பு**

**12.3.4.1 துணைப்பாடம் கற்பித்தலின் நோக்கங்கள்**

**மொழியறிவு வளர்த்தல்**

மாணவர்கள் துணைப்பாட நூல்களில் கதைகள், வாழ்க்கை வரலாறுகள், அறிவியற் கண்டுபிடிப்புகள் முதலிய பிற செய்திகளையும் படிக்கின்றனர். அப்பகுதிகளில் புதிய சொற்கள் பல இடம் பெறலாம். அவற்றை இடம்நோக்கிப் பொருளறிந்து மேலும் படிக்கின்றனர். அகராதியைப் பார்த்து பொருளறிகின்றனர். ஆசிரியரைக் கேட்டும் பொருளறிகின்றனர். இதனால், அவர்களது சொற்களஞ்சியம் விரிவடைகிறது; மொழியறிவு வளர்கின்றது.

**விரைவாகப் படிக்குந் திறன் வளர்த்தல்**

துணைப்பாட நூலை வகுப்பில் கற்பிக்கும் பொழுது மாணவர்கள் வாய்க்குட் படிகின்றனர். ஆசிரியர் திட்டமிட்டபடி கால வரையறை செய்து, இத்தனை நிமிடங்களுக்குள் இத்தனை பக்கங்கள் படித்தல் வேண்டும். படித்து முடித்ததும் வினாக்களுக்கு உரிய விடைகள் அல்லது செய்தி சுருக்கங்கூற வேண்டுமென அறிவிப்பதால் மாணவர்கள் போட்டி மனப்பான்மையோடு படிப்பில் ஈடுபடுவர். தம்மையறியாமலேயே அவர்கள் விரைந்து படிக்குந்திறன் பெறுவர்.

**வாய்க்குட் படிக்குந்திறன் வளர்த்தல்**

தொடக்க நிலையில் மாணவர் எழுத்துக்களைப் பாாத்து ஒலித்துப் படிக்க கற்றுக் கொள்கின்றனர். உயர்நிலைக்கு வரவரப் படிக்க வேண்டியதனைத்தையும் வாய்விட்டுப் படித்தறிதல் என்பது முடியாததொரு செயலாகும். வாய்க்குட் படித்தலின் மூலம் பிறருக்கு இடையூறு ஏற்படாமல் மிகுதியான பகுதிகளை விரைவாகப் படிக்கலாம். ஒலி உறுப்புக்களுக்குச் சோர்வு ஏற்படுவதில்லை. கருத்தூன்றல், பொருளுணர்தல் முதலியவற்றில் கவனம் மிகும். தன்னம்பிக்கையும், தன்முயற்சியும் ஏற்பட வழியுண்டு, ஆதலால் வாய்க்குட் படித்தல் திறன் மாணவர் பெற நாம் பள்ளியில் பயிற்சியளித்தல் வேண்டும். அப்பயிற்சிக்குத் துணைப்பாடங் கற்பித்தல் முறையை நன்கு பயன்படுத்தவேண்டும்.

**தன்னம்பிக்கை வளர்த்தல்**

ஆர்வத்துடன் நூல்களைப் படிப்பதாலும், பல்துறை நூல்களைப் படித்து அறிவு பெறுவதாலும், பலரது வாழ்க்கை வரலாறுகளைத் தாமே படித்துச் செய்தியறிவதாலும் மாணவர்களுக்குத் தன்னம்பிக்கை வளர்கின்றது. பின்னர், நூலகஞ் சென்று மேலும் பல நூல்களைப் படிக்கும் திறமை பெறுகின்றனர். இவ்வாறு மாணவர்களிடம்

தன்னம்பிக்கையை வளர்த்தல் துணைப்பாட நூல்களின் நோக்கங்களுள் ஒன்றாகும்.

குறிப்பு

**படிப்பில் ஆர்வமூட்டல்**

துணைப்பாட நூல்களில் இடம் பெற்றுள்ள கதைகள், வரலாறுகள் ஆகியவற்றில் சிறுசிறு பகுதிகளைக் கூறிப் பிறவற்றை மாணவர்களே படித்தறியும்படி ஆர்வத்தைத் தூண்டலாம். எடுத்துக்காட்டாக, ''நமக்கு அதிகம் உதவுவது குடையா? செருப்பா?'' என்னும் வினாவை எழுப்பி, உரையாடி, ''வேண்டாதவர் நட்பு'' என்னும் கதையைப் படியுங்களென ஆறாம் வகுப்பு குழந்தைகளுக்குக் கூறலாம். இவ்வாறு படிப்பில் ஆர்வமூட்டச் செய்வது துணைப்பாட நூல்களின் நோக்கமாகும்.

**கருத்துணர் திறன் வளர்த்தல்**

படிக்கக் கற்றுக் கொண்ட மாணவர் ஒரு பகுதியைப் படித்ததும் அதில் கூறப்பட்டிருக்கும் கருத்தையறிந்து கொள்ளுந்திறன் பெறுதல் வேண்டும். செய்முறை வேலைகளைச் செய்தல், திறன்களை வளர்த்துக் கொள்ளுதல், கருத்துக்களைப் பெறுதல் முதலியனவற்றிற்காக மாணவர் நூல்களைக் கற்கின்றனர். இதனையே கல்வி வல்லார் ஒருவர், ''குழந்தை முதலில் படிக்க கற்றுக் கொள்கிறது''. பின்னர்க் கற்றுக் கொள்ளப் படிக்கிறது எனச் சுவையாக கூறியுள்ளார். இவ்வாறு அறிவை வளர்த்துக் கொள்ளப் படிக்கும் பகுதியின் கருத்து உணர்ந்து கொள்ளுதல் இன்றியமையாததாகும்.

**பல்துறை அறிவினைப் பெறுதல்**

''கல்வி கரையில'' என்னுந் தொடருக்கேற்ப நாடோறும் பலவிதமான அறிவியல் நூல்களும், கதைநூல்களும், உலகச் செய்திகள் பற்றிய நூல்களும், உடல்நலம் பேணும் நூல்களும் வெளிவந்த வண்ணம் உள்ளன. அத்தகைய நூல்களுள் மாணவர்கள் அறிய வேண்டியவற்றைத் தோந்தெடுத்துத் தொகுத்து எளிமையாக்கித் துணைப்பாட நூல்களாக அமைக்கின்றனர். அதனால் மாணவர்களது பல்துறை அறிவு பெருகுகிறது. இவ்வாறு பல்துறை அறிவினை வளர்த்தலும் துணைப்பாட நூல்களின் நோக்கமாகும்.

**கற்பனைத் திறன் வளர்த்தல்**

துணைப்பாடநூல்களில் மாணவர்கள் சிறுகதைகளையும், அறிவியல் கண்டுபிடிப்பகளையும் படிக்கின்றனர். அவ்வாறு படிக்குங்கால் கதையாசிரியருடைய கற்பனையை இவர்கள் படித்து அறிகின்றனர். இது மீளாக்கக் கற்பனையாம். இவ்வாறு மீளாக்கக் கற்பனையில் பல

குறிப்பு

தடவை ஈடுபட்ட மாணவர்கள் தாமே கற்பனை செய்யவும் தொடங்குவர். இவ்வாறு அவர்கள் கற்பனைத் திறன் வளரத் துணைப்பாட நூல்கள் பெரிதும் உதவுகின்றன.

**சுருக்கியெழுதுந் திறன் வளர்த்தல்**

துணைப்பாட நூல்களைப் படித்து அவற்றில் குறிப்பிட்ட தலைப்பிலுள்ள செய்திகளைச் சுருக்கி முறையாக எழுதுந்திறனை வளர்க்கலாம். துணைப்பாட நூலின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள கட்டுரை பயிற்சிக்குரிய தலைப்புகளோடு மேலும் சில தலைப்புகளையும் உருவாக்கிக் கொள்ளலாம்.

**பத்தியின் மையக்கருத்தை அறிதல்**

வருணனைகளை விடுத்து இன்றியமையாச் செய்திகளைத் திரட்டிக் கொள்ளுதல், முறையாகக் கட்டுரை வடிவில் எழுதுதல் ஆகியவற்றில் பயிற்சியளிப்பதன் மூலம் இந்நோக்கத்தை நிறைவேற்றலாம்.

**சொற்களஞ்சிய விரிவு**

சொற்களஞ்சியம் என்பது **அறிந்த சொற்களஞ்சியம், பயன்படுத்துஞ் சொற்களஞ்சியம்** என இரண்டு வகைப்படும். அறிந்த சொற்களஞ்சியத்தை விரிவடையச் செய்தல் துணைப்பாட நூல்களின் தலையாய நோக்கமாகும். ஒரு சொல்லுக்கு நேராக உள்ள பொருளை விளக்கிக் கூற முடியாத நிலையிலும் அச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ள இடம் நோக்கி, அதன் பொருளை ஒருவர் அறிந்து கொள்ளுதல் வேண்டும். இவ்வகையான திறனை வளர்த்து துணைப்பாட நூல்கள் சொற்களஞ்சியத்தை விரிவடையச் செய்யும்.

**ஓய்வு நேரத்தை நன்கு பயன்படுத்தி மகிழ்தல்**

மாணவர்களுக்கு வீட்டில் மிகுதியான ஓய்வு நேரங்கிடைக்கும். வகுப்பில் துணைப்பாட நூல் தொடர்பான சிறுசிறு செய்திகளைக் கூறி ஆர்வமூட்டியிருப்பதால், வீட்டில் தமது ஓய்வு நேரத்தில் அவற்றைப் படிப்பர். இவ்வாறு ஓய்வு நேரத்தில் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி விட்டால், எப்பொழுது ஓய்வு கிடைத்தாலும் மேன்மேலும் நூல்களைப் படிக்க எண்ணுவர். இதனால், அவர்களது சொற்களஞ்சியம் பெருகுவதுடன் பல்துறை அறிவையும் பெறுவர். இவ்வாறு ஓய்வு நேரத்தை நன்கு பயன்படுத்துவதில் பயிற்சிப்பெறத் துணைப் பாட நூல்கள் உதவும்.

**மூல நூல்கள் - அகராதிகள் பயன்படுத்துந் திறன் வளர்த்தல்**

துணைப்பாட நூல்களில் மேற்கோள்களாகச் செய்யுள்களோ, உரைநடைப் பகுதியோ காட்டப் பெறலாம். மாணவர் மூல நூலைப்

குறிப்பு

பார்த்து, அச்செய்யுள்கள் அல்லது பகுதிகள் வரும் இடங்களை அறிந்து அவற்றைப் படித்தல் நன்று. ஒரு நூலிலிருந்து மேற்கோள் பகுதிகளை ஆசிரியர் எவ்வாறு கையாள்கிறார் என அறிவதுடன், தாமும் அவ்வாறு மேற்கோள்களை எழுதும் ஆற்றலைப் பெறுவர்.

புதிய பாடத்திட்டத்தின்படி நடுநிலைப் பள்ளிப் பருவத்திலேயே மாணவருக்கு அகராதி பார்த்துப் பொருளறியும் பழக்கம் ஏற்படுத்துதல் வேண்டும். அத்திறன் வளர்க்கத் துணைப்பாட வகுப்பே ஏற்றதாகும். துணைப்பாட நூலில் உள்ள அறியாத புதிய சொற்களுக்கு அகராதியைப் பார்த்து அவர்களையே பொருளெழுதும்படி செய்யலாம். ஒரு சொல்லுக்குரிய பல பொருள்களில் அந்த இடத்திற்கேற்ற பொருளையறியுந் திறன் வளரும். அகராதி பார்த்துப் பொருளறியுந்திறனும் வளரும்.

### 12.3.4.2 துணைப்பாடம் கற்பித்தலில் பயிற்று முறைகள்

தமிழ்மொழிப் பாடத்துக்குத் துணையாக அமைந்ததொரு நூல்தானே எனக் கருதி மாணவர்களைத் துணைப்பாட நூலின் ஒரு பகுதியை வீட்டில் படித்துவரச் சொல்லி, வகுப்பில் கட்டுரை எழுதச் செய்கின்றனர். இம்முறையைப் பின்பற்றுவதால் மாணவருடைய விரைவாகப் படித்தறியும் திறனைத் திட்டமிட்டு வளர்த்தல் இயலாது. துணைப்பாட நூல் வைக்கப் பெற்றதன் நோக்கங்கள் நிறைவேறப் பின்வரும் கற்பிக்கும் முறைகளைப் பின்பற்றலாம்.

1. மேற்பார்வைப் படிப்பு முறையையும்,
2. உரையாடல் முறையையும் குறிப்பிடலாம்.

**1. செய்திகளைக் கூறி ஆர்வமூட்டல்**

துணைப்பாட நூலை முதன்முதலாகப் படிக்கத் தொடங்கும் முன் தகுந்த செய்திகளைக் கூறி நூலைப் படிப்பதற்கு ஆர்வமூட்ட வேண்டும்.

**2. சரியான வேகத்தில் மாணவர் படித்தல்**

திட்டமிட்டபடி மாணவர்களை எந்தப் பக்கம் முதல் எந்தப் பக்கத்தில் எந்தப் பத்திவரை படிக்க வேண்டுமெனக் கூறுதல் வேண்டும். எத்தனை நிமிடங்களில் படிக்க வேண்டுமெனக் கூறுதல் வேண்டும். ஆறு, ஏழாம் வகுப்புகளில் ஒரு பக்கத்தைப் படிக்க மாணவர்களுக்கு 2 நிமிடம் முதல் 3 நிமிட நேரமாகலாம். மேல் வகுப்புகளுக்குச் செல்லச் செல்ல நேரத்தைக் குறைக்கலாம். குறித்த நேரத்திற்குள் மாணவரைப் படிக்கச் செய்தல் வேண்டும். மாணவரை அவர்களின் இல்லத்திலேயே முன்னதாக ஒரு முறை படித்து வரச் செய்யலாம்.

குறிப்பு

**3.வினாக்கள் கேட்டுக் கருத்து எழுதுதல்**

குறிப்பிட்ட சிறிய பகுதியைப் படித்த பின்னர், அப்பகுதியின் தலைப்பையும், பத்திகளின் மையக் கருத்தையும் தகுந்த வினாக்கள் மூலம் வரவழைத்துக் கரும்பலகையில் முறையாக எழுதி வரல் வேண்டும். இறுதியில், இது கட்டுரை எழுதுவதற்கேற்ற குறிப்புச் சட்டகமாக அமையும்.

**4. கருத்தை விளக்குதல்**

பொதுக் கருத்தை எழுதிய பின்னர், மேற்கோள் செய்யுள், பழமொழிகள், கதைக் குறிப்புகள் ஆகியவற்றை மாணவர் அறிந்துள்ளனரா எனத் தகுந்த வினாக்கள் மூலம் அறிதல் வேண்டும். மாணவர் அறிந்து கொள்ளவில்லையென அறிந்தால் ஆசிரியர் விளக்குதல் வேண்டும். இவ்வாறே குறிப்பிட்ட பிற பகுதிகளைக் கற்பிக்க வேண்டும்.

**5. தொகுத்துக் கூறல்**

மாணவர் கூறும் விடைகளை அவர்களையே தொகுத்துக் கூறச் செய்தல் வேண்டும். மாணவர் தொகுத்துக் கூறுவதற்கேற்ற வினாக்களை ஆசிரியரிடம் கேட்கலாம். இல்லையேல், ஆசிரியரே செய்திகளைத் தொகுத்துக் கூறலாம்.

**6. சுருக்குதல்**

தொகுத்த செய்திகளைக் குறிப்பிட்ட தலைப்பின் கீழ்ச் சுருக்கிக்கூறச் செய்தல் வேண்டும். இவ்வாறு பயிற்சியளிக்கும் பொழுது பத்தித் தலைப்பையும், பத்தியில் இடம்பெறும் இன்றியமையாக் கருத்துக்களையும் மாணவர் அறிவர். இது முறையாக, கோவையாக அமையும்படி பார்த்துக் கொள்ளல் வேண்டும்.

**7. புதிய சொற்களை விளக்குதல்**

துணைப்பாட நூலில் இடம் பெற்றுள்ள புதிய சொற்களை ஆசிரியர் விளக்கும் போது, அவற்றைக் கரும்பலகையில் எழுதுதல் நன்று. மாணவரும் தம் குறிப்பேட்டில் எழுதி வைத்துக் கொண்டு வீட்டிற்குச் சென்று அகராதியைப் பார்த்து மீண்டும் பொருளறிதல் வேண்டும். அவ்வாறாயின், அவர்களது சொற்களஞ்சியம் பெருக வாய்ப்புண்டு.

**8. கட்டுரை எழுதுதல்**

வகுப்பில் தயாரிக்கப் பெற்ற குறிப்புச் சட்டகத்தை வைத்துக் கொண்டு மாணவரைக் கட்டுரை எழுதச் செய்தல் வேண்டும்.

**குறிப்பு**

இம்முறையில் துணைப்பாடங் கற்பித்தல், கற்பிக்கும் நோக்கங்கள் அனைத்தும் நிறைவேறும்.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதுக.**
**ஆ. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு ஆராய்க.**

12. துணைப்பாடம் கற்பித்தலின் நோக்கங்கள் ஏதேனும் இரண்டினைக் கூறுக?

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

13. துணைப்பாட படிப்பு முறைகள் ஏதேனும் இரண்டினைக் கூறுக?

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

## 12.3.5. மொழிப்பயிற்சியும் கட்டுரை வரைதலும்

எழுத்தைத் தனித்தனியாகவோ, குழு எழுத்துக்களாகவோ, எழுதக்கற்றபின் அவ்வெழுத்துக்களைக் கேட்டெழுதப் பயிற்சி தருதல் வேண்டும். மொழிப்படைப்புகளைப் பயன்படுத்திக் கருத்தை வெளிப்படுத்தும் திறமையை மொழிப்பயிற்சியால் சிறப்பாக உண்டாக்க முடியும்.

### 12.3.5.1. மொழிப்பயிற்சி விளக்கம்

புதிய சொற்களுக்குப் பொருள் கூறுதலையும், பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, சொல்லிலக்கணம் கூறல், சந்தி பிரித்தல் போன்றவற்றையும் மொழிப் பயிற்சியாகக் கொண்டனர். மொழியின் வளர்ச்சிக்கு உரைநடை இலக்கணம் செய்யுளிலக்கணத்தை விட இன்றியமையாதது.

இன்று உரைநடை பெரிதும் வளர்ந்துள்ளது. தமிழ் இலக்கியம் மேனாட்டு இலக்கியத் தாக்கத்தால் பல முகமாக விரிந்து வளர்ந்துள்ளது.

***"பழையன கழிதலும் புதியன புகுதலும்***
***வழுவது கால வகையினானே"*** **(நன்னூல் 462)**

என்று கூறுவதற்கேற்ப வளரும் மொழியும் வளர்ச்சிக்குத் தக்க முறையில் வளைந்து கொடுத்து வளர்ந்து வந்துள்ளது. வகுப்பறையில் கற்றுக் கொண்டவற்றை கருத்துக்களை சூழ்நிலைக்கு ஏற்ப எழுதுவதற்கும் வெளியிடுவதற்கும் ஏற்ற திறமையை அடைவதே மொழிப்பயிற்சியின் நோக்கம். பள்ளிக் கல்வியும், மேற்கொள்ளும் தொழிலும் நண்பர்களுடனும், பிறருடனும் செய்திப்பரிமாற்றம் செய்து

குறிப்பு

கொள்ளுதல் போன்றவையும் எழுத்துத் திறனையே சார்ந்துள்ளது என்று கூறலாம்.

### 12.3.5.2. மொழிப்பயிற்சி முறைகள்

**1. கேட்டெழுதும் முறையில் மொழிப்பயிற்சி முறை**

எழுத்தைத் தனித்தனியாகவோ, ஒருகுழு எழுத்துக்களையோ, எழுதக்கற்றபின் அவ்வெழுத்துக்களைக் கேட்டெழுதப் பயிற்சி தருதல் வேண்டும். தெரிந்த எழுத்துக்களைச் சொற்களிலும் வாக்கியங்களிலும் உடனடியாக அமைக்கப் பயிற்சி பெறுவதால் அவ்வெழுத்துக்கள் இடத்துக்குத் தக்கவாறு ஒலிக்கப்படும் முறையை மாணவர்கள் பயில்கிறார்கள். இதனால் மாணவன் மகிழ்வும் தன்னம்பிக்கையும் பெறுகிறான். அது கற்றலை விரைவுபடுத்துகிறது.

தமிழ் நெடுங்கணக்கைப் பின்வருமாறு உருவ ஒற்றுமையின் அடிப்படையில் பிரிக்கலாம் என்று டாக்டர் மா.அ.திருமலை கூறுகிறார்.

1. ட,ப,ய,ம,ழ
2. ஈ,ந,ச,சு,த
3. அ,ஆ,இ
4. ந,நு
5. எ,ஏ,ந,வ,ல
6. ளு,ன,ண
7. ஒ,ஓ,ஔ
8. உ,ஊ
9. ற,ஜ

**2. ஓர்ந்து கற்றல் முறையில் மொழிப்பயிற்சி**

ஓர்ந்து கற்றல் முறையில் மொழிப்பயிற்சி அளிக்கும் போது பதிலீடு செய்தல் (substitution), விரிவாக்கம் (Expansion) போன்ற மாறுதலை விளைவிக்கிற முறையில் பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும்.

மொழிப்படைப்புகளைப் பயன்படுத்திக் கருத்தை வெளிப்படுத்தும் திறமையை மொழிப்பயிற்சியால் சிறப்பாக உண்டாக்க முடியும். ஓர்ந்து கற்றல் முறையில் மொழிப்பாடம் பயிலும் மாணவன் பெறும் மொழிப்பயிற்சி எங்ஙனம் அமைந்துள்ளது என்று காணலாம்.

- ❖ இலக்கணக் கருத்துக்களை விளக்கிக் கொள்வதற்கும்,
- ❖ கொடுக்கப்பட்ட தொடர்களையும், சொற்களையும் ஏற்ற இலக்கணத் தொகுதியில் சேர்ப்பதற்கும்,
- ❖ விடுபட்ட சொற்களையும் தொடரையும் நிரப்பும் பயிற்சிகளுக்கும்,
- ❖ மாற்றிக் கொடுக்கப்பட்ட சொற்களை முறைப்படி அமைப்பதற்கும்,

குறிப்பு

❖ தரப்பட்டடுள்ள தொடர்களுக்கு ஏற்ப வேறு தொடர்களை எழுதுவதற்கும்

என்று பயிற்சிகளைப் பலவாறு கொடுத்து மொழித்திறமையை வளர்க்க இயலும்.

**12.3.5.3. கட்டுரை வரைதல்**

மனத்தில் தோன்றும் கருத்துக்களைக் கோர்வைப்படுமாறு காரணகாரியத் தொடர்பில் அழகான மொழியில் அமைப்பது கட்டுரையாகும். கட்டுரையின் முக்கிய பாகங்கள் முகவுப்பகுதி, உடல் பகுதி, முடிவுப்பகுதி போன்றவையாகும். இயற்கையில் மனத்தில் தோன்றி எழும் எண்ணங்கள், மொழியைப் பொறுத்தவரையில், இரண்டு விதமாக வெளிப்படும்.

❖ வாய்மொழி

❖ எழுத்துமொழி

பேச்சில் வெளிப்படும் எண்ணங்கள் எழுத்து வடிவு பெறாமல் நிலைத்த தன்மையை அடைய இயலாது. இவை சிறந்தனவாய், கேட்க வாய்ப்பில்லாத பிறரும் படிக்கத் தக்கனவாய் இருக்க வேண்டுமானால் இவை எழுத்துநிலையைப் பெற வேண்டும். எழுதி வைக்கும் பழக்கம் இல்லையேல், மனித நாகரீகம் இன்றிருப்பது போலச் சிறந்து வளர்ந்தோங்கி இருக்க முடியாது. எழுத்து மொழியால்தான் ஒரு தலைமுறையின் அறிவுச் செல்வம் இன்னொரு தலைமுறைக்குப் பயன்பட வாய்ப்பு ஏற்படுகின்றது.

**12.3.5.4. சிறந்த கட்டுரையின் கூறுகள்**

ஒரு கட்டுரை சிறப்பாக அமைய வேண்டுமானால் சிலவற்றைக் கவனித்தல் வேண்டும். அவையாவன,

❖ ஒருமைப்பாடு

❖ பொருட்பொலிவு

❖ ஒழுங்கு

❖ பத்தியமைப்பு

❖ நடை

**ஒருமைப்பாடு**

ஒரே பொருளைப் பற்றியதாக இருந்தால் மற்றொன்றை விவரிக்காமலிருப்பதே ஒருமைப்பாடாகும்.

**பொருட்பொலிவு**

சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் சிறந்த கருத்துக்கள் செறிந்திருப்பதைத்தான் பொருட்பொலிவு என வழங்குவர்.

குறிப்பு

கட்டுரை பொருள் சரியாக வரையறுக்கப்பெறுதல் வேண்டும்.

**ஒழுங்கு**

ஒரு பொருளைப்பற்றிய கருத்துக்களை முன்பின் தொடர்பு கெடாதவாறு முறைப்படுத்தி எழுதுவதை ஒழுங்கு என்பர்.

**பத்தியமைப்பு**

ஒவ்வொரு கருத்தையும் தனிப் பத்தியிலும் அதில் பல உட்கருத்துக்கள் இருக்குமாயின் அவை ஒவ்வொன்றையும் தனித்தனி பத்திகளிலும் அமைத்தல் வேண்டும்.

**நடை**

எடுத்துக் கொண்ட பொருளுக்கேற்ப நடை அமைத்தல் சிறப்பாகும். எழுதுவோர் நம் இயல்பான நடையில் எழுத்துப்பிழை, சொற்பிழை, புணர்ச்சிப்பிழை, வாக்கியப்பிழை, பொருட்பிழை, மரபுப்பிழை முதலிய பிழைகளின்றித் தூய்மையான மொழியில் எழுதுதல் வேண்டும்.

**12.3.5.5 கட்டுரை வகைகள்**

1. வரலாற்றுக் கட்டுரை
2. வருணனைக் கட்டுரை
3. விளக்கியற் கட்டுரை
4. சிந்தனைக் கட்டுரை
5. பாணிப்புக் கட்டுரை அல்லது பாவிப்புக்கட்டுரை
6. தருக்கியற் கட்டுரை அல்லது விவாதக் கட்டுரை
7. ஆராய்ச்சிக் கட்டுரை
8. அங்கதக் கட்டுரை
9. புகழ்ச்சிக் கட்டுரை
10. நோட்டக் கட்டுரை

**1. வரலாற்றுக் கட்டுரை**

ஒரு பொருளின் வரலாற்றைக் கூறுவது வரலாற்றுக் கட்டுரை. இந்த வரலாறு வாழ்க்கை வரலாறு, கதை, நிகழ்ச்சி எனும் நான்கனுள் ஒன்றைப் பற்றி வரும்.

(எ-கா) இரண்டாம் உலகப்போர், காந்தியடிகள், புலியும் இடையச்சிறுவனும், காஸ்மீரத் தொல்லை என்பன போன்றவை.

**2. வருணனைக் கட்டுரை**

ஒரு பொருளை வருணித்து கூறுவது வருணனைக் கட்டுரை ஆகும். நாடு, நகரம், மலை, ஆறு, கடல், மழை, பருவகாலங்கள், இயற்கையின் அதிசயம் முதலியனவும், இருப்பூர்திப் பயணம் போன்ற பயணம் முதலியனவும், கைத்தொழில் நடைபெறும்முறை முதலியனவும், புதையுண்ட நகரங்கள், கோவில்கள், முதலியனவும் இதில் அடங்கும்.

குறிப்பு

(எ-கா) இமயம், ஒரு மழை நாள், ஒரு தேர்தல் காட்சி, மாமல்லபுரம் சிற்பம், கப்பல் பயணம், முத்துக் குளிப்பு என்பன போன்றவை.

**3. விளக்கியற் கட்டுரை**

ஒரு பொருளை விளக்கிக் கூறுவது விளக்கியற் கட்டுரை. ஒரு பழமொழியைக் கொண்டு அதை விளக்கி எழுதுவது கட்டுரையாகும்.

(எ-கா) வானொலி, மறுமலர்ச்சி, "காற்றுள்ள போதே தூற்றிக் கொள்" தற்கால அடிமை நிலை என்பன போன்றவை.

**4. சிந்தனைக் கட்டுரை**

வாய்மை, வீரம், நாட்டுப்பற்று, முயற்சி இவை போன்ற பண்புகளையும், சமூகம், அரசியல், குடும்பம் இவற்றைத் தழுவிய பொருள்களாகிய செல்வம், வறுமை, குடியாட்சியுரிமை, கல்வி, வாணிகம், முதலியவற்றையும், வேதாந்தம், சமயம், இவற்றை தழுவிய பொருள்களைப் பற்றியும் எழுதப்பெறும் கட்டுரைகளை சிந்தனைக் கட்டுரை என வழங்குவர்.

(எ-கா) பழையன கழிதலும் புதியன புகுதலும், நல்வாழ்க்கையே நற்சமயம், பெருந்தகை யார்? என்பன போன்றவை.

**5. பாணிப்புக் கட்டுரை**

இல்லாத நிலைமையை இருப்பதாக பாவித்து எழுதுவது பாணிப்புக் கட்டுரை.

(எ-கா) நீ முதலமைச்சரானால் நாட்டிற்கு என்ன நன்மை செய்வாய்? மனிதன் சிரஞ்சீவியாயிருந்தால் என்னென்ன நேர்ந்திருக்கும்? கணவன் கொலையுண்டதையறிந்த கண்ணகி மனநிலை எவ்வாறு இருந்திருக்கும்? என்பன போன்றவை.

**6. தருக்கியற்கட்டுரை**

ஒரு பொருளைத் தருக்கமுறையில் கூறுவது தருக்கியற் கட்டுரையாகும்.

(எ-கா) அறிவியலால் நன்மையா? தீமையா? சோதிடம் பார்ப்பது நன்மையா? தீமையா?. மரக்கன்றையூன்றுவது அருளுடைமையின் அறிகுறியா? இரப்போர்க்கு ஈதலெல்லாம் அறமாகுமா? என்பன போன்றவை.

**7. ஆராய்ச்சிக் கட்டுரை**

ஒரு பொருளை ஆராய்ந்து கூறுவது ஆராய்ச்சிக் கட்டுரையாகும்.

(எ-கா) அகத்தியர் வரலாறு, வள்ளுவர் சமயம், மாணிக்கவாசகர் காலம், தமிழன் பிறந்தகம் என்பன போன்றவை.

குறிப்பு

**8. அங்கதக் கட்டுரை**

ஒரு பொருளைக் கண்டித்து அல்லது பழித்துக் கூறுவது அங்கதக் கட்டுரையாகும். அது செம்பொருள் அங்கதம், பழிகரப்பு அங்கதம், என இருவகைப்படும். வெளிப்படையாய்ப் பழிப்பது செம்பொருளங்கதம். மறைவாய்ப் பழிப்பது பழிகரப்பங்கதம்.

(எ-கா) மறுமலர்ச்சி, குடியின் பெருமை, சில கடன்காரர் செய்யும் கொடுமை, கையூட்டுவாங்கல் என்பனவற்றைப் பற்றி இத்தகைய கட்டுரைகள் வரையலாம்.

**9. புகழ்ச்சிக் கட்டுரை**

ஒரு பொருளைப் புகழ்ந்து கூறுவது புகழ்ச்சிக் கட்டுரையாகும். அது செம்பொருட்புகழ்ச்சி, வஞ்சகப்புகழ்ச்சி என இருவகைப்படும். வெளிப்படையாய் புகழ்வது செம்பொருட்புகழ்ச்சி, மறைவாய்ப் புகழ்வது வஞ்சகப்புகழ்ச்சி.

(எ-கா) ஆங்கிலேயர் பண்பாடு, திருவள்ளுவர், இளங்கோவடிகள், எருது, நாய் என்பனவற்றை இவ்வாறு கூறலாம்.

**10.நோட்டக் கட்டுரை**

ஒரு பொருளின் குணங்களையும், குற்றங்களையும் நடுநிலையாய் எடுத்துக் கூறுவது நோட்டக் கட்டுரையாகும்.

(எ-கா) கம்பராமாயணம், புராணக் கல்வி, தமிழிலக்கியம், பெரியபுராணம் என்ற பொருள் பற்றி இவ்வகைக் கட்டுரை வரையலாம்.

**12.3.5.6 கட்டுரை எழுதும் முறை**

ஒரு கட்டுரை எழுதும் முறையைத் தெரிந்து கொள்ள வாக்கிய அமைப்பு, கட்டுரை அமைப்பு, பத்தியமைப்பு ஆகியவை பற்றி தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

**வாக்கிய அமைப்பு**

ஒவ்வொரு வாக்கியத்திலும் ஒருமைப்பாடு அமைந்திருத்தல் வேண்டும். ஒவ்வொரு வாக்கியமும் பத்திக்குப் பத்தி புதிய கருத்துக்களைத் தரும் பாங்கில் அமைதல் வேண்டும். ஒவ்வொரு வாக்கியத்திலும் எண்ணத்திற்கு அப்பாற்பட்ட ஒன்றும் சேர்ந்திருத்தல் கூடாது. நீண்ட வாக்கியங்களைத் தவிர்க்க கூடாதாயினும் சிறு வாக்கியங்களால் எளிய இனிய நடையை அமைத்துக் கருத்தை நேரடியாக விளக்கலாம் என்பதை மாணாக்கர் அறியும்படி செய்தல் வேண்டும். ஒரே விதமான வாக்கியங்களாக இருந்தாலும் நடை நன்றாக இராது. தனிவாக்கியம், கலவை வாக்கியம் போன்ற பல்வேறு வாக்கிய வகைகள் ஒரு கட்டுரையில் அமைந்தால் நடையழகு, பொருள் தெளிவு, எழுத்தோட்டம் முதலிய பண்புகள் கட்டுரையில் அமைந்து கட்டுரையை

சிறப்பிக்கும்.பல்வேறு வாக்கிய வகைகளைப் பற்றி ‘‘மொழிப்பயிற்சிகள்’’ என்பதன் கீழ் கூறப்பட்டிருப்பனவற்றை ஈண்டு நினைவு கூர்க. இவற்றின் விரிவையும் வாக்கிய அமைப்பைப் பற்றிய சொல் முறை, சொல்லிடையீடு, முதன்மை நிலை, அண்மை நிலை, தெளிவு, பொருள்வலிமைத் திட்டம், தகுதி, இனிமை, சுருக்கம், தூய்மை, இசைவு, வாக்கியத்தின் முன் பின் முடிப்புகள், வாக்கியத்தின் அளவு, ஒருபோக அமைப்பு, உம்மைத் தொடர், வினா மரபுகள், முதலிய செய்திகளைப்பற்றியும் உரிய நூல்களில் கண்டு கொள்க.

**பத்தியமைவு**

பத்தியமைவு கருத்தடைவது பற்றிய காரண - காரியத் தொடர்புடையதேயன்றி அவரவர் விரும்புவது போல செயற்கை முறையில் பிரித்து கொள்வதன்று. அ∴து ஒரு முறையையொட்டிப் பிரிக்கப்படுகிறது. ஒரு கதையோ, கட்டுரையோ இவ்வாறு பத்திகளாகப் பிரிக்கப்படாவிடின், பல பக்கங்கள் தொடர்ச்சியாக இருக்குமாதலின், படிப்பவருக்கு வெறுப்பும், களைப்பும் உண்டாகும். பொருளை உளங்கொள்ளுதலும் அரிதாகும். படிப்பவருக்கு எளிமையாயிருக்க வேண்டுமென்று கருதியே பத்தி பிரிக்கப் பெற்றுள்ளது என்பதை ஆசிரியர் மாணாக்கரின் கவனத்திற்கு கொண்டு வருதல் வேண்டும்.

ஒரு பத்தியில் பல வாக்கியங்கள் இருக்கும். வாக்கியங்கள் ஒவ்வொன்றும் பொருள் தொடர்பு உடையனவாயிருக்கும். அவ்வெல்லா வாக்கியங்களும் ஒரு கருத்தினை அல்லது ஒரு செய்தியைக் கூறுவனவாகவிருக்கும். ஆதலின் ஒரு கருத்தை குறித்த பல வாக்கியங்களின் தொகுதியே ‘‘பத்தி’’ எனப்படும். ஒரு கதை அல்லது கட்டுரையின் இயல்பிற்கேற்ப பத்தி பிரிக்கப்பெறும். கதை அல்லது வரலாறு ஆயின் ஒரு நிகழ்ச்சி முடிந்ததும் புதிய பத்தி தொடங்கும். ஒரு பிராணியைப்பற்றிய கட்டுரையாயின் அதன் பொதுவமைப்பு, உறுப்புகள், வாழுமிடம், பழக்கம், இயல்பு, உணவு, பயன், ஆகியவற்றைப் பற்றி பல பத்திகள் பிரிக்கப்படும். ஆதலின் ஒரு பத்தி இத்தனை வாக்கியங்களை உடையதாயிருத்தல் வேண்டும் என்றவாறும் இன்ன அளவினதாயிருக்க வேண்டுமென்றவாறும் நியதி இல்லை. பொருளின் இயல்பிற்குத் தக்கவாறு பத்திகளை வகுத்து எழுதுவதே முறை.

ஒரு பத்தியின் அளவை வரையறை செய்ய இயலாதெனினும் நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்கள் பெரும்பாலும் நெடும்பத்திகள் எழுதுவதைக்காட்டிலும் குறும் பத்திகள் எழுதுவதே முறையாகும். அரைமணி நேரத்தில்

குறிப்பு

ஒன்றரைப்பக்க அளவில் பிறர் துணையின்றி மாணாக்கர்களே எழுதும் சிறுகட்டுரைகளில் அல்லது கடிதங்களில் நெடும்பத்திகள் அமைவது முறையன்று. ஒவ்வொரு புதுக்கருத்துக்கும் புதுப்பத்தி வேண்டியிருப்பதால் ஒவ்வொன்றும் நெடும்பத்தியாயிருப்பது இயல்பன்று. எனினும், பத்திகள் எல்லாம் குறுகினவாயிருந்தால் கட்டுரைப் பார்ப்பதற்கு அழகாயிராது. ஆகையால் வேறுபாடு கருதி நீண்ட நெடும்பத்தி ஒன்றை ஆங்காங்கு இடையிற் செருகுவதால் வேறுபாடு தோன்றிக் கட்டுரையில் படிப்போர்க்கு கவர்ச்சி தோன்றலாம், தோன்றும்.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதுக.**
**ஆ.உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு ஆராய்க.**

14. சிறந்த கட்டுரையின் கூறுகள் ஏதேனும் இரண்டினைக் கூறுக?
……………………………………………………………………………………
……………………………………………………………………………………
15. கட்டுரையை எத்தனை வகைகளாக அறிஞர்கள் பிரிக்கின்றனர்?
……………………………………………………………………………………
……………………………………………………………………………

## 12.4 தொகுத்துக் காண்போம்

இப்பாடத்தின் வாயிலாகக் கற்றலில் ஈடுபடும் மாணவர்கள் செய்யுள், உரைநடை, இலக்கணம், துணைப்பாடம், கட்டுரை ஆகியவற்றின் நோக்கமும், அடையும் பயன்களைப் பற்றியும், இவற்றைக் கற்பிக்கும் விதம், பயன்படுத்தும் முறைகள் பற்றியும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. அகராதியினால் உண்டாகும் பயன்கள், மொழியாசிரியர் செய்யும் பணிகள் பற்றியும் அறிய முடிகின்றது.

## 12.5. முன்னேற்றத்தை சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

1. அகத்தியர்
2. வாய்மொழி,எழுத்துமொழி
3. ஓசைநயம், சொற்சுவை
4. தவறு
5. சரி
6. மொழித்திறமையை
7. மொழித்திறன்
8. உரைநடை = உரை + நடை.உரை - பேச்சு, நடை - போக்கு
9. கலைக்களஞ்சியம்.
10. நூல்

11. மூன்று வகை
12. மொழியறிவு வளர்த்தல், விரைவாகப் படிக்குந் திறன் வளர்த்தல்
13. மேற்பார்வை படிப்புமுறை, உரையாடல் முறை
14. ஒருமைப்பாடு , பொருட்செலவு
15. 10 வகை

## 12.6 பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

1. கலப்பு நடை என்றால் என்ன?
2. அகராதியின் பயன் யாது?
3. கட்டுரை எழுதும் முறைகளை கூறுக?

## 12.7 மேலும் பயில்வதற்கான நூல்கள்


1. முனைவர் ஞா.பழனிவேலு (2011), செந்தமிழ் கற்பித்தல், பொதுத்தமிழ், நதி பப்ளிகேஷன்ஸ், தஞ்சாவூர்.
2. வெ.கலைச்செல்வி (2013), பொதுத்தமிழ் கற்றல் - கற்பித்தல் சஞ்ஜீவ் வெளியீடு,ஈரோடு
3. கோவிந்தராஜன்.மு. (1990), நற்றமிழ் பயிற்றலின் நோக்கமும், முறையும், சரஸ்வதி பதிப்பகம், சென்னை.
4. டாக்டர்.ந.சுப்புரெட்டியார் (1964), தமிழ்பயிற்று முறை, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
5. முனைவர் அ.மீனாட்சிசுந்தரம், (2014), பாடப்பொருள் மற்றும் தமிழ் கற்பித்தல்(பொதுத்தமிழ்), காவ்யமாலாபப்ளிஷர்ஸ், திண்டுக்கல்.


*****

# அலகு. 13. தகவல் நுட்பவியலும் தமிழ்க் கற்பித்தலும்

**பாட அமைப்பு**

13.1. முன்னுரை
13.2 குறிக்கோள்கள்
13.3. தகவல் நுட்பவியலும் தமிழ்க் கற்பித்தலும்
13.3.1. மொழிக்கற்பித்தலில் மக்கள் தொடர்பு சாதனங்கள்
13.3.2. கணினி அடிப்படையில் கல்வி
13.3.3. கணினி துணையுடன் கற்பித்தல்
13.3.4. கணினி மேலாண்மையில் கற்பித்தல்
13.3.5. கணினி ஊடகக் கற்பித்தல்
13.4. மின் தமிழ்
13.4.1. மின்னியல் வழிக்கற்றலின் வகைகள்
13.4.2. மின்னியல் வழிக்கற்றலின் பயன்கள்
12.4.3. மின்வழிக் கற்பித்தலின் கூறுகளும், முக்கியத்துவமும்
13.5. பல்லூடகம்
13.6. தொகுத்துக் காண்போம்
13.7. முன்னேற்றத்தைச் சோதித்தறியும் வினாக்களுக்கான விடைகள்
13.8. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்
13.9. மேலும் பயிலுவதற்கான நூல்கள்

## 13.1. முன்னுரை

சமூக வாழ்வின் உயிர்நாடியே செய்தித் தொடர்புதான். செய்தித் தொடர்பு இன்றேல் மனித வாழ்வில் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளுதல், ஒரு சமூகப் பண்பாட்டை இன்னொரு சமூகம் அறிந்து கொள்ளுதல், அறிவியல் கண்டுபிடிப்புகள் உடனடியாக உலகின் எல்லாப் பகுதிகளையும் எட்டுதல், வளர்ச்சியுற்ற பகுதிகள், பின்தங்கிய பகுதிகளுக்கு தங்கள் நிதி உதவியை அளித்தல் ஆகியவற்றின் வளர்ச்சி போன்றவை வளர்ச்சியடையாமல் உலகம் தோன்றிய நிலையிலேயே இன்றளவும் இருந்திருக்கும். ஆகவே செய்தி தொடர்பு ஏற்பட தகவல் தொடர்பு சாதனங்கள் முக்கியமானதாகும். எனவே தகவல் தொழில்நுட்பம் எங்ஙனம் உங்கள் ஆற்றலை மேம்படுத்தி கற்பித்தலைச் சிறப்பாக்கும் என்பதை இப்பாடத்தின் மூலம் அறியலாம்.

## 13.2. குறிக்கோள்கள்

நீங்கள் இப்பாடத்தைப் பயின்ற பின்னர்,

- ❖ மொழிக் கற்பித்தலில் மக்கள் தொடர்பு சாதனங்களை விவரிப்பீர்கள்.
- ❖ மொழிக்கற்பித்தலில் கணினியின் பயன்பாடு பற்றி விவரிப்பீர்கள்.
- ❖ கணினி ஊடகக் கற்பித்தலை வரையறுப்பீர்கள்.
- ❖ தமிழ் கற்பித்தலுக்காக பயன்படும் தகவல் தொழில் நுட்பங்களை விவரிப்பீர்கள்.

## 13.3 தகவல் நுட்பவியலும் தமிழ்க் கற்பித்தலும்

மனிதன் கூடி வாழும் ஒரு விலங்கு எனக் கருதப்படுகிறான். சமூக வாழ்வு இல்லையேல் மனித இனத்திற்கும் ஏனைய விலங்கினத்திற்கும் வேறுபாடு இல்லாமல் போகும். தேனீ, எறும்பு போன்ற வேறு சிலவும் கூடி வாழ்ந்தாலும் அவற்றிற்கிடையே நடைபெறும் செய்திப் பரிமாற்றத்திற்கும், மனிதர்களுக்கிடையே நடைபெறும் செய்தி பரிமாற்றத்திற்கும் நிறைய வேறுபாடு உண்டு. பிற உயிர்கள் தகவல் பரிமாற்றத்திற்காகச் சில உத்திகளை எப்போதும் ஒரே பொருளில் கையாளுகின்றன. தேனீக்கள் கேட்புணர்ச்சி மற்றும் நுகர்வுணர்ச்சியையும், பறவைகள் ஒலிப்பு முறைகளையும், சிலவகை எறும்புகள் இரசாயனக் குறியீடுகளையும், சில உயிரிகள் தொடுவுணர்ச்சியையும் தம்முடைய தகவல் பரிமாற்றத்திற்குப் பயன்படுத்துகின்றன. ஆனால் மனிதன் மட்டும் பேச்சு என்னும் கருவியைத் தன் தேவைக்கேற்ப பரிமாறிக்கொள்கிறான். இது காலந்தோறும் மாறி வரக்கூடியது.

### 13.3.1 மொழிக்கற்பித்தலில் மக்கள் தொடர்பு சாதனங்கள் (Mass media in language teaching)

ஒரே நேரத்தில் தகவல்கள் அதிகமான மக்களை சென்றடைய பயன்படும் சாதனங்களை மக்கள் தொடர்பு சாதனம் என்கின்றனர். இத்தகைய சாதனங்கள் எளிதில் மக்களின் கவனத்தை ஈர்ப்பதால் செய்திகள் எளிதாக மக்களைச் சென்றடைகின்றன. ஆகவே இச்சாதனங்களை பள்ளிக்கல்வியிலும் பயன்படுத்தினால், மாணவர்களின் கவனத்தை ஈர்த்து அதன் மூலம் கற்பித்தல் கற்றலை மேம்படுத்தலாம். இத்தகைய மக்கள் தொடர்பு சாதனங்களாவன,

1. ஒலிப்பதிவு நாடா 2. ஒலி-ஒளி பதிவு நாடா
3. வானொலி 4. செய்தித்தாள்
5. இதழ்கள் 6. தொலைக்காட்சி
7. கற்பிக்கும் பொறிகள் 8. தொலைபேசி
9. தந்தி 10. மின்னணுத்தந்தி
11. மின்னணு இதழ்கள் 12. செல்லுலார் போன்

**1. ஒலிப்பதிவு நாடா**

ஒலிப்பதிவுகளில் இசைத்தட்டுகள், ஒலிப்பதிவு நாடாக்கள் என இரு வகை உள்ளன.

சிறப்பான பேச்சுக்கள், உரையாடல்கள், நாடகங்கள், பாடல்கள் ஆகியவற்றைப் பதிவு செய்து கற்பித்தலின் போது பயன்படுத்தலாம். ஒலிப்பதிவு நாடாவில் உள்ள ஒரு பகுதியைக் கேட்டறியச் செய்த பிறகு அது தொடர்பான வினாக்கள் கேட்கலாம். இது மாணவரின் கேட்கும் திறனை வளர்க்க உதவும். மொழி வளமும் பெருகும். செய்யுட் பகுதிகளை இயல்பாகவும் சீர் பிரித்தும் படித்து ஒலிப்பதிவு செய்து செய்யுள் பாடம் நடத்தும்போது பயன்படுத்தலாம்.

மொழிப்பாடங்கள் தொடர்பான வானொலி உரைகளையும் விழாச் சொற்பொழிவுகளையும் பதிவு செய்து தேவையான போது அவற்றைப் பல முறை பயன்படுத்தலாம். கற்பித்தலில் ஒலிப்பதிவு நாடா பயன்படுகிறது.

**2. ஒலி-ஒளி பதிவு நாடா**

ஒலிப்பதிவு நாடாவில் ஒலியை மட்டும் கேட்கிறோம். ஆனால் ஒலி, ஒளிப்பதிவு நாடாவில் இந்த இரண்டையும் இணைத்துப் பார்க்க முடிகிறது. இதனால் காட்சி - கேள்வி ஆகிய இரு புலன்கள் மூலமும் செய்திகளைப் பெற இயலுகிறது. தொலைக்காட்சிப் பெட்டி இருக்கும் பள்ளிகளில் இதனை எளிதாகப் பயன்படுத்தலாம். செய்முறைப் பயிற்சியை இதன் மூலம் எளிதாகக் கற்பிக்கலாம். தொலைக்காட்சியில் வரும் கல்வி தொடர்பான செய்திகளை பதிவு செய்து தேவையான சமயங்களில் எல்லாம் திரையிட்டுப் பார்க்கும் வாய்ப்பினை ஒலி-ஒளிப்பதிவு நாடா நமக்குத் தருகிறது.

**3. வானொலி**

வானொலியால் நாம் பல நன்மைகளைப் பெறுகிறோம். தொலைக்காட்சி வராத காலத்தில் தகவல் தொடர்புக்கு வானொலி பேருதவியாக விளங்கியது. உலகில் அன்றாடம் நடைபெறும் செய்திகளை உடனுக்குடன் தெரிவிக்கிறது. உலகின் தலைசிறந்த அறிஞர்களின் சொற்பொழிவுகளைக் கேட்க உதவுகின்றது.

பொருள்களின் விலை விவரங்கள் பற்றியும், நிலை பற்றியும் செய்திகளைக் கூறுகிறது. கதைகள், நாடகங்கள், உரையாடல்கள் போன்றவற்றை ஒலிபரப்பி ஓய்வு நேரத்தை மக்கள் மகிழ்ச்சியுடன் களிக்க உதவுகிறது. திறமை வாய்ந்த இசைக்கலைஞர்களின் இசையை ஒலிபரப்புகிறது. உலகின் பல பகுதிகளிலும் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகள் பற்றி வருணனை செய்கிறது.

வானொலி நிகழ்ச்சிகளில் ''கல்வி ஒலிபரப்பு'' ஒரு முக்கியப் பகுதியாகும். அறிஞர்களின் வாழ்க்கை வரலாறுகள், உடல்நலத்தைப் பேணும் முறைகள், கற்றலுக்கு உதவும் பல அரிய செய்திகள் போன்றவற்றை வானொலி ஒலிபரப்புகிறது. வானொலியில் செய்திகளைக் கேட்டுக் குறிப்பெடுக்கும் பழக்கத்தை மாணவர்களிடத்தில் ஏற்படுத்த வேண்டும்.

**கல்வியில் வானொலியின் பங்கு**

- ஒவ்வொரு பாடத்தினையும் ஒரு சிறந்த ஆசிரியர் கற்பித்ததை ஒலிபரப்புதல்.
- ஒரு சிறந்த ஆசிரியரின் வழிகாட்டுதலை ஒலிபரப்புதல்.
- செயல்முறைகளை விளக்குதல்.
- தேர்வு எழுதும் முறைகள் குறித்தும் பாடம் படிக்கும் முறை குறித்தும் வழிகாட்டுதல்.
- அறிவியல் விஞ்ஞானிகளின் வரலாற்றைக் கூறுதல்.
- பொதுஅறிவு நிகழ்ச்சிகளை வழங்குதல்.
- வினாடி வினா, ஹலோ உங்களுடன், அறிவியல் ஆயிரம், வழக்காடு மன்றம், போன்ற நிகழ்ச்சிகளை ஒலிபரப்புதல்.
- தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவர்களின் அனுபவங்களை ஒலிபரப்பு செய்கிறது. இவ்வாறு வானொலியானது பள்ளிக்கல்வியில் பயன்படுகிறது.

**4. செய்தித்தாள்**

செய்தித்தாளும் ஒருவகை மக்கள் தொடர்பு சாதனமாகும். இவை திரைப்படம், வானொலி மற்றும் தொலைக்காட்சி அளவிற்கு மக்களின் கவனத்தை ஈர்க்கவல்லது அல்ல. படித்தவர்கள் மட்டுமே செய்தித்தாளை பயன்படுத்த முடியும். ஆனால் மற்றவற்றை படித்த மற்றும் படிப்பறிவு இல்லாதவர்களும் பார்த்துக் கேட்டு பயன் பெற

**குறிப்பு**

முடியும். இத்தகைய செய்தித்தாளினை பள்ளிக் கல்வியிலும் பயன்படுத்தி மாணவர்களின் அடைவினை அதிகப்படுத்தலாம்.

**செய்தித்தாளின் பங்கு**

- ✓ அறிவியல் கண்டுபிடிப்புகள், அறிவியல் வளர்ச்சி போன்ற செய்திகளை எடுத்து வந்து மாணவர்களுக்குக் காண்பிக்கலாம்.
- ✓ கணிப்பொறி சம்பந்தமாக வரும் செய்திகள், உதாரணமாக ''கம்ப்யூட்டர் மலர்'' போன்றவற்றில் வரும் செய்திகளை மாணவர்களிடம் விளக்கிக் கூறலாம்.
- ✓ கல்வி சம்பந்தமாக வரும் கட்டுரைகளை மாணவர்களிடம் படித்து விளக்கிக் கூறலாம்.
- ✓ செயற்கைக்கோள், இராக்கெட்டுகளை விண்ணுக்கு அனுப்பும் படங்களைக் காண்பித்து ஆராய்ச்சியில் ஆர்வமூட்டலாம்.
- ✓ அறிவியல் விஞ்ஞானிகளின் படங்கள் மற்றும் வாழ்க்கை வரலாறு ஆகியவை செய்தித்தாளில் வரும்போது அவற்றைக் கொண்டு வந்து மாணவர்களிடம் காண்பித்து ஊக்குவிக்கலாம்.
- ✓ செய்தித்தாளில் வரும் வார்த்தை விளையாட்டு, குறுக்கெழுத்துப்போட்டி ஆகியவற்றில் மாணவர்களை ஈடுபடச் செய்யலாம்.
- ✓ செய்தித்தாளில் வரும் பொதுஅறிவு வினா விடைகளைக் கொண்டு மாணவர்களிடம் காண்பித்து பொதுஅறிவை வளர்க்கலாம்.

**5. இதழ்கள்**

இதழ்கள் என்பது புத்தக வடிவில் வரும் மாத இதழ் மற்றும் கல்வி சம்பந்தமாக வரும் இதழ்களையும் குறிப்பதாகும். இத்தகைய இதழ்களில் வரும் கல்வி சம்பந்தமான செய்திகளைச் சேகரித்து மாணவர்களின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தலாம். இதழ்களில் வரும் மொழித் தொடர்பான மற்றும் பொதுஅறிவு சம்பந்தமான செய்திகளை மாணவர்களிடம் விளக்கலாம்.

கல்வி சம்பந்தமான இதழ்களில் வரும் கல்வி வளர்ச்சி பல்வேறு பாடத்துறையில் ஏற்படும் முன்னேற்றங்கள் மற்றும் ஆராய்ச்சிகளை மாணவர்களிடம் விளக்கி அவர்களிடம் ஆராய்ச்சி ஆர்வத்தினை வளர்க்கலாம். பள்ளியில் வெளியிடப்படும் இதழ்களில்

கவிதை, கட்டுரை மற்றும் அறிவியல் செய்திகளை வெளியிடும்படி மாணவர்களை ஊக்குவிக்கலாம்.

மேற்கண்டவாறு பள்ளிக்கல்வியில் இதழ்களைப் பயன்படுத்தி மாணவர்களின் அறிவு மற்றும் படைப்பாற்றல் திறனை வளர்க்கலாம்.

**6. தொலைக்காட்சி**

தொலைக்காட்சியில் காட்சி, கேள்வி ஆகிய இருவழிக்கற்றலுக்கும் வழி இருப்பதால் வானொலியைக் காட்டிலும் இது சிறந்து விளங்குகின்றது. ஒலியும், ஒளியும் இணைந்திருப்பதுடன் இயக்கமும் சேர்ந்துள்ளது. தொலைக்காட்சியின் பயனே இது பலவிதக் காட்சிகளையும், இயக்கங்களையும் பயன்படுத்துவதால் ஏற்படுகிறது. தமிழ்ப்பாடம் கற்பித்தலில் வாழ்க்கைக் கல்வி தொடர்பான கற்பித்தல் தொலைக்காட்சி மூலம் அமைகிறது.

உரையாடல், நாடகம், இசை, சொற்பொழிவு போன்றவை இடம் பெறுவதால் மொழிக் கற்பித்தலில் தொலைக்காட்சி மிகவும் பயனுடையதாக விளங்குகிறது. தகுந்த நேரத்தை ஒதுக்கி பள்ளியில் மொழி கற்பித்தலில் தொலைக்காட்சியை அதிகம் பயன்படுத்தலாம்.

தற்போது தொலைதூரக் கல்விக்கும், கற்பித்தல் முறையை செய்து காட்டுவதற்கும் தொலைக்காட்சி அதிக அளவில் பயன்பட்டு வருகின்றது. இன்னும் திட்டமிட்டுச் செயல்பட்டால் வருங்காலத்தில் கற்றல்-கற்பித்தலில் மிக அதிக அளவில் தொலைக்காட்சியைப் பயன்படுத்தி நல்ல பலன் எய்த முடியும்.

**கல்வியில் தொலைக்காட்சியின் பங்கு**

- பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு பாடப்பொருள் பற்றிய நிகழ்ச்சிகளை ஒளி-ஒலிபரப்புகிறது.
- சிறந்த ஆசிரியர்கள் பல்வேறு பாடங்களைக் கற்பிப்பதை ஒளி -ஒலிபரப்புகிறது.
- பல்வேறு அரிதான விலங்குகளை, மலர்களை, தாவரங்களைக் காண முடிகிறது.
- அறிவியல் செய்முறைகளை நேரடியாக காண்பதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது.
- பாட சம்பந்தமான வினாடி வினா, அறிவோம் அறிவை போன்ற நிகழ்ச்சிகளை ஒளி-ஒலிபரப்பு செய்கிறது.
- பல்வேறு உயிரினங்களின் வாழ்க்கை முறையை நேரடியாகக் காண முடிகிறது.

- கண்ணால் காண முடியாத நுண்ணுயிரிகளையும் தொலைக்காட்சி மூலம் காண்பிக்கும் போது அவற்றை முழுமையாக பார்த்து தெரிந்து கொள்ள முடிகிறது.
- செயற்கைக்கோள் விண்ணுக்கு அனுப்புவதைக் காண்பித்து நாட்டுப்பற்றையும் ஆராய்ச்சியில் ஆர்வத்தையும் வளர்க்கிறது.

**7. கற்பிக்கும் பொறிகள்**

உளவியல் கருத்துக்களும், தொழில்நுட்ப வளர்ச்சியும் இணைந்து கற்றல் - கற்பித்தலில் செய்த சாதனைகளுள் கற்பிக்கும் பொறியும் ஒன்றாகும். கற்பித்தலில் ஆசிரியரின் இடத்தை, இக்கருவி ஈடு செய்கிறது. மாணவர்களின் தனியாள் வேற்றுமையை அடிப்படையாய் கொண்டு இக்கருவி தோன்றியது. மாணவர்களின் வேகமாகக் கற்றல், மெதுவாகக் கற்றல் என்ற தன்மைகளுக்கு இக்கருவி இடம் தருகிறது.

இது ஒரு தனி மாணவர் இயக்கும் கருவியாகும். இக்கருவி மூலம் மாணவர் பாடச்செய்தியைப் பெறுவார். வினாக்களுக்கு விடையளிப்பார். சரியான விடை கருவியில் தோன்றும். தன் விடையையும் கருவியில் காணும் விடையையும் மாணவர் ஒப்பிட்டு பார்த்துக்கொள்ளலாம்.

**பயன்கள்**

- தனியாள் வேற்றுமைக்கு வாய்ப்பு தருதல்.
- ஒரு மாணவர் ஓர் ஆசிரியர் (இங்கே கருவி) அமைப்புடைய கற்றல் முறை.
- மாணவர்கள் தம் ஆற்றலுக்கு ஏற்பப் பாடப்பொருள் பெறுதல் வேண்டும்.
- ஒவ்வொரு மாணவனும் தவறாது ஈடுபடல்.

**8. தொலைபேசி**

ஒருவர் தான் தெரிவிக்க விரும்பும் தகவல்களை ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்தில் உள்ளவர்களிடம் தெரிவிக்க உதவும் சாதனங்களுள் தொலைபேசி முக்கியமானதாகும். தற்போது மின்னணு வழி தகவல்தொடர்பு கொள்ளும் முறை கையாளப்படுகிறது. இத்தொலைத்தொடர்பின் வளர்ச்சி உள்நாட்டிலேயே பிற இடங்களின் இருப்பவர்களோடும், வெளிநாட்டில் இருப்பவர்களோடும், உள்ளூர்ப் பொதுத் தொடர்பு நிலையிலும் ஆகிய மூன்று நிலைகளில் தொடர்பு கொள்ள வசதிகள் உருவாக்கப்பட்டு உள்ளன. இத்தன்மையினால் மாற்றுக் குரலில் பேசும் ஒரு குறைபாடும் நிகழ வாய்ப்புள்ளது.

**9. தந்தி**

ஒலிக்குறியீடுகள் வழி கம்பியில்லாத் தந்தி மூலம் செய்திகளைத் தொடக்ககால அறிவியல் வழங்கியது. பின்னர் கம்பி வழித் தொடர்பியல் முறை தொலைத்தொடர்பியல் முறை தொலைபேசியை உலகுக்கு இனங்காட்டியது.

தந்தி முறையில் தமிழ் மொழி வழியும் வாழ்த்துச் செய்திகள் அனுப்புவதற்குரிய வழி முறைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

**10. மின்னணுத் தந்தி**

மின்னணுத் தந்தி என்பது ஒரு புதிய சிக்கனமான மின்னணு அஞ்சல் முறையாகும். ஒரே நேரத்தில் பல முகவரிகளுக்குத் தகவலை தொடர்புபடுத்துகிறது. உலகின் எந்தப்பகுதியிலும் தகவலை அனுப்பலாம். இது இ-மெயில் என அழைக்கப்படுகிறது. இ-மெயில் பணிகளுக்கு உலக நாடுகளிலும் இந்தியாவில் பல அமைப்புகள் இருக்கின்றன. தமிழ் மொழியில் எந்த ஒரு தகவலையும் பரிமாற்றம் செய்ய இயலும்.

**11. மின்னணு இதழ்கள்**

ஒருவர் தன்னுடைய கணிப்பொறியைத் தொலைபேசி கடத்திகளுடன் இணைத்து ஒரு பொது இடத்திலிருந்து செய்திகளைப் பெறும் முறையினை மின்னணு இதழ்கள் என்று அழைக்கிறோம்.

சேமித்து வைக்கப்பட்டுள்ள பத்திரிக்கைத் தலையங்கங்கள், முக்கியக் கட்டுரைகள், சிறுகதைகள் முதலியவற்றைக் கணிப்பொறியின் திரையில் பார்த்துப் படித்துக் கொள்ளலாம். தேவையான பொழுது செய்தியின் எண்ணை வைத்து திரையில் செய்திகளைத் தெரிவிக்கலாம். தோன்றச் செய்யலாம். பத்திரிக்கைக்கும் கடிதம் எழுதி தங்கள் கருத்தைத் தோன்றச் செய்யலாம்.

**12. செல்லுலார் போன்**

தொலைபேசித் துறையில், தனியார்மயம் அதிக அளவில் அதிகரித்துள்ளது. செய்திகளை விரைவாகத் துல்லியமாகக் கிடைக்கச் செய்கிறது. குட்டித் தொலைபேசி போன்ற அமைப்பில் பணி செய்யக்கூடிய செல்லுலார்போன், வானொலி அலைகளை கொண்டு இயங்குகிறது.

சாதாரணத் தொலைபேசியில் பேசுவது போன்று எங்கிருந்தும் தொடர்பு கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ஒலிபரப்பு முறையில் நல்ல சிறப்பினைப் பெற்றுள்ளது.

குறிப்பு

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு:அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.**
**ஆ.உமது பதிலைப் பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.**

1. மக்கள் தொடர்பு சாதனங்கள் ஏதேனும் இரண்டினைக் கூறுக?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

2. படித்தவர்கள் மட்டுமே பயன்படுத்தும் மக்கள் தொடர்பு சாதனம் எது?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

## 13.3. 2. கணினி அடிப்படையில் கல்வி (Computer Based Instruction)

கணிப்பொறி வழிக்கற்றல் என்பது மாணவர்கள் தாமே கணிப்பொறிகளை இயக்கிக் கணினித் திரையில் வெளிப்படும் தகவல்களைக் கற்பதைக் குறிக்கிறது.

கற்றல் பாடப்பொருள் சிறுசிறு தகவல்களாக மாற்றியமைக்கபட்டுக் கணிப்பொறியின் மென்கலத்தில் வரிசைக் கிரமமாக பதிவு செய்யப்படும். பதிவு செய்யப்பட்ட கணிப்பொறித் திட்டத்தைக் கொண்ட மென்கலத்தை கணிப்பொறியில் நுழைத்து இயக்கும் பொழுது திரையில் பாடச்சட்டங்கள் ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றும்.

ஒவ்வொரு சட்டகத்தின் இறுதியில் காணப்படும் வினாக்களுக்கு மாணவன் பதில் தருவான். அதாவது மாணவன் கணிப்பொறியின் அழுத்தியினை (Keyboard) பயன்படுத்தி அளிக்கும் விடை திரையில் தோன்றும் திட்டத்தின் தன்மையைப் பொறுத்தது. மாணவன் பதில் ஏற்கப்பட்டதற்கான அடையாளம் தோன்றுதல்.

கணிப்பொறியில் திட்டமுறையில் அமைக்கப்பட்ட பாடப்பொருளை மாணவர் தானே செயல்பட்டுக் கற்கும் முறைக்கு கணிப்பொறியில் கற்பித்தல் என்று பெயர்.

**பவர்பாயின்ட் மூலம் கற்பித்தலின் அடிப்படைகள்**

- ❖ மல்மீடியா பிரசன்டேசனைத் தொடங்குதல் (Multimedia Presentation)
- ❖ Outline உருவாக்குதல்
- ❖ படங்களைச் சேர்த்தல்
- ❖ இணையத்திலிருந்து பிம்பங்களை எடுத்தல்.

மாணவர்களுக்குக் கணிப்பொறித் திரையில் கற்பிக்கும் பாடப்பொருளில் ஆர்வத்தைத் தூண்ட பாடப்பொருள் (Text), ஓவியக்கலை (Graph), ஒலி (Sound) திரைப்படங்கள் (Movies), வரைபடங்கள் (Charts) ஆகியவற்றை உருவாக்க வேண்டும்.

நிறைய ஒலிகள், பிம்பங்கள், வரைபடங்கள், கற்பித்தல் குறிக்கோள்கள் போன்றவை காணப்படும். எனவே அவற்றினைத் தேவைக்கேற்ப பயன்படுத்த வேண்டும்.

- ❖ CD –யிலிருந்து இசையை சேர்க்க விரும்பினால் சேர்க்கலாம்.
- ❖ ஒலி மற்றும் வர்ணனையைப் பதிவு செய்யலாம்.
- ❖ Slide-களைக் கையேடுகளாக அச்சிடுதல்.
- ❖ Power Point Presentation-ஐ வெவ்வேறு படிவங்களில் பாதுகாத்தல்.

இணையத்தில் இருந்து பிம்பங்களை எடுத்தல், படங்களைச் சேர்த்தல், ஆர்வத்தைத் தூண்ட பாடப்பொருளை உருவாக்க வேண்டும்.

**கணிப்பொறி பவர்பாயின்ட் மூலம் பாடப்பகுதியைத் திட்டமிடல் (Computer powerpoint)**

பவர் பாயின்ட் மூலம் பாடப்பகுதியை மாணவர்களுக்கு கற்பிப்பதில் பல படிநிலைகள் உள்ளன.

**படிநிலை 1**

பாடப்பகுதியைத் திட்டமிடுதல்.

மாணவனின் வயது, வகுப்பு, பாடப்பொருள், கற்றல் குறிக்கோள் ஆகியவற்றைக் கூர்ந்து கவனித்து அதற்கேற்ப பாடப்பகுதியை திட்டமிட வேண்டும்.

**படிநிலை 2**

பாடப்பொருளைக் கற்பித்தல்.

பாடப்பகுதியையும், வரையறையையும் திட்டமிடுவதற்கு Story Board-ஐப் பயன்படுத்த வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| **Slide 1தலைப்பு** | **சங்க இலக்கியம்** | **Slide 2 தலைப்பு** | **எட்டுத்தொகை** |
| **Slide 3** | **நற்றிணை<br>குறுந்தொகை** | **Slide 4** | **பரிபாடல்<br>பதிற்றுப்பத்து** |

குறிப்பு

**முன்னேற்றத்தைச் சோதித்துஅறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழேகொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.**
**ஆ.உமது பதிலைப் பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.**

3. கணிப்பொறியில் கற்பித்தல் என்றால் என்ன?

.....................................................................................................................................

.....................................................................................................................................

## 13.3.3.கணினி துணையுடன் கற்பித்தல் (Computer Assisted Instruction)

மாணவன் திரையின் எதிரே அமர்ந்து செய்தியை அறிந்துகொண்டு கேட்கப்பட்டுள்ள வினாவிற்கு பதில் கொடுக்கலாம். அதனைக் கணிப்பொறி ஆராய்ந்து, மேற்கொண்டு அதற்குத் தக்க புதிய செய்தியையோ, தேவையான குறை களைதல் நிகழ்ச்சியையோ அளித்து மாணவரை முன்னேற வைப்பதே கணினி துணையுடன் கற்பித்தல் ஆகும்.

- ❖ இதில் கணிப்பொறிக்கும், கற்போருக்கும் இடையே தகவல் பரிமாற்றமும் இடைவினையும் நிகழ்கிறது.
- ❖ கணிப்பொறியில் ஏற்கெனவே செலுத்தப்பட்டுள்ள பாடங்களைப் பற்றிய விவரங்களை கணிப்பொறி மாணவர்களுக்கு அளிக்கிறது.
- ❖ மாணவன் திரையில் தெரியும் குறிப்புகளைப் பின்பற்றி கற்கிறான்.
- ❖ கணிப்பொறி மாணவனுடைய செயல்திறன் பற்றிய பின்னூட்டத்தை உடனுக்குடன் அளிக்கிறது. கணிப்பொறி ஆசிரியராக செயல்படுகிறது.

கணினி துணையுடன் கற்பித்தல் முறைகளில் ஆறு முறைகள் கையாளப்படுகின்றன.

### திரும்பத் திரும்பப் பயிற்சி (Drill&Practice)

சில அடிப்படைச் செய்திகளைக் கணிப்பொறி தொடர்ச்சியாகத் திரையில் கொடுக்கும். மாணவன் திரைக்குமுன் அமர்ந்து கேட்கப்படும் வினாக்களுக்குத் தட்டச்சு செய்வது போல் (Key board) செய்யும் போது அளிக்கப்பட்ட விடையினை ஆராய்ந்து, சரியாக இருப்பின் அடுத்த வினா எழுப்பியும், தவறாயின் தக்க விளக்கங்களை அளித்தும் செல்கிறது.

**கற்பிக்கும் பயிற்சி (Tutorial)**

பாடச் செய்திகளை வரிசைக் கிரமமாகச் சிறுசிறு பகுதிகளாகத் தயாரித்துக்கொண்டு திரையில் தோற்றுவிக்கிறது. தேவையான படங்களைத் (Graphics) தயாரித்து வைத்துக்கொண்டிருப்பதால், மாணவர்களுக்குத் தனித்தனியாகக் கற்றுக்கொள்ள வாய்ப்பளிக்கப்படுகிறது.

**செயற்கையான நிகழ்ச்சிகள் (Simulation)**

ஆபத்து நிறைந்த சோதனைகள், விலையுயர்ந்த சோதனைகள், கால தாமதம் ஆகின்ற சோதனைகள் போன்றவற்றைச் செயற்கை முறையில் தயாரித்துக் கொண்டு விளைவுகள் என்ன ஏற்படும் என்பதனைச் செயற்கையாகச் செய்து காட்டும் வல்லமை படைத்தது கணிப்பொறி சாதனம்.

**உருவகப்படுத்தி அறிதல் (Modelling)**

சிக்கல் நிறைந்த கணித உருவங்களையும், புள்ளி உருவங்களின் அடிப்படையில் உருவகப்படுத்தி அறியக் கணிப்பொறியால் இயலும். சில புள்ளி விவரங்களின் அடிப்படையில் சிக்கல் நிறைந்த உருவங்களைச் சில வகையில் உருவகப்படுத்தி அவற்றின் நிலைகளைத் தெரிவித்துச் சிறந்த ஒன்றினைத் தேர்ந்தெடுக்க வழி உண்டு.

**புதிர் தீர்த்தல் (Problem solving)**

குழப்பம் நிறைந்த பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு, கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில் சரியான முடிவினை அறிய இயலும்.

**கல்வி தொடர்பான விளையாட்டுக்கள் (Educational gaming)**

மற்றொருவருடன் போட்டி விளையாட்டுக்களில் கலந்து கொள்ளும்போதோ, கணிப்பொறியையே போட்டியாளராகவும் கொண்டோ, சில விளையாட்டின் விதிமுறைகள், விளையாடும் முறை பற்றி அறிய இயலும்.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.**
**ஆ.உமது பதிலைப் பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.**

4. கணினி துணையுடன் கற்பித்தலில் மாணவன் எதைப் பின்பற்றிக் கற்கிறான்?


.........................................................................................................
.........................................................................................................

5. செயற்கை முறையில் கணிப்பொறி மூலம் தயாரிக்கப்படும் சோதனைகள் யாவை?
.........................................................................................................
.........................................................................................................

குறிப்பு

## 13.3.4 கணினி மேலாண்மையில் கற்பித்தல் (Computer Managed Instruction)

ஒரு கணினி செயற்படும் முறையை அறிந்து கொள்வதற்குக் கணினியின் பகுதிவாரி வரைபடம் என்ற அமைப்பை நாம் ஆராய்ந்தறிவோம். இந்த வரைபடத்தில் கணினியின் ஒவ்வொரு பகுதியையயும் ஒரு பாலமாக நாம் சித்தரித்துக் கொள்கிறோம். இது கணினியின் செயல்பாடுகளை ஓரளவு விளக்குவதாக அமையும்.




**உள்ளீடுக்கருவிகள்**

உள்ளீடுகருவிகள் கணினிக்கு உள்ளே செலுத்த வேண்டிய செய்திகளையும், அறிவுறுத்தல்களையும் தகவலாக உட்செலுத்த உதவுவதே இந்த உள்ளீட்டு கருவிகள் ஆகும். இதற்கு சாவிப்பலகையை உதாரணமாகக் கூறலாம்.

**வெளியீட்டுக்கருவிகள்**

இவை கணினி செயல்பட்டு வெளிப்படுத்தும் முடிவுகளை நாம் தெரிந்து கொள்ள உதவும் கருவிகளாகும். எதிர்மின் குழாய், அச்சுக் கருவி போன்றவை இதில் அடங்கும்.

**நினைவுப்பகுதி**

செய்தித் தகவல்களை தன்னகத்தே சேமித்து வைத்துக் கொள்ளும் கணினியின் வல்லமைக்கு நினைவு என்று பெயர். இதற்கு உதாரணமாக காந்த வட்டுகளைக் கூறலாம். மென்வட்டு, வன்வட்டு இவைகள் தங்களது காந்த தக்கவைப்புத் திறனில் செய்திகளை நினைவில் வைத்து கொள்கின்றன.

**கணித தருக்கமுறை அலகு**

இவை உள்ளீடு மற்றும் வெளியீட்டுக் கருவிகளின் செயல்களை மேற்பார்வையிட்டு கட்டுப்படுத்தும் பணியையச் செய்கிறது.

குறிப்பு

**மையச்செயல் முறை அலகு**

இது கணினியின் ஆணையைப் பயன்படுத்தும் பகுதியாகும். இது கணித தருக்கமுறை அலகுடன் செயல்பட்டு முடிவுகளைச் செய்கிறது.

**கணினியின் வன்கலமும் மென்கலமும்**

கணினியின் மென்கலத்தைப் பயன்படுத்த உதவும் இயந்திரப்பகுதிகளுக்கு வன்கலம் என்று பெயர். கணினி மொழியின் கணினிக்குள் செலுத்தப்படும் ஆணைத்தொடர்களுக்கு மென்கலம் என்று பெயர்.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு:அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.**
**ஆ.உமதுபதிலைப் பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.**

6. மையச்செயல் முறை அலகு என்றால் என்ன?

……………………………………………………………………………………………

……………………………………………………………………………………………...

7. கணினி மொழியில் கணினிக்குள் செலுத்தப்படும் ஆணைத்தொடர்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

……………………………………………………………………………………………

### 13.3.5 கணினி ஊடகக் கற்பித்தல் (Computer Mediated Instruction)

கணிப்பொறியில் வடிவமைப்புகளை உருவாக்க உயர்நிலை மொழி, இடைநிலை மொழி, பொறி மொழி ஆகியன பயன்படுத்தப்படுகின்றன. உயர்நிலை மொழிகளான பேஸிக், கோபால், பாஸ்கல், ஆல்கால், போர்ட்ரான் ஆகியன கருதப்படுகின்றன. இம்மொழி புலப்படுத்தும் பொருண்மைகளைக் கணிப்பொறிகள் புரிந்து செயல்படும் காலம் உருவாக வேண்டும். அப்பொழுதுதான் இயற்கை மொழிகளின் சிறப்புத்தன்மை உலகெங்கிலும் பரவ முடியும். தமிழில் பாரதி, வினஸ், துணைவன், முரசு, ஆதமி போன்ற மென்பொருட்கள் பயன்பாட்டில் இருந்து வருகின்றன.

கணிப்பொறியில் இயற்கை மொழியில் உரையாடல் என்பது ஐந்தாவது தலைமுறைக் கணிப்பாளர்களின் முயற்சியாக உள்ளது. இதற்கான முயற்சியில் தமிழில் விசைப்பலகை உருவாக்குதல், தமிழுக்கேற்ற மென்பொருட்கள் பற்றிச் சிந்திக்கப்பட்டுள்ளன. இயற்கை மொழியில் பதிவு செய்துவிட்டு அதனை மற்ற மொழிகளுக்கு ஒலிபெயர்ப்பு மூலம் மாற்றியறியும் வாய்ப்பும் உள்ளது.

தஞ்சாவூர் பல்கலைக்கழகம் திருக்குறளை கணிப்பொறி மூலம் ஆய்வு செய்துள்ளனர். திருக்குறளில் இடம்பெற்றுள்ள எழுத்துக்கள் பற்றிய பகுப்பாய்வாக இது அமைந்துள்ளது. இதுபோன்று தமிழ்

**குறிப்பு**

எழுத்துப் புழக்கத்தில் ஒற்றெழுத்துச் சேர்க்கை, வாக்கிய அமைப்பு, எழுவாய், பயனிலை போன்றவற்றைக் கண்டறியும் பயிற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.**
**ஆ. உமது பதிலைப் பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.**

8. கணினி ஊடகக் கற்பித்தலில் உயர்நிலை மொழிகளாக கருதப்படுவன யாவை?
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………
9. திருக்குறளை கணிப்பொறி மூலம் ஆய்வு செய்த பல்கலைக்கழகம் எது?
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………


## 13.4. மின் தமிழ்

மின்னணுக் கருவியான கணிப்பொறி தரவுகளை (Data) ஏற்றுக்கொண்டு, அதற்கேற்ப முடிவுகளைத் தரும், வேகமாக இயங்கும் கருவியாகும்.

கணிப்பொறியில் உள்ளீடு, வெளியீடு, மையச்செயல்பாட்டு அலகு என மூன்று முக்கிய பகுதிகள் இருக்கும். மையச்செயல்பாட்டு பகுதி என்பது நினைவு அலகு, கட்டுப்பாட்டு அலகு, கணித மற்றும் கருத்துரு அலகைக் கொண்டுள்ளது. உள்ளீடு கருவியாக விசைப்பலகை உள்ளது. இது மையச்செயல்பாட்டு அலகிற்கு தரவுகளையும், குறிப்புகளையும் அனுப்புகின்றது.

மையச்செயல்பாட்டு அலகு தான் பெறும் தரவுகளை கருத்து அடிப்படைச் செயல்பாடுகளாக மாற்றுகின்றன. பின்னர் இவை வெளியீட்டுக் கருவியான அச்சுக்கருவியின் மூலம் வெளிப்படுகின்றன.

**மையச்செயல்பாட்டு அலகு**



கணக்கீடு கருவியே தொடக்க காலத்தில் வடிவமைக்கப்பட்ட கணினி. இன்று தகவல் பரிமாற்றத்தில் தன்னேரில்லாமல் திகழ்கிறது. கல்வி வளர்ச்சியில் தகவல் பரிமாற்றம் சிறப்பிடம் பெறுவதால் கணினியின் பயன்பாடு கல்வி வளர்ச்சியில் தவிர்க்க இயலாததாகும்.

மின்னணு தொழில்நுட்பத்தில் பதியப்பட்டுள்ள தகவல்களைக் கணினி திரை வழியாக பார்க்க முடியும். தகவலோடு ஒலியையும் இணைக்கும்போது ஒலி மற்றும் ஒளித்தகவல் பெறப்படுகின்றன. செவி, கண் ஆகிய இரண்டும் கற்றல் வாயில்களாக செயல்படுகின்றன.

நாம் நூலைப் படிப்பதுபோலக் கணினியின் நினைவை, நெகிழி, மூலம் பதியப்பட்ட தகவல்களை கணினி திரைக்கு கொண்டு வந்து படிக்கலாம். நூலின் பக்கங்களை புரட்டுகிறோம், படிக்கிறோம், இவ்வாறே கணினியில் தகவல்களை மேன்மேலும் படிக்கலாம்.

கணிப்பொறி வழிக்கற்றல் என்பது மாணவர்கள் தாமே கணிப்பொறியை இயக்கி கணினித்துறையில் வெளிப்படும் தகவல்களை கற்றிடுவதைக் குறிக்கிறது.

கற்றலுக்கான பாடப்பொருளை சிறுசிறு தகவல்களாக மாற்றியமைத்து கணிப்பொறியின் மென்கலத்தில் வரிசைக்கிரமமாக பதிவு செய்யலாம். பின்னர் மென்கலத்தை கணிப்பொறியில் இயக்கிடச் செய்யும் போது, திரையில் பாடச் சட்டகங்கள் ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றும்.

உளவியல் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பல்லூடக முறையில் மின்னணுநுட்ப வழியிலும், தொலைத்தொடர்புச் சாதனங்களை பயன்படுத்தியும் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் கற்கும் வசதியை தான் மின்னியல் முறையில் கற்றல் என அழைக்கின்றோம்.

மின்னியல் முறையில் கற்றல் என்பது மின்னியல் தூண்டல்கள் நிறைந்த சூழலில் கற்றல் நடைபெறும். மின்னியல் கற்றல், ***வலைத்தளத்தை அடிப்படையாய்க் கொண்டு பயிற்சி, இணையத்தளத்தை அடிப்படையாய்க் கொண்டு பயிற்சி*** என இருவகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. டிரெயினர்ஸாப்ட் (Trainersoft) மூலம் மின்னியல் வழிக்கற்றல் பிரபலமாகி வருகிறது.

பயிற்சியளித்தல், தேவைப்படும் தகவல்களை உடனடியாகக் கிடைக்கச் செய்தல், வல்லுநர்களின் வழிகாட்டுதலைப் பெறுவதற்கு வாய்ப்பு அளித்தல் ஆகிய மூன்றையும் மின்னியல் கற்றல் உள்ளடக்கியது. ஒளி, ஒலி, உரைநடை, உயிரோட்டம் கொண்ட

உருவப்படங்கள் மற்றும் சித்தரிக்கப்பட்ட சூழ்நிலைகள் ஆகியவற்றை கொண்டிருக்கிறது.

**மின்னியல் வழிக்கற்றலுக்கும் வகுப்பறைக் கற்றலுக்கும் இடையேயுள்ள வேறுபாடு**

| மின்னியல் வழிக்கற்றல் | வகுப்பறைக் கற்றல் |
|---|---|
| 1.கற்றல் பொருட்களை வடிவமைத்து உருவாக்குதல், அவற்றை வழங்குதல், கற்போரின் ஐயங்களை தீர்த்திடுவதற்கு உதவும் வசதி ஆகியவை தனித்தனியாக பிரிந்து காணப்படுகிறது. | 1.இவை மூன்றும் ஒருவராலேயே ஒரேநேரத்தில் இயக்கப்படுகின்றன. |
| 2.எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் மின்னியல் சாதனங்களை பயன்படுத்தி தமக்கேற்ற சூழலில் கற்க முடியும். | 2.குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட சூழலில் மட்டும் கற்க இயலும். |
| 3.தரம் உயர்ந்த அனுபவத்தை பெற முடிகிறது. (எ.கா கைப்பேசி) | 3.இயல்பான கற்றல் அனுபவங்களைப்பெற உதவியாக உள்ளது. (எ.கா தொலைபேசி) |

### 13.4.1. மின்னியல் வழிக்கற்றலின் வகைகள்

மின்னியல் வழிக்கற்றல் கீழ்கண்ட நான்கு வகைகளில் நிகழலாம்.

1. அறிவார்ந்த தகவல் திரட்டு (Knowledge database)
2. மின்னியல் தொடர்பு மூலம் உதவி கிடைக்கப்பெறல் (On-link support)
3. ஒருங்கிணைக்கப்படாத பயிற்சி (Asynchronous training)
4. ஒருங்கிணைக்கப்பட்ட பயிற்சி (Synchronous training)

**1. அறிவார்ந்த தகவல் திரட்டு (Knowledge Database)**

இணைய தள வலைதளங்களில் நமக்குத் தேவைப்படும் விவரங்கள் அடங்கிய பல்வேறு தொகுப்புகள் அகர வரிசைப்படி அடுக்கப்பட்டு பார்வைக்கு அளிக்கப்படுகின்றன. நமக்கு தேவையான தொகுப்பினைப் பெற, தேடுதளம் (Search Engine) துணை கொண்டு தொடர்புடைய சொற்களை கணினியின் விசைப்பலகையில் தட்டச்சு செய்யலாம்.

இதில் விவரங்கள் உயிரோட்டம் கொண்ட படங்கள் மற்றும் சூழ்நிலைகளைக் கொண்டதாக இருப்பதால் புரிந்து கொள்வது எளிதாகிறது.

**2.மின்னியல் தொடர்பு மூலம் உதவி கிடைக்கப்பெறல் (On-link support)**

குறிப்பிட்ட அறிவார்ந்த விவரங்களைப் பெற்று தெளிவு பெற மின் அஞ்சல் (E-mail), தொலைதூர உரையாடல் (Chatting), மின்னியல் முறையில் உடனுக்குடன் செய்திகளை அனுப்பி பதில் தகவல் பெறல் (Instant messaging) போன்ற முறைகளைப் பயன்படுத்துவதன் மூலமும் மின்னியல் வழிக்கற்றல் நிகழலாம்.

**3. ஒருங்கிணைக்கப்படாத பயிற்சி (Asynchronous training)**

சுய வேகத்தில் கற்கும் மரபுரீதியான முறையாகும்.

இணையதளத்தில் விவரங்களைப் படித்தறிந்த பின்பு அது தொடர்பாக தெளிவு பெற சக மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோருடன் மின்னியல் முறையில் தொடர்பு கொண்டு விளக்கலாம். அல்லது வலைத்தளங்களிலேயே மேற்பார்வை நூல்களைத் தேடிப் படிக்கலாம்.

**4. ஒருங்கிணைக்கப்பட்ட பயிற்சி (Synchronous training)**

இம்முறையில் பயிற்சி பெற குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட நேரத்திற்கான இ-கற்றல் மாணவர்கள், பயிற்சியாளர்கள் மின்னியல் முறையில் தொடர்பு கொண்டு விவாதிக்கலாம். (கணினி விண்ணரங்கம் போன்று இம்முறை அமைகிறது.)

**13.4.2. மின்னியல் வழிக்கற்றலின் பயன்கள்**

1. பள்ளியில் வகுப்பறை கற்பித்தல் முலம் கற்பதை விட குறைவு.
2. சுய வேகத்தில் கற்க முடியும்.
3. வகுப்பறைக் கற்றலுக்குத் தேவைப்படும் நேரத்தோடு ஒப்பிடும் போது நேரம் குறைகிறது.
4. மாணவர்கள் தமக்கு உகந்த இடத்தில் விரும்பும் நேரத்தில் விரும்பும் சூழலில் கற்க வாய்ப்புக் கிடைக்கிறது.
5. கற்கும் இடத்திற்கு செல்வதற்கான பயணச்செலவு ஏதுமில்லை. பயண நேரமும் மிச்சமாகும்.

**6. அதிகரிக்கப்பட்ட செயல்திறன்** : அமெரிக்கக் கல்வித்துறை ஆய்வின் படி நேருக்கு நேர் கற்றல் செயல்பாட்டை விட இணையதளக்கற்றல் செயல்பாட்டை மேற்கொண்டோரின் செயல்திறன் அதிகமாயிருந்தது என்று கூறுகிறது.

**7. திறன்களை வளர்த்தல்** : கற்போர் அறிவுசார் பணியாளர்களாக வளர்வதற்கான திறன்களை மின்வழிக்கற்றல் அளிக்கிறது.

**8. அதிகளவு தகவல்கள்** : வல்லுநர்களின் அறிவு பரிமாற்றங்கள், அரசியல் எல்லையைக் கடந்து மாணவர்களைச் சேர்க்கிறது.

9. கற்பிக்கும் ஆசிரியர் இணையதளத்தின் மூலமாகக் கற்பித்தலில் உதவி, வழிகாட்டுதலை மேற்கொள்வார். மரபு வழியான கற்பித்தலில் ஆசிரியரும் மாணவரும் ஓர் இடத்தில் இருப்பர். ஆனால் மின்வழிக்கற்பித்தலில் ஆசிரியரும் மாணவரும் வெவ்வேறு இடங்களில் இருப்பர். ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையேயான இடைவினை முறைப்படுத்தப்பபட்டதாகவோ அல்லது முறைப்படுத்தப்படாததாகவோ இருக்கும்.

10. ஆகையால் மின்வழிக் கற்பித்தல் என்பது நிகழ்நிலைக் கற்பித்தல், கற்பிப்போர் என்பதில் கல்வியாளர்கள், முறை வல்லுநர்கள், பயிற்சியாளர்கள், ஊக்குவிப்போர், கற்பித்தலுக்கு உதவும் ஆசிரியர்கள் ஆகியோர் அடங்குவர்.

11. கற்றல் மற்றும் கற்றலுக்குத் திட்டமிடுதலை மேம்படுத்த புதிய வழிமுறைகளை எண்ணற்ற மாணவர்கள் அறிந்து கொள்ள ஆசிரியர் மின்வழிக் கற்பித்தலை வழிப்படுத்த இயலும்.

12. ஹிகிஷன் (2000) என்பவரது கூற்றுப்படி நிகழ்நிலைக் கற்பிப்போர் என்பவர் நிகழ்நிலை வழியாக மாணவர்களுக்கு மிகச்சிறப்பாகக் கற்பிப்பவர் ஆவார்.

### 13.4.3. மின்வழிக் கற்பித்தலின் கூறுகளும், முக்கியத்துவமும்

மின்வழிக் கற்பிப்போர், கற்பித்தல், ஊக்குவித்தல், வழிப்படுத்தல் மூலம் உயர்நிலை ஆர்வத்தையும், அடைவையும் தொடர்ந்து நிலைநிறுத்துகின்றனர்.

- ✓ பல்வேறு கற்றல் நிலைகளில் உள்ள வேறுபட்ட மாணவர்களுடன் மிகச்சிறப்பாகவும், திறமையாகவும் இடைத்தொடர்பு கொள்ள முடியும்.
- ✓ மின் அஞ்சல், முறைப்படுத்தப்பட்ட விவாதம், கலந்துரையாடல் போன்றவற்றின் மூலம் மாணவர்களின் அறிவுநிலையை மேம்படுத்த முடிகிறது.
- ✓ மாணவர்களுக்குக் கற்பித்தல், கற்றலை மதிப்பிடல் பாடச்செய்திகளை நிபுணத்துவத்துடன் வழங்குதல், ஊக்குவித்தல் மற்றும் தொழில்நுட்ப உதவி வழங்குதல்

ஆகியன மின்வழிக் கற்பித்தலில் மேற்கொள்ளப்படுகின்றன.

- ✓ நிகழ்நிலைக் கற்பித்தலில் நான்கு முக்கிய கூறுகள் உள்ளன. அவை 1.தொழில்நுட்பம், 2. மேலாண்மை 3. கற்பிக்கும் கலை 4. சமூகவியல்.
- ✓ நிகழ்நிலைக் கற்பித்தலில் கற்பிப்போர் வேகமாகவும், திறமையாகவும் மாணவர்களுக்குக் கற்பிக்கத் தொழில்நுட்ப உதவியை நாடுகின்றனர்.
- ✓ மாணவர்களின் பங்கேற்பு மற்றும் தன்னாட்சியை மேலாண்மை செய்யவும், கற்பிப்போருக்குமிடையே மிகச்சிறந்த உறவுமுறையை ஏற்படுத்தவும் நிகழ்நிலைக் கற்பித்தல் உதவுகிறது.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு:அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.**
**ஆ.உமது பதிலைப் பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.**

10. மின்னியல் வழிக்கற்றல் எத்தனை வகைப்படும்?

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

11. தொடக்க காலத்தில் வடிவமைக்கப்பட்ட கணினி எது?

……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

## 13.5. பல்லூடகம்

பல்லூடகம், கணினி சார்ந்த தொழில்நுட்பமாகும். ஒலி, ஒளி, அசைவு, அட்டவணை முதலிய பல்வேறு ஊடகங்களை இணைத்துப் பயன்படுத்துவது பல்லூடகம் ஆகும்.

பொதுவாக பல ஊடகங்கள் செய்யும் வேலையை ஒரே ஊடகம் செய்யுமானால் அதை பல்லூடகம் என்கிறோம்.

அறிவியல் நோக்கில் பார்க்கும் போது கணிப்பொறி உதவியுடன் பாடம் (Test), நிகழ்படம் (Video), நகர்படம் (Animation), ஒலி (Sound), பட வரைவுகள் (Graphics), திரைப்படம் (Movies), ஆகியவற்றை உள்ளடக்கி இடைவினையுடன் தகவல் பரிமாறிக் கொள்ளும் வகையில் உருவாக்கப்படும் ஒரு பொருளே பல்லூடகம் என அழைக்கப்படுகிறது.

குறிப்பு

**பல்லூடகத்தின் கூறுகள்**

1. **பனுவல்**

கணினித் திரையிலோ அல்லது தொலைக்காட்சித் திரையிலோ பாடப்பொருள் தான் முக்கிய பங்கு வகிக்கிறது. நாம் கொடுக்கும் எழுத்துக்களால் மட்டுமே தகவல்கள் விரிவாக மாணவர்களைச் சென்றடைகின்றன. பன்முகத் தகவல் தொடர்பு மூலம் பாடங்களுக்குத் தகவல்களை, விளைவுகளைக் கொடுக்க முடியும். எழுத்துக்களின் வாயிலாக உருவாக்கப்படும் ஆவணம் பனுவல் ஆகும். பல்லூடகம் மூலமும் எழுத்துருக்களுக்குப் ˙பல வகையான பரிமாணங்களைக் கொடுக்க முடியம்.

**2. படக்காட்சி**

பல் ஊடகக் கணினி மூலம் ஒரு நல்ல தரமான புகைப்படக் காட்சியைத் திரையில் காட்டமுடியும். படிப்பதை விட படக்காட்சி மூலம் ஆயிரம் ஆயிரம் செய்திகளை மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க முடியும். தரமான புகைப்படங்களை பல வண்ணங்களில் வடிவங்களில் பல்லூடகத்தில் தர இயலும்.

**3. திரைப்படங்கள்**

பல்வேறு நிகழ்ச்சிகள், விழாக்கள், திரைப்படங்கள், படங்கள் போன்றவற்றைப் பல்லூடகத்தின் வழி தேவைக்கேற்ப இடம் பெறச் செய்யலாம்.

**4. அசையும் படங்கள்**

ஒரு பாடத்தில் உயிரோட்டத்துடன் நாம் கற்பனை செய்யும் காட்சியினைக் கொண்டு வர முடியும். அசையாத உருவங்களையும், அசையும் கேலிப்படங்களையும் பல் ஊடகத்தில் உருவாக்கலாம். ஓர் உருவத்தை வரைந்து அதற்கு அசைவூட்டுதல், பறக்க வைத்தல், நிற்க வைத்தல், ஒட வைத்தல் நடக்க வைத்தல் என பல அசைவுகளை அளிப்பதே அசையும் படங்களாகும். கார்ட்டூன் படங்களை மல்டிமீடியாவில் உருவாக்க முடியும். இதனால் கற்பனையான உருவங்களுக்கு உயிரூட்டி அவற்றை நடமாட வைக்க முடியும். முப்பரிமாண காட்சிகளையும் உருவாக்க முடியும்.

**5. ஒலி**

பல் ஊடகத்தில் ஒரு பாடலை அல்லது இசையை அல்லது ஒலியைக் கேட்கவும், பதிவு செய்யவும் இயலும். தேவையான ஒலியைச் சேர்ப்பதற்கும், நீக்குவதற்கும் ஒன்றோடு ஒன்று கலப்பதற்கும், பதிவு செய்வதற்கும், தொகுக்கவும் பலவகையான மென்பொருள்கள் உள்ளன.

இதில் நமக்குத் தேவையான மென் பொருளைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**6. பட வரைவுகள்**

உண்மைக்கு நிகரான தோற்றங்களை அழகூட்டும் கணிப்பொறிக் கோப்புகளே பட வரைவுகள் எனப்படும். பூக்கள், பறவைகள், செடி, கொடி, மனிதன், நீர், நெருப்பு, ஆகாயம் இவை அனைத்தையும் ஆயத்தப்பட வரைவுகளாக பட வரைவுகள் நமக்குக் கொடுக்கின்றன.

மேற்சுட்டியவை யாவும் பல்லூடகம் சார்ந்த தொழில்நுட்பம் ஆகும். இவற்றைச் சரியாகப் பயன்படுத்துவதன் மூலம் உயர்ந்த கற்றல் - கற்பித்தல் ஆக்கங்களை உருவாக்க முடியும்.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு:அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.**
**ஆ.உமது பதிலைப்பாடத்தின்இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.**

12. பல்லூடகம் என்றால் என்ன?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

13. பட வரைவுகள் என்றால் என்ன?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

## 13.6. தொகுத்துக் காண்போம்

இப்பாடத்தில் மொழிக் கற்பித்தலில் பயன்படுத்தக்கூடிய மக்கள் தொடர்பு சாதனங்களை அறிந்து கொண்டோம். கணினி மூலமாக எவ்வகையான கற்பித்தலை மேற்கொள்ளலாம் என்பதை தெளிவாக அறிந்து கொண்டோம். இவற்றின் மூலம் தமிழை எவ்வாறு வளர்க்கலாம் என்றும் ஆசிரிய மாணவர்களாகிய நீங்கள் தெளிவாக புரிந்து கொண்டிருப்பீர்கள்.

## 13.7. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

1. ஒலிப்பதிவு நாடா, ஒலி-ஒளி பதிவு நாடா, வானொலி.
2. செய்தித்தாள்
3. கணிப்பொறியில் திட்டமுறையில் அமைக்கப்பட்ட பாடப்பொருளை மாணவர் தானே செயல்பட்டுக் கற்கும் முறைக்கு கணிப்பொறியில் கற்பித்தல் என்று பெயர்.
4. திரையில் தெரியும் குறிப்புகளை

**குறிப்பு**

5.ஆபத்து நிறைந்த சோதனைகள், விலையுயர்ந்த சோதனைகள், கால தாமதம் ஆகின்ற சோதனைகள்.

6. இது கணினியின் ஆணையைப் பயன்படுத்தும் பகுதியாகும். இது கணித தருக்கமுறை அலகுடன் செயல்பாட்டு முடிவுகளை செய்கிறது.

7. மென்கலம்

8. பேஸிக், கோபால், பாஸ்கல், ஆல்கால், போர்ட்ரான்

9. தஞ்சாவூர் பல்கலைகழகம்

10. நான்கு

11. கணக்கீடு கருவி

12. பல்லூடகம், கணினி சார்ந்த தொழில்நுட்பமாகும். ஒலி, ஒளி, அசைவு, அட்டவணை முதலிய பல்வேறு ஊடகங்களை இணைத்துப் பயன்படுத்துவது பல்லூடகம் ஆகும்.

13.உண்மைக்கு நிகரான தோற்றங்களை அழகூட்டும் கணிப்பொறி கோப்புகளே பட வரைவுகள் எனப்படும்.

## 13.8. பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

1. மொழிக்கற்பித்தலில் மக்கள் தொடர்பு சாதனங்களின் பங்கினை விவரி.
2. கணினி அடிப்படையில் கல்வி கற்றலை விவரி?
3. கணினி துணையுடன் கற்பித்தலை பற்றி கூறுக?

## 13.9. மேலும் பயிலுவதற்கான நூல்கள்

1. பேராசிரியர் வே. கலைச்செல்வி (2013), பொதுத்தமிழ், சஞ்சீவி வெளியீடு ஈரோடு 2013
2. நல்லாசிரியர் இ.பா.வேணு கோபால் (2013) பொதுத்தமிழ் கற்பித்தல், சாரதா பதிப்பகம் 2013
3. பேராசிரியர் சு.தண்டபாணி, பேராசிரியர் வி. தேவ சகாயம் (2009) தமிழ் கற்பித்தல் மீனா பதிப்பகம் மதுரை 2009
4. பேராசிரியர் வி.கணபதி பூ ஜெயராமன் (2010) நற்றமிழ் கற்பிக்கும் முறைகள் சாந்தா பப்ளிஷர்ஸ், சென்னை

*****

# அலகு – 14 - மதிப்பீடு

**பாடஅமைப்பு**

14.1. முன்னுரை
14.2. குறிக்கோள்கள்
14.3. மதிப்பீடு
14.4. தமிழ் கற்பித்தலின் விளைவுகளை மதிப்பிடுதல்
14.5. மதிப்பிடுதலின் நோக்கமும், பயனும்
14.6. நல்ல தேர்வின் இன்றியமையாத கூறுகள்
14.7. தேர்வின் வகைகள்
14.8. வினா வங்கியின் பயன்
14.9. வினாத்தாள் வடிவமைப்பு
14.10. வினா வகைகள்
14.11. தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு
14.11.1. தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டின் பயன்கள்
14.11.2. தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டின் நோக்கம்
14.12. தொகுத்துக் காண்போம்
14.13. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்
14.14. பாடம் பயின்றபின் செய்யும் பயிற்சிகள்
14.15. மேலும் பயில்வதற்கான நூல்கள்

## 14.1 முன்னுரை

கல்வி கற்றல் என்பது தொடர்ந்து நிகழும் செயலாகும். இம்முறையில் ஏற்படும் முன்னேற்றத்தை அளவிடுவதற்கு மதிப்பீடு முக்கிய இடத்தைப் பெறுகிறது. ஆசிரியர், மாணவரின் கற்றலை அளவிடவும், மாணவன் தன் செயல்திறனின் அளவை அளந்தறியவும் மதிப்பீடு துணை செய்கிறது. பாடம் கற்பிக்கும் நோக்கங்களை அறியவும், கற்கும் ஒவ்வொரு நிலையிலும் ஏற்பட்ட தேர்ச்சியை அளந்தறியவும் தேர்வு பயன்படும். இன்று கல்விச் செயல்பாட்டில் தேர்வு என்பது முதன்மை இடத்தைப் பெறுகிறது. தேர்வு என்னும் சொல்லுக்குத் தரத்தை மதிப்பிடல் என்பது பொருள். மாணவனின் முயற்சியையும், போட்டியுணர்வையும் தாண்டி படிப்பில் ஊக்கத்தையும், கவனத்தையும் உண்டாகச் செயவது தேர்வாகும்.

கற்பித்தல் மூன்று நிலைகளை உள்ளடக்கியது.

- இலக்கையும், நோக்கத்தையும் வரையறுத்தல்.

- கற்பிக்க உள்ள பாடப் பகுதிகளையும் தெரிவு செய்தல்
- கற்றபின் அடைவை மதிப்பிடுதல்

குறிப்பு

ஆசிரிய மாணவர்களே! இந்த மூன்று நிலைகளையும் மனதிற் கொண்டோமானால் மாணவர்களை மதிப்பீடு செய்தல் எளிதாக இருக்கும்.

## 14.2 குறிக்கோள்கள்

நீங்கள் இப்பாடத்தைப் பயின்ற பின்னர்,

- கற்பித்தலில் தேர்வு பெறும் இடத்தையும், அதன் பயனையும் விளக்குவீர்கள்.
- தமிழ் கற்பித்தலின் விளைவுகளை மதிப்பிட அளவீடு மற்றும் மதிப்பீட்டின் முக்கியத்துவத்தை உணர்வீர்கள்.
- நல்ல தேர்வுத் தாள் அமைப்பீர்கள்
- தேர்வு வகைகளை விளக்குவீர்கள்.
- வினா வகைகள் பற்றிய தெளிந்த அறிவினைப் பெறுவீர்கள்.
- தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு பற்றி விளக்குவீர்கள்.

## 14.3 மதிப்பீடு

மாணவர்கள் வகுப்பறையிலும், வெளியிலும், கற்றலின் நோக்கத்திலும், வகுப்பறையில் ஆசிரியர்கள் மாணவர்களை உருவாக்கும் செயல்பாட்டிலும் தேர்வு முக்கிய இடம்பெறுகின்றது. கல்வியின் நடைமுறைச் சித்தாந்தமாகத் தேர்வு என்ற சொல் உள்ளது. தேர்வு என்ற சொல்லுக்குத் தரத்தை மதிப்பிடல் என்பது பொருள். இது தேர் என்ற வினையடியாகத் தோன்றிய சொல். இதனோடு தொடர்புடையதாக அளவீடு (Measurement), மதிப்பீடு (Evaluation) என்ற சொற்களும் உள்ளன. ஆனால் இவற்றிற்கிடையே சிறிய வேறுபாடுகளும் உள்ளன. அளந்தறிய உதவும் நிலையை அளவீடு என்பர். அது ஒரு செயலில் காணப்படும் பண்பினை அளந்தறிதலும், செயலில் காணப்படும் திறனை அறிதலும் ஆகும். திறன்கள் குறைவாக உள்ளனவா, அதிகமாக உள்ளனவா என்பதனை அளந்தறிய அளவீடு உதவும். அளவிடப்பட்ட பண்பின் உண்மையை வெளிப்படுத்தும் நிலையை மதிப்பீடு என்பர்.

கற்றல் விளைவைக் கண்டறிய தரம் அல்லது மதிப்பெண் அளிப்பது அளவீடாகும். அதாவது அளந்தறிய உதவும் நிலையை அளவீடு என்பர். கற்றல் விளைவைக் கண்டபின், கிடைத்த முடிவுகளின் அடிப்படையில் கற்றல் நிலைபற்றிய மாணவனின் மனப்பான்மைகள், கவர்ச்சிகள், ஆர்வங்கள், சிந்திக்கும் போக்குகள் ஆகியவற்றைப் பற்றிய கருத்துக்கணிப்பே மதிப்பீடு ஆகும்.

மதிப்பீடு என்பது ஒருவன் பெற்ற மதிப்பெண்களை மாணவர்களின் மதிப்பெண்களுடன் ஒப்பிட்டு அவன் பெற்ற மதிப்பெண்களைப் பற்றிய முடிவிற்கு வருவது ஆகும். உதாரணமாக கலைச் செல்வன் என்பவன் தமிழ்ப் பாடத்தில் 90 மதிப்பெண்கள் பெற்றிருக்கிறான். அவ்வகுப்பில் பெரும்பான்மையான மாணவர்கள் தமிழ்பாடத்தில் 75 லிருந்து 85 வரை பெற்றிருப்பார்களேயானால் கலைச்செல்வன் நல்ல மதிப்பெண் பெற்றிருக்கிறான் என்ற முடிவுக்கு நாம் வரலாம். அதாவது அவன் வகுப்பில் முதல்தரம் பெற்றிருக்கிறான் என்ற உண்மை நிலையினை அறிய முடியும்.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு:அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.**
**ஆ.உமது பதிலைப் பாடத்தின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.**

1. தேர்வு என்ற சொல்லுக்கு………….என்பது பொருளாகும்.
2. அளந்தறிய உதவும் நிலையை ………..என்பர்

## 14.4. தமிழ் கற்பித்தலின் விளைவுகளை மதிப்பிடுதல்

கல்வித்திட்டத்தில் தேர்வு சிறப்பானதொரு பங்கு பெறுகிறது. கல்வித்திட்டம், பாடத்திட்டம், மாணவரின் அறிவு வளர்ச்சி, உடல் வளர்ச்சி, மனப்பான்மை, சிந்திக்கும் திறன், சமூகப்பண்பு போன்றவற்றைக் கண்டறியத் தேர்வுகள் துணைபுரிகின்றன. கற்றலின் மூலம் மாணவரிடையே நடத்தை மாற்றங்கள் எந்த அளவிற்கு ஏற்பட்டுள்ளன, கல்வித்திட்டத்தில் உள்ள ஒவ்வொரு செயலும் இம்மாற்றத்திற்கு துணைபுரிந்துள்ளனவா என்பதனை அளந்தறியத் தேர்வு துணைபுரிகிறது. கல்வித்திட்டத்தின் ஒரு கூறாக தேர்வு உள்ளது. தமிழ் கற்பித்தலுக்கென்று சில நோக்கங்கள் உள்ளன. அவை

- தமிழ் மொழியின் தொன்மை
- சிறப்புகளை அறிதல்
- தமிழ் இலக்கண இலக்கிய வளம் உணரல்

**குறிப்பு**

- ❖ மொழியை பிழையின்றிப் பேச, எழுதப் பழகுதல்.
- ❖ நினைக்கும் கருத்துக்களை இலக்கிய சொல்லாட்சிகளின் மூலம் வெளிப்படுத்துதல் போன்ற நோக்கங்கள் குறிக்கப்பட்டிருக்குமாயின் இவற்றைக் கண்டறியத் தேர்வுகள் துணைபுரிகின்றன.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு:அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுக.**
**ஆ.உமது பதிலைப்பாடத்தின் இறுதியில்கொடுக்கப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு அறிக.**
3.கல்வித்திட்டத்தில் சிறப்பானதொரு பங்கு வகிப்பது எது?

…………………………………………………………………………

…………………………………………………………………………


4.தமிழ் கற்பித்தலுக்கென்று உள்ள நோக்கங்களில் ஏதேனும் இரண்டினைக் கூறுக?

............................................................................................................................

............................................................................................................................

## 14.5. மதிப்பிடுதலின் நோக்கமும், பயனும்

கல்வி முடிவுகள் அனைத்தும் மதிப்பீட்டின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன. கல்வித்துறையின் மூன்று அடிப்படைக் கூறுகளாகிய கல்விக் குறிக்கோள்கள், கற்றலின் செயல்பாடு, மதிப்பீடு ஆகியவை ஒன்றையொன்று சார்ந்தவை. மதிப்பீட்டின் அடிப்படையில் மாறும் தன்மை கொண்டவை. பின்வரும் படத்தைப் பார்க்கவும்.




மாணவர்களைத் திறன் அல்லது சாதனைகளின் அடிப்படையில் வகைப்படுத்த உதவுவது மதிப்பீடு. இது படிப்பில், மீத்திறன்மிக்க மாணவர்கள், மெல்லக்கற்போர், சராசரி மாணவர்கள் என மாணவர்களிடையேயுள்ள பரவலை அறிந்து, அவரவர்க்கேற்ற பாடச் செயல்களைத் தயாரிக்க உதவுகிறது.

- ❖ மாணவர்களின் நடத்தையில் ஏற்படும் மாறுதல்களே இதன் அடிப்படையாகும். இதனைக் கண்டறிய மதிப்பீடு பயன்படுகிறது.
- ❖ மதிப்பீடு தொடர்ச்சியான முழுமை பெற்ற முறையாகும்.
- ❖ கற்பித்தலின் நோக்கங்களே இதன் ஆரம்பமாகும்.

- ❖ கல்விக் குறிக்கோள்களை எய்தப் பெறுவதே இதன் நோக்கமாகும்.
- ❖ மதிப்பிடுதலானது கற்பித்தலை முழுமைப்படுத்துவதாக இருப்பதோடு, பலவற்றை உட்கொண்ட பொதுக்கருத்தாகவும் இருக்கிறது.

**மதிப்பிடுதலின் பயன்**

- ❖ ஒவ்வொரு மாணவனும் பாடப்பொருளை எந்த அளவுக்குக் கற்றிருக்கிறான் என அறியவும், பிற கல்வி இலக்குகளில் எந்த அளவு அவனிடம் முன்னேற்றம் காணப்படுகிறது என்பதனை அறியவும் மதிப்பீடு உதவுகிறது.
- ❖ மாணவர்களுக்குக் கற்றலில் ஏற்படும் இடர்பாடுகளை அறிந்து அவற்றை அகற்ற உதவுகிறது.
- ❖ ஆசிரியர் கற்பித்த பாடப்பொருளின் கருத்துக்களையும் அவற்றை விளக்குவதற்காக அவர் கூறிய எடுத்துக்காட்டுகள் மற்றும் மேற்கோள்கள் போன்றனவற்றையும் அவர்கள் எந்த அளவிற்கு நினைவில் வைத்துள்ளனர் என அளந்தறிய உதவுகிறது.
- ❖ நுண்ணறிவு, ஆளுமை போன்ற காரணிகளின் அடிப்படையில் மாணவர்களை வகைப்படுத்தி அதற்கேற்பக் கற்பித்தலை மாற்றியமைத்துக் கொள்ள முடிகிறது.
- ❖ மாணவர்களின் வெற்றியின் அளவையும், தரத்தையும் ஆசிரியர்கள் எளிதாக அறிந்து கொள்ள மதிப்பிடுதல் பயன்படுகிறது.
- ❖ மாணவர் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் அவர்களை ஊக்குவிக்க மதிப்பிடுதல் உதவுகின்றது. இதனால் மாணவர்களுக்குத் தன்னம்பிக்கை வளர்வதோடு மட்டுமின்றி, அவர்கள் கற்றலில் மேலும் சிறப்படைய உதவுகிறது.
- ❖ பாடஅமைப்பு, கல்வி ஏற்பாடு, பாடத்திட்டங்கள் ஆகியவற்றில் அவ்வப்பொழுது அவசியமான மாறுதல்களைச் செய்வதற்கும் மதிப்பிடுதல் உதவுகின்றது.

குறிப்பு

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**

**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதுக.**

**ஆ. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு ஆராய்க.**

5. மதிப்பீட்டின் இரண்டு நோக்கத்தை கூறுக?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

6. மதிப்பீடு எதை எதைச் சார்ந்தது?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

## 14.6. நல்ல தேர்வின் இன்றியமையாத கூறுகள்/பண்புகள்

ஒரு நல்ல தேர்வு என்பது பின்வரும் பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும்.

**மதிப்பீட்டுக் கருவியின் பண்பு நலன்கள்**

1. ஏற்புடைமை (Validity)
2. நம்பகத் தன்மை (Reliability)
3. புறவயப்பாடு (Objectivity)
4. எளிமைப்பாடு (Simplicity)
5. தர அளவுப்பாடு (Standardization)
6. சமன்பாடு (Equility )
7. ஒருமைப்பாடு (Uniformity)
8. பயன்பாடு (Usage)

**(1) ஏற்புடைமை (Validity)**

எந்தத் திறனை அல்லது பண்பை மதிப்பிட்டறிய ஒரு தேர்வு உருவாக்கப்படுகிறதோ அந்தப்பண்பினைத் துல்லியமாக மதிப்பிட்டால் அத்தேர்வு ஏற்புடையது எனலாம். ஏற்புடைமை என்பதை உண்மை நிலையுணர்த்தும் தன்மை எனலாம்.

**(2) நம்பகத் தன்மை (Relaibility)**

ஒரு குறிப்பிட்ட மாணவர் குழுவிற்கு ஒரு தேர்வினை மீண்டும் மீண்டும் கொடுத்தாலும் அவர்கள் அளிக்கும் விடையின் தரம் மாறாமலிருந்தால் அத்தேர்வு நம்பகத்தன்மையுடையது எனலாம். நம்பகத்தன்மை ஏற்பட வேண்டுமானால் தேர்வுத்தாள் தயாரிப்பில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

**(3) புறவயப்பாடு (Objectivity)**

தேர்வு முடிவுகள் தேர்வாளர்களின் மனப்போக்கிற்கேற்ப மாறுபடாமலிருத்தலே புறவயத்தன்மை எனப்படும். ஒரே தேர்வாளர் ஒரு

தேர்வை பலமுறை மதிப்பிட்டாலும் அல்லது பல தேர்வாளர்கள் ஒரு தேர்வை மதிப்பீடு செய்தாலும் தேர்வு முடிவுகள் மாறாமலிருத்தல் என இதனை விளக்கலாம். இதில் மதிப்பீடுமுறை (Scoring key) முன்னதாகவே தீர்மானிக்கப்பட்டுவிடும். ஒரு தேர்வில் புறவயப்பாடு பேணப்பட வேண்டுமாயின்,

1. மதிப்பெண் தெளிவாகச் சுட்டப்படல்
2. புறவயப்பட்ட வினாக்கள் மட்டும் அளிக்கப்படல்
3. திட்டமிடப்பட்ட விடைக்குறிப்பு
4. வரையறை செய்யப்பட்ட மதிப்பீட்டு முறை
5. தேர்வாளரின் மதிநுட்பம்

ஆகியன சிறப்பாக அமைதல் வேண்டும்.

### 4. எளிமைப்பாடு (Simplicity)

மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் எளிமையானதாக அமையும் வகையில் தேர்வு அமைப்பு இருக்க வேண்டும். விரைவாகவும், துல்லியமாகவும், இயல்பாகவும் எழுதும் வகையில் வினாவடிவமைப்பு இருக்க வேண்டும். தேர்வானது மாணவர்கள் எழுதுவதற்கும், ஆசிரியர்கள் நடத்தி மதிப்பிடுவதற்கும் ஏற்ற வகையில் எளிமையாக அமைய வேண்டும்.

### 5. தர அளவுப்பாடு (Standardization)

மாணவர்களிடையே பல்வேறு சமயங்களில் பிற பள்ளிகளில், பல்வேறு தேர்வாளர்களால் கேட்கப்பட்ட வினாக்களைத் தொகுத்து, ஒப்புநோக்கி, நிலைப்படுத்தப்பட்ட வினாக்களுக்குத் தர அளவுப்பாடு வினாக்கள் என்று பெயர். ஒரே தர வகுப்பில் பயிலும் பல்வேறு பள்ளிகளின் மாணவர்கள் ஒரே மாதிரியாக விடை எழுதக்கூடிய வினாக்களே தர அளவுப்பாடு வினாக்கள் எனப்படும்.

### 6. சமன்பாடு (Equility )

வேகமாகக் கற்போர், மெதுவாகக் கற்போர், சராசரி மாணவர்கள் ஆகிய மூவருக்கும் ஏற்ற வகையில் சமமாக எழுதுவதற்கு வாய்ப்பு அளிக்கும் விதத்தில் அமையும் வினாத்தாளை அல்லது தேர்வை சமன்பாடு உடையதெனலாம்.

### 7. ஒருமைப்பாடு (Uniformity)

பாடப்பகுதியில் அனைத்துப் பகுதியிலிருந்தும், சமமான மதிப்பெண் அமையுமாறு வினாத்தாள் கொடுப்பதையே ஒருமைப்பாடு என்கிறோம். இவ்வாறு அமைந்தால்தான் மாணவர்கள் எந்தவொரு பாடப்பகுதியையும் விட்டுவிடாது, விலக்காது படிக்க வாய்ப்பு நேரிடும்.

**குறிப்பு**

**8. பயன்பாடு (Usage)**

தேர்வு நடத்தும் முன் எந்த நோக்கத்திற்காகத் தேர்வு நடத்தப்படுகிறது என்பதைத் திட்டமிட்டு அந்நோக்கம் நிறைவேறும் வகையில் தேர்வு அமைக்கப்பட வேண்டும். எனவே ஒரு தேர்வு மாணவருக்கும், ஆசிரியருக்கும் பயனளிக்கும் வகையில் அமைவதே அத்தேர்வின் பயன்பாட்டுத் தன்மை ஆகும்.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதுக.**
**ஆ.உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு ஆராய்க**

7. நல்ல தேர்வின் இன்றியமையாமைப் பண்புகள் யாவை?

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

8. ஏற்புடைமை என்னும் பண்பில் அடங்கியுள்ள கூறுகள் யாவை?

……………………………………………………………………………………

……………………………………………………………………………………

## 14.7. தேர்வின் வகைகள்

தேர்வுச் சீர்திருத்தத்தின் தேவை உணரப்பட்டு புதுமுறைத் தேர்வுகள் மொழிப்பாடத்தில் புகுத்தப்பட்டன. இவ்வகையில்

அ. அடைவுத்தேர்வு

ஆ. மொழிவல்லமைத் தேர்வு

இ. குறையறித் தேர்வு

ஈ. புறவயத் தேர்வு

இந்நான்கு தேர்வுகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

**(அ)அடைவுத்தேர்வு**

'அடைவு' என்ற சொல் ஒரு குறிப்பிட்ட பாடத்தில் மாணவன் அடைந்துள்ள அறிதிறன், மொழித்திறன் போன்றவற்றில் அடைந்துள்ள சாதனையைக் குறிக்கும். "டென்னிஸ் பேரன்" மற்றும் 'ஹெரால்டு பெர்னார்டு' குறிப்பிடுவது போல ஒரு மாணவனின் அடைவு அவன் கற்றலில் செலுத்திய நாட்டம், கற்றலுக்கான ஆயத்தநிலை, கற்றலுக்கான வாய்ப்புகள் ஆகிய இம்மூன்றின் விளைவில் ஏற்பட்ட சாதனையைக் குறிக்கும். மேல்வகுப்புப் படிப்பையும் எதிர்கால வாழ்வையுங்கூட இது தீர்மானிக்கிறது.

"சூப்பர்" என்ற கல்வியாளர் கூறும் கருத்தை ஈண்டு நினைத்தல் நன்று. ஒரு பாடத்தை ஒரு மாணவன் எந்த அளவிற்குக் கற்றுக்

கொண்டுள்ளான் என்பதனை அடைவுத்தேர்வு தீர்மானிக்கிறது. கடந்த காலத்தில் அவன் பெற்ற அறிவுத்திறனை அறியவும் எதிர்கால வாழ்வைச் செயல்படுத்தவும் துணை புரிகிறது.

**அடைவுத்தேர்வின் வகைகள்**

நடைமுறையில் பயன்படுத்தப்படும் அடைவுத்தேர்வுகள் இரண்டு வகைப்படும். அவை

**அடைவுத்தேர்வு**

**ஆசிரியரால் உருவாக்கப்பட்டது**   **நிலைப்படுத்தப்பட்டது**

ஆசிரியர் அவரவர் நடத்தும் பாடத்தில் அவர்கள் மேற்கொள்ளும் தேர்வு ஆசிரியரால் உருவாக்கப்படும் அடைவுத்தேர்வு எனப்படும். இது ஆசிரியருக்கு ஆசிரியர் வேறுபடும். இத்தேர்வு மாணவனது கற்றலை அளவிடும் கருவியாகும். கற்பித்தலில் தேவைப்படும் மாற்றங்களை உணர்த்தும் வழிகாட்டியாகவும் இத்தேர்வு அமையும். இது வாய்மொழித்தேர்வு, எழுத்துத்தேர்வு என இருவகைப்படும். மற்றொன்று தரப்படுத்தபட்ட தேர்வு ஆகும்.

**ஆசிரியரால் உருவாக்கப்படும் தேர்வுகள்**

**1. வாய்மொழித் தேர்வு (Oral Test)**

ஆசிரியர் மாணவனிடம் வாய்மொழியாக வினாக்களைக்கேட்டு விடைபெறுதலை வாய்மொழித்தேர்வு என்பர். இது பழைமையான தேர்வு முறையாகும். தேர்வின் பயன் வெளிப்படையானது. தொடக்க வகுப்பில் மேற்கொள்ள வேண்டியது. மாணவனின் அறிதிறனை உடனுக்குடன் அறிய வாய்ப்பு ஏற்படுகிறது. மாணவர்களின் நேரிடையான பங்கேற்பு ஏற்படுகிறது.

**வாய்மொழித் தேர்வின் நிறைகள்**

- ❖ பாடப்பகுதி முழுமையிலும் வினாக்கள் கேட்கலாம்.
- ❖ மாணவனின் மொழியாற்றல் அறிதிறனை உடன் அறியலாம்.
- ❖ மாணவனின் கூச்ச சுபாவம் குறையும், ஆர்வம் பெருகும்.
- ❖ வினாக்கள் புரியவில்லையெனில் உடனுக்குடன் மாற்றிக்கொள்ளலாம்.
- ❖ ஆர்வமுள்ள, ஆர்வம் குறைந்த மாணவர்களைக் கண்டறியலாம்.

மதிப்பீடு

**குறிப்பு**

**வாய்மொழித் தேர்வின் குறைகள்**

- ❖ மாணவர்கள் அனைவரையும் ஒட்டுமொத்தமாக மதிப்பிட முடியாது.
- ❖ நம்பகத்தன்மை குறைவாக இருக்கும்.
- ❖ முறையான வினாக்கள் இடம் பெறும் வாய்ப்பு குறைவு.
- ❖ ஆசிரியரின் சுயவெறுப்பு விருப்பிற்கேற்ப மதிப்பீடு மாறும் வாய்ப்புள்ளது.
- ❖ கூச்ச சுபாவமுள்ள மாணவர்கட்குத் தாழ்வு மனப்பான்மை ஏற்படும்.

**2. எழுத்துத்தேர்வு (Written Test)**

மாணவரின் அறிவினை மதிப்பிடப் புறவயத்தேர்வு, சிறுவிடைத்தேர்வு, கட்டுரை விடைத்தேர்வு போன்றவற்றை பயன்படுத்துவது எழுத்துத்தேர்வு எனலாம்.

**எழுத்துத்தேர்வின் நன்மைகள்**

- ❖ முன்பே முறையாகத் தயாரிக்கப்பட்ட வினாக்கள் புறவயம், நம்பகம் போன்ற பண்புகளைப் பெற்று விளங்கும்.
- ❖ மாணவர்கள் எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லாமல் சுதந்திரமாகக் கருத்து வெளியிட வாய்ப்பு ஏற்படுகிறது.
- ❖ மாணவன் முழுமையான ஆயத்த நிலையுடன் தேர்வு எழுத வருகின்றான்.
- ❖ மாணவர்களின் நினைவாற்றல், எழுத்துத்திறன் மேம்பாடு அடைகிறது.
- ❖ மதிப்பீடு சரியாக அமையும்.

**எழுத்துத்தேர்வின் தீமைகள்**

- ❖ மாணவர்களின் மனப்பாடத் திறனை மட்டும் அறிய முடியும். மற்ற திறனை அறிய முடியாது.
- ❖ மாணவரின் தரத்தைத் துல்லியமாக அறிய முடியாது.
- ❖ பாடப்பகுதி முழுவதையும் வினவ முடியாது.
- ❖ கட்டுரைத்தேர்வில் நம்பகத் தன்மை குறைவாக இருக்கும்.
- ❖ மதிப்பீட்டில் புறவயத்தன்மை குறைய வாய்ப்புள்ளது.

இக்குறைபாடுகள் நிவர்த்தி செய்யக்கூடியவையே. தேர்வு எழுதுவோரின் தொகை பெருகிவரும் இந்நாளில் சிலவகைத் தேர்வு சாத்தியமான ஒன்றாக உள்ளது.

**தரப்படுத்தப்பட்ட தேர்வுகள் (அல்லது) நிலைப்படுத்தப்பட்ட தேர்வுகள் (Standardized Test)**

ஓர் ஆசிரியரால் நடத்தப்பெற்ற தேர்வு அதே வகுப்பிற்கு வேறொரு ஆசிரியரால் ஏற்பாடு செய்யப்படும் பொழுது இரு தேர்வுகளிடையே வேறுபாடு காணப்படுகிறது. சில நேரங்களில் அதே ஆசிரியர் கால இடைவெளிக்குப்பின் அதே தேர்வை மீண்டும் தயாரிக்கும் பொழுதும் வேறுபாடு காணப்படுகிறது. ஆசிரியரின் சூழலால் இம்மாற்றங்கள் தோன்றுகின்றன. ஒரு வகுப்பிற்கு ஒரே மாதிரி பாடம் இருக்கும் பொழுது, தேர்வு அமைப்பும் ஆளுக்கு ஆள் மாறுபடாமலும், காலத்திற்குக் காலம் மாறுபடாலும் இருக்கத் தேர்வுகள் முறைப்படுத்தப்பட்டன. இதனை நிலைப்படுத்தப்பட்ட தேர்வுகள் என்பர்.

**படிநிலைகள்**

இவ்வகைப்பட்ட வினாத்தாளை உருவாக்கும் பொழுது கீழ்கண்ட படிநிலைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

1. பாடப்பகுதியின் எல்லையை நன்கறிந்து பாடப்பகுதியை வகைப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.
2. எந்த நோக்கத்திற்காகத் தேர்வு அமைக்கப்படுகிறது என்பது நிர்ணயிக்கப்படல் வேண்டும்.
3. கேள்வியின் எண்ணிக்கை, வகை தீர்மானிக்கப்படல் வேண்டும்.
4. முறையாக வினாத்தாளை வரையறுக்க வேண்டும்.
5. வினாக்களின் குறிப்புகளைத் தெளிவாக அமைத்தல் வேண்டும்.
6. முதலில் தயாரிக்கப்பட்ட வினாத்தாளை ஒரு குழுவினருக்கு அளித்து எழுதச் செய்தல் வேண்டும்.
7. முறைமைத் தகுதிப்பாடு, நம்பகம் இரண்டும் எவ்வகையில் அமைந்துள்ளன என்பதனை உறுதி செய்தல் வேண்டும்.
8. வினாத்தாளில் திருத்தங்கள் தேவைப்படின் அதைச் செய்து நிறைவான வினாத்தாளை அமைத்தல் வேண்டும்.
9. திருத்தம் செய்யப்பட்ட வினாத்தாளை எல்லோருக்கும் அளித்து வினாவின் கடுமை, எளிமை ஆகியவற்றை உணர்ந்து, தேவைப்படின் அவற்றிற்கேற்ப மாற்றம் செய்தல் வேண்டும்.
10. வினாத்தாளின் இறுதி வடிவை உறுதி செய்தல் வேண்டும்.

ஆசிரியரால் உருவாக்கப்படும் தேர்வைவிடத் தரப்படுத்தப்பட தேர்வுகள் சிறப்புடையனவாக அமையும்.

மதிப்பீடு

**குறிப்பு**

**(ஆ)மொழி வல்லமைத் தேர்வு**

மொழிப்பாடம் ஒரு திறன் பாடம். பாடப் பொருளறிவு அறிதலோடு கேட்டலும், பேசுதலும் கற்பித்தலின் நோக்கமாக அமைகின்றன. தேர்வு இத்திறன்களின் மேம்பாட்டையும் அளந்தறியும் வகையில் அமைதல் வேண்டும். கதைகள் கூறல், பாடல்களைப் பாடல், நடித்துக்காட்டுதல், செய்திகள் கூறுதல், சுருங்கச்சொல்லல், சொற்பொழிவுகள் செய்தல், கருத்தரங்குகள், பட்டிமன்றம், வழக்காடு மன்றம் பங்கேற்பு போன்ற சூழல்களின் மூலம் மாணவரின் பேச்சுத்திறனை மதிப்பிடல் வேண்டும். இம்மதிப்பீடு அக மதிப்பீடாகவும் அமையலாம். பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, கவிதைப்போட்டி போன்ற போட்டிகள் நடத்தியும் அமைக்கலாம்.

மாணவரின் எழுதும் திறனைக் கண்டறியும் வகையில் தேர்வு அமைய வேண்டும். எழுத்தில் தெளிவு, எளிமை, விரைவு ஆகியவை வேண்டும். சிறந்த சொல்லாட்சிகளைப் பயன்படுத்துதுல், இலக்கிய மேற்கோளிடல் போன்ற திறன்களை மதிப்பிட வேண்டும். மொழியின் இலக்கியத்தில் காணப்படும் கருத்து நயமும், உரைநடையில் காணப்படும் கருத்து நயமும், இலக்கியம் பேச எழுதப் பயன்படும் இலக்கண அறிவும், அகன்ற படிப்பை வளர்க்கும் துணைப்பாடமும், எழுத்துப் பயிற்சியை மேம்படுத்தும் கட்டுரையும் மொழி வல்லமைத் தேர்வின் கருவிகளாக நின்று மாணவரின் வளர்ச்சியை மேம்படுத்தும்.

மொழியைப் பிழையின்றிப் பேச எழுதப் பழகுதல் வேண்டும். இலக்கண நூல்கள் இதற்கு துணைபுரிகின்றன. உதாரணமாக,

1. தொடர் இரண்டு வகைப்படும். எச்சத் தொடர், முற்றுத் தொடர்.

   **எ.கா. - கண்ணனும் இராமனும் பள்ளிக்குச் சென்று**

   இதில் கருத்து முற்றுப் பெறாமல் உள்ளது. மாணவர்கள் கருத்தை முற்றுப்பெறச் செய்யலாம்.

2. சொல்லாட்சிகளைப் பயன்படுத்தலில் குறைபாடுகள் அறிந்து உணரல்

**எ.கா.**

மாட்சிமை = மாட்சி

கோர்வை - கோவை

ஓண்டியார் = ஒன்றியாய்

3. இணையான தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தல்.

**எ.கா.**

Treasury - கருவூலம்

Epigraph - கல்வெட்டு

Proof - அச்சுப்படி

4. கவிதையின் இலக்கிய நயம் உணரச் செய்தல்.
5. கலைச் சொல்லாக்கப் பயன்பாடுகளை உணர வைத்தல்.

இவை போன்ற மொழி வல்லமைத் தேர்வுகளை உருவாக்கி மொழியாற்றலைத் தேர்வு செய்ய வேண்டும்.

**நிறைகள்**

1. மொழியின் தன்மையை உணர்கிறான்.
2. மொழியின் ஆற்றலை வகைப்படுத்திக் கொள்கிறான்.
3. பிழையின்றிப் பேசவும் எழுதவும் கற்றுக் கொள்கிறான்.
4. படைப்பாக்க முயற்சிகளில் நாளும் ஆர்வம் பெருக்கிக் கொள்கிறான்.
5. மொழித்திறன் உணரல் மூலம் மரபுத் தொடர், பழமொழிப் பயன்பாடுகளை உணர்கிறான்.
6. பேசுதல், எழுதுதலில் உள்ள கூச்ச நிலையை நீக்கிக் கொள்கிறான்.

**குறைகள்**

1. போதுமான தனிக்கவனம் இல்லையேல் வளர்ச்சி தோன்றாது.
2. எல்லா மாணவர்களும் இதில் தனிக்கவனம் செலுத்துவர் என்று கூற இயலாது.

## (இ) குறையறித் தேர்வு (Diagnostic Test)

மாணவர்கள் கற்றலில் ஈடுபடும்பொழுது அவர்களுக்கேற்படும் குறைகளைக் கண்டறிய உதவும் தேர்வு குறையறித் தேர்வு எனப்படும். குறை அறிதல் என்பது மருத்துவத் துறையில் பரவலாகப் பயன்படுத்தும் சொல்லாகும். நோயாளியின் உடல்நோயைக் கண்டறிந்து அதற்குரிய சிகிச்சை முறையை மேற்கொள்வதனை இது குறிக்கும். அதுபோலக் கற்றலில் ஒரு மாணவரிடம் ஏற்படும் குறைகளைக் கண்டறிந்து, அவற்றை நீக்க ஆசிரியர் மேற்கொள்ளும் முறைகளைக் ‘குறையறி’ என்ற தொடர் குறிக்கும்.

தமிழ்மொழிப்பாடம் கற்றலில் பொதுவாக,

1. ஒற்றுப் பிழைகள்

மதிப்பீடு

குறிப்பு

2. எழுத்துப் பிழைகள்
3. சொற்பிழைகள்
4. ஒருமை பன்மை மயக்கத் தொடர்ப் பிழைகள்
5. திணையில் எண் முடிவுகளிற் காணப்படும் பிழைகள்
6. நிறுத்தக் குறியீடுகளைப் பயன்படுத்தாமை
7. கருத்துக்களை நிரல்பட எழுதத் தெரியாமை
8. பத்திபிரித்து எழுத அறியாமை
9. பொருத்தமான தலைப்பிடத் தெரியாமை
10. முன்னுரை முடிவுரை எழுதும் முறைமை தெரியாமை

போன்ற பல்வேறு பிழைகள் இயல்பாகத் தோன்றுகின்றன. இவற்றைப் போக்கும் முயற்சியில் ஆசிரியர் ஈடுபடவேண்டும்.

**குறையறிதலின் படிநிலைகள்**

மாணவர்களிடம் காணப்படும் குறைகளை அறிதலில் பல படிநிலைகள் உள்ளன.

1. குறையுள்ள மாணவர்களை வகைப்படுத்தல்.
2. அவர்களிடம் காணப்படும் குறைகளின் இயல்புகளைக் கண்டறிதல்.
3. குறைகள் தோன்றுவதற்குரிய காரணங்களைக் காணல்.
4. குறைகள் நீக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
5. மீண்டும் அக்குறைகள் தோன்றாது தடுத்தல்.

குறைபாடுள்ள மாணவர்களை ஆசிரியர் கண்டறிய வேண்டும். குறைபாடுகளைக் களைந்தெறிவதற்குரிய வழிமுறையை நாடல் வேண்டும். இதற்கு மொழிப்பயிற்சிகள் அளித்தல் வேண்டும். ஒற்றுப்பிழைகள் நீங்க எழுத்துப் பயிற்சிகள் வேண்டும்.

சில எடுத்துக்காட்டுகள்:

1. ணகர, னகர வேறுபாடுகளால் பொருள் வேறுபடுதல்.
   பணி - தொண்டு, தணி - தண்மை, குளிர்ச்சி
   பனி - குளிர், தனி - ஒற்றை
2. லகர ளகர ழகர வேறுபாடுகளால் பொருள் வேறுபடுதல்
   வால் - நாயின் வால் - ஓர் உறுப்பு.
   வாள் - உடைவாள் - ஒரு கருவி.
   வாழ் - பல்லாண்டு வாழ்க என வாழ்த்துதல்.
3. ரகர றகர வேறுபாடுகளால் பொருள் வேறுபடுதல்.
   அறம் - தர்மம். அரம் - ஒரு கருவி.

சொற்பிழைகளும் திருத்தங்களும்

| **பிழை** | | **திருத்தம்** |
|---|---|---|
| கோடாலி | - | கோடரி |
| பதட்டம் | - | பதற்றம் |
| சுவற்றில் | - | சுவரில் |
| வெத்திலை | - | வெற்றிலை |

4. தொடர்ப் பிழைகளும் திருத்தங்களும்.

பேருந்துகள் ஓடாது – பேருந்துகள் ஓடா.

**நிறைகள்**

1) மாணவர்களின் குறைபாடுகளை அறிய முடிகின்றது.
2) பின்தங்கிய மாணவர்களைக் கண்டறியவும் அவர்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபடவும் வாய்ப்பு ஏற்படும்.
3) குறைகள் கோடிடலின் மூலம் தேர்ச்சி மேம்படும்.
4) எந்தப் பகுதியில் மேலும் கற்பிக்க வேண்டும் என்ற நிலை தோன்றிட வாய்ப்புள்ளது.
5) கற்பித்தல் முறைகள், கற்பித்தல் கருவிகள், கற்றல் வழிகள் போன்றவை மேன்மையடைய இவ்வகைத் தேர்வுகள் வழி நல்குகின்றன.

**குறைகள்**

1. மாணவர்கள் பெரும் எண்ணிக்கையில் உள்ளபொழுது குறைகளைக் கண்டறிவதன் நடைமுறைச் சாத்தியம் குறைவாகக் காணப்படும்.
2. நன்மைகள் அதிகமாக உள்ளதால், குறைகளைத் தீர்த்தலில் ஈடுபடுவதுபோல் வருமுன் காக்கும் வழிமுறையிலும் ஈடுபட வேண்டும்.

## குறைதீர் பயிற்சி

### குறைதீரக் கற்பித்தல் (Remedial Teaching)

கற்றல் இடர்பாடுகளைக் கண்டறிந்த பிறகு, அவற்றைத் தீர்ப்பது ஆசிரியரின் கடமையாகும். ஒவ்வொரு மாணவருடைய குறைகளுக்கேற்ப குறைதீரக் கற்பித்தலைத் திட்டமிட வேண்டும். எனவே இது தனியாள் வேற்றுமைக்கு ஏற்ப அமையும். இப்பயிற்சி பள்ளி வேலை நேரம் முடிந்த பிறகு அளிக்கப்பட வேண்டும்.

குறைதீர்க்கும் பயிற்சிகள்

1. மாணவனுக்குக் கற்றல் இடர்பாடுகள் உள்ள பாடப்பகுதியை மீண்டும் கற்பித்தல்.

**குறிப்பு**

2. தனிப்பட்ட கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்துதல்
3. புதிய கற்பித்தல் வழிமுறைகள் மற்றும் நுட்பங்களையும் பயன்படுத்திப் பாடங்களைக் கற்பித்தல்.
4. எளிய சோதனைகள், செயல்திட்டங்கள், மாதிரி உருவங்கள் கருத்துப் படங்களைக் கொண்டு கற்பித்தல்.
5. எளிய வீட்டு ஒப்படைப்புகளை அளித்து மாணவர்கள் மறுநாள் செய்து முடித்துள்ளனரா என்று மேற்பார்வையிடுதல்.
6. மாணவர்களின் மொழிப்பிழைகள் கண்டறியப்பட்டு அக்குறைகளைக் களைய மொழிப் பயிற்சிகள் அளித்தல்.
7. ஒற்றுப்பிழைகள், எழுத்துப் பிழைகள், சொற்பிழைகள், ஒருமை பன்மை மயக்கப் பிழைகள், திணை, பால், எண் முடிவுகளில் காணப்படும் பிழைகள், நிறுத்தற்குறிகளைப் பயன்படுத்துவதில் காணப்படும் பிழைகள் ஆகியவற்றைக் கண்டறிந்து விளக்கி நீக்குதல்.

சில நாடுகளில் பாட ஆசிரியர்களோடு குறை தீர்க்கும் ஆசிரியர்களும் இருக்கின்றனர். ஒரு பாட அலகினை பாட ஆசிரியர் நடத்தி முடித்த பிறகு, குறை தீர்க்கும் ஆசிரியர் அப்பாடத்தில் குறையறிச் சோதனையை நடத்துவார். கிடைக்கும் முடிவுகளுக்கேற்ப அவர் மீண்டும் குறைதீரக் கற்பிப்பார்.

**(ஈ) புறவயத் தேர்வு**

தேர்வுச் சீர்திருத்தத்தின் அடிப்படையில் தோன்றிய நவீன கண்டுபிடிப்பு புறவயத் தேர்வாகும். வங்கித் தேர்வுகளில் அதிகமாக அதனைப் பயன்படுத்தி, இதன் வெற்றி நன்குணரப்பட்டது. தற்சமயத்தில் பி.எட்., நுழைவுத் தேர்வில் இம்முறை கடைப்பிடிக்கப்படுகிறது. பள்ளி மற்றும் கல்லூரிக் கல்வியிலும் இன்று பரவலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மதிப்பீடு துல்லியமாகவும், சரியாகவும் அமைய வாய்ப்புள்ளது. மதிப்பீடு, மதிப்பீடு செய்வோன் மனநிலைக்கு ஏற்ப மாறாத் தன்மையை உருவாக்குகிறது. இத்தேர்வுகளில் மதிப்பீட்டுக் கோல் (Key) முன்கூட்டியே தயாரிக்கப்படுவதால் சரியான விடை எது, தவறான விடை எது என்பது முன்கூட்டியே தீர்மானிக்கப்படுகிறது. இதில் சோதனையாளரின் விருப்பு வெறுப்பிற்கு இடமில்லை.

**எ.கா:**

1. சரி/தவறு என்ற நிலையில் விடையளித்தல்.

ஆசிய சோதி என்ற நூல் கவிமணியால் இயற்றப்பட்டது. (சரி/தவறு)

2. கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்தல்

கல்கத்தாவில் ………………..நூலகம் உள்ளது

3. பலவுள் தேர்வு வினாக்கள்

.உலகப்பொதுமறை என்று போற்றப்படும் நூல்

1. சிலப்பதிகாரம்
2. திருக்குறள்
3. நாலடியார்
4. பொருத்துக

1. வீரம் x துன்பம்
2. மகிழ்ச்சி x வேற்றுமை
3. ஒற்றுமை x கோழைத்தனம்

இவை போன்ற புறவய வினாக்களை மொழிப்பாடத்தில் பயன்படுத்தலாம்.

**புறவயத் தேர்வின் நிறைகள்**

1. ஒவ்வொரு வினாவிற்கும் தெளிவான விடை கிடைப்பதால் மதிப்பீடு சரியாக அமையும்.
2. விடை எழுதுவதில் மொழி நடை வேறுபாடு தோன்றாது.
3. விடைகள் குறைவாக இருப்பதால் பரவலான வினாக்கள் கேட்க முடியும்.
4. பாடப்பகுதி முழுவதிலும் வினாக்கள் கேட்கப்படலாம்.
5. மனப்பாடத் திறனைவிடச் சிந்திக்கும் திறன் மேம்படும்.
6. மதிப்பீட்டில் நம்பகம் மேம்படும்.
7. விடை எழுதுவதில் கிறுக்கல், அடித்தல் திருத்தல் போன்றவை தோன்றா.
8. மாணவர்கள் அதிக மதிப்பெண் பெற வாய்ப்பு உள்ளது.
9. கணிப்பொறி போன்ற இயந்திரங்களாலும் மதிப்பிடமுடியும்.

**குறைகள்**

1. மாணவர்களின் மொழித்திறனை அறிய வாய்ப்பில்லை.
2. கருத்துக்காகக் கோர்வையாக்கும் வாய்ப்புக் குறைவு.
3. வினாத்தாள் தயாரித்தலில் அதிக நேரம் பிடிக்கும்.
4. மாணவர்களின் மதிப்பெண் குறையவும் வாய்ப்பு உள்ளது.
5. மாணவர்களின் படைப்பாற்றல் பெருக வாய்ப்பில்லை.

குறிப்பு

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதுக.**
**ஆ. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு ஆராய்க**
9. அடைவுத்தேர்வின் இருவகைகள் யாவை?
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
10. வாய்மொழித்தேர்வின் நிறைகள் யாவை?
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………

## 14.8. வினா வங்கியின் பயன்

தேர்வுச்சீர்திருத்தம் தேவை என்பது உணரப்பட்ட பொழுது வினாவங்கி முறை தோன்றியது. தேர்வுத்தாள் தயாரிப்பில் குறைபாடுகள் பல கூறப்பட்டன. ஒரே பாடத்திற்குப் பல ஆசிரியர்கள் தயாரிக்கும் வினாத்தாளில் ஒருமை காணப்படவில்லை. எனவே பாடப்பகுதியை மையமாகக் கொண்ட வினாக்கள் இவைதான் என்பது மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்படுதல் வேண்டும் என்ற விளைவால் வினாவங்கி தோன்றியது. பல்வேறு இடங்களில் பணியாற்றும் ஆசிரியர்களிடமிருந்து பாடப்பகுதி சாந்த வினாக்கள் வரவழைக்கப்பட்டு அவை தொகுக்கப்பட்டு தேவையான வினாக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அச்சிடப்பட்டு மாணவர்கட்கும் ஆசிரியர்கட்கும் பயன்படும் வகையில் வினாவங்கி உருவாக்கப்படுகிறது.

- ❖ வினா வங்கியால் கற்றலும், தேர்வில் மாணவர்கள் ஈடுபடும் பொழுது இந்தக் கேள்வி இவ்வாறு அமையுமோ, அவ்வாறு அமையுமோ என்ற குழப்பமும் குறைகின்றன.
- ❖ எல்லா மாணவர்கட்கும் ஒரே மாதிரியான வினாக்கள் கிடைக்கின்றன.
- ❖ தேர்வுச்சுமை குறைந்து ஆர்வம் பெருக வாய்ப்பு ஏற்படுகிறது.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதுக.**
**ஆ.உமது பதிலைப்பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு ஆராய்க**
11. வினா வங்கி எவ்வாறு உருவாக்கப்படுகிறது?
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………

## 14.9. வினாத்தாள் வடிவமைப்பு

இது தேர்வில் சேர்க்கப்படும் பாடங்கள், அளவிடப்படும் நோக்கங்கள் ஒவ்வொரு நோக்கத்திற்கும் தேர்வில் கொடுக்கப்பட்டுள்ள இடம் ஆகியவற்றைக் குறிக்கும் ஓர் அட்டவணையாகும்.

**கேள்வித்தாள் வரையும் முறை (Blue Print)**

கட்டடம் கட்டுவதற்கு முன் எப்படிக் கட்ட வேண்டும், எத்தனை பகுதிகள் இடம் பெற வேண்டும், நீளம், அகலம் எவ்வளவு இருக்க வேண்டுமென்று அக்கட்டடம் பற்றிய அனைத்துச் செய்திகளையும் விளக்கும் வரைபடத்தினைக் கட்டட வரைபடம் என்று கூறுவது போலத் தேர்விற்குரிய வினாத்தாளை உருவாக்கும் பொழுது எவை எவை எப்படி மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற வழிகாட்டுதலைக் கேள்வித்தாள் வரைவு அல்லது வினாத்தாள் வடிவமைப்பு (Blue print) உணர்த்தும். வினாத்தாள் வடிவமைப்பின் போது கீழ்காணும் கருத்துக்களை மனதில் கொள்ள வேண்டும்.

- ❖ வினாத்தாள் எந்த வகுப்பிற்குரியது என்றும் அவ்வகுப்பில் எந்தப் பாடத்திற்குரியது என்றும் உணரல் வேண்டும்.
- ❖ தேர்வு எழுதும் காலம், வழங்கப்பட வேண்டிய மதிப்பெண்கள் எவை என்ற முடிவு வேண்டும்.
- ❖ எவ்வெவ்வினாக்களுக்கு எத்தனை எத்தனை மதிப்பெண்கள் உரியன என்பது குறிப்பிடப்பட வேண்டும்.
- ❖ வினாக்களில் புறவயவினா, குறுவிடைவினா, கட்டுரை விடை வினா போன்ற பகுப்புகளை அறிதல் வேண்டும்.
- ❖ தமிழ்ப்பாட வினாத்தாளில் செய்யுள், உரைநடை, இலக்கணம், கட்டுரை, துணைப்பாடம் என்ற ஐந்து பாடங்களும் உரிய இடம் பெறும் வகையில் அமைத்தல் வேண்டும்.
- ❖ தேர்வு வினாவில் Choice பற்றிய குறிப்புகள் தெளிவாக விளக்கப்படல் வேண்டும்.
- ❖ மாணவர்கள் தேர்வு எழுதத் தேவையான குறிப்புகள் வினாத்தாளில் விளக்கமாக அமைத்தல் வேண்டும்.
- ❖ வினாத்தாளுக்குரிய விடைக்குறிப்புகளை வினா தயாரித்தவர் தருதல் வேண்டும்.

இக்கருத்துக்கள் நன்கு திட்டமிடப்படுவதால் வினாக்கள் பாடப்பரப்பை விட்டுச் செல்லாமல் தடுக்கப்படுகின்றன. மதிப்பீட்டு முறை நன்கு திட்டமிடப்படுகிறது. வினாத்தாள் தகுதி வாய்ந்த தேர்வுக் கருவியாக அமைகிறது.

குறிப்பு

## தமிழ் வினாத்தாள்

மொழித்தாள் வினாவடிவமைப்பு ஏனைய பாடவினா வடிவமைப்பிலிருந்து சற்று வேறுபட்டுத் தோன்றும். தமிழில் செய்யுள், உரைநடை, இலக்கணம், கட்டுரை, துணைப்பாடம் என்ற ஐவகைப் பாடங்களும் தனித்தனியே இடம் பெறும் வகையில் வினாத்தாள் வடிவமைக்கப்பட்டிருக்க வேண்டும். இவற்றிற்குரிய சிறப்பிடங்கள் குறைவுபடுதல் கூடாது. மொத்த மதிப்பெண்ணில் இவற்றிற்கு எவ்வாறு ஒதுக்கப்படல் வேண்டும் என்ற வரையறை தேவை.

தற்போது ஒன்பதாம் வகுப்புத் தமிழ் மொழிப்பாடத்தில் செய்யுள், உரைநடை, இலக்கணம் என்ற பாடப்பகுதிக்குரிய வினாத்தாள் தயார் செய்வதாக வைத்துக் கொள்வோம். தேர்விற்கு ஒதுக்கப்படும் மதிப்பெண்கள் ஐம்பது. காலம் 90 நிமிடம்.

வினாத்தாள் வடிவமைக்கும் பொழுது கீழ்காணும் தகவல்கள் முதலில் திரட்டப்பட வேண்டும்.

1. பாடப்பகுதிகள் யாவை?
2. பாடப்பகுதிகளுக்குரிய மதிப்பெண் ஒதுக்கீடு யாது?
3. கற்பித்தல் நோக்கங்கள் யாவை?
4. கற்பித்தல் நோக்கங்களுக்கு ஒதுக்கப்படும் மதிப்பெண்கள் யாவை?
5. வினா வகைகள் யாவை?
6. ஒவ்வொரு வினாவகைக்குரிய மதிப்பெண் ஒதுக்கீடு யாது?
7. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மதிப்பெண்கள் யாவை?
8. மதிப்பெண் தரவேண்டிய மொத்த மதிப்பெண்கள் எத்தனை?
9. கேள்வித்தாள் குறிப்பிடும் மொத்த மதிப்பெண்கள் எத்தனை?
10. தேர்வு வினாக்கள் தரும் போது பாடப்பகுதி மதிப்பெண் பகிர்வு பாதிக்காத வகையில் ஒதுக்கீடு தருவது எப்படி?

### பாடப்பகுதி மதிப்பெண் பகிர்வு

| | |
|---|---|
| மொத்த மதிப்பெண் | **50** |
| செய்யுள் | **20** |
| ஊரைநடை | **21** |
| இலக்கணம் | **9** |
| | **50** |

குறிப்பு

**நோக்கங்கள் அடிப்படையில் மதிப்பெண் பகிர்வு**

| | |
|---|---|
| அறிதல் திறன் | **6** |
| புரிந்து கொள்ளும் திறன் | **14** |
| வெளியிடும் திறன் | **18** |
| பாராட்டுதல் திறன் | **12** |
| | **50** |

**வினாவகையில் மதிப்பெண் பகிர்வு**

| | |
|---|---|
| புறவயவினா | 20 |
| குறுவிடைவினா | 18 |
| கட்டுரை விடைவினா | 12 |
| | 50 |

**விடையளிக்க வேண்டிய வினாக்களும்மதிப்பெண் பகிர்வும்**

| | **வினா எண்** | **மதிப்பெண்** |
|---|---|---|
| புறவயவினா | **20** | 20(**20x1)** |
| குறுவிடைவினா | **6** | 18(**6x3)** |
| கட்டுரை விடைவினா | **2** | 12(**2x6)** |

**வினாத்தாள் வடிவமைப்பு**

| **பாடப்பகுதி வினா** | **அறிதல் (6)** | | | **புரிந்து கொள்ளுதல்(14)** | | | **வெளிப்படுத்துதல்(18)** | | | **பாராட்டுதல்(12)** | | | **மதிப்பெண்** |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **பு** | **கு** | **க** | **பு** | **கு** | **கு** | **பு** | **கு** | **க** | **பு** | **கு** | **க** | |
| **செய்யுள் (20)** | $2^{(1)}$ | - | - | $2^{(1)}$ | - | $1^{(6)}$ | $2^{(1)}$ | $1^{(3)}$ | - | $2^{(1)}$ | $1^{(3)}$ | - | **20** |
| **உரைநடை (21)** | $1^{(1)}$ | - | - | $1^{(1)}$ | $1^{(3)}$ | - | $2^{(1)}$ | $1^{(3)}$ | $1^{(6)}$ | $2^{(1)}$ | $1^{(3)}$ | - | **21** |
| **இலக்கணம் (9)** | - | $1^{(3)}$ | - | $2^{(1)}$ | - | - | $2^{(1)}$ | - | - | $2^{(1)}$ | - | - | **9** |
| **மதிப்பெண்** | **6** | | | **14** | | | **18** | | | **12** | | | **50** |

பு - புறவயவினா, கு – குறுவிடைவினா, க – கட்டுரை விடை வினா. அடைப்பு குறிக்குள் உள்ளது மதிப்பெண்

மதிப்பீடு

குறிப்பு

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**

**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதுக.**

**ஆ. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு ஆராய்க.**

12. வினாத்தாள் வடிவமைப்புத் தயாரிக்க வேண்டிய அவசியம் யாது?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

13. வினாத்தாள் வடிவமைப்பின் பயன்கள் யாவை?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

## 14.10. வினா வகைகள் (Type of Questions)

தேர்வின் பயன்படுத்தப்படும் வினாக்களை அமைப்பு நிலையில் மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

1. புறவய விடைவினா–objective type question
2. குறுவிடை வினா- Short answer type question
3. கட்டுரை விடைவினா- Essay type questions

### 1.புறவய விடைவினா-Objective type question

இன்றைய தேர்வு முறையில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் ஒருவகை வினா புறவய வினாவாகும். தேர்வின் நம்பகம் இதனால் மேம்படுகிறது. மதிப்பீடு செய்வோரின் மனநிலைக்கு ஏற்ப மாறாத ஒரே நிலைத்தன்மை உடையதாக உள்ளது. மதிப்பெண் ஊகங்களின் அடிப்படையில் அளிக்கப்படாமலும், விடைகள் விரிவாக அமையாமலும் ஒரு கேள்விக்கு ஓரிரு சொற்களில் விடையளிக்கும் நிலையிலும் அமைந்திருக்கும்.

‘பேடர்சன்’ (Paterson) என்ற அறிஞர் புறவய வினாக்களைத் தயாரித்துப் பயன்படுத்தச் சில அறிவுரைகளைக் கூறுகிறார்.

1. தேர்வின் வரையறை எது எனத் தீர்மானிக்க வேண்டும்.
2. பாடத்தலைப்பு – உட்பிரிவுகள் அனைத்தும் அடங்கிய நிலையில் வினாக்கள் அமைத்தல் வேண்டும்.
3. தேவைக்கு இரண்டு மடங்கு அதிகமாக வினாக்கள் தயாரித்தல் வேண்டும்.
4. வினாக்களில் சில கடினமானவையாகவும், சில எளிமையாகவும், சில சுமாராகவும் இருத்தல் வேண்டும்.
5. இருபொருள் தரக் கூடிய வினாக்கள் இடம் பெறக் கூடாது.
6. வினாக்கள் மாணவர்கள் எளிதில் உணரும் நிலையில் இருக்கவேண்டும்.

**நிறைகள்**

1. தேர்வுக்குரிய விடை ஓரிரு சொற்களில் அமைகிறது.
2. விடைவரையறுக்கப்படுவதால் மதிப்பீட்டில் வேறுபாடு தோன்றாது.
3. குறைந்த நேரத்தில் அதிகமான வினாக்களுக்கு விடை எழுத முடியும்.
4. பளிச்செனத் துல்லியமாக ஒன்றினை அறியும் திறன் மேம்படுகிறது.
5. கிறுக்கல்,அடித்தல்,திருத்தல் போன்ற நிலைகளுக்கு இடமில்லை.
6. அர்த்தம் புரியாது மனப்பாடம் செய்ய வேண்டிய அவசியமில்லை.
7. குறையறிய வாய்ப்புகள் நிறைய ஏற்படுகின்றன.
8. மாணவர்களும் களைப்பு ஏற்படாமல் விளையாட்டுணர்வுடன் விடை எழுதுவர்.

**குறைகள்**

1. மாணவர்களின் மொழி நடையை அறிய வாய்ப்பில்லை.
2. வினாத் தயாரித்தலில் அதிக நேரச்செலவு ஏற்படும்.
3. மாணவர்கள் கருத்துக்கோவையாக விடையெழுத வாய்ப்பில்லை.
4. தர்க்க ரீதியாக விடையெழுத வாய்ப்பில்லை.
5. மாணவர்களின் பல்வகைத் திறன்களைக் கண்டறியும் வாய்ப்பு குறைவாக உள்ளது.

## 2. குறுவிடை வினா (Short Answer type question)

குறுவிடை வினா பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். இதில் விடைகள் ஓரிரு தொடர்களில் அமையும். செய்திகளை அறிந்து கொள்ளும் வகையில் அமையும். மொழிநடை கருத்துக் கோவைகளுக்கு ஓரளவு இடம் தரும். இவ்வகை வினாக்களுக்கு அதிக மதிப்பெண் தர வேண்டியதில்லை. மதிப்பிடுவதில் தற்சார்பு நிலை அதிகம் தோன்ற வாய்ப்பில்லை. வினாக்களின் எண்ணிக்கை கணிசமாக இடம் பெறும். பாடப்பகுதி முழுவதும் இடம்பெறும் வகையில் வினாக்களை அமைக்க முடியும்.

## 3.கட்டுரை விடைவினா (Essay type question)

கட்டுரை விடைவினா பழங்காலம் முதல் இன்று வரை தொடரும் வினா வகைகளுள் ஒன்றாக உள்ளது. மொழிப்பாடங்களில் இவ்வகை வினாக்கள் அவசியம் இடம்பெற வேண்டிய நிலை உள்ளது. மொழிப்பாடம் கருத்து அறிவிப்பதோடு மொழித்திறன் பற்றிய பயிற்சியும் தருவதால் மொழித்திறனை அறிந்துணர, வளர்க்க இவ்வகை வினாக்கள்

குறிப்பு

தேவைப்படுகின்றன. மொழிநடை, பழமொழி, மரபுத்தொடர், புதிய சொல்லாக்கம், வாக்கிய அமைப்பு, வாக்கிய வகைகள், இலக்கியத் தொடராட்சி மேற்கோளிடல் போன்ற மொழித்திறன்கள் வளர, சோதிக்க இது தேவைப்படுகிறது. கருத்தைக் கோவைப்படுத்துதலும், நிரல்படுத்துதலும், பத்தியமைத்தலும், பத்திகளுக்குத் தலைப்பிடலும், பத்திகளை நிரல்படுத்துதலும், முன்னுரை, முடிவுரை அமைத்தலும் போன்ற பயிற்சிகளும் இவ்வகை வினாவால் மேம்படும்.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதுக.**
**ஆ. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு ஆராய்க.**

14.வினாக்களின் அமைப்பு நிலை எத்தனை வகைப்படும்?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

15.புறவய வினாக்களின் நன்மைகள் ஏதேனும் இரண்டினைக் கூறுக?

…………………………………………………………………………………………

…………………………………………………………………………………………

## 14.11. தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு (CCE)

தேசியக்கல்விக் கொள்கை (1986), கற்பித்தல் கற்றல் கொள்கைகளை வரையறுத்தது மட்டுமன்றி, தொடர்ச்சியான முழுமையான மதிப்பீட்டின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகிறது. தேசியக்கலைத்திட்ட வடிவமைப்பு (2005) விரிவான, முழுமையான மதிப்பீட்டை வரவேற்கிறது. இது குழந்தையின் ஆளுமைத்திறனுக்குத் தேவையான பிறதிறன் அடைவுகளையும் மதிப்பிட வழிவகுக்கிறது. தொடர்ச்சியான, முழுமையான மதிப்பீடு என்பது கற்றல், கற்பித்தலின் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியது. இது அகன்றது மற்றும் ஆழமானது. நிறை, குறைகளை நுண்ணிய அளவில் காட்டவல்லது.

தொடர்ச்சியான மதிப்பீடு என்பது பாரம்பரியமான பருவமுடிவு (மாதாந்திர, காலாண்டு, அரையாண்டு) தேர்வுகளுக்குப் பதிலாகக் கற்பித்தல், கற்றல் நிகழ்வுபெறும் காலத்தே, எவ்வகையான கற்றல் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பதைத் தொடர்ச்சியாக மதிப்பிடுதலைக் குறிக்கும்.

பயம்மிகுந்த, படபடப்பான, பரபரப்பான தேர்வுச் சூழலில் மட்டும் அளவிடப்படுவதன்று. ஒரு குழந்தையின் கற்றல் அறிவு பாடங்கள் பற்றிய ஆர்வம், இலக்கியம், நாட்டம், அறிவியல், சமூக சிந்தனைகள், கலை, இலக்கியம், உடற்கல்வி போன்ற பல்வேறு அம்சங்களிலும்

அக்குழந்தையின் அறிவுத்திறன் வெளிப்படும். எனவே எல்லாப் பண்பு நலன்களையும் மதிப்பிடுதலே முழுமையான மதிப்பீடு ஆகும்.

மாணவர்களின் பாடஅறிவு, முறையான பழக்கவழக்கங்கள், மனப்பான்மைகள் ஆகியவற்றை வளர்ப்பதே மதிப்பீட்டின் முக்கிய நோக்கமாகும். மாணவர்களின் கற்றல் நடத்தையில் ஏற்படும் விரும்பத்தக்க மாற்றங்களை நோக்க அடிப்படையில் இடைவெளி விட்டு தொடர்ந்து மதிப்பீடு செய்வதே தொடர் மதிப்பீடாகும்.

**மொழிப்பாடமும் மதிப்பீடும்**

சி.சி.இ எனச் சுருக்கமாக அழைக்கப்படும் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு என்பது கல்விசார் மற்றும் கல்வி இணைச்செயல்பாடுகளில் மாணவன் காட்டும் ஈடுபாடு, ஆர்வம், முயற்சி, ஒழுங்குமுறை, செயல்திறன், ஆளுமை வளர்ச்சி என உடல், மனம், சமூகம் சார்ந்த அனைத்துக் கூறுகளையும் தொடர்ந்து மதிப்பிடலாகும்.

**தாய்மொழியும் மதிப்பீடும்**

கல்விசார் செயல்பாடுகள் என்பது கற்போரின் அறிதல், புரிதல், பகுத்தாய்தல் மற்றும் பாடப் பொருளைப் பயன்படுத்தும் நிலைகளுக்கு ஏற்ப (அதாவது கருத்தைச் செயல்படுத்தும் விதமாக) பல்வேறு மதிப்பீட்டு உத்திகளையும், நுட்பங்களையும் கொண்டு கலைத்திட்டத்திலுள்ள கல்விசார் பாடங்களில் மாணவர்களின் கற்றல் திறன்களைப் பருவம் முழுவதும், பாடப்பொருளைச் சிறு சிறு பகுதிகளாகக் கற்பித்துக் குறிப்பிட்ட இடைவெளியில் மாணவர்களின் அடைவுத் திறன்கள் வாயிலாக மதிப்பீடு செய்யப்படுதல் ஆகும். இதனால் மாணவர்களிடையே உள்ள தேர்வு அச்சமும், மன அழுத்தமும் குறைகிறது. இதில் உடற்கல்வியும் மதிப்பீடு செய்யப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இவற்றில் இரண்டு வகையான மதிப்பீடு காணப்படுகிறது. அவை

1. வளரறி மதிப்பீடு (Formative assessment evaluation) – பருவம் முழுவதும்.
2. தொகுத்தறி மதிப்பீடு (Summative assessment evaluation) – ஒவ்வொரு பருவ இறுதியிலும் தற்போதுள்ள எழுத்து தேர்வு போன்றது.

மதிப்பீடு

**குறிப்பு**

**வளரறி மதிப்பீடு (Formative assessment evaluation) FA (a) :**

குழந்தைகள் நெகிழ்வுத்தன்மை உடையது. தன்னார்வம், பங்கேற்பு, ஆர்வம், ஈடுபாடு, மகிழ்ச்சி மற்றும் ஆசிரியரின் உற்றுநோக்கலை அடிப்படையாகக் கொண்டது. ஏதேனும் நான்கு செயல்பாடுகளில் சிறந்த இரண்டு செயல்பாடுகளை மதிப்பிட வேண்டும். ஒவ்வொன்றிற்கும் பத்து மதிப்பெண்கள் வீதம் இருபது மதிப்பெண்கள் அளிக்கப்படும்.

**FA (b) :**

குறிப்பிட்ட பாடப்பொருள் மாணவர்களின் கற்றலடைவை அறிய வாய்மொழி அல்லது சிறு எழுத்து தேர்வு முறையில் மதிப்பிடுவது ஆகும். இது குறிப்பிட்ட விடையை மட்டும் பெற உதவும். பாடப்பொருள் குறித்த அறிவுத்திறனை மதிப்பிட இது உதவும். ஏதேனும் நான்கு செயல்பாடுகளில் சிறந்த இரண்டு செயல்பாடுகளை மதிப்பிட இது உதவும். ஒவ்வொன்றிற்கும் பத்து மதிப்பெண்கள் வீதம் இருபது மதிப்பெண்கள் அளிக்கப்படும். இதனை தரநிலைப் பதிவேட்டிலும் பதிய வேண்டும். மாணவனின் திறன் பதிவேட்டிலும் பதிய வேண்டும்.

**தொகுத்தறி மதிப்பீடு : (Summative assessment evaluation)**

பருவ இறுதியில் எழுத்து தேர்வின் மூலம் மதிப்பிடப்படும். வினாத்தாள் திட்ட வரைவின்படி இருக்கும் கற்றல் அடைவுகளை அறிய இது பயன்படும்.

**வாழ்க்கைத்திறன்**

மதித்தல், சூழலுக்கேற்பவும், நேர்மறையாகவும் முடிவெடுத்தல், சுய முடிவெடுத்தல், ஒத்த வயதுடையோருடன்இணக்கத்துடன் இருத்தல் போன்ற பண்புகள் வாழ்க்கைத் திறனில் மதிப்பிடப்படுகிறது.

**மனப்பான்மை**

தேசிய மற்றும் மாநில அரசு சார்பான சின்னங்களுக்கு மரியாதை செலுத்துதல், பாராட்டத்தக்க பண்புடைய பள்ளி மற்றும் சமூகத்திலுள்ள பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல், உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல், சாலை விதிகளைக் கடைபிடித்தல், சுற்றுச்சூழல் மதிப்புகள் போன்றவை மதிப்பிடப்படுகிறது.

**நன்னலம் மற்றும் யோகா**

வாழ்க்கை கல்வி மற்றும் கலைக்கல்வி ஆகியவற்றை ஆசிரியர் குழந்தைகளை வகுப்பறையிலும், பள்ளியிலும் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் சூழ்நிலைகளிலும் உற்று நோக்கி குறிப்பிட்டுள்ள வாழ்க்கைத் திறன்களில் அவர்களுடைய நடத்தைக் கூறுகளைத்

தெரிந்துகொண்டு ஐந்து குறியீட்டுத் தரநிலையைப் பதிவு செய்யவேண்டும். இது கல்வி இணைச்செயல்பாடுகளை மதிப்பிடுதலாகும்.

இதனால் மாணவன் கற்றலைப் பெறுவதுடன் ஆர்வமாகக் கற்கும் நிலையை உருவாக்கி, தாம் கற்றவற்றைத் தானாக பகுப்பாய்வு செய்யவும், அதனை வெவ்வேறு சூழலில் பயன்படுத்தும் திறன் பெற்றவனாகவும், தானாகவும் பிறருடன் ஒருங்கிணைந்தும் இசைந்தும், மகிழ்ச்சியாகவும் வேலை செய்யப் பழகிக் கொள்வான். சமூக மற்றும் சுற்றுச்சூழல் சார்ந்த செயல் திட்டங்களில் பங்கேற்கவும் சிக்கல்களை அறிந்து தீர்வு காணும் ஆற்றலைப் பெற்றவனாக உருவாக்கப்படுவான்.

இத்தனை சிறப்பு மிகுந்த மதிப்பீட்டு முறை வெற்றி பெற பெற்றோர்கள் விழிப்புடன் செயல்பட வேண்டும்.

**வளரறி செயல்பாடுகள்**

- பாடுதல், பங்கேற்று நடித்தல்
- திரும்பக் கூறுதல், கதை கூறுதல்
- கதை கேட்டல், கதை உருவாக்குதல்
- விவரித்தல், வருணித்தல்.
- விவாதம், நிகழ்வுகளைப் பதிவு செய்தல்
- ஒப்புவித்தல், பொம்மலாட்டம்
- குறிப்பிட்ட தலைப்பில் பேசுதல், வரைதல்
- திறந்த நிலை வினாக்களுக்கு விடையளித்தல்
- கலந்துரையாடல், செயல்திட்டம்

**தொகுத்தறி செயல்பாடுகள்**

- வினாத்தாள் திட்ட வடிவமைப்பின்படி பருவ இறுதியில் நடத்தப்பெறும் எழுத்துத் தேர்வாகும்.
- அறிதல், புரிதல், பயன்படுத்துதல், பகுத்தாய்தல், மதிப்பிடுதல், படைப்பாற்றல் அடிப்படையில் அமையும்.
- மாணவரின் கற்றல் அடைவுக்குச் சான்றளிக்கும் வகையில் அமையும்.
- காலவரையரைக்கு உட்பட்டதாகும்.

மதிப்பீடு

**குறிப்பு**

**அட்டவணை**

| | **வளரறிமதிப்பீடு** | **தொகுத்தறிமதிப்பீடு** |
|---|---|---|
| 1. | கற்பதற்காக மதிப்பீடுதல். | கற்றதனை மதிப்பீடுதல். |
| 2. | திட்டமிட்டும் (அ) தேவைக்கு ஏற்பவும் நகர்த்தப்படுகிறது. | திட்டமிட்டுச் செயல்படுத்தப்படுவது. |
| 3. | பருவம் முழுமையும் நடைபெறுகிறது. | பருவ இறுதியில் நடைபெறுகிறது. |
| 4. | குறையறியவும், குறைதீர் கற்பித்தலுக்கும் வாய்ப்புள்ளது. | கற்றல் அடைவை அறிந்துகொள்ள வாய்ப்புள்ளது. |
| 5. | காலஅளவில் நெழ்ச்சித்தன்மையுடையது. | காலவரையறைக்குட்பட்டது. |

### 14.11.1 தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டின் பயன்கள்

- தேர்வுகள், சோதனைகள் மூலம் மட்டுமல்லாது தொடர்ச்சியாக குழந்தையைக் கண்காணித்தல்.
- உற்று நோக்கல்
- மாணவர்களின் நடத்தை செயல்பாடுகளின் முடிவுகளை ஆராய்தல் மூலம் மாணவர்களின் ஆளுமைத் திறனை ஆசிரியரால் மதிப்பீடு செய்ய முடியும்.

### 14.11.2 தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டின் நோக்கம்

- மாணவர்களின் முன்னேற்றத்தைத் தொடர்ந்து மதிப்பிடுதல்.
- மாணவர்களின் பலம், பலவீனத்தைக் கண்டறிந்து உடனடியாக மாணவர்களுக்குத் தனிக்கவனம் செலுத்துதல்.
- சிறந்த கற்பித்தல் நுட்பங்களைக் கையாள ஆசிரியர்களுக்கு உதவுதல்.
- கற்றலில் மதிப்பீட்டின் மூலம் மாணவர்களைப் பற்றி ஆசிரியர் அறிய முடியும்.
- மாணவர்களுக்கு அவர்களின் கற்றல் பற்றிய விழிப்புணர்வை உண்டாக்க இயலும்.
- தவறுகளைத் திருத்திக் கொள்ளவும், நல்ல படிப்புப் பழக்கங்களை ஏற்படுத்தவும், விரும்பத்தகும்

இலக்குகளை அடையவும் மாணவர்களுக்கு வாய்ப்பளிக்கப்படுகிறது.

- மாணவர்கள் தங்களது எதிர்காலம், தேர்ந்தெடுக்க வேண்டிய பாடங்கள், பணி ஆகியவற்றைத் தீர்மானிக்க உதவுகிறது.
- மாணவர்களின் பிரச்சனைகள் உடனே தீர்க்கப்படுகின்றன.
- மாணவர்கள் தங்களைப் பற்றி அறிந்து கொள்கின்றனர்.
- மாணவர்கள் படிக்கும் பழக்கத்தை மேற்கொள்கின்றனர்.
- ஆசிரியர் மாணவர் உறவு வலுப்படுகிறது.
- தொடர் மதிப்பீட்டினால் மாணவரின் வளர்ச்சியைத் தொடர்ந்து அறிய இயலும்.

**முன்னேற்றத்தைச் சோதித்து அறிக.**
**குறிப்பு: அ. உமது பதிலைக் கீழே கொடுக்கப்பட்ட இடத்தில் எழுதுக.**
**ஆ. உமது பதிலைப் பாட இறுதியில் தரப்பட்டுள்ள பதிலோடு ஒப்பிட்டு ஆராய்க**

16. தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டின் நோக்கம் ஏதேனும் இரண்டினைக் கூறுக?

………………………………………………………………………………………
………………………………………………………………………………………

17. CCE-ன் பயன்கள் ஏதேனும் இரண்டினைக் கூறுக?

………………………………………………………………………………………
………………………………………………………………………………………

## 14.12. தொகுத்துக் காண்போம்

ஆசிரியருடைய முக்கியமான கடமைகளில் ஒன்று மாணவர்களைத் தேர்வின் மூலம் மதிப்பீடு செய்வதாகும். இப்பாடத்தில் மதிப்பீடு, அளவீடு பற்றியும் இரண்டிற்குமுள்ள வேறுபாடு பற்றியும் அறிந்து கொண்டோம். நல்ல தேர்வுக்கு இன்றியமையாப் பண்புகள் மூலம் நல்ல தேர்வை நடத்துவது சாத்தியம் என்பது பற்றியும், அடைவுத் தேர்வுகளின் வகைகள் பற்றியும், வினாத்தாள் அமைத்தல் பற்றியும் , ஆசிரிய மாணவராகிய நீங்கள் அறிந்துகொண்டீர்கள். மிகச்சரியான வினாத்தாளை ஆசிரிய மாணவராகிய நீங்கள் தயாரிப்பீர்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

## 14.13. முன்னேற்றத்தைச் சோதிக்கும் வினாக்களுக்கான விடைகள்

1. தரத்தை மதிப்பிடல்
2. அளவீடு
3. தேர்வு

மதிப்பீடு

**குறிப்பு**

4. தமிழ்மொழியின் தொன்மை, தமிழ் இலக்கண இலக்கிய வளம் உணரல்
5. மாணவர்களின் நடத்தையில் ஏற்படும் மாறுதல்களை அறிய, கற்பித்தலின் நோக்கத்தை அறிய, கல்விக் குறிக்கோள்களை எய்த, கற்பித்தலை முழுமைப்படுத்த.
6. கல்விக் குறிக்கோள்கள், கற்றலின் செயல் ஈடுபாடுகள், மதிப்பீடுகள்.
7. ஏற்புடைமை, நம்பகத்தன்மை, புறவயத்தன்மை, பயனுடைமை.
8. உள்ளடக்கப் பொருள் ஏற்புடைமை, கட்டுமான ஏற்புடைமை, முழுவொத்த ஏற்புடைமை, உடன் நிகழும் ஏற்புடைமை, வருவதுரைக்கும் ஏற்புடைமை, திறமைக்கூறு ஏற்புடைமை.
9. ஆசிரியரால் உருவாக்கப்பட்டது, நிலைப்படுத்தப்பட்டது.
10. பாடப்பகுதி முழுவதும் வினாக்கள் கேட்கலாம், மாணவனின் மொழியாற்றல் அறிவுதிறமையை உடன் அறியலாம், மாணவனின் கூச்ச சுபாவம், ஆர்வம் பெருகும், வினாக்கள் புரியவில்லையெனில் உடனுக்குடன் மாற்றிக் கொள்ளலாம்.
11. பல்வேறு இடங்களில் பணியாற்றும் ஆசிரியர்களிடமிருந்து பாடப்பகுதி சாந்த வினாக்கள் வரவழைக்கப்பட்டு அவை தொகுக்கப்பட்டு தேவையான வினாக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அச்சிடப்பட்டு மாணவர்கட்கும் ஆசிரியர்கட்கும் பயன்படும் வகையில் வினாவங்கி உருவாக்கப்படுகிறது.
12. கல்விக் குறிக்கோள்களுக்கு வினாத்தாளில் தரப்பட்ட இடம், மதிப்பு ஆகியவற்றை நிர்ணயிக்க வினாத்தாள் வடிவமைப்பு தயாரிக்கப்பட வேண்டும்.
13. பாடங்கள் எவையேனும் விடப்பட்டனவா என அறியவும், குறிக்கோள்களுக்குச் சமமான மதிப்புத்தரவும் பயன்படும்.
14. புறவய விடை வினா, குறுவிடை வினா, கட்டுரை விடை வினா.
15. தேர்வுக்குரிய விடை ஓரிரு சொற்களில் அமைகிறது., விடை வரையறுக்கப்படுவதால் மதிப்பீட்டில் வேறுபாடு தோன்றாது.
16. மாணவர்களுக்குக் கற்றலில் ஏற்படும் இடர்பாடுகளை அறிந்து அவற்றை அகற்ற உதவுகிறது,

    ஆசிரியர் கற்பித்த பாடப்பொருளின் கருத்துகளையும் அவற்றை விளக்குவதற்காக அவர் கூறிய எடுத்துக்காட்டுகள், மேற்கோள்கள் போன்றவற்றையும் அளந்தறிய உதவுகிறது.
17. தேர்வுகள், சோதனைகள் மூலம் மட்டுமல்லாது தொடர்ச்சியாக குழந்தையைக் கண்காணித்தல்.உற்றுநோக்கல்.

**குறிப்பு**

## 14.14 பாடம் பயின்ற பின் செய்யும் பயிற்சிகள்

1. அடைவுச் சோதனைகளை வகைப்படுத்தி அவற்றின் நிறை,குறைகளை விவரிக்கவும்.
2. நீவிர் பயிற்றும் பயிற்சியில் நடத்திய பாடம் ஒன்றினைத் தேர்ந்தெடுத்து வினாத்தாள் அமைத்து, வடிவமைப்புத் தயாரிக்க.
3. நல்ல தேர்வின் பண்புகள் யாவை?
4. தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு பற்றி விளக்குக.

## 14.15 மேலும் பயிலுவதற்கான நூல்கள்


1. முனைவர் ஞா.பழனிவேலு, (2011) செந்தமிழ் கற்பித்தல்- பொதுத்தமிழ், நதி பப்ளிகேஷன்ஸ், தஞ்சாவூர்.
2. வெ.கலைச்செல்வி (2013), பொதுத்தமிழ் கற்றல் - கற்பித்தல், சஞ்ஜீவ் வெளியீடு,ஈரோடு.
3. கணபதி .வி (1989), தமிழ் ஐவகைப் பாடங்களும் கற்பித்தலும், சாந்தா பப்ளிஷர்ஸ், சென்னை.
4. கோவிந்தராஜன் .மு. (1990), நற்றமிழ் பயிற்றலின் நோக்கமும் முறையும், சரஸ்வதி பதிப்பகம், சென்னை.
5. இ.பா வேணுகோபால்,க.சாந்தகுமாரி (2013) தமிழ் கற்பித்தல் - பொதுத்தமிழ், சாரதா பதிப்பகம், சென்னை.
6. முனைவர் அ.மீனாட்சிசுந்தரம், செந்தமிழ், கற்பித்தல் பொதுத்தமிழ், காவ்யமாலா பதிப்பகம், திண்டுக்கல்.
7. http://alaiyallasunami.blogspot.com


*****

## மாதிரி வினாத்தாள்

**நேரம் : 3 மணித்துளி** **மொத்த மதிப்பெண்கள் : 75**

## பகுதி அ

**I அனைத்து வினாக்களுக்கும் 100 சொற்களுக்கு மிகாமல் விடையளி** **10x2=20**

1. தாய்மொழி கற்பித்தலின் நோக்கங்கள் ஏதேனும் நான்கினை எழுதுக?
2. செயல்திட்ட முறையின் படிநிலைகள் யாவை?
3. புளூமின் கற்பித்தல் கோட்பாட்டினை கூறுக?
4. கரும்பலகை பயன்படுத்தும் திறனின் நிறைகள் யாவை?
5. தமிழ் கற்பித்தலில் வானொலியின் பயன் என்ன?
6. பேசுதல் திறனின் நோக்கங்களை எழுதுக?
7. பாடநூல் தயாரித்தலில் நூலாசிரியரின் பங்கு பற்றி எழுதுக?
8. வருணனைக் கட்டுரைப் பற்றி சிறு குறிப்பு வரைக.
9. மின் தமிழ் குறிப்பு வரைக?
10. நூலகப் படிப்பின் பயன்களை எழுதுக.

## பகுதி ஆ **5x5=25**

**II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு 200 சொற்களுக்கு மிகாமல் விடையளி**

11. தாய்மொழியின் தனிச் சிறப்பினை விவரி
12. செயல்திட்ட முறையின் படிநிலைகளை விளக்குக?
13. பாடத்திட்டம், தயாரித்தலின் இன்றியமையாமையை விளக்குக?
14. பல்வகைத் தூண்டல்களை பயன்படுத்தும் திறனின் உட்கூறுகளை விளக்குக?
15. தமிழ் கற்பித்தலில் தொலைக்காட்சியின் பங்கினை விவரி.
16. வாய்விட்டுப் படித்தல் என்றால் என்ன? அதன் நிறைகள் மற்றும் குறைகள் எழுதுக
17. பாடநூல் பயிற்றுவிப்பதில் ஏற்படும் சிக்கல்களையும் அவற்றின் தீர்வுகளையும் விளக்குக?
18. தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டின் நோக்கங்களை விவரி.

**பகுதி இ** **2x15=30**

**III. 750 சொற்களுக்கு மிகாமல் விடையளி**

19. (அ) திட்டமிட்டுக் கற்றல் என்றால் என்ன? அதனை விரிவாக விளக்குக?

அல்லது

ஆ) துணைக்கருவிகளின் வகைகள் யாவை? அவற்றை விரிவாக விளக்குக?

20. (அ) செய்யுள் பயிற்று முறையின் நோக்கங்கள் யாவை? அவற்றினை விவரி.

அல்லது

(ஆ) மதிப்பிடுதலின் இன்றியமையாத கூறுகளை விவரி.

*******